
# காவேரி



# உங்கள் மேனியும்

## சினிமா நட்சத்திரங்களுக்கு ஈடாக அழகோங்க முடியும்!

தென்னாட்டின் அழகிய நாட்டிய நாட்சத்திரமான ராகினி, மேனியழகின் பராமரிப்புக்கான எளிய முறையொன்றைக் குறிப்பிடுகிறார்: "எனது சருமத்தை மழமழப்புடன் வைத்திருக்க, நான் அன்றாடம் லக்ஸ் டாய்லெட் சோப் உபயோகிக்கிறேன்." ராகினி உள்பட உங்கள் அபிமான சினிமா நட்சத்திரங்கள் அனைவரும் தூய, வெண்மையான இந்த சோப்பைத் தேர்ந்தெடுப்பதன் காரணம் வெளிப்படையே. லக்ஸ் டாய்லெட் சோப் அதி மென்மையானது, நறுமணமுள்ளது, இன்பமயமானது. நீங்களும் ஏன் இன்றுமுதல் அதை உபயோகித்து உங்கள் மேனியழகைப் பராமரிக்கக் கூடாது?



தூய, வெண்மையான

**லக்ஸ்**

**டாய்லெட் சோப்**




சினிமா நட்சத்திரங்களின்
அழகுசாதன சோப்

வீனஸ் பிக்சர்ஸ்
"உத்தம புத்திரன்"
படத்தில் தோன்றும்
அழகு நட்சத்திரம்
ராகினி

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

LTS. 568-X52 TM

ஆயுள் இன்ஷ்யூரன்ஸின் முன்னேற்றம்

# வியாதியிலோ அல்லது ஆரோக்யத்திலோ

நோய்வாய் பட்டதாலோ அல்லது தேகநிலை காரணமாகவோ ஒரு காலத்தில், அநேகருக்கு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வசதிகள் மறுக்கப்பட்டன. அவர்களின் ஆயுள் ''குன்றிய தேக நிலை'' என்ற பிரிவில் சேர்க்கப்பட்டது.


உண்மையில், குன்றிய தேக நிலையுள்ளவர்களுக்குத் தான் மற்றவர்களைக் காட்டிலும் இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பு மிகவும் அத்யாவசியமானது. ஆயுள் இன்ஷ்யூரன்ஸை, கார்ப்பொரேஷன் எடுத்துக்கொண்டதும், முதன் முதலாகவும் முக்கியமாகவும் செய்த தீர்மானங்களில் ஒன்று குன்றிய தேகநிலையின் கீழ் அதிகப்படியான உபாதைகளைக் கொண்டு வரவேண்டுமென்பதே.

ஆகவே குன்றிய தேகநிலையின் கீழ் வரும் உபாதைகளின் புள்ளி விபரங்கள் விஞ்ஞான முறையில் பரிசீலனை செய்யப்பட்டது. இன்று ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் குன்றிய தேகநிலையின் கீழ் வரும் உபாதைகளின் ஜாபிதாவை விஸ்தரித்துள்ளது. அதன்படி நீரழிவு நோய், முன்னமேயே க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டவர்கள், சில தீவிர மூத்திரக்காய் வியாதியினால் அவஸ்தைப்படுவர்கள், ''காரனரி திராம்பாஸிஸ்'' (மார்புவலி) உள்பட சிலவித ஹிருதயக் கோளாறுகளினால் பாதிக்கப்பட்டவர்கள் முதலியவர்கள் இந்த ஜாபிதாவில் சேர்க்கப்படுகின்றனர். இவர்கள் சற்று கூடுதலாகவே பிரீமியம் கட்டவேண்டும். ஆனால் இவர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ளும் வாய்ப்புகள் இனிமேல் மறுக்கப்படாது.

இந்த கைங்கரியமும், இவைபோன்ற இதர சலுகைகளும், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பிரச்னைகளைக் கையாளுவதில் லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் எத்தகைய உயர்ந்த நோக்கங்களுடன் பணியாற்றுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

## லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

# எல்லாப் பருவங்களிலும் விளைவு தரும் பயிர்




நாராயணன் பழைய—பட்டாளத்துக்காரர். இப்போது அவர் தம்முடைய சொந்தக் கிராமத்தில் இன்பமாக வாழ்ந்து வருகிறார். பல இடங்கள் சுற்றியவரல்லவா? அதனால் அவருடைய கண்ணோட்டம் எவ்வளவோ விரிவடைந்திருந்தது. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. நகை நட்டுகளாக வாங்கி வைப்பதையும் அவர் விரும்பவில்லை. நகை நட்டுகளால் ஆபத்துக் கூட விளையக் கூடுமல்லவா? போன தடவை அவர் தமது நிலங்களில் விளைந்த பொருள்களை விற்பதற்காகப் பட்டணத்துக்குப் போயிருந்த போது **தேசீயத் திட்ட சேமிப்பு சர்டிபிகேட்டு** ஒன்று வாங்கினார். ஏனெனில் இதிலே அவரது முதலீடு பத்திரமாக இருக்கிற தென்பதும், அதற்கு வருமான வரியில்லா வட்டி கிடைக்கிறதென்பதும் அவருக்குத் தெரியும். அந்தக் கிராமத்திலிருந்த மற்றவர்களும் நாராயணனின் வழியைப் பின்பற்றினர். ஆம்! இப்போது அவர்களின் செல்வம் — சேமிப்பு தீயினாலோ, திருடர்களாலோ, எலிகளாலோ கால நிலைமாறுபாடுகளாலோ பாதிக்கப்படாது. அவர்கள் அஞ்ச வேண்டியதே இல்லை.

**தேசீயத் திட்ட சேமிப்பு சர்டிபிகேட்டுகளிலும்,** சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழுள்ள மற்ற சேமிப்புகளிலும் **நீங்கள்** முதலீடு செய்யும் பணம் உங்களுக்கு வளம் தருவதோடு அரசாங்கம் மேற்கொண்டுள்ள பல்வேறு **தேசீய நல வளர்ச்சித் திட்டங்களை** நிறைவேற்றவும் உதவுகிறது.

**12-ஆண்டு தேசீயத் திட்ட சேமிப்பு சர்டிபிகேட்டுகள்**

* ஆண்டு ஒன்றுக்கு 5.41% வட்டி. இந்த வட்டிக்கு வருமான வரி கிடையாது.
* 5 ரூபாய் முதல் 5000 ரூபாய் வரை எந்தத் தொகைக்கும், தபால் நிலையங்களில் எளிதாக வாங்கலாம்.
* இந்திய அரசாங்கத்தின் உத்திரவாதம் பெற்றது.

***சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழுள்ள மற்ற சேமிப்புகள்:***

*10-ஆண்டு கஜானா சேமிப்பு சர்டிபிகேட்டுகள்*

*தபால் நிலைய சேமிப்புப் பாங்கி சேமிப்புகள்.*




DA-58/10

## தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

இந்த சேமிப்புகள் சம்பந்தமான முழு விவரங்களும் நாகபுரியிலுள்ள தேசிய சேமிப்புக் கமிஷனர் அல்லது உங்கள் மாநில சேமிப்பு ஆபீசரிடம் கிடைக்கும்.

# காவேரி

2 - JUL 1958
MADRAS

## பொருளடக்கம்

| விளம்பி-ஹு மலர் 17 | ஜூலை-1958 | ஆனி இதழ் 11 |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| பதினெட்டாம் பருவம் | ... | | 4 |
| குறுக்கு வெட்டி | ... | பட்டாபி நாராயணன் ... | 5 |
| உடலும் உள்ளமும் (அட்டைப்படக் கதை) | ... | ரா. வேங்கடசாமி ... | 9 |
| பாப்பா பாட்டு (சிறுவர் பகுதி) | ... | மங்கை ... | 16 |
| சிரித்த செந்தாமரை (தொடர் கதை) | ... | ஏ. சுப்பையா ... | 17 |
| கோடைக்கானல் | ... | லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் ... | 27 |
| பட்டிக்காட்டுப் பெண்ணு? | ... | பி. ஆர். ராஜாராம் ... | 33 |
| விஞ்ஞானத் துணுக்குகள் | ... | நா. கி. நாகராசன் ... | 38 |
| காகிதப் பூ | ... | பரதேசி ... | 41 |
| குற்றமும் தண்டனையும் | ... | லால்குடி - கிருஷ்ணமூர்த்தி ... | 47 |
| தங்கை | ... | விஸ்வம் ... | 51 |
| ஜோதிஸ்வரூபிணியின் அழகு | ... | க. பஞ்சாபகேசன் ... | 57 |
| கண்டேன்!—கண்டேன் அல்லேன்! | ... | எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் ... | 61 |
| முசிரி சுப்ரமணிய அய்யர் | ... | கீதப்பிரியா ... | 65 |
| தொழில் துணுக்குகள் | ... | விசால்தேவ் ... | 70 |
| அஸ்தமனம் | ... | அசேன்ராஜ் ... | 73 |
| பெண்களுக்கு மட்டும் | ... | டி. எஸ். ரெங்கநாயகி ... | 87 |
| சுடச்சுட! | ... | திருமால் ... | 89 |
| சினிமா | ... | நமது விசேஷ நிருபர் ... | 93 |

**குறிப்பு:** காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

21856

# காவேரி

விளம்பி-ஷூ மலர் 17

"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் — கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

ஆனி இதழ் 11

## பதினெட்டாம் பருவம்

பாலப் பருவம் நீங்கி வாலிபம் துள்ளி விளையாடும் வயது பதினெட்டு. அதை அடுத்த இதழுடன் எட்டிப் பிடிக்கிறது காவேரி.

அதன் கவர்ச்சியும் அதற்கேற்ப அமைந்து வருகிறது என்பதை வாசகர்கள் நமக்கு எடுத்துக் கூறியுள்ளனர். சென்னை எஞ்சினியர் ஸ்ரீ ஆர். சுப்பிரமணியம். ஸிந்திரியில் வசிக்கும் சகோதரி ஜனகா சுப்பிரமணியம், மிஸ். ஸி. சுலோசனா, தாம்பரம், T. K. S. மூர்த்தி, சென்னை. இன்னும் அநேக வாசகர்கள் காவேரியின் அழகையும், வளப் பெருக்கையும் பாராட்டி எழுதியதோடு, பல நல்ல யோசனைகளையும் கூறியுள்ளனர். அக் கடிதங்களில் முக்கிய மானவற்வை அடுத்த இதழில் பிரசுரிக்கிறோம். அவைகளில் கண்டுள்ள சில வற்றை காவேரி இதழ்களில் மலரச் செய்யவும் முயற்சிக்கிறோம்.

இந்த இதழில் வெகு ஆவலுடன் வாசகர்கள் எதிர்பார்க்கும் சிரித்த செந்தாமரை ஆரம்பமாகிறது. அதன் சிருஷ்டிகர்த்தாவாகிய ஸ்ரீ ஏ. சுப்பையாவை தமிழுலகத்திற்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லை. எளிய நடை; ஆயினும் கருத்து தோய்ந்த எழுத்து. உள்ளத்தை அள்ளும் சம்பவங்கள், அதிகம் வளர்த்துவானேன்; படித்துப்பாருங்கள். அடுத்த இதழ் ஏன் இவ்வளவு காலம் கழித்து வருகிறது என்று ஆசிரியரை திட்ட ஆரம்பித்து விடுவீர்கள்!

அடுத்த இதழில் தமிழ்நாட்டுப் பெண் திலகங்களைப்பற்றிய கட்டுரை ஆரம்பமாகிறது. படிக்கத் தவறுதீர்கள்.

# குறுக்கு வெட்டி

பட்டாபி நாராயணன்

ஓங்கி வளர்ந்திருந்த கமுகு மரங்கள் ஆடி ஆடிக்கொண்டு பரப்பிய காற்றின் தண்மை சுதர்சனின் உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்தது. அது எழுப்பிய 'ஹோ' என்ற சப்தம் முதல் நாள் இரவு தென்காசியில் அவர் பார்த்த ஒரு சினிமாவின் காதல் காட்சியைத்தான் அவருக்கு நினைவுப் படுத்தியது.

குற்றாலம் "ஹில்ஸ் பங்களாவின்" மாடி 'பால்கனி'யில் தான் அவர் சோபாவில் சாய்ந்திருந்தார். உல்லாசமாக 'சீசனை' அனுபவிக்க வேண்டி வந்த இடத்திலும் அவரைக் கற்பனை தேவி விட்டுவிடவில்லை. ஒரே கற்பனை! ஒன்றுக்கொன்று தொடர்பற்ற அறுபட்ட சிந்தனைத் துண்டுகள். அத்தனையும் இன்பங் கலந்த காதற் சிந்தனைகள்.

"சமந்தரக் கோடுகளுக்கு ஒரு குறுக்குவெட்டியும் வரையலாமா, முடியாதா?" என்று அவருடைய தோளைப்பற்றியவாறு ஓர் இனிய குரல் விளித்தது. "யார்? புவனாவா?" என்றார் சுதர்சன் கற்பனை மயக்கம் சற்று தெளிந்தவுடன்.

'நீங்கள் இந்த உலகிலேயே இல்லைபோலிருக்கிறதே!'

'ஆம்! புவனா. நான் இந்த உலகிலும் இல்லை, சுயநிலையிலும் இல்லை!

* * *

சுதர்சன் புவனாவைச் சந்தித்ததே ஒரு எதிர்பாராத நிகழ்ச்சிதான். சந்தித்தார். உள்ளங்கள் உறவாடின. புவனாவை நேசிக்க, காதலித்து மணம் செய்துகொள்ள, யார்தான் தயங்குவார்? கண்டவர்களை ஒரு கணம் வியப்பில் ஆழ்த்தி ஊமையாக்கிவிடும் அழகி புவனா. 'கரும்புத் தின்பதற்குக் கூலியா கேட்பார்கள்?' என்று ஒரு சமயம் தம்மையே கேட்டுக்கொண்டார். அடுத்த கணம் "அவள் யார்? நான் யார்? அவளுடைய குலம் என்ன? என்னுடைய குலம் என்ன? அவளுடைய தாய்மொழியும் என்னுடையதும் முற்றிலும் வேறுபட்டதாயிற்றே! அவளை நான் எப்படி மணப்பது? மறப்பதென்பதும் முடியவில்லையே!" என்று குழம்பித் தவித்தார்.

எப்போது அந்தத் தளிர்க்கரங்களைப் பற்றப் போகிறோம் என்று துடிதுடித்தார் சுதர்சன்.

அதேசமயத்தில் அவர் புவனாவையே காதலிக்கும்படி நிர்பந்திக்கவும் பட்டார். தம் மனத்திற்கு இன்பமூட்டக்கூடிய ஒரு செய்கையை வேறொருவருடைய வற்புறுத்தலின் பெயரில் செய்தார். புவனாவின் உள்ளமலரை இதழ் விரிக்கச் செய்யும்படி, அவளுடைய வாழ்வை ஒளி பெறச் செய்யும்படி கட்டாயப் படுத்தப்பட்டார். அப்படி அவரை வேண்டிக் கொண்டவர்-நிர்ப்பந்தித்தவர் வேறு யாருமில்லை. புவனாவின் பெற்றோர்களேதாம். அது ஒரு விந்தையான, ஒன்றுக்கொன்று முரணான நிகழ்ச்சிதான். ஆனால் உண்மை!

'என்ன தீவிரமான யோசனை? கேட்ட கேள்விக்குப் பதில் ஒன்றும் தரவில்லையே. நான் ஏதாவது முறை தவறிப் பேசி விட்டேனா? சொல்லுங்களேன்.'

திடீரென்று சுதர்சனுக்குத் தம் கன்னங்களில் புதிதாகப் பறித்து வந்த இதழ் விரிந்த தாமரை மலர் இரண்டு வைக்கப்பட்டதைப் போலிருந்தது. ஆம்! விரல்களை விரித்தவாறு அவருடைய கன்னங்களில் படிந்தன புவனாவின் உள்ளங்கைகள்!

"அதெல்லா மொன்றுமில்லை புவனா! கற்றுக் கொண்ட தமிழையே இவ்வளவு அழகாகக் கையாளுகிறாயே என்ற ஆச்சரியம் தான்."

"ஆச்சரியம் இருக்கட்டும், நான் கேட்ட கேள்வி?"

'நீ என்ன கேட்டாய்?'

'இரு சமந்தரக் கோடுகளுக்கு ஒரு குறுக்கு வெட்டியும் போடலாமா? போட முடியாதா? அவ்வாறு போடப்பட்ட அந்த குறுக்கு வெட்டி அவ்விரு நேர் கோடுகளையும் ஒரு வகையில் சேர்க்குமா, சேர்க்காதா?'

'பலே புவனா! அதற்குள் அந்தக் கதையைப் படித்து விட்டாயா?'

"ஆமாம்! அந்தக் கதைச் சுருக்கமும், அதன் மறுப்பாக எழுந்த சிறந்த கற்பனை 'மன அழுக்கை'யும் தான் குறிப்பிடுகிறேன். அதன் விளைவு தான் என் புதிரும்"

"உன் புதிர்! ஆம், சமந்தரக் கோடுகள் குறுக்கு வெட்டி ஒரு விதத்தில் அது அக்கோடுகளை இணைக்கத்தான் செய்கிறது. இன்னும் உன் புதிர் சரியாக எனக்குப் புரியவில்லையே!"

"புரிய வைக்கத்தானே ஓடி வந்தேன்!"

"இப்படி உட்கார் புவனா, சொல் கேட்கிறேன்."

"இரு பெண்கள் ஒரு பேராசிரியரை மணக்க மறுக்கிறார்கள். காரணம் வெவ்வேறுதான் என்றாலும் அவர்களுடைய மனப்போக்கு சமந்தரக் கோடுகளைப் போன்று ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை அப்பேராசிரியர் புரிந்து கொள்கிறார். இது அக்கதையின் ஜீவன்."

"ஆமாம் ஒப்புக் கொள்கிறேன். அதற்கு மறுப்பளிப்பதைப் போன்று அமைந்திருக்கிறது

மன அழுக்கின் உட்கருத்து. இதில் இரண்டு ஆண்கள் வெவ்வேறு காரணத்தோடு ஒரு பெண்ணை நிராகரிக்கிறார்கள், சரிதானே புவனா?"

"ரொம்பசரி! இந்த இரு கதைகளிலிருந்தும் நான் அறிந்து கொண்டது என்ன தெரியுமா? ஆண்கள் என்று கொண்டாலும், பெண்கள் என்று கொண்டாலும் காதல் வசப்படும் போது அவர்களுடைய நோக்கு சமந்தரக் கோடுகள் ஆகின்றன; அவ்வளவுதானே!"

"அதுவும் சரிதான். பின்பு குறுக்கு வெட்டி என்றாயே அது என்ன புவனா?"

"குறுக்கு வெட்டி என்பது உங்களுக்கு மறந்து விட்டதா. 'இண்டர் செக்டர்' இரண்டு சமந்தரக் கோடுகளை ஊடறுக்கும் ஒரு நேர் கோடு நினைவுக்கு வருமே!

"ஆமாம் குறுக்கு வெட்டி!"

"அந்த இண்டர் செக்டர் என்ன செய்கிறது?"

"சமந்தரக் கோடுகளை வெட்டுகிறது"

"ஏன்? ஒரு விதத்தில் இணைக்க முயற்சிக்கிறது. அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெறுகிறது என்று கற்பனை செய்யலாமல்லவா?"

"ஹூம் கொள்ளலாம்! அப்படியும் பொருள் கொள்ளலாம்!...ம்..."

"சற்று அலட்சியமாகச் சொல்கிறீர்களே! நான் அப்படித்தான் பொருள் கொள்வேன. தங்களுடைய தனித்தனியான காதல் ஈடுபாட்டில் ஒரே முடிவைக்கண்ட ஒரு ஆணையும் பெண்ணையும் எடுத்துக் கொள்வோம். காதல் கருகிப் போனபின் இனி சாவதே சரி என்ற முடிவுக்கு தனித் தனியாக அவர்கள் வந்து விடுவார்கள். அவ்விருவருடைய மன நோக்கமும் சமந்தரக் கோடுகள். சில எதிர்பாராத நிகழ்ச்சிகள் குறுக்கு வெட்டியைப் போன்று அவர்களுடைய வாழ்வில் குறுக்கிட்டு முன்பின் சம்பந்தமில்லாத அவ்விருவரையும் இணைக்கத்தான் செய்கிறது, என்ன சொல்கிறீர்கள். உண்டா இல்லையா?..."

"என்ன சொல்கிறாய் புவனா? உன் தர்க்கம் (லாஜிக்) புரிந்துகொள்வதற்குச் சற்று கடினமாயிருக்கிறதே!"

"ஆமாம்! உங்களுக்குக் கடினமாகத்தானிருக்கும்... நீங்கள் 'பலூனா' என்ற வடநாட்டுப் பெண் ஒருவளைக் காதலித்தீர்கள் அல்லவா?"

"பலூனா! ஆம்! என் பலூனா! அந்தப் பலூனாவுக்கு என்ன புவனா?..."

"இனிமேல் என்னால் ஒரு வார்த்தையும் பேச முடியாது. இனிக்க இனிக்கப் பேசியே என்னை உங்கள் அடிமையாக்கிக் கொண்டீர்கள். இப்போதோ ஊமையாக்கிவிட்டீர்கள். இந்தாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே சுதர்சனின் மீது பரிவுடன் சாய்ந்தாள் புவனா. உரிமையுடன் அவளுடைய கைகளை வருடிக்கொடுத்த சுதர்சன் கைகளில் அந்தக் காகிதக்கத்தை சிக்கியது.

'குறுக்கு வெட்டி' என்ற அதன் தலைப்பு அவரைத் துணுக்குறச் செய்தது. அவருடைய படபடப்பை அடக்கியது சுருண்டு விழுந்த அவருடைய கேசத்தை நெருடி இன்பமூட்டின புவனாவின் செண்பகமொட்டு விரல்கள்.

"புதிர் மட்டும்தான் என்று நினைத்தேன். என் நண்பரின் கதை புவனாவையும் ஓர் எழுத்தாளியாக்கிவிட்டதே!"

"ஹூம்! அப்படியேதான்! படித்துப் பாருங்களேன்!" சுதர்சன் 'குறுக்கு வெட்டி'யுடன் இரண்டற கலந்துவிட்டார்.

## பலூனா:

குற்றாலத்தின் எழிலை அந்தப் பூங்காவும் அதை யடுத்து இருந்த சிறிய குன்றும் மிகைப்படுத்திக்காட்டின. பொங்குமாகடல் பெருகிக் கொட்டும் அருவி உடலுக்கு அளித்த இன்ப வேதனைக்கு இதமான மருந்தாக அமைந்தன, அப்பூங்காவின் கம்மென்ற நறுமணமும் குன்றின் மீது வீசிய காற்றும். குன்றின் உச்சிக்குத் துவண்டு துவண்டு நடந்துகொண்டிருந்த நான் சுற்றுமுற்றும் பார்த்தேன்.

வயதின் முதிர்ச்சியின் விளைவோ, இல்லை தங்களுடைய ஒரே குலக்கொடியான எனக்கு இப்படி நேர்ந்துவிட்டதே என்ற தீராத கவலையோ என் பெற்றோர்களை சுவராஸ்யமற்றவர்களாக்கியது. எனக்குப் பின்னால் சற்றுதூரத்தில்தான் அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். எங்களுடைய வடநாட்டுப்பாணியில் அவர் கட்டியிருந்த தூய மஸ்லின் பஞ்சகச்சம், சில்க் ஜிப்பா, வெயிஸ்கட் 'ட்வீடு' ஜுல்லா, என்னுடைய தாயின் வெண்மையான வாயில் புடவை, அதை அவர்கள் அணிந்திருந்த விதம், அந்த அன்னையின் பரந்த முகம், கோயிலின் மூலவிக்கிரகத்தைப் போன்ற அந்த முகத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்த அகலமான குங்குமப் பொட்டு, இவை யாவும் சேர்ந்து அவர்களிடம் ஏதோ தெய்வீகத்தன்மை இருப்பதை உணர்த்தியது.

ஆம்! தங்களுடைய அன்பின் ஒரே சின்னமாகிய எனக்காக, என்னுடைய இன்ப வாழ்விற்காக, காதல் ஈடுபாட்டில் நான் முழுவெற்றிப் பெறுவதற்காக எதையும் தியாகம் செய்தார்களே, அதைக்காட்டிலும் வேறு பரிசுத்தத் தன்மை, தெய்வீகத்தன்மை என்ன வேண்டும்?

குன்றிலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் எங்கும் பரந்திருந்த குற்றாலத்தின் இயற்கை அழகு என்னை ஆட்கொண்டது. ஓர் ஓவியன் தான் தீட்டிய படத்தின்மீது கை தவறிப்போய் பச்சை மையைக் கொட்டிவிட்டதைப் போன்று எங்கு பார்த்தாலும் ஒரே பசுமை!

இந்த உவமைதான் என்னுடைய மனதில் தோன்றியது. ஆம்! அதுதானே தோன்றும்! அங்கு ஓவியன் கை தவறிப் பச்சை வர்ணத்தைக் கொட்டியிருந்தான். இக்குற்றாலத்தில் இயற்கை அன்னை கைதவறியோ அல்லது வேண்டுமென்றோ பசுமையை, செழிப்பை, குளுமையைக்

கொட்டியிருந்தாள். நானும் அப்படித்தானே! கைகளைத் தவறவிட்டவள்தானே! கைக்குக் கிட்டிய இன்பத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்காதவள்தானே. என் உள்ளத்தை நிரப்பிய அந்த எழிலுருவை மறக்க வேண்டியவள்தானே. அவரைப் பறிகொடுத்து விட்டுத் துடிக்கும் ஒரு புழுதானே நான்! அவரை இழந்தது, கைதவற விட்டது, என்னுடைய அசிரத்தையின் விளைவா? இல்லையே! மனித சக்தியை மீறிய ஒன்றல்லவா என் கையிலிருந்து அவரைப் பறித்துவிட்டது. அதற்கு நான் என்ன செய்வேன். பறிக்கப்பட்டதன் அதிர்ச்சி இன்றுவரை, இந்த விநாடிவரை என்னை வாட்டி வதைத்துக் கொண்டுதானே இருக்கிறது. நான் நுகர இருந்த அந்தக் காதல் இன்ப மலரை மொட்டிலேயே கருகும்படி செய்து விட்டதே விதி.

அவர் ஆரம்பத்திலேயே சொன்னாரே. என்னையும் வைத்துக்கொண்டு தானே என்னுடைய பெற்றோரிடம் சொன்னார்! அப்போதே அவர் கூறியவற்றைக் கேட்டிருந்தால்? சிந்தித்துப் பார்த்திருந்தால்! விழித்துக் கொண்டிருந்தால்!

அப்படி விழித்துக்கொள்ள என்னுடைய பெற்றோர்களே தயாராக இல்லையென்றால் நான் மட்டும் எப்படி முடியும்? ஆம்! அவர் சொன்னார். அவர்தான் ஸ்ரீதர். மதராஸ் கல்லூரி ஒன்றின் ஆங்கிலப் பேராசிரியர். நான் கல்லூரியின் இலக்கிய மன்றக் காரியதரிசியாக இருந்தபோது தான் ஸ்ரீதரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

பி. ஏ. வகுப்பு இலக்கிய மன்றத்தின் சிறப்பு விழா ஒன்றிற்குப் பேசுமாறு அழைக்கத்தான் அவருடைய அறைக்குச் சென்றேன். வாசற்படியில் காலை வைத்த என்னை கம்மென்ற நறுமணம் வரவேற்றது. உள்ளத்தில் ஒருவித இன்பப் பரபரப்பை உண்டாக்கியது. எதிரே மேஜையின் மீது ஒரு பெரிய புத்தர் சிலை வீற்றிருந்தது. அதன் முன் புகைந்து கொண்டிருந்த ஊதுபத்தி தான் அம்மணத்தைப் பரப்பியது:

"ஸ்ரீதர் சார்!" ... சற்று உட்புறம் தயக்கத்துடன் நடந்தேன். உள்ளேயிருந்து வெளிவந்த வேய்ங்குழல் நாதம் என்னை வரவேற்றது: '...கொள்ளை கொண்டாய் ராதே! ராதே!' என்ற மெட்டைக் கேட்டு நான் துணுக்குற்றேன். ஸ்ரீதர் ஒரு கலாரசிகர்–ஒரு கலைஞர் போலிருக்கிறதே என்ற நினைப்பு என்னை இன்புறச் செய்தது.

"சார்......!"

"யாரது?"

என் இதயம் படபடத்தது. எதிரே அறை வாசலை அலங்கரித்த திரைச்சீலை நீங்கியது.

'யார் இவர்? சற்றுமுன்பு கேட்ட அந்த இன்ப கீதத்திற்கு உரிமையான தெய்வ உருவே என் முன் நேரில்வந்து நிற்கிறதா?' எனக்கு வார்த்தையே வெளிப்படவில்லை.

திரைச் சீலையை விலக்கிய ஸ்ரீதர் மீண்டும் அதனின்று கையை நீக்கவில்லை. அந்த அறை வாயிலைத் தாண்டியும் வரவில்லை. வர அவரால் இயலவுமில்லை, யாரைப்பற்றிப் பண்ணிசைத்துக் கொண்டிருந்தாரோ அந்த ராதையேதானோ! அவர் அப்படியே ஸ்தம்பித்து நின்றார்.

எதிர்பாராத வகையில் நான்கு நயனங்கள் ஒன்றையொன்று சந்தித்துவிட்டால் கேட்கவும் வேண்டுமா? அவை பரவலாடின. கலந்து உறவாடின.

"...ம்! நீங்கள்தாம் பலூ..." என்று தயங்கியவாறு கேட்டார் ஸ்ரீதர்.

"ஆம்! தங்களை அழைத்துப்போக...!"

"உட்காருங்கள் பலூனு! இலக்கிய மன்றக் காரியதரிசி நீங்கள்தானே!"

அர்த்தமில்லாத கேள்விதான்! நானேதான் அவருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. இருந்தாலும் அன்பெனும் போதையில் சிக்குண்டவருடைய–கண்டதும் பீடிக்கும் நோயால் வருந்தியவருடைய கேள்விக்கும் விடைக்கும் பொருள்தானுண்டா? அவர் கேட்டார். நான் உற்சாகமாக பதிலளித்தேன்.

"ஆமாம்! பெண்கள் கல்லூரியின் இலக்கிய மன்றத்தில் நான் என்ன பேசப்போகிறேன். உங்கள் ஒருவர் முன் கூட நின்று தைரியமாகச் சில வார்த்தைகள் பேசத் தடுமாறுகிறேன். ஆயிரம் பெண்களுக்கு முன்பு நின்று அரைமணி நேரம் எப்படி என்னால் பேசமுடியப்போகிறது?" என்றார் நிறைந்த பொருள்படும்படி.

எனக்கும் புரிந்துவிட்டது.

"எனக்கும் அதே கவலைதான் சார்! இதற்கு முன் இரண்டு ஆடவர்கள் எங்கள் சங்கத்திற்கு வந்து பேசிவிட்டார்கள். நன்றி நவிலல் என்ற என்னுடைய பணியில் நான் சிறிதுகூட கஷ்டத்திற்குள்ளாகவில்லை. ஆனால், இன்று, இன்று தான் அதை நினைத்தாலே வெடவெட என்று நடுங்குகிறது" என்றேன்.

'ஏன் அப்படி?' என்று விஷயம் புரியாமல் கேள்வியைப் போடவா? அவர் எம். ஏ. படித்துப் பட்டம் பெற்றிருந்தார்! அந்தக் குறிப்பு வாக்கியங்களினாலேயே எங்கள் இருவருடைய உட்கருத்தும் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

பிறகு என்ன? அன்றைய கூட்டம் இனிது முடிந்தது. அவருடைய பேச்சு எனக்கும், என் பேச்சு அவருக்கும் 'இனித்தது' என்ற சொல்லினும் இனிக்கும்படியான சொல் இருந்தால் போட்டுக்கொள்ளலாம்போல் எங்களுக்குத் தோன்றியது.

அந்த இன்ப வேதனை என் இதயத்தை அன்று இரவு முழுவதும் துளைத்துக்கொண்டேயிருந்தது. மறுநாட் காலை அந்த வேதனைக்கு ஒரு மருந்தையும் தேடிவிட்டேன். என் தந்தையிடம்.

"இந்த வருடம் எனக்கு ஆங்கிலப் பாடம் மிகவும் கடினமாயிருக்கிறது அப்பா. பீ. ஏ இறுதி வகுப்பு ஆனபடியால் யாரிடமாவது டியூஷன்..."

"சொல் பவுனு! உங்கள் கல்லூரி ஆசிரியையே அமர்த்திவிடட்டுமா?"

"இல்லையப்பா, நீங்கள் கோபித்துக்கொள்ளா விடில்..."

"இதில் என்னம்மா கோபம்? உன் மனதில் இருப்பதைச் சொல்லிவிடு. படிப்பையே நிறுத்தி விடட்டுமா?"

"அதெல்லாம் வேண்டாமப்பா! என் சிநேகிதி சுந்தரியைத் தெரியுமல்லவா?"

"ஆமாம்! போன வாரம் கூட இங்கு வந்திருந்தாளே!"

"அவள் தானப்பா! இந்தப் பரீட்சையில் ஆங்கிலத்தில் அவள் அறுபது மார்க்."

"அவள் யாரிடம் படிக்கிறாள்? சொல். அந்த டீச்சரம்மாவையே..."

"டீச்சரம்மா இல்லை! அவளுடைய அண்ணன் ஸ்ரீதரே சொல்லிக் கொடுக்கிறார் அப்பா! ரொம்பக் கெட்டிக்காரர். அவரையே எனக்கும்..."

கூசாமல் ஒரு பெரும் பொய்யைத்தான் சொன்னேன். என் உள்ளத்தில் எழுந்த வேகம் என்னை அவ்வாறு பேசச் செய்தது. காதல் என்பது எவ்வளவு பொல்லாதது! துணிச்சலைக் கொடுக்கும் ஒரு சக்தி வாய்ந்த மருந்து என்பதை அப்போது தான் புரிந்து கொண்டேன். சுந்தரி என் உயிர்த் தோழி என்பது மட்டும் உண்மை. எங்கள் இருவருடைய நட்பின் முதிர்ச்சி அவளை என் கைக்குள் போட்டுக் கொள்ளப் பெரிதும் உதவியாக இருந்தது. அவளும், நானும் சேர்ந்து உருவாக்கிய திட்டம்தான் அது. என் முயற்சி வெற்றி பெறும் வரை-என் எண்ணம் ஈடேறும் வரை அவள் ஸ்ரீதருக்குச் சகோதரியாகவே நடிக்கச் சம்மதித்து விட்டாள்.

"இன்று மாலையே ஸ்ரீதரை இங்கு வரவழைக்கிறேன். கவலைப்படாதே! போதுமா?" என்றார் என் தந்தை.

ஸ்ரீதர் வந்தார். அப்பாவின் ஏற்பாடுதான். பேசினார். அவருடைய வாய்தான் என் தந்தையிடம் பேசிக் கொண்டிருந்தது. கண்கள் என்னுடன் தான் பேசிக்கொண்டிருந்தன.

அப்போதுதான் அவர் கூறினார்: "சேட்ஜீ! இந்த வேண்டுகோளை என்னால் உடனடியாக ஏற்றுக் கொள்ள முடியாது. உங்களுக்குத் தெரியாதது இல்லை. பஞ்சும் நெருப்பும் ஒரே அறையில் இருக்க முடியுமா?"

நானும் என் தந்தையும் அவர் கூறிய பதிலைக் கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

"என்ன சார்? நான் என்ன பதில் சொல்லப் போகிறேன். என் குழந்தை பவுனு பிரியப் படுகிறாள். உங்கள் சகோதரி 'சுந்தரி' அவளுடைய உயிர்த்தோழி. ஏன் என் பவுனுவையும் உங்களுடைய சகோதரியாக......"

எனக்கு உடல் முழுதும் 'ஜில்' வென்று புல்லரிப் பெடுத்தது. நான் உருவாக்கிய பொய்யை இரண்டாம் முறையாக என் தந்தையே பிரயோகித்து விட்டாரே!

"சுந்தரி? என் சகோதரி? அவருடைய கண்கள் என்னைப் பார்த்து மிரள மிரள விழித்தன. என்னுடைய கண்ணிமைகள் துடித்து அவருக்குச் சமிக்ஞை செய்தன. அவருடைய முகம் அத்துடிப்பை அங்கீகரித்ததைப் போன்று மலர்ந்தது.

"ஆமாம் சார்! உங்கள் தங்கை சுந்தரிதான் உங்களைக் காட்டிக் கொடுத்து விட்டாள். எங்களிடமிருந்து நீங்கள் தப்பவும் முடியாது." என்றேன்.

மறுநாளே எங்கள் படிப்புத் தொடங்கியது.

அவர் அன்று சொன்னார். அது முற்றிலும் உண்மையாகி விட்டது. பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் பக்கத்தில் ஒரே அறையில் வைக்கப் பட்டன. எங்கள் இருவரையும் அந்தப் புனித அக்னி பரிசுத்தமாக்கியது. உள்ளங்கள் இரண்டற்ற நிலைமை அடைந்தன.

முதல் நாள் அவர் எனக்குப் பாடம் சொல்லித் தரவில்லை. நான்தான் அவருக்குக் கற்பித்தேன். சுந்தரி யார்? எங்கள் காதல் வாழ்வை மலரச் செய்ய மணம் பெற்று நிறைவு பெறச் செய்ய அவள் எவ்வளவு அக்கறை காட்டுபவள்? என்ற விவரங்களை யெல்லாம் நான்தான் அவருக்குச் சொல்லிக் கொடுத்தேன்.

'குறும்புக்காரி!' என்ற ஒரே சொல்லால் என்னை அடிமைப் படுத்தி விட்டார்.

அந்த வருட ஷேக்ஸ்பியர் பாடமும் அப்படித் அமைய வேண்டுமா? இரண்டும் இரண்டு காதற் காவியம். ஒரு நாள் பாடம் சொல்லிக் கொண்டிருந்த போதே மேஜை மீதிருந்த விளக்கைப் பட்டென்று அணைத்தார். எங்கள் அறையை இருள் கவ்வியது.

"இதென்ன சார்! விளக்கை அணைத்து..." பீதியடைந்த நான் தடுமாறினேன். பதட்டத்தில் விளக்கைப் போடலாமென்று கையை நீட்டினேன். நீட்டிய என் உள்ளங்கையை...... என் உடல் முழுவதும் ஒருவித மின்சாரப் பாய்ச்சல்!

"சார்...!"

'பவுனு...'

என் கை அவருடைய பிடிப்பிற்குள். நான் உதற வேண்டும், கையை விடுவித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தேன். உள்ளம் உதறி எறியாத செய்கையை கைமட்டும் எப்படிச் செய்யும்? முடியவில்லை.


அவர் திடீரென்று ஆரம்பித்தார்.

"இந்த விளக்கை அணைக்கலாம்! மீண்டும் ஏற்றலாம்!" விளக்கு மீண்டும் பிரகாசித்தது. என் மனக்கோயிலில் அந்த வினாடியே அன்பொளி வீசும் தீபம் ஒன்றை அவர் ஏற்றிவைத்து விட்டார்.

"ஆனால் ... அந்த விளக்கை!... அணைத்துவிடலாம்! மீண்டும் ஏற்றுவதென்பது?..." என்று கர்ஜிப்பதைப்போன்று கூறி முடித்தார் ஸ்ரீதர்.

"ஹோ!... ஒதெல்லோ நாடகமா?" என்று கேட்டுக்கொண்டே எதிர்பாராத சமயத்தில் என்னுடைய தந்தை அந்த அறைக்குள் நுழைந்தார். என் நெஞ்சம் வெடித்துவிடும்போல் படபடத்தது. ஸ்ரீதர் எழுந்து நின்றார்.

[அடுத்த இதழில் முடிவுறும்.]






# உடலும் உள்ளமும்

ரா. வேங்கடசாமி

அட்டைப்படக் கதை

அவள் இன்னும் வரவில்லை! பத்து மணிக்குத் தான் வருவதாக அவள் சொல்லியிருந்தாள். 'அவள் ஏன் இன்னும் வரவில்லை' என்று ஒன்பது மணிக்கே அங்கலாய்த்துக் கொண்டிருந்தால் ...அவள் வந்து விடுவாளா என்ன? அவன் நன்றாக அறிவான், அவள் நிச்சயம் வருவாள்என்பதை. இருந்தாலும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே அவள் வரவை எதிர்பார்த்து மன அமைதியை இழந்து அவன் தவித்துக் கொண்டிருந்தது, வேடிக்கையிலும் வேடிக்கையே!

பிரிவு என்பது சாதாரண வியாதியோடு ஒப்பிடக் கூடியது அல்ல! தீர்க்க முடியாத வியாதிகள் எவ்வளவோ மனிதனுக்கு வருகின்றன அல்லவா?...அதில் ஏதேனும் ஒன்றை 'பிரிவோடு' ஒப்பிடலாம். உள்ளிருக்கும் பயங்கரமான வியாதி, குணமாகி விட்டதுபோல் கோடி காண்பித்தாலும், என்றாவது ஒருநாள் திடீரென்று தலைதூக்கி ஆளை வாட்டும், அந்தத் தன்மை இப்பிரிவுக்கும் உண்டு!

ஐந்து வருடங்களுக்கு முன் கமலாவைப் பிரிய நேரிட்டபோது ராகவனும் மிகவும் வேதனையைத் தான் அடைந்தான். ஆனால்... நாளடைவில்

அது குணமடைந்து விட்ட நோயைப் போல அவனிடமிருந்து தற்காலிகமாக விடைபெற்றுக் கொண்டு போயிருந்தது!

ஆனால்!

"உங்களைச் சந்திக்க நாளைவருகிறேன்" என்று கமலா சொன்னதிலிருந்து ராகவனுக்கும் பிரிவின் வேதனை தெரிய ஆரம்பித்து விட்டது. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே அவள் வரமாட்டாளா என ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தான்.

பஸ் ஸ்டாண்டில் கூட்டம் அதிகம் இருக்கவில்லை. அதனால் ராகவன், பத்துமணிக்கு எக்ஸ்டென்ஷனிலிருந்து வரும் டவுன் பஸ்ஸின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தபோது, இப்படியும் அப்படியுமாக நடக்க மிகவும் சௌகர்யமாக இருந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன்னும் இப்படித்தான்! அவள் வருகைக்காக அவன் மணிக்கணக்காக காத்துக்கொண்டிப்பான். அப்போது அவர்கள் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார்கள். இன்பமாகக் கழித்த அந்நாட்களை இப்போது எண்ணிப் பார்த்தாலும் மனதில் இன்ப வேதனை. அதனால் லேசான இதய வலி. கமலாவுக்கு இதையெல்லாம் எண்ணிப்பார்க்க நேரம் இருக்கிறதோ என்னவோ? காதல்கொண்ட உள்ளங்கள் சீக்கிரம் அதை மறந்துவிடுவதில்லை. மறந்துவிட முடிவதில்லை. இல்லாவிடில், நேற்று எதிர்பாராதவிதமாக ராகவன் கமலாவைச் சந்தித்தபோது அவள் கண்களில் அவன் கண்ட புதிய ஒளிக்கும், முகத்தில் ஏற்பட்டிருந்த திடீர் மலர்ச்சிக்கும் என்ன அர்த்தம்? அதுதான் போகட்டும். "நான் உங்களைத் தனியாகச் சந்திக்க விரும்புகிறேன். நீங்கள் குடியிருக்கும் வீட்டு விலாசத்தைக் கொடுங்கள்!" என்று அவள் கேட்டதற்கு என்ன அர்த்தம்?

ஆம்! அவள் இன்னும் அவனைக் காதலிக்கிறாள் என்ற முடிவுக்குத்தான் அவன் வரவேண்டியிருந்தது. அவன் உள்ளத்திலும், நல்லவேளையாக 'காதல்' மறைந்து விடவில்லை. அவள் மனதை, அவன் எளிதில் புரிந்து கொண்டதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்து விட்டது!

உள்ளத்தில் ஆனந்தம் பொங்கி விட்டால்... சூழ்நிலையும்—சுற்றுப்புறமும் கண்களுக்கு தெரியாமல் போய்விடுவது இயற்கை! ராகவன் பழைய நாட்களின் சுவையை அனுபவித்துக் கொண்டிருந்தவன், அந்நிலையில் தான் இருந்தான். இல்லாவிடில் டவுன் பஸ் வந்து நின்றதும்... அதிலிருந்து அழகு தேவதையாக கமலா இறங்கியதும், அவனுக்கு எப்படித் தெரியாமல் போகும்?

"என்ன யோசனை? நான் வந்து விட்டேனே?" என்ற கமலாவின் குரல்தான் அவனை நடப்புலகத்திற்கு கொண்டு வந்தது....

"ஓ! வந்து விட்டாயா?" என்று கேட்டுவிட்டு ராகவன் அசட்டுத் தனமான ஒரு சிரிப்பை உதிர்த்தான். அவன் நிலை அவளுக்குப் புரியாமலில்லை! வைத்த கண் வாங்காமல் தன்னையே பார்க்கும் ராகவனிடம் அவள்,

"இங்கேயே இன்னும் எவ்வளவு நேரம் நிற்பது? காலாட எங்காவது போவோமே!" என்று கூறி, அவன் கவனத்தை திருப்ப முயன்றாள். இரண்டு குழந்தைகளுக்குத் தாய் என்றாளே நேற்று, இந்த அலங்காரத்தோடு அவளைப் பார்த்தால், யார் அப்படிச் சொல்ல முடியும்? கல்யாணமாகாதவள் என்றால் நம்புவார்கள்! கேவலம் ஐந்து வருடங்களால் கூட அவளிடம் எவ்விதமான மாறுதலையும் நிரந்தரமாக உண்டாக்க முடியவில்லை.

"இதென்ன?......... உங்களுக்கே நன்றாக இருக்கிறதா?" என்று அவள் சற்று கடிந்து கொண்ட போதுதான், அவன் அசைந்து கொடுத்தான்.

"எங்கே போகலாம் என்கிறாய்?" நடந்தான்.

"ஏன் உங்கள் வீட்டுக்கே போவேமே! நடந்தாள்.

"நீ இறங்கி இருக்கும் வீட்டுக்கு அருகிலேயே தான் என் வீடும்! அதனால் அங்கு போக வேண்டாம்."

"சரி வேண்டாம்... வாருங்கள் ஏரிகரைவரை நடந்து, அங்கு இருக்கும் பெஞ்சுகளில் ஏதாவதொன்றில் அமர்ந்து பேசுவோம்"

"பிறகு?"

"அதைப் பற்றி பிறகு யோசிப்போம் சினிமாவுக்குப் போகிறேன் என்று சாக்கு சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அதனால் காலைக் காட்சி முடிவடையும் நேரத்திற்கு நான் வீடு திரும்பிவிட வேண்டும்!"

"..........."

"ஏன் பதில் சொல்லவில்லை நீங்கள்?"

"இவ்வளவு அவசரமாக நீ வருவானேன்? அதற்கு வராமலேயே இருந்திருக்கலாமே!"

"நிரந்தரமாக உடலை வாட்டும் நோய்க்கு, அவசரமாக ஏதாவது மருந்து கொடுத்துவிட்டால் அது சிறிது குணமடைவதில்லையா?... அதைப் போல் இவ்வளவு வருடங்கள் பிரிந்திருந்தோம்... நேற்று எதிர்பாராதவிதமாகச் சந்தித்தோம்... பிரிவென்னும் தீராதவியாதிக்கு... நமது இப்போதைய குறுகிய சந்திப்பு ஒரு நல்ல மருந்தாக அமையட்டுமே என்னும் நல்ல எண்ணத்தினால் தான்..." அவள் இழுத்தாள்.


"அது ஒன்றுமட்டுந்தானா?"

"வேறு காரணம் இருக்கிறது. அது உங்களுக்கே தெரியும் என்பதால் சொல்லாமல் விடுகிறேன்."

"எனக்குத் தெரியாது."

"தெரிந்தும் தெரியாததுபோல நடிக்காதீர்கள். என் வாயால் அதைச் சொல்லவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்."

"அப்படித்தான் வைத்துக்கொள்ளேன் !" பதில் உடனே வந்துவிடவில்லை.


எழுச்சி மிக்க புத்தகம்
தரும் உற்சாகம்
அந்தநேரத்துக்கு மட்டுமே
—ஆனால்
எப்பொழுதும் உற்சாக
மளிப்பது தேநீர்தான்
நான்தான் டீ
எழுதுகிறவர்களுக்கும் படிக்கிறவர்களுக்கும்
நான் நண்பன்
TEA BOARD INDIA
PST 200

"நம் இருவர் உள்ளத்திலும் இன்னும் காதல் சாகவில்லை என்பதால் வந்தேன்!"

"கமலா!" அருகில் நடந்தவளை அவன் பார்த்தான்.

"நான் உண்மையைத்தான் பேசுகிறேன்!" இருவரும் ஏரிக்கரையை நோக்கி நடந்தார்கள்.

2

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது அவர்கள் இருவருக்கும் காதல் ஏற்பட்டது. முதல் சந்திப்பில் இருந்த வேகம், கடைசி சந்திப்பிலும் இருந்தது. கமலா பணக்காரர் ஒருவரின் ஒரே வாரிசு. ராகவனோ பிழைப்பதற்காக கல்லூரிப் படிப்பை நாடி வந்தவன். படித்துத் தேர்ந்தால் வாழ்வுண்டு! காதலிலேயே அவன் கவனம் செலுத்திக் கொண்டிருந்து விடவில்லை நல்ல வேளையாக!

படித்தபோது படித்தான். காதலித்தபோது காதலித்தான். கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்ட ராகவனுக்கு உடனடியாக ஒரு கம்பெனியில் வேலை கிடைத்தது. அவனும் அதை ஏற்றுக்கொண்டான்.

பெண்ணைப் பெற்றவருக்கு இவர்களுடைய காதல் விவகாரம் தெரியாமல் இல்லை. ஆதரித்தது போல அவர் பேசியதை கமலாவும் உண்மையென்று முதலில் நம்பி விட்டாள். அதனால் ராகவனுக்கும் ஊரை விட்டுப் போக விடை கொடுத்தாள். என்றாவது ஒருநாள் ஒன்றாகி விடுவோம் என்ற நம்பிக்கை இருவருக்கும் இருந்தது, ஆனால்?

லட்சாதிபதியான கமலாவின் தந்தைக்கு ராகவன் தனக்கு ஏற்ற மருமகன் இல்லை என்கிற நினைப்பு! அதனால் அவர் நாடகமாடினார்!

ஊரை விட்டுப் போன ஆறு மாதங்களுக்குப் பிறகு ராகவனுக்கு ஒரு திருமணப் பத்திரிகை வந்தது. அதில் கமலாவுக்கும் இன்னொரு டாக்டருக்கும் திருமணம் என்று அச்சிடப் பட்டிருந்தது!

ராகவன் என்ன செய்வான்?

கல்லூரியில் ஏற்பட்ட காதல் காற்றோடு போய் விட்டது என்கிற நினைப்பில் திருமணத்திற்கு வாழ்த்து அனுப்பி விட்டான். அந்த வாழ்த்தை ஆதாரமாக வைத்து கமலாவின் தந்தை அவளிடம் பேசினார்.

"அவன் வேறு ஏதோ ஒரு பெண்ணைக் காதலித்து... மணக்க நிச்சயித்துவிட்டான் போலிருக்கிறது... இல்லாவிட்டால், இன்னும் நடைபெறாத உன் திருமணத்திற்கு அவன் வாழ்த்து அனுப்புவானா?" என்றார்.

தான் போலித் திருமணப் பத்திரிகை, அனுப்பியதை அவர் சொல்லவே இல்லை. சொல்ல அவருக்குப் பைத்தியமா என்ன?

கமலா ஒன்றும் புரியாமல் தவித்தாள்...அப்பா சொல்வது நிஜமாக இருக்குமோ? இல்லாவிடில் ஏன் அவன் திருமண வாழ்த்து அனுப்புகிறான்? இப்படித் தன்னைக் கழித்துக்கட்டிவிட்டு வேறொருவளைக் கைப்பிடிக்க அவன் திட்டம் போட்டிருக்கிறான் என்ற எண்ணம் அவள் மனதில் நிரந்தரமாக இடம் பிடித்துக்கொண்டது.

அதனால்தான், தன் தகப்பனார், தனக்கு பெரிய இடத்தில் மாப்பிள்ளை பார்த்தபோது அவள் எதிர் வழக்காடாமல், திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாள். தனது எண்ணம் நிறைவேறியதும், கமலாவின் தந்தை தமது சாமர்த்தியத்தை நண்பரொருவரிடம் விவரித்துக்கொண்டிருந்ததை கமலா கேட்கும் வாய்ப்பு கிடைத்தது! அதன் மூலம்தான் தன் தந்தையின் கபடநாடகம் அவளுக்குப் புரிந்தது!

தந்தையாக இருந்தால் என்ன? தன் காதலுக்குத் தடையாக இருந்தவர்தானே? மனதில் அபிப்பிராயம் மாறிவிட்டால் விளைவும் மாறிவிடுமல்லவா!

கணவனுடன் சென்றவள், தந்தை சாகக் கிடக்கிறார் என்று தகவல் கேள்விப்பட்டபோது கூட, பிறந்த வீட்டுக்கு வரவில்லை. மகளைப் பார்க்காமலேயே உயிர்விட்டார் அந்த மகானுபாவர். இதுவரை கமலாவும் அதற்காகக் கவலைப் படவில்லையென்றால் அவளது நெஞ்சுறுதியைக் குறைத்து மதிப்பிடமுடியாது! ஆனால்,

இவ்வளவு நடந்தும், ராகவனிடம் அவள் கொண்ட காதல் மறைந்துவிடவில்லை! நீறுபூத்த நெருப்பாக இருந்தது.

ஐந்து வருடங்களுக்குப் பின், இப்போது அவள் இரண்டு குழந்தைகளுக்குத் தாய்!

எதிர்பாராதவிதமாக சேலத்தில் ஒரு சிநேகிதியின் திருமணத்தில், அவள் ராகவனைச் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் உண்டாகிவிட்டது!

3

இருவரும் ஏரிக்கரையில் போட்டிருந்த பெஞ்சி ஒன்றின்மீது அமர்ந்தார்கள். வெய்யிலின் கடுமையால் ஜன நடமாட்டம் அதிகம் இல்லை. போவதும் வருவதுமாக இருந்த மோட்டார்களின் சப்தம்தான் அவ்விடத்து அமைதியைக் குலைத்துக்கொண்டு இருந்தது.

ஒரு தடவை கமலாவைப் பார்த்துவிட்டு, "என்னால் நம்பவே முடியவில்லை!" என்றான் ராகவன்.

"எதை?"

"நீ என்னை இன்னமும் காதலிக்கிறாய் என்கிற விஷயத்தைத்தான்!"

"சர்வ சாதாரணமான விஷயம்தான் இது. நாம் சண்டைபோட்டுக் கொண்டு பிரியவில்லை. ஒருவரை ஒருவர் தப்பாக நினைக்கவில்லை. என் தந்தை செய்த சதியைப் பற்றித்தான் உங்களிடம் நேற்று சொன்னேனே...!

"அதனால் என்ன? உனக்குத் திருமணமாகிவிட்டதே!"

"காதல் வேறு, திருமணம் வேறு என்று யாரோ சொன்னதை இப்போது உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்."

"ஆக... உன் உள்ளத்தில் எனக்கு இன்னமும் இடமிருக்கிறது என்கிருய்?"

"அதில் இடம் பெற்றிருப்பவரே நீங்கள் தானே?"

"இதை உன் கணவர் அறிவாரா? அவர் எப் படிப்பட்டவர்?"

"அவர் மிகவும் நல்லவர். ஆரம்பத்தில் நம் மைப்பற்றிக் கேள்விப்பட்டு என்னிடம் கொஞ்சம் காட்டுத்தனமாக நடந்துகொண்டார். கல்லூரியில் படித்த பெண்களே இப்படித்தான்; ஆனல் திருமணமானவுடன கணவனுடன் ஐக் கியமாகி, காதல், காதலன் ஆகிய எல்லாவற்றை யும் மறந்து விடுவார்கள் என்று யாரோ சொன் னதை நம்பி என்னிடம் நல்லவிதமாக நடந்து கொள்ளுகிருர். எனக்கு இரு குழந்தைகள்!" என்று முடித்தாள் கமலா!

ராகவன் மட்டுமென்ன அவளை முற்றிலும் மறந்தா போய்விட்டான்? அவளுக்குத் திருமணம் என்றவுடன், அவனும் ஒருத்தியைக் கைப் பிடித் தான். ஆனல் அவள் வாழ்வு அதிக நாட்கள் நீடிக்கவில்லை! முதல் பிரசவம் குறைப்பிரசவ மாகி, இவ்வுலகை விட்டே போய்விட்டாள்! அதற்குப்பின் அவனும் திருமணத்தைப்பற்றிப் பேசவில்லை... நினைக்கவில்லை — இப்போது... காலங்கடந்த பின்னும் 'காதல்' இருக்கிறது என்று கமலா அவனைத் தேடி வந்திருக்கிருள். அதற்கென்ன அர்த்தம்?

ராகவன் மனதில் என்னென்னவோ. எண்ணங் கள் தலை தூக்கின. காதலின் தெய்வீகத்தன்மை விடைபெற்றுக் கொண்டு போய்விட்டது போன்ற நிலை.

கமலாவின் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூவின் வாசனை காற்ருேடு கலந்து, அவனையும் மயக்கியது.

தன் அருகில், தன்னைக் காதலிக்கும் ஒரு பெண் அவளுக்கு கணவன் இருக்கிருன் குழந்தைகள் இருக்கின்றன. இருந்தாலும் இன்ெருவனை அவள் காதலிக்கிறேன் என்கிருள்! செத்துவிடும் காதல், இவள் வரைக்கும் சாகாமல் இருப்பதேன்?

ஒரு வேளை தான் தனியாளாக இருப்பதை அவள் பயன் படுத்திக் கொள்ளப் பார்க்கிருளா? இல்லை, திடீரென கணவனிடம் ஏதாவது குறை கண்டு விட்டாளா?

அவனும் அவளைக் காதலித்தான். உண்மை தான்! ஆனல் திருமணமானவுடன் அது எங்கோ அல்லவா ஓடிப்போய்விட்டு, இப்போது இவளைப் பார்த்தவுடன் மீண்டும் அவனிடம் வந்து ஒட்டிக் கொண்டிருக்கிறது!

"என்ன இப்படி யோசனையில் ஆழ்ந்து விட் டீர்கள். நாம் பேசவேண்டியது எவ்வளவோ இருக்க குறுகிய காலத்திற்குள் பேசாமல் வேறு இருந்துவிட்டால்? உங்கள் மனைவி இறந்தபின் நீங்கள் ஏன் திருமணம் செய்துகொள்ளவில்லை? பெண் கொடுக்க எவ்வளவோ பேர் முன்வரு வார்களே!" அவள் பேச்சை மாற்ற முயன்ருள். அவன் அதையெல்லாம் கவனிக்கும் நிலையிலா இருந்தான்? ஐந்து வருடங்களின் ஓட்டத்தி னுலும், இரண்டு குழந்தைகள் பெற்றதாலும்... கரைந்துபோகாமல் இருக்கும் அவள் அழகை தான் எப்படி சுவைப்பது? அவள் தன்னைக் காதலித்து வருவதால், தடையில்லாமல் எல்லாமே முடிந்துவிடும் என்ருெரு நம்பிக்கை அவனுக்கு!

மனதில் இந்த எண்ணங்களின் சுழற்சியே இருந்ததால் அவன் பேசாமல் அவளைப் பார்த்த படியே இருந்தான்.

"நான் வேண்டுமானல் போகிறேன் உங்களைப் பார்த்ததே எனக்குப் போதும்" என்று கூறிக் கொண்டே அவள் எழுந்தாள். அப்போதுதான் அவன் உணர்வு பெற்ருன். "இரு கமலா! அதற்குள் எழுந்துவிட்டாயா?" என்று துணிச் சலாக அவள் கையைப்பற்றி உட்காரவைத்தான்.

அவள் சிணுங்கவில்லை.

"என் அறைக்குப் போய்விட்டு, பிறகு உன் இடத்திற்குப் போகலாம்!"

"உங்கள் இடத்திற்கா? இனி எதற்கு?" அவள் வியப்போடு கேட்டாள்.

"என்னை நீ காதலிக்கிருய் இல்லையா?"

"ஆமாம்!"

"உன் உள்ளத்தில் எனக்கு இடமிருக்கும் போது உன்னை மட்டும் நான் ஏன் அடையக் கூடாது? இருவர் உள்ளமும் ஒரு நிலைப்பட்டு விட்டதால், தடை ஏதும் இருக்காதல்லவா? அத னல் தான் என் அறைக்குப் போகலாம் என்கி றேன்"

கமலா பாம்பை மிதித்து விட்டவள் போல் திடுக்கிட்டு நகர்ந்தாள். ஆனல் இடத்தைவிட்டு எழவில்லை. அதற்கு இப்போது அவசியமில்லை என்று கருதி விட்டவள் போல் அவள் தோற்ற மளித்தாள்!

அவன் மேற்கொண்டு பேசாமல் அவளைக் கவ னித்துக் கொண்டிருந்தான்!

"நாம் ஒருவர்க்கொருவர் சொந்தம்தான். அதை நான் இல்லையென்று மறுக்கவில்லை. ஆனல் உடலால் அல்ல! உள்ளத்தால்! என் உள்ளத்தை நான் உங்களுக்கு ஒப்படைத்து எவ்வளவோ வரு டங்களாயின. அதைப்போல் உடலையும் ஒப் படைத்து நாம் ஒன்ருக முடியுமா? அது இந்தப் பிறவியில் நடக்காது! என்ருள் அவள் எட்ட இருந்த சூன்யப் பிரதேசத்தைப் பார்த்துக் கொண்டே.

"ஒன்ருக இருக்க முடியாது, காதலர்களாக உலவ முடியாது. ஆனல் இப்போது?"

"முடியாத காரியத்தைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்? நான் இப்போது ஒரு வீட்டின் எஜமானி. நான் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் என் கணவருக்கும், குழந்தைகளுக்கும் துரோகம் செய்யாமல் வாழ்க்கை நடத்தியே ஆகவேண்டும்! திருமணமான ஒருத்தி உள்ளத்தை ஒருவருக்கும், உடலை ஒருவருக்கும் அர்ப்பணிப்பது என்றால், அதுவே துரோகந்தானே? ஆனால் நான்...? அந்த அளவுக்காவது நான் உடன்படத் தயாராக இருக்கிறேனே, அதைக் கவனியுங்கள்!

"நீங்கள் உடலைக் கேட்பது முறையும் அல்ல; நான் அதைத் தருவதாகச் சொல்ல தகுதி படைத்தவளும் அல்ல!

"பேசாமல் நமது பழைய நாட்களை நினைத்துப் பாருங்கள். வேதனை குறைந்து மனதிற்கு நிம்மதி ஏற்படட்டும். நாம் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் உங்களைச் சந்திக்க விரும்பினேன். ஆனால் நீங்களோ அதைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்!"

கமலா பேசி ஓய்ந்தாள்.

"அப்படியானால் நீ காதல் காதல் என்று பேசுவதில் அர்த்தமே இல்லை! காதல் இருந்தால், நீ வேறு, நான் வேறு என்கிற பாகுபாடு ஏது?" என்றான் ராகவன் விரக்தி அடைந்த குரலில்.

கமலா இருக்கையைவிட்டு எழுந்தாள். அதற்கு மேலும் அவனிடம் பேசிப் பயனில்லை என்று நினைத்தது அவள் மனம். அதற்காக உள்ளத்திலிருக்கும் காதல் திடீரென மறைந்துவிடுமா என்ன? ராகவனிடம் காதல் இருக்கிறது என்று சொல்லத்தானே அவள் இங்கு வந்திருக்கிறாள்? அவனை விரோதித்துக்கொண்டுபோனால் என்ன பயன்? மனதில் இதுவரை இருந்த நிம்மதிகூட இல்லாமல் போய்விடுமே! அதனால் பேசலுற்றாள்.

"அன்பரே! மனமொடிந்துபோன நிலையில் இருந்த நமக்கு, சற்று ஆறுதல் இருக்கட்டும் என்று நான் நினைத்ததன் விளைவே இச்சந்திப்பு. இச்சந்திப்புகூட இல்லாவிடில் வாழ்நாள் பூராவும் நமக்கு மன அமைதியே இருக்காது என்பது என் எண்ணம். நான் ஒருவரை மணந்து வாழ்க்கை நடத்துகிறேன் என்பது உண்மை! ஆனால் என் உள்ளம் நிச்சயம் அவருக்குச் சொந்தமானது அல்ல! அதை உங்களுக்கு அர்ப்பணித்த நாளிலிருந்து நான் திரும்பவும் அதைப் பெற முயற்சிக்கவே இல்லை! முயன்றிருந்தால்கூட என்னால் அது முடியாது. ஏனெனில் நான் உங்கள்மீது கொண்டிருந்த காதல்...கொண்டிருப்பது...அத்தகைய சக்திவாய்ந்தது. இவ்வுலக வாழ்க்கையில் உடலைத்தான் பிரதானமாக மதிக்கிறார்களே ஒழிய உள்ளத்தை அல்ல!

"உடலைக் கணவருக்கு அர்ப்பணித்துவிட்டு, இரண்டு குழந்தைகளுக்கும் தாயானபிறகு, அதை நான் வேறொருவருக்கு, அவர் என் காதலராகவே இருந்தாலும் சரி, அர்ப்பணித்தால் அதைத் துரோகம் என்கிறது உலகம்! உள்ளத்தைப் பொறுத்த விஷயம் அப்படிப்பட்டதல்ல. அதை யாரும் சட்டை செய்வதே இல்லை!

"என் மனசாட்சி சொல்லுகிறது, அதுவும் துரோகம்தான் என்று! நான் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆரம்பத்தில் எனக்குக் கஷ்டமாகவும் இருந்தது. உள்ளத்தையாவது உங்களுக்கு அர்ப்பணிக்காவிட்டால் நான் உங்களுக்கு துரோகம் செய்தவள் ஆவேன் இல்லையா? அதனால்தான் உள்ளத்தையும் உடலையும் இரண்டாகப் பிரித்தேன். இரண்டுக்கும் ஏற்றவகையில் என் வாழ்க்கையை அமைத்துக் கொண்டேன்.

"உள்ளம் உங்களை எப்போது நினைத்து அழுது கொண்டே இருந்தது. உங்கள் விலாசம் மட்டும் எனக்கு முன்பே தெரிந்திருந்தால், நான் எப்படியாவது சந்திக்க ஓடிவந்திருப்பேன். ஆனால், என்ன செய்வது? அது இப்போதுதான் சாத்தியப்பட்டது. இப்போது எனக்கு வாழ்க்கையின் லட்சியத்தையே கண்டுவிட்ட ஒரு திருப்தி.

"என் கணவர், என் குழந்தைகள் ஆகியோர்களுக்கு நான் அவர்களிடம் காட்டும் பரிவில் மிகவும் திருப்தி!

"அதே போல் நீங்களும் என் உள்ளத்திற்கு மட்டும் சொந்தம் கொண்டாடி திருப்தி அடைய வேண்டும்!

"இப்போது சொல்லுங்கள் உங்களுக்கு உடல், உள்ளத்தை விட முக்கியமானதாகத் தெரிகிறதா?"

கமலா இவ்வளவு விளக்கமாகப் பேசுவாள் என்று ராகவன் எதிர்பார்க்காததால் அயர்ந்து போனான்.

அவனிடம் இருந்த வெறி எங்கே போனதோ தெரியவில்லை.

அழகுப் பிம்பமாகக் காட்சியளித்த கமலா இப்போது அவனுக்கு 'உலகத்துக் காதல்'களுக்கெல்லாம் ஏகப் பிரதிநிதியாகக் காட்சி அளித்தாள்.


பேச்சற்றுப் போய்விட்ட ராகவனின் நிலை கமலாவுக்குத் தெரியாமல் போய் விடவில்லை!

"போகலாமே. எனக்கு நேரமாகவில்லை?" என்றாள் அவள்!

"போகலாம் கமலா, போகலாம்!" என்று அவனும் எழுந்தான்.

அவர்களுக்கிடையே பாலமாக இருந்த 'காதல்' செத்துப்போய் விடவில்லை.

(மராத்திக் கதை தழுவல்)



பர்மா-ஷெல் மட்டுமே

# இரண்டையும்

பெற்றிருக்கிறது

லாலி பாப் மிட்டாயையும், ஐஸ்கிரீமையும் பெற்ற சிறுவனைப்போல, பர்மா-ஷெல்லிடம் மோட்டார் ஓட்டிகள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறார்கள்.

பர்மா-ஷெல் விற்பனை ஸ்தலங்களில்தான்—ஷெல் மற்றும் பி. ஓ. ஸி. பம்புகளில்தான்—ஷெல் கம்பெனியாரின் பிரத்தியேக தயாரிப்புகளான அதிக சக்தி பெற்ற பெட்ரோலும் ஐ. ஸி. ஏ.வும் உமக்குக் கிடைக்கும். உங்கள் மோட்டார் சிக்கனமாகவும், சிறப்பாகவும் உழைப்பதற்கு இவை இரண்டும் உதவுகின்றன.

**நிரப்புங்கள்**

**வித்தியாசத்தைக்**

**காணுங்கள்!**



# பாப்பா பாட்டு.

மங்கை

காலையில் எழுந்திரு பாப்பா — உன்
காரியத்தில் கவனம் வை பாப்பா
வேலைகள் மகிழ்ந்து செய் பாப்பா—பாடம்
வாசித்து எழுதவேண்டும் பாப்பா.

தினமுங் குளிக்கவேண்டும் பாப்பா—எல்லாந்
தீர யோசித்தல் நலம் பாப்பா
மனதில் கெட்டதை நினையாதே — நீ
மறந்தும் பேசாதே வாதே!

சுத்தம் சுகந்தரும் பாப்பா — சொன்ன
சொல்லுக்கு மாருதே பாப்பா
சித்திரம் பழகு நீ பாப்பா — என்றும்
சிக்கனமாய் வாழவேண்டும் பாப்பா.

அதிகம் பேசுதல் வீண்தொல்லை — நன்கு
அறிந்து சென்ருல் கவலையில்லை
மதியுளோர் யோசனையே தீபம் — அதை
மதித்து நடப்பதே நம் தாபம்.

அன்பு, துன்ப மொழிக்கு மருந்து — நீ
அறிவுளோர் வழிசென்று திருந்து
இன்சொல்லே சந்தோஷ விருந்து—தினம்
அளவு அறிந்து உணவருந்து.

சிற்றெறும்பு ஒற்றுமையாய் பாப்பா-கூடி
சிறப்புடன் வாழ்வதைப் பார் பாப்பா
அற்பர்களோடு சகவாசம் — நம்மை
அடியோடு அழித்திடும் நாசம்.

தந்தையும் தாயுமே தெய்வம் — வீண்
தற்பெருமை கொள்ளாதே பாப்பா
பத்திரிகை உலகில் பரபரப்பு பாப்பா—நீ
'காவேரி'யை படிக்க தவருதே பாப்பா!

---

## கண்டுபிடியுங்கள்!

ஐந்தே எழுத்துக்களைக்கொண்ட ஒரு அற்புதக் கடல் வீரனின் பெயரைக் கண்டு பிடியுங்கள்! முதலாவது எழுத்து கொழும்பில் உண்டு; கண்டியில் இல்லை. இரண்டாவது எழுத்து உலகத்திலே உண்டு; தேசத்திலே இல்லை. மூன்ருவது எழுத்து அம்மாவிலே உண்டு; அப்பாவிலே இல்லை. நான்காவது எழுத்து பண்டிதரில் உண்டு; புலவரில் இல்லை. ஐந்தாவது எழுத்து பஸ் வண்டியிலே உண்டு; மின்சார வண்டியிலே இல்லை. இந்தக் கடல் வீரனின் பெயரென்ன?

விடை: கொலம்பஸ்!

தம்பி! தங்கைகளே! நீங்கள் எட்டு எட்டுக்களை வைத்துக்கொண்டு ஒரு ஆயிரம் ஆக்கவேண்டும். ஆனல் பெருக்கவோ, வகுக்கவோ, கழிக்கவோ கூடாது. கண்டு பிடியுங்கள்!

விடை:

```
 888
  88
   8
   8
   8
----
1000
```

---





## தொடர் கதை

### 1. பறந்து வந்த பைங்கிளி

அவன் அரசன். ஆண்டியாகிவிட்டது போலக் கனவு காண்கிறான். நனவில் அவன் அரசனாகயிருப்பதையும் கனவில் ஆண்டியாகயிருப்பதையும் உணர்வது அவனது மனம்தான். ஆகவே, கனவு நிலையிலுள்ள அவனது மனதிற்கு அவன் அரசன் என்பது பொய். அதேபோல நனவு நிலைக்கு அவன் ஆண்டி என்பது பொய். ஆழ்ந்த நித்திரையின்போது அவன் அரசனுமல்ல, ஆண்டியுமல்ல!

பூமி சமதளமாக இருப்பதுபோல் நமக்குத் தெரிவதும், நிலையாக நிற்பதுபோல் தோன்றுவதும் பொய், சூரியன், பூமியைச் சுற்றி வருவதுபோல நாம் காண்பதும் பொய். சூரியன் ஒரே இடத்தில் அசையாமல் இருக்கிறது; உருண்டை வடிவமான பூமி, சுழன்றுகொண்டே



சூரியனையும் சுற்றிவருகிறது என்பதுதான் உண்மை. விஞ்ஞான அறிவுடையோர் இதை ஒப்புக்கொள்கின்றனர்; பாமரர்கள் இதை நம்ப மறுக்கின்றனர்; சாதாரண அறிவுடையோர் நம்பியும், நம்பாமலும் இருக்கின்றனர்!

இயற்கையின் இத்தகைய மாயா ஜால வித்தைகளையெல்லாம் ஆராய்ந்து அறியும் படி ஆறறிவு படைத்த மனித இனத்தைத் தூண்டிவிட்டு, அவர்களது செயல்களை மறைவிலிருந்து கவனிப்பதற்குச் செல்ப வன்போல் மலைவாயில் நுழைந்துகொண் டிருந்தான் கதிரவன். அவனது பொன் ஞெளியால் வானத்தில் கிளம்பிய வண்ண ஜாலங்களைக் கண்டுகளித்தவர்கள் எத் தனையோ பேர்.

* * *

நாடு முழுவதும் பரவிக் கிடக்கும் நீள மான ரெயில்வே இருப்புப் பாதை யில் கட்டிடமேயில்லாத பல ரெயில் நிலை யங்களும் இருக்கின்றன. அவைகளில் ஒன்று காரைக்குறிச்சி. திருநெல்வேலிக் கும் — அம்பாசமுத்திரத்திற்கும் மத்தியில் இருக்கிறது. இரும்புப் பட்டைகளில் தார் பூசி, பூமியில் வரிசையாக நாட்டி ஒரு வேலி போல் அமைத்திருந்தார்கள். ரெயில்வே நிலையம் என்பதற்கு அந்த வேலிதான் அடையாளம்.

காரைக்குறிச்சி ஒரு சாதாரண—நடுத்தர மான கிராமம். பணவசதி படைத்தவர்கள் சிலரும், படித்தவர்கள் சிலரும் அந்தக் கிராமத்தில் இருந்ததால், அவர்களது முயற்சியின்மீது அங்கு ரெயில்வே நிலையம் ஏற்படுத்தப்பட்டது. ஜனங்கள் வசிக்கும் பகுதிக்கும் ரெயில்வே நிலையத்திற்கும் சுமார் அரை மைல் தூரம் இருக்கும். அதிகமாக அங்கு ஜனங்கள் இறங்குவதும் கிடையாது, ரெயிலில் ஏறுவதும் கிடை யாது.

ஆனால்...

அதே கிராமத்தைச் சேர்ந்த மலையப்பன் என்னும் பெரியவர் தினந்தோறும் மாலை நேரத்தில், தனது மாட்டு வண்டியிலோ அல்லது நடந்தோ அந்த ரெயில்வே நிலை யத்திற்கு வருவார். அங்கு நின்ற ஒரு வேங்கை மரத்தின் அடியில் உட்கார்ந்து காற்றுவாங்குவார். ஆறரை மணிக்கு ஒரு ரெயில் வந்து, இரண்டு நிமிஷங்கள் நின்று விட்டு மீண்டும் கிளம்பும். ரெயில் மறைந் ததும் மலையப்பரும் தனது வீட்டை நோக் கிப் புறப்பட்டுவிடுவார். இது அன்றாடம் நடைபெற்றுவந்த ஓர் உண்மை.

அதனால் அந்த ரெயிலில் வரும் டிரைவர், கார்டு, டிக்கட் பரிசோதகர் ஆகியவர்கள் மலையப்பரை நன்கு அறிவார்கள்; மலையப் பரும் அவர்களை நன்கு அறிவார். அடிக் கடி பார்த்துப் பழகியதால் அவர்கள் மத்தி யில் நட்புறவு ஏற்பட்டிருந்தது என்றுகூடச் சொல்லலாம்.

மலையப்பர் உயர்தரக் கல்வி பெற்றவர் அல்லவென்றாலும் உயர்வான குணம் உடையவர். கொழுத்த பணக்காரர் என்று சொல்லமுடியாது, பரம ஏழையும் அல்ல அவர். சிறந்த பக்திமான், வேதாந்த விஷயங்களில் பற்றுடையவர். ‘கல்லில் கடவுள் இல்லை; அதற்குக் கடவுள் தன் மையை நீ அளிப்பதன்மூலம், உன்னிடத் தில் அந்தத் தன்மையை நீ ஏற்படுத்திக் கொள்கிறாய்’ என்று பகிரங்கமாக அவர் சொல்வதுண்டு. அதனால் சிலருக்கு அவ ரைப் பிடிக்காது.

மலைவாயில் நுழைந்த கதிரவனின் பொன்னொளியில் மனதைப் பறிகொடுத்து மயங்கி நின்றவர்களில் அந்த மலையப்பரும் ஒருவர். அந்த நேரத்தில் அவர் மனதில் என்னவெல்லாமோ கற்பனைகள் எழுந் தன. ‘சூரியன், சந்திரன், இதர கிரகங் கள், காற்று, மழை, சமுத்திரம் முதலியவை கள் ஒவ்வொன்றும் யாருடைய கட்டளைக் குப் பயந்து தன் கடமையைச் சரிவர, அணுப்பிசகாமல் நிறைவேற்றுகின்றன என்ற கேள்விகூட எழுந்தது அவர் உள் ளத்தில். அவைகளில் ஏதேனும் ஒன்று தன் கடமையைச் செய்வதில் தவறிவிட் டால் உலகம் என்னவாகும் என்பதை நினைத்தபொழுது அவரது கண்கள் தானாக மூடிவிட்டன. பரவசத்தில் ஆழ்ந்துபோன நிலையை எய்திவிட்டார் அவர்.

ஆறரை மணிக்கு ரெயில் வந்து நின்ற சத்தத்தைக் கேட்டுக் கண் திறந்தார் மலை யப்பர். அவரது எதிரில் நின்ற கார்டுக்கு வழக்கம்போல் வணக்கம் தெரிவித்தார். ரெயிலிலிருந்து யாரேனும் இறங்குகிறார் களா என்று அங்குமிங்கும் பார்த்தார்; ஒரு வரும் இறங்கியதாகத் தெரியவில்லை.

“வண்டியை விடுங்கள், ஸார்!” என்று கார்டிடம் கூறினார் மலையப்பர்.

"யாருமே இறங்கவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே கார்டும் ரெயில்வண்டிகளின் கதவுகளை நோக்கினர். "அதோ! யாரோ இறங்கிக்கொண்டிருக்கிறார்கள், பாருங்கள்" என்று சொல்லிக் கையால் காண்பித்தார்.

மலையப்பர் அந்தத் திசையில் பார்வையைச் செலுத்தினர். கால்கள் நடுநடுங்க ஒரு பெண், வண்டியிலிருந்து இறங்கினாள். அவள் அருகில் சென்றார் கார்டு.

"டிக்கட் எங்கே?"

பயத்தினாலோ அல்லது பலவீனத்தினாலோ அவள் உடல் முழுதும் ஆடிற்று. அவள் பூமியில் சாய்ந்துவிடுவாளோ என்று கூடத் தோன்றிற்று. மிகவும் கஷ்டப்பட்டு டிக்கட்டை எடுத்துக் கார்டிடம் கொடுத்தாள் அவள்.

மலையப்பரும் அங்கு வந்துசேர்ந்தார்.

டிக்கட்டைப் பார்த்ததும் கார்டின் முகம் சிவந்தது. மலையப்பரை நோக்கினர். "பார்த்தீர்களா, ஸார்! சேரன்மாதேவிக்கு டிக்கட் வாங்கிவிட்டு இங்கு வந்து இறங்குகிறாள்?" என்று ஆத்திரத்தோடு சொன்னர்.

"என் கையில் அவ்வளவுதான் காசு இருந்தது" என்றாள் அந்தப் பெண். அவள் குரல் கரகரத்தது.

'பாவம்! போகட்டும் ஸார்' என்று சொல்லும் பாவனையில் கார்டுக்குச் சைகை செய்தார் மலையப்பர்.

கார்டு, கொடியைக் காண்பித்து விசில் ஊதினர். வண்டி நகர்ந்தது.

அந்தப் பெண் சிறிது தூரம் வேகமாக நடந்தாள். அவளால் நடக்கமுடியவில்லையோ என்னவோ, அங்கு கிடந்த ஒரு கல்லின் மீது உட்கார்ந்துகொண்டாள். காற்றில் சிதறுண்டு அவளது முகத்தை மறைத்திருந்த கூந்தலை ஒதுக்கினாள். அழகிய-சிவந்த அவளது முகம் வெளிப்பட்டது. தாளமுடியாத வேதனையில் அவள் சங்கடப்படுகிறாள் என்பது அவளது முகக் குறியிலிருந்து ஊகிக்கமுடிந்தது.

அவளையே பார்த்தவண்ணம் நின்றிருந்த மலையப்பர் அவள் அருகில் சென்றார். "நீ யாரம்மா? யாருடைய வீட்டிற்குப் போகவேண்டும்?" என்று அன்போடு கேட்டார்.

அவளால் பதில் சொல்ல முடியவில்லை. அவள் முகத்தில் நீர்த் திவலைகள் அரும்பின. கண்ணின் கருமணிகள் சுழன்றன. வேதனை மிகுதியினால் அவள் துடித்தாள். "என் வயிறு வலிக்கிறது" என்று சொல்ல முடியாமல் சொன்னாள்.

இருள் கவிந்து கொண்டிருந்ததால் மலையப்பர் அவளைக் கூர்ந்து நோக்கினர். அவள் பூர்ண கர்ப்பிணி! பிரசவ வேதனையால்-துடிக்கிறாள் என்று உணர்ந்துகொண்டார் அவர்.

"அம்மா! நீ எங்கே போகவேண்டும்?" அனுதாபத்தோடு வினவினர் மலையப்பர்.

"எங்கும் போகவேண்டியதில்லை" என்றாள் அவள். துக்கம் அவளது தொண்டையை அடைத்தது. கண்களை அவளால் திறக்க முடியவில்லை. தனது நிலைமையைத் தெளிவு படுத்தும் முறையில், கையினால் ஆகாயத்தைக் காண்பித்து, 'ஆதரவற்ற எனக்கு ஆண்டவனே துணை' என்று சொல்லும் பாவனையில் சமிக்ஞை செய்தாள்,

மலையப்பருக்கு விஷயம் விளங்கி விட்டது. அங்கு நின்றவாறே, "கறுப்பையா...! ஏ கறுப்பையா!" என்று குரல் கொடுத்தார்.

ரெயிலுக்குக் கொடி காட்டும் போர்ட்டர் ஓடிவந்தான்.

மலையப்பர் கூறினர்: "கறுப்பையா! ஓடிப்போய் உன் மனைவியைக் கூட்டி வா. இந்த அம்மாவை இன்று முழுவதும் உன் குடிசையில் வைத்திருக்கவேண்டும்.

"என் குடிசையிலா?......இடம்?" கறுப்பையா கேட்டான்.

"இதோ பார்! உனக்கு மகாப் புண்ணியம் கிடைக்கும். பாவம்! பிரசவ வேதனையால் அவள் செத்துக் கொண்டிருக்கிறாள். இன்றிரவு மாத்திரம் உன் குடிசையில் இருக்கட்டும், நாளைக் காலையில் நான் அவளை அழைத்துக்கொண்டு போய்விடுகிறேன். மறுக்காதே, கறுப்பையா! மனம் இருந்தால் இடமா கிடைக்காது?" கறுப்பையாவின் கையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினர் மலையப்பர்.

அரை மனத்துடன் தன் குடிசைக்குச் சென்று தன் மனைவியை அழைத்து வந்தான் கறுப்பையா. பெண் உள்ளம் மென்

மையானதல்லவா? அதிலும் பிரசவ வேதனையை உணர்ந்த கறுப்பையாவின் மனைவியின் கண்கள் அவளைப் பார்த்ததுமே கலங்கிவிட்டன. அவள் சிறிதும் தாமதிக்கவில்லை. அந்த அபலையைக் கைத்தாங்கலாகத் தூக்கித் தனது குடிசைக்குக் கூட்டிச் சென்றாள். அவளுக்கு வேண்டிய சிகிச்சைகளையும் செய்ய ஆரம்பித்து விட்டாள்.

மலையப்பர், தள்ளாத அந்த வயது காலத்திலும் தனது வீட்டை நோக்கி வேகமாக நடந்தார். தன் மருமகளிடம் விஷயத்தைச் சொல்லி அவசியமான சாமான்களை எடுத்



துக்கொண்டு உடனே புறப்படும்படிக் கட்டளையிட்டார். அவள் சாமான்களைத் தயாரிப்பதற்குள் அவர் மாட்டு வண்டியைப் பூட்டி வாசலில் தயாராகக் காத்திருந்தார். பத்து நிமிஷங்களுக்குள் இருவரும் கறுப்பையாவின் குடிசைக்கு வந்து சேர்ந்தனர். மலையப்பரின் மருமகளான சங்கரியும், கறுப்பையாவின் மனைவியோடு சேர்ந்து அபலைக்கு உதவிசெய்வதில் ஈடுபட்டாள்.

மலையப்பர், குடிசைக்கு வெளியில் ஒரு மரத்தின் அடியில் வண்டியை அவிழ்த்து விட்டு, அங்கேயே ஒரு கோணியை விரித்து உட்கார்ந்துகொண்டார். அந்த நேரத்தில் அவரது மனோநிலை எவ்வாறு இருந்தது என்பதை யாராலும் விவரிக்க முடியாது.

இரவு பன்னிரண்டு மணி இருக்கும். மலையப்பர் மெதுவாகக் கோணியில் சாய்ந்தார். தூக்கம் அவரது கண்களை மிரட்டியது. பசி, வயிற்றைக் கிள்ளிக்கொண்டிருந்தது. ஆனால் அவரது மனம், கறுப்பையாவின் குடிசைக்குள் வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

குடிசைக்கு வெளியே ஒரு நிழலுருவம் தென்பட்டது. மலையப்பர் எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

நிழலுருவம் மலையப்பரை நோக்கித்தான் வந்தது.

"யாரது?" என்றார் மலையப்பர்.

"என்ன, மாமா?"

"சங்கரியா...? என்னம்மா, அவள் எப்படியிருக்கிறாள்?"



"குழந்தை பிறந்து விட்டது!"

"அப்பா...டா!" என்று ஒரு பெருமூச்சு விட்டார் மலையப்பர். பின்னர், "என்ன குழந்தை?" என்றார்.

"பெண் குழந்தை! ஆனால்......"

"என்ன! தாயும் குழந்தையும் சுகந்தானே?"

"சுகத்திற்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால்..."

"சொல், சங்கரி!"

"அவர்களை என்ன செய்வது? எந்த ஊர், யார் என்ற விவரம் ஒன்றும் தெரியவில்லையே?"

"கடவுளுக்குத்தான் வெளிச்சம். உனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் எனக்கும் தெரியும். நம் கிராமத்தைச் சேர்ந்தவள் அல்ல என்பது நிச்சயம். கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள் போலத்தான் தெரிகிறது. எப்படியும் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் எல்லாம் தெரிந்துபோய்விடும்."

"ஆனால்......?"

"ஏன் தயங்குகிறாய்? சொல்!"

"நம் வீட்டிற்குக் கூட்டிச் சென்றால் ஊரார் கேலி செய்ய மாட்டார்களா?......நன்கு யோசனை செய்து கொள்ளுங்கள்."

"ஏன்? ஊராருக்கு அதைப்பற்றி என்ன வந்தது? ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்வது தவறு என்று அவர்கள் சொல்வார்களா என்ன?"

"அவ்வளவு ஒழுக்கமான பெண்ணாகத் தெரியவில்லை."

"காரணம்?"

"அவள் கழுத்தில் ஒன்றுமில்லை."

"கன்னிப்பெண் என்கிறாயா?"

"இல்லை, விதவை என்று நினைக்கிறேன்."

மலையப்பர் திடுக்கிட்டார். கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரம் சிந்தித்தார். அவர் மனதில் ஒரு திடம் ஏற்பட்டு விட்டது.

"அவள் யாராக யிருந்தாலும் சரி. துக்கத்தினாலோ அல்லது கஷ்டத்தின் மிகுதியினாலோ நம் வாசலுக்கு யார் வந்தாலும் மலையப்பர் வீட்டில் அவர்களுக்கு நிச்சயம் ஆதரவு கொடுக்கப்படும். நான் உயிரோடு இருக்கும் வரையில் அதை யாராலும் தடுக்கவும் முடியாது, மாற்றவும் முடியாது!" மிகவும் அழுத்தமாக ஆர்வத்தோடு சொன்னார் மலையப்பர்.

சங்கரியின் உள்ளத்தில் என்ன தோன்றியதோ அவள் தலையை நிமிர்த்தி மாமனைக் கோபமாகப் பார்த்தாள். மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளக்கூடாது என்று வாயை மூடிக்கொண்டு குடிசைக்குத் திரும்பிவிட்டாள்.

* * *

பொழுது விடிந்தது. போர்ட்டர் கறுப்பையா ஓடிவந்தான் மலையப்பரிடம் தலையைச் சொரிந்து கொண்டே நின்றான்,

"என்ன, கறுப்பையா?" மலையப்பர் ஆரம்பித்தார்.

"சாமி! உங்களுடைய வார்த்தையை தட்டக்கூடாது என்றுதான் நான் இந்தச் சுமையை ஒப்புக்கொண்டேன். இனிமேல் ஒரு நிமிஷங்கூட அந்தப் பெண்ணை என் குடிசையில் வைத்திருக்க முடியாது. தயவு செய்து......"

"அவளைக் கூட்டிப் போய்விடவேண்டும் என்கிறாய், அவ்வளவுதானே? என் உத்தேசமும் அதுதான். அவளை ஒரு நிமிஷங்கூட உன் குடிசையில் வைத்திருக்க எனக்கு இஷ்டமில்லை. ஆனால் அவளுடைய நிலைமையைக் கொஞ்சங்கூடச் சிந்தித்துப் பார்க்காமல் நீ பேசுகிறாயே என்றுதான் நான் வருத்தப்படுகிறேன். பிரசவித்து இருபத்திநான்கு மணி நேரம் கழியவில்லையே? இப்பொழுது அவள் உடம்பு எப்படியிருக்கும்? நீயும் பெண்டு பிள்ளைகளோடு வாழ்ந்தவன்தானே? சற்று ஆத்திரமாகவே பேசினார் மலையப்பர்.

மூளையைச் சிந்திக்கும் பணியில் ஈடுபடுத்தி அதைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை கறுப்பையா. "நீங்கள் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது. ஊரில் பெரிய மனிதர் நீங்கள், எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் ஏழைகளாகிய எங்களை ஊரார் பழிப்பார்கள். அதனால்தான்......" வார்த்தையை முடிக்காமலே மீண்டும் தலையைச் சொரிந்தான் அவன்.

"சரி! நானே இன்னும் கொஞ்ச நேரத்தில் அவளைக் கூட்டிச் சென்று விடுகிறேன். நீ கவலைப்படாதே, போ!"

சுமார் ஒன்பது மணிக்குத் தாயையும், குழந்தையையும் வண்டியில் ஏற்றித் தன் வீட்டிற்கே கொண்டு போய்விட்டார் மலையப்பர். போகும் பொழுது போர்ட்டரின் மனைவியின் கையில் மாத்திரம் ஐந்து ரூபாயைக் கொடுத்து, "மனித மரியாதை தெரியாத உன் கணவனோடு நீ எப்படித்தான் காலங்கழிக்கிறாயோ" என்று சொல்லி விட்டுச் சென்றார்.

"உரலில் தலையை மாட்டிக் கொண்டு விட்டேன்; உலக்கைக்கு பயந்தால் முடியுமா?" என்று கறுப்பையாவின் மனைவி கூறியது மலையப்பரின் காதில் விழவில்லை.

* * *

சுகுணா! இதுதான் அந்த அபலையின் பெயர். மலையப்பர் வீட்டிலுள்ள ஒரு குடிசையில் அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் அங்கு வந்து பத்து தினங்கள் ஆகிவிட்டிருந்தன.

சுகுணாவின் ரூபலாவண்யத்தை ஒரு முறை பார்த்தவன், ஆயுள் முழுவதும் அவளை மறக்கவே

மாட்டான். அவள் சரீரத்தின் வலிவும், கட்டும் சற்று நெகிழ்ந்திருந்தாலும் ஒரு வித வசீகர சக்தி அவளது அழகிய வதனத்தில் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. கனிந்த அவளது அதரங்களில் தேன் சொட்டுவது போன்ற மினுமினுப்பு ஒளிர்ந்திருந்தது. களைப்பு மிகுதியினால் அவளது கண்கள் பாதிதான் திறந்திருந்தன; அவ்வாறிருந்தும் அவைகளின் பார்வையில், உலக இன்பங்களைத் துறந்து மலைவாசம் புரியும் மகரிஷிகளையும் மயக்கிவிடும் சக்தி இருந்தது. அவள் மனதை வாட்டிக்கொண்டிருந்த வேதனையின் சாயல் அவளது நெற்றிச் சுழிப்பிலிருந்து தெரிந்தது.

மேலும், அந்தக்கிராமத்தின் சீதோஷ்ண நிலை சுகுணாவின் அழகைப் பன்மடங்கு அதிகரித்திருந்தது. ராஜமாளிகையை அலங்கரிக்கத்தக்க அழகு ராணியாக விளங்கிய அவளை, அக்குடிசையில் அந்த நிலைமையில் பார்த்த யாரும் பரிதாபப்படாமல் இருக்கமுடியாது.

சுகுணாவின் பக்கத்தில் கிடந்தது பிறந்த அவளுடைய பெண் குழந்தை. ஆனந்த உருவாகவே அமைந்திருந்தது அக்குழந்தை. அகலமான தனது கண்களைத் திறந்து அக்குழந்தை பார்க்கும்பொழுது, துக்கம் நிறைந்த இந்த உலகத்தைப் பார்த்து, 'துக்கத்திற்குக் காரணம் என்ன' என்று கேட்பதுபோன்றிருந்தது. தாய், தன் மகளை வாரியணைத்து மடிமீது வைத்ததும், தாளமுடியாத வேதனையினால் தாரைதாரையாகக் கண்ணீர் வடித்ததை அக்குழந்தை அலட்சியப்படுத்தியதற்கு அந்தச் சிந்தனைதான் காரணமாக இருந்திருக்கவேண்டும்! அடிக்கடி அவள் பெருமூச்சு விடுவதும், அக்குழந்தையைப் பார்ப்பதுமாகவே இருந்தாள். 'ஏன் இங்கு சந்தோஷத்தையே காணோம்' என்று ஊமை பாஷையில் கேட்பதுபோல் அக்குழந்தை தாயைப் பார்த்துக்கொண்டிருந்தது. அவள், கண்ணாடிபோன்று ஒளி வீசும் தன் கரங்களால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். வெளியே மலையப்பரும் அவரது மருமகள் சங்கரியும் பேசிக்கொண்டிருந்ததை உற்றுக் கேட்டாள்.

"பையன்கள் எங்கே காணவில்லை?" இது மலையப்பர்.

"எந்தப் பையன்கள்?" சங்கரியின் குரலில் குறும்புத்தனம் ஒலித்தது.

"வேறு யாரை நான் கேட்பேன்? சிவலிங்கமும் நடராஜனும்தான்."

"எங்கோ விருந்தாம். அதற்காக நேற்று அவர்களுடைய மாமா வந்து அழைத்துச் சென்றிருக்கிறார்."

"உன் குழந்தைகள்?"

"எங்கள் பெரியப்பாவுக்கு சிரார்த்தம் அதனால் தாத்தா வீட்டிற்கு அவர்கள் போயிருக்கிறார்கள்."


# ... படித்தீர்களா? ...

## A. சுப்பையா எழுதிய நாவல்கள்

| | ரூ.பை. | | ரூ.பை. |
|---|---|---|---|
| மோகன விலாஸ் மர்மம் | 0 50 | கலை காதல் கொலை | 0 50 |
| மறைந்த நடிகை | 0 50 | பலே ஆசாமி | 0 50 |
| புதைந்த மர்மம் | 0 50 | உடான்ஸ் வனிதா | 0 50 |
| ராணியின் ரகசியம் | 1 00 | பழி தீர்த்த பாண்டியன் | 0 50 |
| கபட நாடகம் | 0 50 | பரதேசியின் மாளிகை (அச்சில்) | 0 50 |


ஏஜண்டுகளுக்கு 25 சத விகிதம் கமிஷன் உண்டு
முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவு கிடையாது.

விவரங்களுக்கு:

ஆனந்தா புக் சென்டர்,
1/96, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை—4

"அப்படியா...!" என்று சில வினாடிகள் தலை குனிந்தார் மலையப்பர். பின்பு, "எனக்கும் அறுபத்தைந்து வயது ஆகிவிட்டது. இது வரை நடக்காத விஷயங்களெல்லாம் இப்பொழுது நடக்க ஆரம்பமாகியிருக்கிறது. உம்...! ஏன் இப்படி நடைபெறுகிறது என்பதும் எனக்குத் தெரியும்" என்று வருத்தத்தோடு கூறினார்.

"தெரிந்திருந்தால் இப்படிச் செய்திருப்பீர்களா? கடந்த சில தினங்களாகக் கிராமம் முழுவதும் உங்களைப்பற்றியபேச்சுத்தானே நடந்துகொண்டிருக்கிறது."



மாமன்-மருமகள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தார் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர். அவரிடம் கூறினார் மலையப்பர்: "கேட்டாயா, தம்பி! மனிதனுக்கு மனிதன் உதவி செய்வதுகூடத் தவறு என்று யாராவது சொல்வார்களா? ஆதரவில்லாத ஒரு பெண்ணுக்கு அபயம் அளித்தேன் நான். அதற்காக இந்தக் கிராமத்தவர்கள் என்னை அவதூறாகப் பேசுகிறார்களாம்."

"அவள் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவளாமே, அது உண்மையா?" பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார்.

"அப்படித்தான் தோன்றுகிறது. பாவம்! துன்பத்தில் அடிபட்டுத் துடிக்கிறாள். இளம் வயதில் இந்த நிலைமை அவளுக்கு ஏன் ஏற்பட்டதோ தெரியவில்லை" என்றார் மலையப்பர்.

"அவள் வயது...?"

"பதினெட்டு அல்லது இருபது இருக்கலாம்."

"ஒருவேளை அவள் ஒழுக்கம் தவறியவளாக இருப்பாளோ?"

இவ்வார்த்தை சுகுணாவின் காதில் விழுந்ததும் அவள் கண்களில் ரத்தம் சிந்திற்று. நல்லகாலம், யாரும் அதைக் கவனிக்கவில்லை.

"எப்படியானாலும் ஆயுள் முழுவதும் நம்மால் அவளைக் காப்பாற்றமுடியுமா? என் மருமகளும் பயப்படுகிறாள். இந்தப் பத்து நாட்களுக்குள்ளாகவே என்னவெல்லாமோ செய்ய ஆரம்பித்துவிட்டாள். இப்பொழுது திடீரென்று அந்தப் பெண்ணை எங்கே அனுப்பமுடியும்?" என்றார் மலையப்பர்.

"அவளுக்குத் தெரிந்தவர்கள்......பந்துக்கள் யாருமில்லையா?"

"சங்கரி எப்படியல்லாமோ அவளிடம் கேட்டுப் பார்த்திருக்கிறாள். ஆண்டவனைத் தவிர வேறு யாரும் துணையில்லை என்று சொல்லிவிட்டாளாம். என்னவானாலும் நாற்பது நாட்கள் வரையில் இங்கு வைத்திருந்துவிட்டு அப்புறம் அவள் எங்கே வேண்டுமானாலும் போகட்டும் என்பது என் உத்தேசம்."

"பெரிய பட்டணக்கரை ஏதாவது ஒன்றிற்குப்போய் விட்டால் அங்கு ஒருவருக்கும் ஒன்றும் தெரியாமற் போய்விடும் என்று அவளிடம் சொல்லுங்கள்."

"அது அவள் இஷ்டம். அது போகட்டும்......உன் உத்தியோக மாற்றம் என்ன வாயிற்று?" என்று பேச்சை மாற்றினார் மலையப்பர்.

குடிசைக்குள் படுத்திருந்த சுகுணா, அந்தச் சம்பாஷணை முழுவதையும் கேட்டுவிட்டு, மலையப்பரைத் தன் மனமார வாழ்த்தினாள். கடந்த எட்டு வருட காலங்களில் இந்தப் பத்து நாட்கள் தான் அவள் நிம்மதியாக இருந்தாள். அதை நினைத்துத் தன் குழந்தையை இழுத்து மார்போடு அணைத்துக்கொண்டாள் அவள்.

* * *

மலையப்பர், சுகுணாவுக்காகத் தன் குடும்பத்தை மாத்திரமல்லாமல் கிராமத்தையே எதிர்க்க வேண்டிய அவசியங்கூட ஏற்பட்டுவிட்டது. அவர் காதில் விழும்படியாகவே கிராம மக்கள் அவரைக் கேலி செய்ய ஆரம்பித்தனர். கிராமப் பெண்கள் ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு சங்கரியிடம் வருவதும், சுகுணா இருக்கும் அறைக்கு அடுத்த அறையில் உட்கார்ந்துகொண்டு அவள் காதில் படும்படியாக அவளைப் பற்றி வாய்க்கு வந்தபடி பேசுவதுமாக இருந்தனர்.

சுகுணா எல்லாவற்றையும் காதால் கேட்டாள். அவள் இதயம் துடித்தது, வெடித்துவிடும் அளவிற்குக்கூட ஆத்திரம் உண்டாயிற்று. ஆனால் அவள் வாய் திறந்து ஒரு வார்த்தைக்கூடப் பேசவில்லை. விரைவில் உலகிலிருந்து தனக்கு விடுதலை அளிக்கும்படி ஆண்டவனை மாத்திரம் பிரார்த்தனை செய்துகொண்டாள்.

நாளுக்கு நாள் சங்கரியின் கெடுபிடியும் கொடுமைகளும் அதிகரித்தன. சுகுணாவைக் குத்தலாகப் பேசுவதிலும், கிண்டல் செய்வதிலும், அவளைத் துன்புறுத்துவதிலும் சங்கரிக்குத் தனி இன்பம் கிடைத்ததுபோலும்!

ஒரு நாள்......

"இங்கிருந்து ஓடிப் போய்விடு!" என்று சொல்லி, ஒரு குடம் தண்ணீரை அப்படியே சுகுணாவின் மீது கொட்டிவிட்டாள் சங்கரி.

"கோபப்படாதீர்கள், அக்கா" என்று அப்பொழுதும் சாந்தமாகவே பேசினாள் சுகுணா.

சங்கரி, தலையை ஒரு வெட்டு வெட்டிக்கொண்டு ஏளனமாகச் சிரித்தாள். "இதோ பார்! எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து போக முடியுமோ,

போய்விடு! தனுக்காகப் பேசி அந்தக் கிழவரை மயக்கியதுபோல் என்னையும் உன் வலையில் தள்ளி விடலாம் என்று கனவிலும் கருதாதே. எனக்குக் கோபம் வந்தால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது."

"அக்கா!......"

"இன்னொரு தடவை 'அக்கா' என்று என்னை நீ கூப்பிட்டால் உன் வாயை கிழித்து விடுவேன் கிழித்து. நான் உனக்கு அக்காளாக இருந்தால் இதற்குள் விஷத்தைத் தந்து உன்னைக் கொன்றிருப்பேன், தெரியுமா? இப்படியும் உயிர் வைத்திருப்பதற்கு உனக்கு வெட்கமில்லையே, உம்...! உன்னைச் சொல்லி என்ன பயன்? ஊரிலுள்ள பாவத்தை யெல்லாம் தன் தலையில் தூக்கிச் சுமக்கும் அந்தக் கிழவரைச் சொல்ல வேண்டும்."

இக் கடுஞ்சொல் சுகுணவின் உள்ளத்தைத் துளைத்து விட்டது. அவள் கண்களிலிருந்து அருவிபோல் பெருக்கெடுத்தது நீர்.

"என் பாவத்தை நான் அனுபவிக்கிறேன். ஏற்கனவே புண்பட்டிருக்கும் என் இதயத்தில் நீங்கள் நெருப்பை கொட்டுகிறீர்கள்." இதைச் சொல்லும்பொழுது சுகுணவின் தொண்டை அடைத்துக்கொண்டது.

சங்கரி அத்துடன் விடவில்லை. "நீ செய்துள்ள பாவத்திற்கு இப்பொழுது அனுபவிக்கும் பலன் போதாதடீ...! உன் நிலைமையில் வேறொரு பெண் இருந்திருந்தால் எங்காவது கிணற்றிலோ, குளத்திலோ விழுந்து செத்திருப்பாளே தவிர உன்னைப் போல் உயிரை வைத்துக் கொண்டிருக்கமாட்டாள். நீ மானங்கெட்டவள்! மரியாதை தெரியாதவள். பெண் இனத்திற்கே நீ இருப்பது பேராபத்தடீ...!" என்று என்னவெல்லாமோ அடுக்கு மொழியில் திட்டினுள் அவள்.

அந்தச் சுடுசொற்களைச் சுகுணவினல் தாங்க முடியவில்லை இரு கைகளாலும் தன் காதுகளை மூடிக்கொண்டாள். அவள் தலை சுற்ற ஆரம்பித்தது.

"அக்கா......!" என்று வெறிகொண்டவள் போலக் கத்தினுள் சுகுண. "என்னை மன்னித்துவிடு. உன் காலில் விழுந்து நான் கேட்கிறேன். செத்துப்போய்விட்ட என்னைத் தடிகொண்டு ஏன் தாக்குகிருய்? உயிரின்மீதுள்ள ஆசையால், உலக இன்பத்தை அனுபவிப்பதற்காக நான் வாழவில்லை. இதோ, என் அருகில் கிடக்கும் இந்தப் பச்சை மதலைக்காகத்தான் நான் உயிர் வைத்திருக்கிறேன். உன் மகன் உனக்கு எப்படியோ அதுபோல என் குழந்தை எனக்கு. நீயும் என்னைப்போல ஒரு பெண்தான். பெற்ற பாசம் எப்படிப்பட்டது என்பது உனக்குத் தெரியாததல்ல" என்று சொல்லிக் கண்ணீர் வடித்து சங்கரியின் முகத்தைப் பரிதாபமாக நோக்கினுள் அவள்.

சங்கரியின் மனம் சிறிதும் இளகவில்லை. தன் மகனையும், அவள் மகளையும் ஒப்பிட்டுப் பேசினது அவளது ஆத்திரத்தை இன்னும் அதிகரித்தது.

"ஏண்டி! உன் மகளும் என் மகனும் ஒன்று தானு? ஜாக்கிரதை! வாயை அடக்கிப் பேசடி: இன்னொரு தடவை அவ்வாறு சொன்னயானல் உன் நாக்கை அறுத்துவிடுவேன்! கெட்டுக் குட்டிச்சுவராய்ப்போன தட்டுவாணிக் கழுதைக்கு வாயைப் பார்!" இவ்வாறு சொல்லிக் கொண்டே சுகுணவைக் காலால் எட்டி உதைத்து அவளை அடிப்பதற்குக் கையை ஓங்கினுள்.

தலைமீது இடி விழுந்துவிட்டதுபோல் தரையில் விழுந்துவிட்டாள் சுகுண. ஓங்கிய சங்கரியின் கை சுகுணவின்மீது விழப்போகும் சமயம் அந்தக் கையைப் பிடித்து இழுத்தது மற்ருெரு கை!

* * *

மலையப்பரின் மூத்த மகன் சிவலிங்கம். அவன் மகா முன் கோபி. அவனது கோபத்திற்கும், சந்தோஷத்திற்கும் காரணம் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம். துரும்பைத் தூணுக்கிக் கொண்டு எரிந்து விழுவதும், தலைபோகும் தருணத்தைச் சர்வ சாதாரணமாகக் கருதிச் சஞ்சலமற்றிருப்பதும் அவனுடைய பிறவிக்குணம் என்றுதான் சொல்லலாம்.

மலையப்பர் சுகுணவை வீட்டிற்கு அழைத்து வந்தது சிவலிங்கத்திற்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அதனல் தந்தையின் மீது அவன் சீறி விழுந்தான், சில சமயங்களில் திட்டவும் செய்தான். ஆனல் கிராமத்தவர்கள் அவனது தந்தையைக் கேலி செய்ததையும், அவமரியாதையாகப் பேசியதையும் அவனல் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஆகவே தன் தந்தையின் செய்கையை ஆதரித்துப் பேசவேண்டிய அவசியமும் நிர்ப்பந்தமும் அவனுக்கு ஏற்பட்டது. அதற்காக அவன் கடைப்பிடித்த தர்க்கங்களும், நியாயங்களும் இறுதியில் அவனையே திருப்பிவிட்டன. தந்தை செய்தது நியாயம் என்று அவனே மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளும் நிலைமைக்கு அவன் வந்துவிட்டான்.

சுகுணவின் சௌந்தர்யத்தைக் குறித்துச் சில பெண்கள் பேசிக்கொண்ட வார்த்தைகள் சிவலிங்கத்தின் காதில் அடிக்கடி விழுந்தன. அதன் விளைவாக அவளைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையும் அவனுக்கு ஏற்பட்டிருந்தது, வீட்டின் ஒரு பகுதியிலுள்ள குடிசையில்தான் அவள் வசித்தாள் என்றாலும் அந்தக் குடிசைக்குப் போகவேண்டிய அவசியம் அவனுக்கு இதுவரை ஏற்பட்டதில்லை, அவளும் அடிக்கடி குடிசைக்கு வெளியே வருவதில்லையாதலால் அவன் கண்ணில் பட்டதுமில்லை.

அன்று சிவலிங்கம் வெளியே போய்விட்டு வீட்டிற்குள் நுழைந்தபொழுது அவனது மனைவியும்

சுகுணாவும் பேசிக்கொண்டிருந்த குரல் அவன் காதில் விழுந்தது. மறைவில் நின்று சிறிது நேரம் கவனித்தான் அவன். தன் மனைவியின் கடுஞ் சொற்களும், சுகுணாவின் இனிமை மிக்க சாந்தமான மொழிகளும் அவனைக் கவர்ந்து இழுத்தன. மெதுவாக நகர்ந்து குடிசையின் அருகில் சென்று கதவின் மறைவில் நின்று கொண்டு உள்ளே பார்த்தான். ஆஹா! என்ன அழகு!

பெண்மை நூற்றுக்கு நூறு அப்படியே அவ ளிடம் குடிகொண்டிருந்தது. துக்கத்தால் துவண்டிருந்தது அவளது முகம். தனது மனைவி யின் ஒவ்வொரு வார்த்தைகளும் அவளது இத யத்தை எப்படித் தாக்கின என்பதை அவளது நெற்றிச் சுழிப்பும், அதரங்களின் நெளிப்பும், கண்ணிமைகளின் துடிப்பும் தெளிவாகத் தெரி வித்தன.

சிவலிங்கம் உணர்ச்சிவசப்பட்டுவிட்டான். தன் மனைவியின்மீது ஆத்திரமும், சுகுணாவின் மீது இரக்கமும் உண்டாயிற்று அவனுக்கு. சுகுணாவை அடிப்பதற்கு சங்கரி கையை ஓங்கி யதைக் கண்டதுதான் தாமதம், புலிபோலப் பாய்ந்து அவள் கையை எட்டிப் பிடித்துக் கொண்டான்.

சிவலிங்கத்தின் கண்கள் செந்தணலாக மாறி விட்டன. பற்களை நரநரவென்று கடித்தான் அவன். பார்வையாலேயே மனைவியைக் கொன்று விடுபவன்போல நோக்கினான்.

"ஏய் மூடம்! அவளைத் தொடாதே. இதுவரை உன் வாயில் வந்தபடி பேசிவிட்டாய், இன்னும் ஏதாவது வாயைத் திறந்தாயோ...? அப்புறம்...! அவ்வளவுதான்! ஆமாம்...! என் தந்தை தன் வீட்டில் அவளை வைத்திருக்கிறார்; அவளைத் திட்டுவதற்கு நீ யார்? போ உள்ளே!" இவ்வாறு சொல்லிக்கொண்டே மனைவியை நெட்டித் தள்ளினான் சிவலிங்கம்.

"அடி ஆத்தே.........!" நூறு கோணலாக வாயை ஆட்டி அசைத்துக்கொண்டு பேசினாள் சங்கரி.

"என்ன கிண்டலா செய்கிறாய்? எலும்பு முறிந்துவிடும், ஜாக்கிரதை! பேசாமல் உள்ளே போகிறாயா, இல்லையா?" மனைவியை அடித்து நொறுக்கிவிடுபவன்போல இரண்டடி நகர்ந் தான் அவன். தரையில் அழுது புரண்டுகொண் டிருந்த சுகுணாவின் உடல் பதறிவிட்டது. சட்டென்று எழுந்தாள் அவள். "அண்ணா! அவளை ஒன்றும் செய்யாதீர்கள். என்னால் உங் களுக்குள் மனத்தாங்கல் ஏற்படவேண்டாம். நான் போய்விடுகிறேன்" என்று கண்ணீரைத் துடைத்தவாறு பகர்ந்தாள்.

திரும்பினான் சிவலிங்கம். சுகுணாவைப் பரி வோடு பார்த்தான். "நீ பயப்படாதே, அம்மா! எவ்வளவு காலம் வேண்டுமானாலும் நீ கவலை யில்லாமல் இங்கேயே இருக்கலாம். யார், என்ன சொல்கிறார்கள் என்று நான் பார்த்துக்கொள்கி றேன்," என்று சொல்லிச் சுகுணாவுக்குத் தைரி யம் அளித்துவிட்டுத் தன் பார்வையை நகர்த்தி னான். ஏணையில் கிடந்த குழந்தை அவன் கண்ணில் பட்டது. அவன் மனம் இன்னும் உருகி விட்டது. ஏணையின் பக்கம் சென்று குழந்தையின் கன்னத்தைத் தடவினான்.

"குழந்தையை என்னிடம் கொடுத்து விடுகி றாயா?" என்றான் சுகுணாவை நோக்கி.

"சந்தோஷமாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, எழுந்து சென்று குழந்தையைத் தூக்கி சிவலிங்கத்தின் கையில் கொடுத்தாள் சுகுணா.

முழங்கால்களைக் கட்டிக்கொண்டு தரையில் உட்கார்ந்திருந்த சங்கரி முறைத்துப் பார்த்தாள். அவள் உள்ளத்தில் கொந்தளிப்பும், குமுறலும் உண்டாயின.


அவ்வளவு அழகான ஒரு குழந்தையை அன்று தான் முதன்முதலாகக் கையிலெடுத்திருந்தான் சிவலிங்கம். அவன் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தைதான்; என்றாலும் சுகுணாவின் குழந்தை அவனைக் கவர்ந்த அளவிற்கு அவனது பிள்ளை கள் கவர்ந்ததில்லை. அவன் மனதில் அளவற்ற ஆனந்தம் ஏற்பட்டது. மாறி மாறி முத்தமிட் டான் அக்குழந்தையை.

பாவம்! பசியெடுக்கும்பொழுது அழுவதைத் தவிர அந்த மதலைக்கு வேறு என்ன தெரியும். சிக்கல்கள் நிறைந்த ஒரு சித்தாந்தத்தைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருப்பது போன்று சிவலிங்கத்தின் மீசையைப் பார்த்துக் கொண்டிருந்தது அக்குழந்தை. அவன், சிறிது நேரம் குழந்தையோடு கொஞ்சி விளையாடிவிட்டு சுகுணாவிடம் திருப்பிக் கொடுத்தான்.

ஆந்தைபோல் விழித்துக்கொண்டு அங்கு அமர்ந்திருந்த சங்கரியை நோக்கினான் சிவலிங்கம். "இன்னும் நீ போகவில்லையா? உம்! எழுந்து நட! இனிமேல் என்றாவது நீ இவளைப் பேசினாயோ... பார்த்துக்கொள்!" என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்றான் அவன்.

சங்கரி, தன் தோளைக் கன்னத்தில் இடித்துக் கொண்டு எழுந்தாள். "மயக்கிவிட்டாள் மாயக் காரி!" என்று வாய்க்குள் முனகிக்கொண்டே நகர்ந்தாள்.

சுகுணாவின் மனம் சிறிது நிம்மதியடைந்தது. இனிமேல் அவளைப் பேசுவதற்கு யாருக்கும் துணிச்சல் ஏற்படாதல்லவா? ஆனால் ஆயுள் முழுவதும் அவள் அங்கே இருக்கமுடியாது, நாற்பது நாட்களுக்குப் பின்பு அவள் எங்கா வது போகவேண்டியதுதான் என்று நினைத்த பொழுது, இருள் சூழ்ந்த காட்டில் திசை தெரி யாமல் நிற்பவனின் நிலைமைதான் அவளுக்கு ஏற்பட்டது. (தொடரும்)



# கோடைக்கானல்

லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

தென் இந்தியாவின் மலைவாசஸ்தலங்களில் உதகமண்டலமும் கோடைக்கானலும் பெயர் பெற்றவை. இவ்விரண்டு இடங்களின் சீதோஷ்ண நிலைமை ஜனங்களின் தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்ததாக இருப்பதால் ஒவ்வொரு வருஷமும் கோடைகாலத்தில் ஏராளமான ஜனங்கள் வந்துபோவது கண்கூடு. தவிர பலர் இங்கு ஸ்திரமாகவே வாசம் செய்தும் வருகிறார்கள்.

மேலும், பல இந்திய மலைவாசஸ்தலங்களையும், சில அயல்நாட்டு வாசஸ்தலங்களையும் கண்டு களித்தவர்கள் மதுரைக்கு அருகிலிருக்கும் இக்கோடைக்கானல் நகரத்தையே மிகவும் உயர்வாக மதிக்கிறார்கள். காரணம் "சௌக்கியம், இயற்கையழகு, ஈரப்பசையில்லாத ஆரோக்கியமான குளிர், மன அமைதி இவற்றை விரும்புவோர் கோடைக்கானலைத்தான் அதிகமாக விரும்புகிறார்கள்." தாரதம்யம் அறிந்தவர்களுடைய தீர்ப்பு இது.

இக்கோடைக்கானல், மதுரை ஜில்லாவில் பழனி மலைத்தொடரில் தென்பாக உச்சியில் சமுத்திர மட்டத்திற்குமேல் சுமார் 7000 அடி உயரத்தில் இருக்கிறது. தக்ஷிண ரயில்வேயில் மதுரைக்கு 25 மைல் வடமேற்கேயுள்ள 'கோடைக்கானல் ரோடு' என்னும் ஸ்டேஷனில் இறங்கி பஸ்கள் மூலமும், கார்கள் மூலமும் இங்கு எளிதாகச் செல்லலாம்.

கோடைக்கானல் ஊர் வரை ரயிலில் செல்ல முடியாது என்பது உண்மையே. ஆனால், கோடைக்கானல்ரோடு ஸ்டேஷனிலிருந்து நான்குமணி நேரத்திற்குள் சௌகர்மாக இங்கு போய்ச் சேரலாம். இங்கிருந்து 50 மைல் மலைஉச்சிக்குச்செல்ல! இதில் மலை ரஸ்தாவே 32 மைல் நீளமிருக்கும். நல்ல அழகான பாட்டை இருக்கிறது. மோட்டார் பஸ்ஸில் உட்கார்ந்திருக்கும் நேரம் அலுப்பாக இராது. வழிநெடுக சாலையின் இருபுறமும் மலைச்சரிவுகளில் வாழை, ஆரஞ்சு, காப்பி, ஏலம் முதலியன பயிராகும் தோட்டங்கள் பசுமையாகவும் ரம்யமாகவும் இருக்கும். தனித்தோட்ட வீடுகளில் வசிக்கும் குடியானவர்கள் வாழ்க்கைப் பிரச்னைக்குக் கண்டுபிடிக்கும் விடைகள் சிந்தனைக்குரிய விஷயமாகும்.

**முப்பது, நாற்பது வருஷங்களுக்குமுன்:**

முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்னால், இங்கு மோட்டார் ரோடு வருவதற்கு முன், போக்குவரத்து எப்படி இருந்தது? ஊர் எப்படி இருந்தது என்பதைப்பற்றிச் சிறிது கூறுவோம். முன் காலத்தில் மலைக்

குப் போவது எவ்வளவு சிரமமான காரியம் என்று தெரிந்தால், இந்தப் பிரயாணத்தின் சுகம் எளிதில் விளங்கும். இப்பொழுது சுமார் நான்கு மணியில் செல்லும் பிரயாணத்திற்கு அப்பொழுது 24 மணி நேரம் பிடிக்குமாம். இதுமட்டுமா? உடலுக்குக் கஷ்டமாகவும், மனதுக்கு அலுப்பாகவும், கவலைக்கு இடமளிப்பதாகவுமிருந்ததாம்!

மாட்டு வண்டியிலோ, அல்லது குதிரை வண்டியிலோ, பகலெல்லாம் பிரயாணம் செய்து 'அம்மைநாயக்கனூர்' என்று சொல்லப்பட்ட கோடை ரோடிலிருந்து பெரிய குளத்திற்குச் செல்லவேண்டும்; பின் அன்றிரவு இருட்டுடன் ஆரம்பிக்கவேண்டிய பாக்கிப் பிரயாணத்திற்காகக் கூலியாள், குதிரை, டோலி, கச்சை முதலியன திகைக்கப் பிரயாண ஏஜண்டுடன் மனம் கசக்கப் பேரம் செய்யவேண்டும்; இல்லாவிட்டால் ஒன்றுக்கு நாலு மடங்கு கேட்பார்களாம். பின் பெரியகுளத்திலிருந்து மலையடிவாரத்திலுள்ள 'கிருஷ்ணப்ப நாயக்கன் தோப்பு' என்ற ஐந்து மைல் தூரத்திற்குச் செல்ல 'வில்' இல்லாத கட்டை வண்டி அமர்த்த வேண்டும்.


முதல் தூக்கத்துடன் விழித்தெழுந்து, ராத்திரி ஒரு மணிக்கு பிரயாண நடவடிக்கை ஆரம்பித்தால் கட்டை வண்டிகள் இரண்டு மணிக்குப் பெரியகுளம் விட்டுப் புறப்பட்டு, சுமார் நாலு மணிக்குத் தோப்புக்குள் போய்ச் சேரும். அங்கு கூலியாட்கள் கம்பிளியோ, துப்பட்டியோ, தலைமுதல் கால் வரை போர்த்திக்கொண்டு, தோப்பில் மலேரியாக் கொசு அதிகம்; நல்லவேளையாகக் குளிரும் அதிகம், ஒரு துர்சொப்பனம்போல் படுத்துக்கிடப்பார்கள்; சிலர், உண்மையில் தூங்காதவர்கள், தூங்குவதுபோல் பாசாங்கும் செய்வார்கள். ஆட்டுமந்தைக்காரன் தன் ஆடுகளை எப்படி இரவில் அடையாளம் கண்டுகொள்கிறான், அதுபோல பிரயாண ஏஜண்டுகள் இருட்டில் குறிப்பாகத் தம் ஆட்களை மூலை முடுக்குகளிலிருந்து உதைத்து எழுப்புவதையும் அவர்கள் முணு முணுப்பதையும் காண்பது சகஜம். படித்தவர்களுக்கு அவை வெகு விநோதமாயிருக்கும்.

சிறிது நேரத்தில் "ஆஹோஹம், ஹங்கோ, அங்ஹோகம் ஆஹா" என்ற பல்லக்குப் பாட்டுடன் 'கச்சைகள்' புறப்படும். கச்சை என்றால் என்ன? என்று கேட்கிறீர்களா? பல்லாக்கு போல் பெட்டியாக இருக்கும்; சுமை வாகனத்திற்கு 'டோலி' (Cradle) என்று பெயர். அது அதிகமாகப் பழக்கத்தில் இல்லை. ஆஸ்பத்திரி 'ஸ்ட்ரெச்சர்' போல் கொஞ்சம் குழிவாய், தோளில் சுமக்கக்கூடிய ஈஸிச்சேர்போல் இருப்பதுதான் கச்சை என்பது. அதை நான்குபேர்கள் சுமப்பார்கள் ஐயோ கடவுளே! அந்திய காலக் கடைசிப் பிரயாணத்திற்கு நல்ல ஒத்திகை என்கிறீர்களா? இவ்வாறு சுமார் 12 மைல் நீளமுள்ள 'ஒற்றையடிப் பாதை' (Bridle Path) வழியாக நடந்தோ அல்லது குதிரைகள் மீதோ இங்கு சென்று வந்தார்கள். அக்காலத்தில் கோடைக்கானலுக்குப் போவதற்கு வாகன வசதிகளும், ரஸ்தாக்களும் இல்லாதிருந்த போதிலும் அங்குள்ள ரம்யமான காட்சிகளுக்காகவும், சீதோஷ்ண ஸ்திதிக்காகவும் ஜனங்கள் இங்கு சென்று வந்தார்கள்.

சீதோஷ்ண ஸ்திதியில் உதகமண்டலத்தைக் காட்டிலும் கோடைக்கானல் சிறந்தது என்பது மேனாட்டாரின் சீரிய கருத்தாகும். மேலும், கோடைக்கானலில் மழை அதிகம். இங்குள்ள சூழ்நிலையில் ஈரத்தன்மை மிகவும் குறைவாயிருக்கிறது. தவிரவும், இங்கு உஷ்ண வியாப்தியும் குறைவு. பூமியும் சல்லாறையாக இருப்பதால் மழை பெய்து ஓய்ந்தவுடன் தண்ணீர் வடிந்து தரை சீக்கிரம் உலர்ந்து விடுவது கண்கூடு.

**தோன்றிய விதம் :**

கோடைக்கானலிலுள்ள பிரதேசத்தில் முதன் முதலாக விஜயம் செய்து குறிப்பு எழுதி வைத்தவர் லெப்டினண்ட் B.S. வார்டு என்னும் ஆங்கிலேயர். இவர் கி. பி. 1821ம் வருஷத்தில் பழனி மலையைச் சர்வே செய்த காலத்தில் இங்கு வந்து போனாராம். அவர் இம்மலையின் இயற்கை வனப்பைக் கண்டு பிரமித்து விட்டாராம். பிறகு 1834ம் வருஷத்தில் மதுரை சப் கலெக்டராக இருந்த J. C. ராட்டன் (J. C. Wroughtone) என்பவரும், நீதிபதியாயிருந்த C. R. கால்டன் (C. R. Colton) என்பவரும் இங்கு வந்தார்களாம். இவர்களுக்கு உதவியாளர்களாக வேடர்களும் வீர மறவர்களும் வந்தார்களாம். இவர்களால் செப்பனிடப்பட்ட ஒற்றையடிப் பாதைதான் 'செண்பகனூர்' வரை இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இவர்களுக்குப் பின் டாக்டர் ராபர்ட் வெயிட் (Doctor Robert Wight) என்ற தாவர நிபுணர் இங்கு 1836-ல் வந்து பல குறிப்புக்கள் எழுதி வைத்துள்ளார். அதை நாம் இன்றும் 'மதராஸ் ஜெர்னல் ஆப் லிட்ரேச்சர் அண்டு ஸயன்ஸ்' (Madras Journal of Literature and Science)



குறிஞ்சிச் செடிகளும் கோடைக்கானல் ஏரியின் அழகிய தோற்றமும்.
இக்குறிஞ்சிச் செடி பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை நீலநிறமாகப் பூப்பது கண்ணைக் கவரும்


என்ற புத்தகத்தில் ஐந்தாவது பகுதியில் காணலாம். அவை தற்கால தாவர ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயன்படுகிறது என்பர். இதனால், மேனாட்டார்கள் ஆண்டு தோறும் இங்கு வந்து போவது கண்கூடு. மேலும், தாவர நூல் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இங்கு ஏராளமான வசதிகள் இருக்கின்றன.

முதன் முதலாக கோடைக்கானலில் வீடு கட்ட ஆரம்பித்தவர்கள் மதுரையிலிருந்த அமெரிக்கன் மிஷினரிகள் ஆவர். 1845-ம் வருஷத்திலே இரண்டு பங்களாக்களே இருந்தனவாம். 1853-ம் வருஷம் வரையில் இவ்விடத்தில் ஏழு பங்களாக்களைத் தவிர வேறு இல்லை என்பர். 1861-ல் மேற்கொண்டு மூன்று வீடுகள் மட்டும் ஏற்பட்டனவாம். பின்னால் சிறுகச்சிறுக ஜனங்கள் வந்து குடியேறினராம். இப்பொழுது அங்கே இயற்கையழகு பொருந்திய ஒரு பெரிய நகரமே ஏற்பட்டுவிட்டது மிக்க ஆச்சரியமல்லவா?

**காணவேண்டிய காட்சிகள்:**

கோடைக்கானலில் பார்க்கவேண்டிய காட்சிகள் அநேகம் உள்ளன. அவைகளில் இங்கே வருவோரின் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவருவது கோடைக்கானல் ஏரியின் அழகிய காட்சிதான். இதன் குறுக்களவானது ஓரிடத்திலாவது அரை மைலுக்குமேல் இல்லாதிருந்தபோதிலும், இதன் சுற்றளவுமட்டும் மூன்றுமைல் உள்ளது. மேலும், இதன் அமைப்பானது உள்ளங்கையை விரித்தால் எந்தத் தோற்றம் காணப்படுகிறதோ அதேமாதிரி இருக்கிறது. ஏரியைச்சுற்றி ஒரே மட்டத்தில் ஒரு ரஸ்தாவும் அதற்குமேல் படிப்படியாக இரண்டு ரஸ்தாக்களும் ஆகிய மூன்று ரஸ்தாக்கள் முக்கியமானவை.

இந்த ஏரியை உருவாக்கியவர் லெவிஞ்சு (Levinge) என்னும் ஆங்கிலேயராவர். இவர் 1865-ல் மதுரை ஜில்லாக்கலெக்டராக பணியாற்றியவர். சமவெளியாகவும் சதுப்பு நிலமாகவும் இருந்த ஓரிடத்தை 1865-ம் வருஷம் தேர்ந்தெடுத்து, அதனூடே போய்க்கொண்டிருந்த ஒரு சிறிய ஓடையை மறித்து அணைகட்டி ஏரியொன்றை அமைத்தார். இந்த ஏரியை அமைத்ததற்கு அவர் முக்கிய காரணஸ்தராய் இருந்ததுடன் பெரும்பாலும் தன் சொந்தச் செலவிலேயே (Pocket Money) இதை அமைத்ததாகக் கூறுவர். தவிரவும், பெரிய குளத்திலிருந்து வரும் ஒற்றையடிப்பாதை (Bridle Path)யை ஏற்படுத்தியதோடல்லாமல் ஊரினுள் பல ரஸ்தாக்களையும் சீராக அமைத்துள்ளார். ஐரோப்பிய பழவர்க்கங்களையும் புஷ்பச் செடிகளையும் இங்கு உண்டாக்குவதற்கு அரும்பாடு பட்டாராம். இவர் ஆரம்பித்து வைத்த ரஸ்தாக்கள் எல்லாம் பெரும்பாலும் 1915-ம் வருஷம்தான் பலன் தந்ததாம். அப்பொழுதுதான் முதன்முதல் மோட்டார் வண்டி மலைமேல் வந்தது எனச் சொல்வாருளர். இதற்கு 'மோஷன் ரோடு' (Motion Road) என்று பெயர். சுமார் 40 மைல் தூரம் வரை மிகவும் அழகாக காட்சியளிக்கிறது. இவ்விதம் இக்கோடைக்கானலை



'ஸில்வர் கால்கேட்' என வழங்கும் வெள்ளி அருவி. கோடைக்கானலிலுள்ள அருவிகளிலே இதுதான் பெரிதென்பர்.

உருவாக்கிய உத்தமனுக்கு ஏரிக்கரையிலே ஒரு அழகிய நினைவுச்சின்னம் நிறுவப்பட்டிருப்பது மிக்கப் பொருத்தமே!

கோடைக்கானலிலே ஜனங்களின் முக்கியமான பொழுதுபோக்கு படகில் உல்லாசமாகச் செல்வதுதான். பல நூற்றுக்கணக்கான படகுகளைப் பகல்நேரத்தில் இங்குதான் பவனியாகப் பார்க்கலாம். வேறு இடங்களில் இவ்வித வசதிகள் இல்லை எனத் துணிந்து கூறலாம். இங்கு இங்கிலீஷ் போட் கிளப், இந்தியன் போட் கிளப் என இரண்டு வகையான போட் கிளப்புகள் உள்ளன. பளிங்குபோன்ற நிம்மதியான தண்ணீரின்மேல் படகுகளில் போவது மிகக் குதூகலமான காட்சி! அதற்கு அனுகூலமாக ஏரியைச் சுற்றிலும் அங்கங்கே சின்னஞ்சிறு கட்டிடங்கள் உள்ளன. அவைகள் கண்களைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன.

அடுத்ததாகத் தூண்மலை (Piller Rocks) இவைகள் மலையில் வெடிப்பு ஏற்பட்டு ஒரே பாறையாகச் சுமார் 400 அடி உயரமுள்ள தூண்கள்போல அமைந்துள்ளன. இங்கிருந்து கீழே நாம் நோக்குவோமானல் கம்பம் பள்ளத்தாக்கு, சமவெளி முதலியன நன்ருகத் தென்படுகின்றன. ஏரிக்கு அடுத்தாற்போல் "பிரயண்ட் பார்க்" (Bryant's Park) என்ற அழகிய பூங்கா இருக்கிறது. இங்கு அநேகவிதமான புஷ்பச் செடிகள் உள்ளன. உல்லாசப் பொழுதுபோக்குக்கு இது மிகவும் தகுதியான இடம்; வன போஜனத்துக்கும் மிகப் பொருத்தமான இடம்; ஆனல், இங்கேயுள்ள பேரிஜாம் ஏரியைப் போல அவ்வளவு வசதிகள் இங்கில்லை எனலாம்.

மலர்களுக்கும் ஓட்டுப் பூஞ்செடிகளுக்கும் பெயர்போனதல்லவா, கோடைக்கானல்! இங்கு 'பெர்ன்ஸ்' (Ferns) என்னும் ஒரு வகை ரோஜாப்பூக்கள் பெரும்பாலும் பயிர் செய்கிருர்கள். இந்தப் பூங்காவையடுத்துச் சற்றுத் தொலைவில் 'கோகர்ஸ் வாக்' (Coaker's Walk) என்றழைக்கப்படும் நடைபாதை இருக்கிறது. இப்பாதை மிகவும் செங்குத்தான பாறையின் ஓரத்தில் செல்லுகிறது. இங்கிருந்து சுற்றிலுமுள்ள நிலப் பரப்பைக் காணலாம். பலநிறப் பாறைகளையும் வானத்தில் தவழ்ந்து செல்லும் மேகக்கூட்டங்களையும் இதிலிருந்து மிக எளிதாகப் பார்த்துப் பரவசமடையலாம். இங்கிருந்து பார்த்தால் மதுரைப் பெரிய கோபுரமும், வைகையாறும் நன்ருகத் தெரியும். கீழே பார்த்தால் சிலருக்குத் தலை சுற்றும், பம்பரம்போல!

கோடைக்கானல் ஏரியிலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் அதன் மட்டத்திற்குமேல் சுமார் 8000 அடி உயரத்தில் வான ஆராய்ச்சி சாலை (Observatory) யொன்று இருக்கிறது. இதைத்தான் பொது ஜனங்கள் 'நக்ஷத்திர பங்களா' என்கிருர்கள். அங்கு சூரியன் சம்பந்தமான சோதனைகள் தான் பிரதான காரியம். ஏதாவது விசேஷ காலங்களில்தான் நக்ஷத்திர சோதனை சிறிதளவு நடைபெறுமாம். 1899-ம் வருஷத்தில்தான் இதை சென்னைப்பட்டணத்திலிருந்து இங்கு மாற்றினர்களாம். இந்த ஆராய்ச்சிசாலை நிறுவப்பட்டதற்கு முக்கிய காரணம் என்னவென்ருல், அதிகமாக மூடுபனி (Mist) இங்கு இல்லாததும், தெளிவான ஆகாயத் தோற்றமும், சமசீதோஷ்ண நிலையும் இருப்பதுதான். இவ்வாராய்ச்சிசாலைதான் உலகத்திலேயே மிக

வும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதற்கு அரசாங்கம் ஏராளமான பண உதவிகளை வருஷம்தோறும் செலவிடுகிறது. வெள்ளிக்கிழமைதோறும் இலவசமாக இங்குள்ள ஆராய்ச்சிக் கருவிகளைப் பார்க்கலாம். எவ்வித பிரவேசக் கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை.

கோடைக்கானலிலுள்ள நீர்வீழ்ச்சிகளில் முக்கியமாக மூன்றை மட்டும் குறிப்பிடலாம். மலைமேல் ஏறும்பொழுது பெருமாள் மலைக்கு அப்பால் 'வெள்ளி அருவி' (Silver Cascade) என்ற ஒரு அருவி இருக்கின்றது. இதன் நீர் முத்துப்போல காட்சியளிக்கிறது. இது பரப்பார் ஓடையில் அமைந்துள்ளது. இந்த வெள்ளி அருவிதான் கோடைக்கானலிலுள்ள அருவிகளில் மிகவும் பெரிது; மிக்க அழகானதும்கூட! ஊரிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் இந்த அருவி காட்சியளிக்கிறது. இதற்கு அடுத்தபடியாக 'வில்பட்டி'க்குப் போகும் வழியில் பரப்பார் நதியின் கிளையொன்றில் "கிளன் அருவி" (Glen Falls) உள்ளது. மூன்றாவதாக பாம்பார் நதியில் 'தேவதை அருவி' (Fairy Falls) இருக்கிறது. இது தவிர 'பேர் ஷோலா அருவி' (Fershola Falls) போன்ற இன்னும் சில அருவிகளும் உள்ளன. இவைகள் அளிக்கும் ரம்யமான காட்சிகளுக்கு அவைகளின் பெயர்களே போதிய சான்றாகும்.

வான ஆராய்ச்சிசாலைக்குப் பக்கத்தில் மலைகளுக்கு ஊடே மிகவும் கவனமாய் பாதுகாக்கப்பட்ட ஏரியிலிருந்து குழாய்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இந்த நீர் பளிங்குபோல மிகத் தெளிவாகக் காட்சியளிக்கிறது. விலங்குகள் எதுவும் இக்குளத்தை நெருங்காதபடி சுற்றிலும் வேலிகள் போட்டிருக்கிறார்கள் இங்குள்ள முனிசிபாலிடியார். இம்முனிசிபாலிடி 1892-ம் வருஷத்தில் ஏற்பட்டதாகும்.

**இயற்கை அன்னையளித்த இன்பச் செல்வம்**

செழுமைக்கும் அழகுக்கும் பெயர்போனது இக் கோடைக்கானல். சமவெளியாகவுள்ள இடங்களில் கோதுமை சாகுபடி செய்கிறார்கள். காய்கறி வகைகளில் உருளைக்கிழங்கு,






மின்னல் வேகமும், அவசரமும் மிகுந்த இக்காலத்தில் **விபத்துக்கள்** எப்பொழுது, எங்கு, எப்படி ஏற்படுமென்பதை யாரும் அறிய இயலாது!

எனினும் சகலவிதமான விபத்தினின்றும் பாதுகாப்பாக இன்ஷ்யூர் செய்துகொள்ளலாமென்பதை ஒவ்வொருவரும் அறிவதவசியம்.

ரூ. 5000/-க்கு இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ள வருடாந்தர பிரீமியம் ரூ. 12/8-தான்.

விபரங்களுக்கு:

**இந்தியன் மியூச்சுவல் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் சொசைட்டி லிமிடெட்.**

தலைமை ஆபீஸ்: 35, மௌண்டு ரோடு, மதராஸ் - 2

முட்டைக்கோஸ், காலிபிளவர், காரட், பீட்ரூட் முதலிய இங்கிலீஷ் காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. கோடைக்கானலில் யாதொரு விதமான வாழையும் பயிர் செய்வதில்லை. ஆனல் சுமார் 1500 அடிக்குக் கீழேயுள்ள பெருமாள் மலை என்று சொல்லப்படும் சிறு மலையில் வாழை பயிர் செய்யப்படுகிறது. பெர்ரிகள், பேரிக்காய்கள், வால்பேரி முதலிய கனி வர்க்கங்கள் இங்கு உற்பத்தியாகின்றன. அவை பெரும்பாலும் பிற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மிருகங்களில் காட்டெருமை, கரடி, சிறுத்தை முதலியவை கோடைக்கானலைச் சுற்றியுள்ள காடுகளில் மிகுதியாகத் தென்படுகின்றன. அவைகளை மனம்போனபடி வேட்டையாடி அழித்து விடாதிருக்கும் பொருட்டு சர்க்கார் சில கட்டுத்திட்டங்களை நிறுவியுள்ளனர்.

மேலும், ஐரோப்பாவில் இயற்கையாக இருக்கும் மரம், செடி, கொடிகள் பெரும்பாலும் இங்கு காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமானவை, 'பைன்' 'யூகலிப்ட்ஸ்' 'கருங்காலி' செண்பகம் இவைகள் மிகுதியாக உள்ளன. இதர பிரதேசங்களிலிருந்து இவைகள் இங்கு கொண்டு வரப்பட்டனவாம். 'பைன்' மரங்களை ரசாயன முறையில் சீர்படுத்தி மின்சாரக் கம்பங்களாக (Electric Post) உபயோகப் படுத்துகிறார்கள். அநேகவிதமான புற்கள் இங்கு வளர்கின்றன. அவைகள் பெரும்பாலும் வாசனையுள்ளதாயும் தடித்தும் இருப்பதால் கால்நடைகளின் ஜீவனத்திற்கு உபயோகப் படுவதில்லை.

இம்மலையில் இரண்டு மூன்று அங்குல முதல் இரண்டு மூன்று அடி வரையிலும் மண் இருக்கிறது. வெறும் பாறையும் தட்டுப்படுகிறது. ஆனல் பாறைகளில் ஏற்பட்டுள்ள பிளவுகளில் உயரமுள்ள மரங்கள் வளருகின்றன. மரம் செடி கொடி முதலியவற்றின் இலைகள் பூமியில் விழுந்து மக்கிப்போய் நல்ல உரமாய் இருப்பதாலும், அடிக்கடி மழை பெய்வதாலும் தாவரங்கள் இங்கே செழிப்பாக வளருகின்றன.

கோடைக்கானல் என்றால் கோடைக்கால வாசஸ்தலம் எனப்பொருள் கூறுவர். நல்ல படித்தவர்கள்கூட இது விஷயத்தில் பிசகு செய்கிறார்கள். வேனிற்கால விச்ராந்தி வாசஸ்தலம், ஆரோக்யபுரி என்ற எண்ணமெல்லாம் இந்த நூறு வருஷத்திய செய்தி. இந்தப் பெயரோ அதற்கு முன்பே ஏற்பட்டது. இதை அவர்கள் இலகுவாக மறந்து விடுகிறார்கள். மலைப்பிரதேச பாஷையில் பல பண்டைக் காலத்தமிழ் வார்த்தைகள் இருக்கின்றன. அவற்றுள் 'கோடை' என்பது ஒன்று. அதைச் சிறு பீடபூமி' எனக் கொள்ளலாம். இக்காடுகளில் பூஜம் அல்லது தொடைப்பருமன் உள்ள கொடிகள் இருப்பதைக் கண்டு சிலர் 'கொடிகானல்' என்றழைத்தனராம். இதுவே நாளடைவில் திரிந்து 'கோடைக்கானல்' என்றமைந்தது என்பாருளர்.

## குறிஞ்சிப்பூ

பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை 'மாமாங்கம்' வருவதுபோல இங்கு குறிஞ்சி என்ற பூ பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை பூத்துக் குலுங்குகிறது. இதன் நிறம் அழகிய நீல நிறமாகும். இக்குறிஞ்சிப் பூவை ஆங்கிலத்தில் 'ஸ்ட்ரோபிலாந்தெஸ் குந்தியானஸ்' (Strobilantes Kunthianus) என்ற பெயர் வழங்கி வருவது யாவருமறிந்ததே! குறிஞ்சி என்பது தூய்மையான தமிழ்ப் பெயர். குறிஞ்சி சிதைந்து நாளடைவில் 'குந்தியானஸ்' என்று வந்தது போலும். இது ஆராய்ச்சிக்குரியது. இச்செடி இரண்டு முதல் பன்னிரண்டு அடி உயரம் வரை வளருமாம். பூ நன்ருக மலர்ந்தவுடன் நீல நிறமாகக் கொத்துக் கொத்தாகக் காட்சியளிக்கிறது. பார்வைக்கு மிக்க அழகாக இருக்கிறது என்று கூறுகிறார்கள் தாவர நிபுணர்கள். இவ்வருடம் இம்மலரை பார்க்கவேண்டும் என்று ரொம்பப்பேர்கள் கோடைக்கானலுக்குச் சென்றுள்ளனர். இக்குறிஞ்சியானது 1946-ல் பூத்துக் குலுங்கியதாம். அதற்குப்பின் பூக்கவேயில்லையாம். இவ்வருஷம் 1958-ல் பூக்க வேண்டும் எனச் சொல்கிறார்கள். இங்குள்ள தாவர ஆராய்ச்சியாளர்கள். குறிஞ்சிப்பூவின் மணம் பெரும்பாலும் கொம்புத் தேனைப்போலிருக்கிறதென்பர். இன்னும் சிலர் இளம் சோளக் கொல்லையின் மணம்போல் உள்ளது என்பர். வேறு மணம் இல்லை எனத் துணிந்து கூறலாம். இங்கிருந்து தேன் ஏராளமாகச் சேகரித்து விற்பனைக்கு அனுப்புகிறார்கள். இதற்குக் 'குறிஞ்சித் தேன்' என்று பெயர்.

இங்கு வருவோருக்கு வசதியாகப் பல விடுதிகளும், ஹோட்டல்களும் உள்ளன. அதில் 'விடுமுறை இல்லம்' [Holiday Home] என்ற விடுதி யாத்திரிகர்களுக்கு மிக்க வசதியான இடம். பல சௌகரியங்கள் குறைந்த செலவில் அளிக்கிறார்கள். இக்கோடை காலத்தில் இங்கு நாம் மிகுதியான உஷ்ணத்தினல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது அப்பேர்பட்ட குளிர்ந்த பிரதேசத்தை நினைக்கும்போதே நமக்கு ஓர் இன்பம் நம்மையறியாமலே உண்டாகிறதல்லவா?

---

# பட்டிக்காட்டுப் பெண்ணா?

**பி. ஆர். ராஜாராம்**

இரவு ஏழு மணிக்கு சென்ட்ரல் ஸ்டேஷன் ஜனக்கூட்டத்தினால் வழிந்துகொண்டிருந்தது. நியான் விளக்குகள் ஒளிப் பிழம்புகளைக் கக்கிக்கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் ஜனங்கள் ரொம்ப அவசரமாக உள்ளே நுழைவதுமாக, வெளியே வருவதுமாக இருந்தார்கள். அங்கங்கே போர்ட்டர்களின், டாக்ஸிக்காரர்களின், ஜட்கா வண்டிக்காரர்களின் கூச்சல்கள். நடுநடுவே ஸ்டேஷன் அறிவிப்பாளரின் பேரொலிகள்! அத்தனையும் அனுபவித்தவாறே, அமைதியாக 'பிளாட்பாரம்' டிக்கட் கொடுத்துக்கொண்டிருந்தான் சுந்தர்.

அவன்பாட்டிற்கு 'மடமட' வென்று டிக்கட்டுகளை 'டக் டக்' கென்று தேதி மிஷினில் அடித்துக் கொடுத்துக்கொண்டே வந்தான். அரை மணி சென்றதும் அவனிடம் கூட்டமில்லை.

"அப்பாடா! கொஞ்சம் காற்று வாங்கலாம்!" என்று 'கௌண்டரை' விட்டு வெளியே வந்து நின்றான். அப்பொழுது ஓர் இளம் பருவப் பெண், வயது சுமார் பத்தொன்பது, இருபது இருக்கும். நேரே 'பிளாட்பாரம்' டிக்கட் கொடுக்குமிடத்திற்கு வந்தாள்.

காற்றுவாங்க 'ஸ்டைலாக' சற்றே 'ஷர்ட்' திறந்து மார்பைக் காட்டிய வண்ணம் நின்றிருந்த சுந்தர் அவளைப் பார்த்தான். அவளும் அதே சமயத்தில் சுந்தரைப் பார்த்தாள். ஒரு நிமிடம் இருவர் கண்களும் மோதிக்கொண்டன. அப்பா! என்ன அழகு! என்ன அழகு! வட்ட வடிவமான குண்டு முகம். துறு துறுவென்று சுற்றிச் சுழலும் விழிகள். சற்றே எடுப்பான மூக்கு. பவள வாய். முத்துப் பற்கள். கருநாகத்தை யொத்த பின்னல். எடுப்பான பூரிப்பான அங்கங்கள். அன்றைக்கு அவள் பச்சைக் கலரில் மைசூர் கிரேப் சோலியும், 'ஷிபான் சில்க்'கில் ரோஸ் புடவையும் கட்டியிருந்தாள்.

"ஒரு பிளாட்பாரம் டிக்கட்!"

அவளழகில் தன்னை மறந்த சுந்தர், அவளுடைய குயிலினுமினிமையான குரலைக்கேட்டுத் தன் உணர்விற்கு வந்தான்.

"இதோ!" என்று சொல்லிக் கொண்டே 'கௌண்ட'ரினுள் நுழைந்து ஒரு பிளாட்பாரம் டிக்கட் அடித்துக் கொடுத்தான். எட்டணா நாணயத்தை நீட்டியிருந்தாள் அப் பெண். மீதி ஏழணாவைக் கொடுக்கும்பொழுது அவள் விரல்களின் மேல் தன் கை பட்டுவிட்டது. அவன் 'சொரேர்' என்று உணர்ச்சி பெற்று 'விசுக்' கென்று கையை இழுத்துக் கொண்டான். தன் வழுக்கி விழுந்த புடவையை சரி செய்து கொண்டே 'ஹை ஹீல் ஷூஸ்' சப்தமிட அவள் ஸ்டேஷனுக்குள் மறைந்தாள்.

மறுபடி வெளியில் வந்து நின்றான் சுந்தர். அவன் நினைவு, இப்பொழுது வந்துவிட்டுப் போன அப் பெண்ணின் மேலேயே இருந்தது. சுந்தர் ஒரு நாளுக்குள் ஸ்டேஷனில் எத்தனையோ விதப் பெண்களைப் பார்த்திருக்கிறான். எவ்வளவோ பேருடனும் சோஷியலாகப் பேசியும், பழகியும் இருக்கிறான். ஆனால் இப்பொழுது வந்துவிட்டுப்போனவள் சுந்தரின் உயிரையே தன்னுடன் எடுத்துக்கொண்டு போய்விட்டாள்போல அவனுக்குத் தோன்றியது. ஏனோ அவன் மனது, அவளை மறுபடியும் ஒருமுறைப் பார்க்க ஆசைப்பட்டது. அதற்குள் 'பிளாட்பாரம்' டிக்கட் வாங்க கூட்டம் வந்துவிட்டதால், சுந்தர் தன்னிருப்பிடம் சென்று டிக்கட் கொடுத்துக்கொண்டே வந்தான். வேலை செய்தவண்ணம் அவன் இருந்ததால் நேரம் போனதே தெரியவில்லை.

சுமார் ஒரு மணிநேரம் கழித்து மறுபடி 'அவள்' வந்தாள்.

"என்ன மிஸ்டர், நீங்களாவது 'பிளாட்பாரம்' டிக்கட் கொடுக்கும்பொழுது சொல்லக்கூடாதா, இன்று பம்பாய் மெயில் இரண்டு மணி நேரம் 'லேட்' என்று?" என்று கேட்டுக்கொண்டே கௌண்டரிடம் வந்தாள். இதைக்கேட்டு சுந்தர் இடி இடியென்று சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"பின்னே என்ன? நீங்கள் எந்த வண்டியைத் தேடி இங்கு வந்தீர்கள் என்று எனக்குத் தெரியுமா? இல்லை நீங்களாவது வாய் திறந்து ஒரு வார்த்தைக் கேட்டீர்களா? அப்படி இருக்க என்மேல் கோபப்படுகிறீர்களே!"

"ஹ...ஹ...ஹா" என்று அவளும் சிரித்தாள்."

"எக்ஸ்யூஸ் மீ! நானும் ஏதோ நினைவில் கேட்டுவிட்டேன். இன்று பம்பாய் மெயில் இரண்டு மணி நேரம் 'லேட்' என்றார்கள் போனில் கேட்டதற்கு. அதற்காக நான் ஏழு மணிக்கு இங்கு வந்தாலும், அது இன்னும் இரண்டு மணி நேரம் 'லேட்'டாக வருமாம். பொழுதை எப்படிக் கழிப்பது?

"ஏன் ஹிக்கின்பாதம்ஸ் இருக்கே. அங்கே எங்கேயாவது..."

"அங்கேதான் ஒரு மணி நேரமாக புத்தகம் புரட்டிக் கொண்டிருந்தேன். இன்னும் ஒரு மணி நேரமிருக்கிறதே, இப்படி உள்ளே வந்து உட்காரலாமா?"

சுந்தர் ஒரு கணம் திடுக்கிட்டான். வயதுப் பெண் தன்னுடன் உள்ளே வந்து உட்காருவதா? தான் அதற்கு இடங் கொடுப்பதா? சரி, ஆபத்திற்கு உதவி செய்தால் பரவாயில்லை என்று

"ஓ, தாராளமாக உட்காரலாம், உள்ளே வாருங்கள்!"

அவள் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து உட்கார்ந்தாள். பிளாட்பாரம் டிக்கட் கொடுக்கும் அறைக்கு பக்கத்து அறையான ஸென்ட்ரல் ஸ்டேஷன் டெலிகிராப் அறையில் உட்கார்ந்திருந்த அம்பிகாநாத் ராவ், தன்னுடைய 'டடக் டகக்' தட்டுவதை ஒரு நிமிஷம் நிறுத்திவிட்டு, மெள்ள சுந்தரின் பக்கம் எட்டிப் பார்த்தார்.

"ம்... காலா காலத்திலே பையனைக் கல்யாணம் செய்துகொள்ளடா என்றேன். அவன் கேட்கலை. இந்த மாதிரி வியாபாரமெல்லாம் வைத்துக் கொண்டிருந்தால் கல்யாணம் எதற்கு, கருமாந்தரம் எதற்கு?" என்று நினைத்துக்கொண்டே அந்த அழகியையும் ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே தன்னறையில் வந்து உட்கார்ந்தார்.

உள்ளே வந்து உட்கார்ந்த அந்த 'அவள்' ஒரு முறை சுந்தரை நன்ருகப் பார்த்தாள். வாட்ட சாட்டமாக நன்ருக வளர்ந்திருந்தான் சுந்தர். அலை அலையான, படிப்படியான கிராப். வாலிபப் பருவமாதலால் முகத்தில் நல்ல களை. அன்றே எடுத்த மடிப்புக் கலையாத 'ஹவாய்' புல்பாண்டும், 'நியூ ஷராக்கில்' நீல புல்ஷர்ட்டும் அணிந்திருந்தான். அதற்குள் சுந்தரும் தன் அழகை தன்னிரு கண்களால் அளப்பதைக் கண்டு அவள் நாணத்துடன் தலையைக் கவிழ்ந்துகொண்டாள்.

ஜனக்கூட்டம் வந்துகொண்டே இருந்தது. சுந்தர் தன் கடமையைச் செய்துகொண்டே அவளுடன் பேச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தான்.

"யார் இந்த பம்பாய் மெயிலில் வருகிருர்களோ?"

"யாருமில்லை; என்னுடன் பள்ளியில் ஒன்ருகப் படித்த, இணைபிரியாத சிநேகிதி ராதை, இன்று வருகிருள். அவளைப் பார்த்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. அதற்காக நான் ஸ்டேஷனுக்கே வந்துவிட்டேன் அவளை வரவேற்க."

"ஓஹோ! அப்படியா?"

"நீங்கள் இப்படி சலிக்காமல் டிக்கட் அடித்துக் கொடுக்கிறீர்களே, உங்கள் கை வலிக்கவில்லை?"

"இல்லை. எல்லாம் பழக்கம்தான் காரணம்."

"உங்கள் பெயரை நான் அறியலாமா?

"சுந்தர்! உங்கள்..."

"சுந்தரி!"

"அப்படியா? வெகு சந்தோஷம்! மிகவும் பொருத்தமான பெயர்தான்! எங்கே ஜாகையோ?

"பழைய மாம்பலம்"

"என்ன தெருவோ?"

"இராமகிருஷ்ணத் தெரு"

"அப்படியானல் நெம்பர் எதுவோ?"

"நான் சொல்லத் தயாராக இல்லை, எதற்கு என் அட்ரஸைக் கேட்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை, சும்மாத்தான்"

"ஆண்களே இப்படித்தான். கொஞ்சம் 'சோஷியலாக'ப் பழகினல் போதும். உடனே ஊரென்ன, பெயரென்ன, அப்பா, அம்மா பெயரென்ன, வீட்டு அட்ரஸ் என்ன என்று எல்லாவற்றையும் கேட்பது!"

நாலு அறை கொடுத்து அவளை அந்த அறையிலிருந்து கழுத்தைப் பிடித்து தள்ளலாமா என்றிருந்தது சுந்தருக்கு! கெஞ்சிக் கேட்டு, உள்ளே வந்து உட்கார்ந்திருக்கிருளே என்று 'சோஷியலாகப் பேசினல் அதற்கு இப்படித்தான் துடுக்குத் தனமாக பதில் சொல்வதா? சே! சுத்தப் பட்டிக்காடுபோலிருக்கு என்று நினைத்துக்கொண்டான். ஐந்து நிமிஷம் அவன் அவளுடன் ஒன்றும் பேசவில்லை.

"நீங்கள் மைலாப்பூரில் இருப்பதாகத் தெரிகிறது" பேச்சைத் துவக்கினுள் சுந்தரி.

"இல்லை"

"மாம்பலத்தில்"

"இல்லை."

"கோடம்பாக்கத்தில்."

"இல்லை."

"ஜார்ஜ் டவுனில்."

"ஆமாம். ஏன்?"

"நீங்கள் நம்மாழ்வார் தெருவிலிருந்துதானே வருகிறீர்கள்?"

அசந்துவிட்டான் சுந்தர் இதைக் கேட்டு! இவளுக்கு எப்படி நம் அட்ரஸ் தெரியும்? ஒரு வேளை இவள் போலீஸில் ஸி. ஐ. டி. வேலை செய்கிருளோ?

"மிஸ் சுந்தரி, தயவுசெய்து தாங்கள் யார்? எதற்காக என் அட்ரஸைக் கேட்...?"

"உங்கள் அட்ரஸ் எனக்குத் தெரியும். மணி ஆகிவிட்டது. நான் வருகிறேன்!" 'விருட்'டென்று அவள் ஸ்டேஷனுக்குள் சென்றுவிட்டாள். அவள் போவதையே பார்த்துக்கொண்டிருந்த சுந்தர், "சரிதான்! இது 'செமி கிராக்கு' போலிருக்கு! கொஞ்சமும் இங்கிதம் தெரியாத பெண்! ஏதோ வந்தாள்; உள்ளே உட்காரவேணும் என்ருள்; ஏதோ பேசினுள்; போயும்விட்டாள்: சரியான பிரகிருதி!" என்று சொல்லி வாய்விட்டு சிரித்தும்விட்டான்.

"ஏம்பா சுந்தர்! ஏது இந்தச் சரக்கு புதுசா இருக்கே?" என்ருர் டெலிகிராம் கொடுக்கும் கிளார்க் அம்பிகாநாத் ராவ்.




ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு. L. 259A-X52 TM

"நீங்கள் ஒண்ணு சார்! யாரோ பைத்தியக்காரப் பெண்சார் அவள். இங்கு என்னிடம் வந்து 'தத்துப்பித்து'வென்று பேசிவிட்டுப் போய்விட்டாள். அவள் யாரோ, என்ன இழவோ, எவனுக்குத் தெரியும்?" என்றான் சுந்தர் எரிச்சலுடன்.

சிறிது நேரங் கழித்து பம்பாய் மெயில் வந்தது. ஜனக்கூட்டம் மறுபடி சென்ட்ரலில் வழிந்தது. அவர்கள் ஒவ்வொருவராக வெளியில் போவதைப் பார்த்துக்கொண்டிருந்த சுந்தர், தன் தோழியுடன் கைகோர்த்து. சுந்தரியும் கூட்டத்தில் போவதைப் பார்த்தான். அவள் போகும் பொழுது சுந்தரைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு டாக்ஸியில் ஏறினாள்.

இதைக்கண்டு சுந்தருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது! சூடாக நாலு வார்த்தை பேசிவிட்டு வரலாம் என்று அவனுக்கு இருந்தது. 'பைத்தியத்துடன்' என்ன பேசுவது என்று விட்டுவிட்டான்!

* * *

அவள் உண்மையில் பைத்தியமோ இல்லையோ, சுந்தரை அவள் பைத்தியமாக்கி விட்டாள். ஒரு வார காலமாக அவன் சரியாக சாப்பிடுவதில்லை; சரியாகத் தூங்குவதுமில்லை. எப்பொழுதும் சுந்தரியின் அழகிய முகம் அவன் மனத்திரையில் விழுந்து. அவனைப் புழுப்போல துடிக்க வைத்தது. அவள் நிச்சயமாக பைத்தியமாக இருக்கமாட்டாள். ரொம்பவும் துடுக்குத்தனம் மிகுந்தவளாக வேண்டுமானாலும் இருக்கலாமே யொழிய அவள் பைத்தியக்காரி அல்ல. பைத்தியம் என்றால் அவளுடன் கூடவே நாலு பேர் வருவார்களே! அவள் அன்று தனியாகத் தானே வந்தாள். சுந்தரி! ஆஹா; பெயருக்கேற்ற உடலமைப்பும், அழகும் கொண்டவளே! உன்னை மறுபடி எப்பொழுது பார்ப்பேன், எப்பொழுது பேசுவேன்? என்று ஏங்கினான். பித்துப் பிடித்தவன்போல ஓரிரு முறை அவள் சொன்ன இராமகிருஷ்ணாத் தெருவிற்குச் சென்று ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்தும் பார்த்தான். அவள் காணவே இல்லை.

"ம்...அவளை மணக்க எந்தக் கட்டைக்கு அதிருஷ்டமோ?" என்று நினைத்துக்கொண்டே அவன் தன் வேலைக்காகப் புறப்பட்டான்.

* * *

அன்றைக்கு சுந்தருக்கு காலை பத்து மணி முதல் டியூட்டி. வெய்யில் பாட்டிற்கு சென்னையைக் கொளுத்து கொளுத்து என்று கொளுத்திக் கொண்டிருந்தது. "உஸ், உஸ், அப்பாடா என்று பிரயாணிகள் வந்து 'க்யூ'வில் நின்று 'பிளாட்பாரம்' டிக்கட் வாங்கிக்கொண்டிருந்தனர், மணி பதினொன்று ஆகிவிட்டதால் பதினோறு–ஐம்பதிற்குப் புறப்படும் பெங்களூர் எக்ஸ்பிரஸ்ஸிற்காக ஸ்டேஷனில் கூட்டம் கூடி விட்டது. எனவே பிளாட்பாரம் டிக்கட் வாங்க 'க்யூ'வும் நீண்டது.

சுந்தர், 'மடமட'வென்று டிக்கட் அடித்துக் கொடுத்துக்கொண்டே இருந்தான். இப்படி அப்படித் தலையைத் திருப்பாமல், அவன் குனிந்த தலையுடன் சில்லரை வாங்குவது, டேபிளினுள் போட்டுக்கொள்வது, டிக்கட் அடித்துக்கொடுப்பதுமாக இருந்தான் இப்படி பத்து நிமிஷமாக மூச்சு விடாமல் வேலை செய்துகொண்டிருக்கும் போது, திடீரென்று 'கௌண்டரில்' அதே, பழைய கை, மென்தளிர் விரல்களை உடைய, வளையல்கள் அணிந்த கை தன் முன்னால் ஓரணுவுடன் நீண்டதைக் கண்டு சட்டென்று தலையை நிமிர்த்தினான், அவள்...அவள்...அந்த 'சுந்தரியே' நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்தில் என்றுமில்லாத கோபம் காணப்பட்டாலும், அதிலும் முகத்தில் ஒரு புதுக்'களை' தெரிந்தது.

சுந்தருக்கு என்னவோ தேவாமிர்தம் சாப்பிட்டது போலிருந்தது. பத்து நாட்களுக்குப் பிறகல்லவா சுந்தரியைக் காண்கிறான்! அவள் அழகில் ஒரு கணம் மயங்கின அவன் மெள்ள, "சு...ந்...த...ரி...!" என்றான்.

"யோவ்! யாரய்யா அது சுந்தரி முந்திரி என்று விளையாடறது? 'ஷோக்' பண்ண இதுவா இடம்? சீக்கிரம் டிக்கட் கொடுய்யா! வண்டி கிளம்பிடப் போவுது. உம்...ம்...!" என்று ஒரு கனவான் 'க்யூ'விலிருந்து கத்தினவுடன் சுந்தரியின் தேகமெல்லாம் பயத்தினால் வியர்த்தது. உடனே ஒன்றும் பேசாமல் 'மளமள'வென்று டிக்கட்டுகளை அடித்துக் கொடுத்தான். கூட்டமெல்லாம் ஸ்டேஷனுக்குள் போய்விட்டதும், தன்னிருக்கையை விட்டு வெளியில் வந்து பார்த்தான். சுந்தரியைக்காணோம்! அவள் எங்கோ ஸ்டேஷனுள் மறைந்து விட்டாள்.

"அடப்பாவமே! கைக்கு எட்டினது வாய்க்கெட்டவில்லையே! ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லையே! போகும்போது இந்தப் பக்கமாகத்தானே வருவாள்! வரட்டும்! அப்பொழுது ஒரு கை பார்த்துக்கொள்ளலாம் என்று தன்னிருக்கையில் போய் உட்கார்ந்து சில்லறைகளை எல்லாம் எடுத்து வைத்து எண்ணலானான். அரை மணி நேரம் சென்றுவிட்டதை அவன் அறியவில்லை! அவன்தான் மும்முரமாக அணாக்களையும், நயா பைசாக்களையும் எண்ணி எண்ணி வைப்பதில் இருந்தானே!

"ஐந்து ரூபாய்க்கு சில்லறை இருக்குமா மிஸ்டர்?" என்று யாரோ கேட்பதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தான் சுந்தர். எதிரில்—

அப்சரஸ் போல சுந்தரி நின்றுகொண்டிருந்தாள் கையில் ஒரு பச்சை நோட்டை நீட்டிய படியே!

"என்ன அப்படி முறைத்துப் பார்க்கிறீர்களே? சில்லறை இருக்கா இல்லையா?"

"ஓ! ஏராளமாக இருக்கிறது! ஐந்து நிமிஷம் தாமதியுங்கள். நான் அதற்குள் முழுவதையும் எண்ணிவைத்துவிட்டு, உங்களுக்கு..."

"அதுவரைக்கும் என்னைக் காக்கச் சொல்கிறீர்களா?"

"சே...சே! அப்படியெல்லாம் இல்லை! ஆக்ஷேபனை இல்லேன்னு உள்ளே வந்து உட்காருங்களேன்?"

அவள் கொஞ்சம் சிரித்துக்கொண்டே அவனறையில் போய் உட்கார்ந்தாள். அவன் அவளைப் பார்த்துக்கொண்டே எண்ணினுன்.

"மிஸ்டர், பணத்தைப் பார்த்து எண்ணுங்கள். பிறகு...!" என்ருள். அவள் தன்னை சுந்தர் கூர்ந்து பார்த்ததைக் கண்டு! சுந்தர் இதைக் கேட்டு 'ஓஹோஹோ' என்று அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டே,

"ஹூம் இந்த வேலையை ஐந்து வருஷமாகச் செய்கிறேன். ஒரு நாளாவது பணத்தில் காலணு குறையுமா?" என்ருன் வீராப்புடன்.

பணத்தை எண்ணி, தன் டேபிளினுள் போட்டுக்கொண்டே, 'ஆமாம் மிஸ் சுந்தரி அன்றைக்கு என்ன அவ்வளவு கோபமாக பேசிச் சென்று..." அதற்குள் அவள் காளியாகிவிட்டாள்!

"பின்னே என்ன? பட்டிக்காட்டுப்பெண், நாகரீகமே தெரியாது, நாலுபேர் எதிரில் பழகத் தெரியாது, அவளைப்போய் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது என்று லெட்டர் எழுதினீர்களாமே"

"யாரு...நானு...?"

"சாட்சாத் நீங்களேதான்"

"நான் அப்படி யாருக்கும் கடிதம் எழுதவில்லையே"

"ஏன் பொய் சொல்கிறீர்கள்? போன மாதம் எங்கப்பா உங்களைப் பார்த்து கல்யாண விஷயமாக எல்லாம் பேசிவிட்டு, பெண்ணைப்பார்க்க, உங்களை அழைத்துப் போக உங்கள் இல்லம் தேடி வந்தால், நீங்கள் அவருடன்கூடப் பேசாமல் கடிதம் எழுதி யனுப்பி விட்டீர்களே! ஒரு பெண்ணைப் பார்ப்பதற்கு முன்பே உங்களுக்கு அவ்வளவு கர்வமா?"

"ஐயோ நீங்கள் யாரைச் சொல்கிறீர்கள்? ஏன் இப்படி 'பட பட' வென்று"

"சும்மா இருங்கள் மிஸ்டர் சுந்தர்! எல்லாம் எனக்குத் தெரியும். அப்பாவே என்னிடம் அந்த லெட்டரைக் காண்பித்தார். நான்தான் நீங்கள் பார்க்காத பட்டிக்காட்டுப் பெண். மாயவரத்தில் தான் பத்தாவது வரைக்கும் படித்தேன். பிறகு மைலாப்பூரில் என் சித்தப்பாவுடன் இருக்கிறேன் உங்கள் கடிதம் கண்டதும் எனக்கு ஆத்திரம் பீரிட்டுக்கொண்டு வந்தது. ஆண்களே மகா கர்வக்காரர்கள்! தாங்கள்தான் உலகத்திலேயே அழகானவர்கள், பெண்களை இஷ்டப்படி ஆட்டலாம் என்கிற சர்வாதிகார மனப்பான்மை கொண்டவர்கள். உங்கள் கொட்டத்தை அடக்கத்தான் நான் அப்பாவிடம் அட்ரஸ் கேட்டுக்கொண்டு வீட்டிற்கு வந்தேன். வீடு பூட்டி இருந்தது! நீங்கள் வேலைசெய்யுமிடமும் எனக்குத் தெரிய வந்தது! எனவே போன வாரம் நான் இங்கு வந்து அது நீங்கள்தானு என்பதை அறிந்துகொண்டு போனேன். நான்தான் மிஸ்டர் அந்தப் பட்டிக்காட்டுப் பெண்! இனிமேலாவது பட்டிக்காட்டுப் பெண்கள் என்ருல் இளப்பமாக நினைக்காதீர்கள்; அவ்வளவு துச்சமாக மதிக்காதீர்கள்! என் வேலை முடிந்தது! நான் வருகிறேன்."

சரேலென்று அவள் கதவைத் திறந்து அவள் போகலானுள். அதற்குள் சுந்தர்,

"மிஸ் சுந்தரி, ஒரே ஒரு விஷயம், கொஞ்சம் நில்லுங்கள்."

"நான் எதையும் கேட்கத் தயாராக இல்லை." அவள் போய்க்கொண்டே பதில் சொன்னுள். அதைக் கேட்ட சுந்தர், கௌண்டரை விட்டு வெளியே ஓடிவந்து, "உங்கள் ஐந்து ரூபாயை மறந்து வைத்துவிட்டீர்களே! சில்லறை வேண்டாமா?" என்று கேட்டதும் அவள் 'டக்'கென்று நின்ருள்.

"கொடுங்கள் அதை!"

"வாருங்கள் அங்கே! பணம் அங்கிருக்கிறது?"

உடனே இருவரும் திரும்பினர்கள்.

"நீங்கள் ஒரு தப்புக் காரியம் செய்துவிட்டீர்கள் மிஸ் சுந்தரி!" என்ருன் அவன் சில்லறையை எண்ணி அவளிடம் கொடுத்துக்கொண்டே,

"என்ன?"

"நான், நீங்கள் சொன்ன சுந்தர் இல்லை!"

"நீங்கள் சுந்தர் இல்லையா? பின்னே...?"

"என் முழுப்பெயர் கல்யாணசுந்தரம்? என்னுடன் இன்னெருரு நண்பனும் இங்கு வேலை செய்கிருன். அவன் பெயர்தான் சுந்தர்!"

"சும்மா ஏமாற்றுகிறீர்கள் மிஸ்டர். சில்லறை கொடுங்கள் சீக்கிரம்."

"நம்பினுல் நம்புங்கள்! நம்பாவிட்டால் போங்களேன்! என் செல்லப் பெயர், சுருக்கப் பெயர் தான் சுந்தர். நீங்கள் சொன்ன சுந்தரை எனக்கு நன்ருகத் தெரியும். அவன் தான் ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணை ஏன் மணக்க மறுத்தான் என்றும் எனக்குத் தெரியும். அவனுக்கு முன்பே இன்னெருவிடத்தில் கா...த...ல் வியாதி பிடித்துவிட்டது. அதனுல் அப்படி, உங்களைப் பார்க்காமலேயே உதறித்தள்ளினுன். நீங்கள் சொன்ன சுந்தரம் ஒரு மாதமாக ஊரில் இல்லை. அவன் தன் கல்யாணத்திற்காக ஊருக்குப் போயிருக்கிருன். புரிந்ததா?" என்ருன் அவள் கையில் சில்லறையை வைத்துவிட்டு.

"ஐயைய்யோ! அப்படியானுல் நீங்கள் வேறு மனிதரா? சே, சே! என்ன காரியம் செய்தேன். தயவு செய்து மன்னித்துவிடுங்கள் என்னை. நீங்கள்."

"மிஸஸ் சுந்தரம் ஆக்கிக்கொள்வதாக நிச்சயித்துவிட்டேன்! ஆக்ஷேபனை இல்லையே?"

அவளுடைய முகம் 'குப்'பென்று நாணத்தினுல் சிவந்தது! மெல்லிய சிரிப்பு அவள் இதழூடே ஓடியது! ★

# விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

## மின்சாரப் பெருவழி

மோட்டார்ப் போக்குவரத்து பெருகி வரும் இந்நாளில் விபத்துக்களும் பெருகி வருகின்றன. நம் நாட்டிலேயே நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கும் போது உலகிலேயே மோட்டார்கள் அதிகமான அமெரிக்காவில் கேட்கவா வேண்டும்? அந்நாட்டுப் பெருவழிகளில் வாயுவேகத்தில் மோட்டார் வண்டிகள் விரைகின்றன. ஓட்டுபவரது கவனக் குறைவாலும், அலட்சியத்தாலும் பல விபத்துக்கள் நேருகின்றன. இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு மிகப் பெரிய மோட்டார்க் கம்பெனியான ஜெனரல் மோட்டார்ஸ் ஸ்தாபனத்தார் மின்சாரப் பெருவழியொன்றை அமைத்துச் சோதனைகள் நடத்தியிருக்கிறார்கள். இதில் தரைக்கடியில் உள்ள கம்பியின் வழியே மின்சாரம் பாயும். அம்மின்னோட்டத்தினால் ஏற்படும் காந்தப்புலத்தில் மோட்டார் ஓடுகிறது. மோட்டாரிலுள்ள தானியங்கிக் கருவிகள் இக்காந்தப்புலத்திலிருந்து சற்றும் பிறழாமல் மோட்டாரை ஓட்டிச் செல்லும். மோட்டார் ஓட்டி அதை வேறு வகையில் திருப்பி விபத்துக்குக் காரணமாக்க முடியாது. வருங்காலத்தில் உலகப் பெருவழிகள் எவ்வாறு இருக்கும் என்பதை இச் சோதனைகள் ஒருவாறு காட்டுகின்றன எனலாம்.

## ஒளிகடத்தும் இழைகள்

உலோக இழையின் வழியே மின்சாரம் பாய்கிறது. அதன் ஒருமுனையிலிருந்து மறுமுனைக்கு அது மின்சாரத்தைக் கடத்துகிறது. அதைப் போலவே கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் இழைகள் ஒளியைக் கடத்துமாறு செய்ய ஒரு முறையை வகுத்திருக்கிறார்கள். இழையின் ஒரு முனையில் ஒளிபடுமாறு செய்தால் அது அதன் மறு முனையை அடைந்து விடும். இழையை எவ்வளவு முறை வளைத்து வைத்தாலும் அந்த வளைவுகளின் வழியே ஒளி செல்கிறது. இத்தகைய பல வேலைகளுக்கு இது இன்றியமையாததாக இருக்கும். இத்தகைய இழைகளால் ஆன மெல்லிய நூல்கள் இரண்டைக் கொண்டு அக உறுப்புக்களைப் போட்டோப் படம் பிடிக்கலாம். குடலின் படத்தையோ, இரைப்பையின் படத்தையோ பெறுவதற்கு இரு நூல்களையும் உள்ளே செலுத்துகிறார்கள். ஒன்றன் வழியே ஒளியை உள்ளே செலுத்துவார்கள். மற்றொன்றன் வாயிலாக உறுப்பின் படிவத்தைப் போட்டோ பிடிக்கலாம். எக்ஸ் கதிர்களின் உதவியால் படம் பிடிப்பதைவிட இம்முறை எளியதும், மலிவானதும் ஆகும். வேறொருவகையிலும் இது பயன்படக்கூடும். நூலின் இழைகளைச் சீராக அமைக்காமல் குறிப்பிட்டதொரு வகையில் சீரற்று அமைத்து ஒரு பொருளையோ, படத்தையோ, கடிதத்தையோ போட்டோப் படம் பிடித்து விட்டால் அது தாறுமாறாக இருப்பதாகத் தெரியும். அதிலிருந்து எதையும் தெரிந்து கொள்ள முடியாது. படம் பிடிக்கப் பயன்பட்ட நூலில் உள்ளது போன்ற இழைகள் கொண்ட வேறொரு நூலின் வழியே இதைச் சோதித்துப் பார்த்தால் போட்டோப் படம் சரியாகத் தெரியும். ரகசியக் கடிதங்களையும், தேச படங்களையும் பிறருக்குத் தெரியாமல் அனுப்புவதற்கு இம்முறை ஏற்றது.

## குளிர் சிகிச்சை

குளிர் நாடுகளில் வாழும் விலங்குகள் குளிரைச் சமாளிப்பதற்குச் சிறந்ததொரு முறையை இயற்கை யன்னை வகுத்திருக்கிறாள். குளிர் கடுமையாய்விட்டால் அவை ஒதுப்புறமானதொரு இடத்தில் படுத்துக் கொண்டு ஒரேயடியாய்த் தூங்கிப் போய் விடும். அச்சமயம் அதன் உடல் ஏறக்குறையப் பனிக்கட்டியின் உருகுநிலையை அடைந்து விடும். அப்போது அதன் உடல் இயக்கம் மிகவும் மட்டுப்படும். இதய ஓட்டம்கூட மிக மெதுவாய் நிகழும். இதைக் 'குளிர் கால ஒடுக்கம்' என்பார்கள். இந்தத் தத்துவத்தை மருத்துவர்கள் கையாண்டு புதியதொரு சிகிச்சை முறையை வகுத்திருக்கிறார்கள். சாதாரண வெப்ப நிலையைவிடச் சுமார் 15 டிகிரி குறைவாக உடலை வைத்துச் சிக்கலான ரண சிகிச்சைகளையும் செய்ய முடிகிறது. நோயாளிக்கு முதலில் மயக்க மருந்து கொடுத்துப் பிறகு உடலைப் பனிக்கட்டி கலந்த நீரில் வைத்து உடலைக் குளிர்விப்பார்கள். இப்போது உடலின் இயக்க வேகம் குறைந்துவிடும். இதயம் போன்ற சிக்கலான உறுப்புகளைத் திறந்து ரண

சிகிச்சை செய்ய இங்கிலை மிக ஏற்றது. இதயத்தின் இயக்கத்தையே சுமார் 15 நிமிடம் நிறுத்திவைத்து, அதைக் காலி செய்து அதைச் சீர்ப்படுத்துவதிலும் இப்போது மருத்துவர்கள் கைதேர்ந்து விட்டார்கள். இம்முறையில் வேறு பயன்களும் உள்ளன. படுகாயமடைந்தவர்கள் நரம்பு அதிர்ச்சியால் மடிவது மிகப் பொதுவானதாகும். இத்தகைய அதிர்ச்சி ஏற்படாமல் தடை செய்வதற்கு உடலைக் குளிர்வித்து வைத்தல் மிகவும் பயனுள்ள முறை. மார்பகப் புற்று நோய் கண்ட மாதரை இவ்வாறு குளிர்விப்பதால் பிறகு சில வாரம் வரையிலாவது அவர்களுக்கு வலி தெரிவதில்லை. பிரசவம் கடினமாய்விட்டால் வயிற்றைக் கிழித்துச் சிசுவை வெளியில் எடுக்க நேருகிறது. அப்போதும் இம்முறை கருவி மருத்துவத்தை எளிதாக்குகிறது. புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் உயிருக்கு மன்ருடும் போதும் அவற்றை உயிர் பிழைக்க வைப்பதற்குக் குளிர் சிகிச்சை சிறந்த சாதனம்.

### அணு மின்சார எஞ்சின்

அணுசக்தியை நேரே மின்சாரமாக மாற்றும் சாதனம் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் அமைத்திருக்கிருர்கள். இதற்கு அடிப்படையான தத்துவம் என்னவோ பழையது தான் ஆனுல் இதைப் பயன் படுத்தும் முறை தான் புதிது. இரு உலோகத் தகடுகளை வைத்து ஒரு தகட்டைச் சூடேற்றினுல் அதிலிருந்து மின்னணுக்கள் வெளியேறி மற்றத் தகட்டை அடையும். இம்முறையில் ஒரு மின்னேட்டத்தை ஏற்படுத்தி மின் சக்தியைப் பெறலாம். இம்முறையில் அணு சக்தியில் சுமார் 12 சதவிகிதத்தை மின்சாரமாகப் பெறலாம். இந்தச் சாதனத்தில், இயங்கும் உறுப்புக்கள் எவையும் இல்லாததால் இது நெடுநாள் எவ்விதத் தொல்லையும் இன்றி வேலை செய்யும். சாதாரண மின்னுக்கியை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குக் கனமான எந்திரங்கள் தேவையாகின்றன். ஆனுல் இச்சாதனத்தையோ மிகச் சிறியதாக அமைக்கலாம். மற்ற முறைகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதை விட இது திறமையானதும் ஆகும். இக்காரணங்களால் இம்முறை தனிப்பட்ட பயன்களுக்கு மிக ஏற்றதாக இருக்கும் என்று நம்புகிருர்கள்.

### எந்திரத் தபாலாபீஸ்

சென்னையில் மே மாதம் 12-ம் தேதி என் நண்பர் அனுப்பிய திருமண அழைப்

நீண்ட அடர்ந்த கூந்தலுக்கு

**ராம்தீர்த் பிராம்மி எண்ணெயை உபயோகியுங்கள்**

ஸ்பெஷல் நெ. 1 (ரிஜிஸ்டர்ட்) ஆயுர்வேத முறை

கேசத்திற்கும், புத்திக்கும் சிறந்த நிகரற்ற டானிக்

மயிர் விழுதலை தடுப்பதற்கும்
புஷ்டியுள்ள கேசம் வளரவும்
இயல்பான கருமை
பெறுவதற்கும் உதவுகிறது

பொடுகு, ஞாபக சக்தி,
நல்ல தூக்கம் யாவற்றுக்கும்
எல்லா பருவத்திலும்
எல்லோருக்கும் பயன்படும்

பெரிய பாட்டில் ரூ. 4—0—0 சிறிய பாட்டில் ரூ. 2—0—0

தபால் செலவு தனி. வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.

ஆரோக்கியமாகவும், திடமாகவும் வாழ்வதற்கு யோகாஸனங்களை விவரித்திருக்கும் எங்கள் ஆஸன படத்தை வாங்கிப்பாருங்கள். ரூ. 2—50 அனுப்பினுல் தபால் செலவின்றி அனுப்பப்படும். இந்த ஆஸனப் பயிற்சியை வீட்டிலேயே சுலபமாகச் செய்யலாம்.

**ஸ்ரீ ராம்தீர்த் யோகாச்ரமம்**

தாதர் (மத்திய ரயில்வே) பம்பாய்-14

போன்: 62899 தந்தி: "பிராணுயாமம்" தாதர், பம்பாய்

பிதழ் எனக்கு ஜூன் 6-ம் தேதி கிடைத்தது! திருமணம் முடிந்து பல நாட்களான பின் அழைப்பிதழ் வரப்பெற்றேன். இத்தகைய தாமதங்களும், தவறுகளும் தபால் இலாகாவில் நிகழுகின்றன. இவற்றைத் தவிர்த்துத் தபால் அனுப்புவதைத் துரிதப்படுத்துவதற்காக எந்திரத் தபாலாபீஸை அமைக்கும் காலம் வெகு விரைவில் வந்து விடும் என்று நினைக்கிறேன். இத்தகைய தபாலாபீஸ் ஒன்று இப்போதே வெற்றிகரமாக வேலைசெய்து வருகிறது. அங்கே விற்கும் தபால் தலைகளை விசேஷ வகை மசியால் அச்சிட்டிருக்கிருர்கள். கடிதங்கள் தபால் பெட்டியில் சேரச்சேர அவை ஒரு நீண்ட 'பெல்ட்'டின் மேல் விழுந்து அத்துடன் நகர்ந்து ஓர் எந்திரத்தை அடையும். எடைக்குத் தகுந்த தலைகள் இருக்கின்றனவா என்பதை அது ஆராய்ந்து கடிதங்களை வேருேர் எந்திரத்துக்கு அனுப்பும். கடிதத்தின் மேலுள்ள விலாசத்தை ஒருவர் விசேஷ மசியில் 'டைப்' செய்வார். இவ்வாறு விசேஷமாக முகவரி 'டைப்' ஆன கடிதங்கள் மற்ருெரு சிக்கலான 'எலக்ட்ரான்' எந்திரத்தை அடைந்து அங்கே முகவரிக்குத் தகுந்தாற்போல் பிரிந்து போகும். இவ்வாறு பிரிந்த கடிதங்களை ஒவ்வொரு தபால் காரரும் எடுத்துக்கொண்டு பட்டுவாடாவுக்குச் செல்லலாம். இந்த அளவுக்குகூட மனித உதவியின்றி இம்முறையைத் திருத்தி அமைக்க முடியும் என்று கூறுகிருர்கள்.

## வடக்கே வந்த பாரதம்

பாரத உபகண்டம் ஒரு காலத்தில் பூமத்திய ரேகைக்குத் தெற்கே இருந்ததாம். சுமார் 15 கோடி ஆண்டுகளுக்கு முன் இந்நிலப்பரப்பு புவியின் தென் பகுதியில் இருந்தது அப்போது அது வடக்கே நகரத் தொடங்கியது. இப் பெயர்ச்சி 10 கோடி ஆண்டுகள் நடந்தது. அதன்பின் அது இப்போதைய நிலைக்கு வந்துவிட்டது. ஓர் ஆங்கில விஞ்ஞானியும், இரு இந்திய விஞ்ஞானிகளும் பாறைகளைக் கொண்டு நடத்திய ஆராய்ச்சிகளின் விளைவாய் இந்த முடிவுக்கு வந்திருக்கிருர்கள். இந்தியாவின் மேலைக் கடற்கரையும், ஆப்பிரிக்காவின் கீழ் கடற்கரையும் ஒரு காலத்தில் ஒரே நிலப்பரப்பாக இணைந்திருந்தன என்பதும், அவை பின்னர் வேருகப் பிரிந்து போயின என்றும் புவி நூலில் நெடுநாட்களாக வழங்கிவரும் கருத்து. அதைத் தவிர இன்னும் பழங் காலத்தில், புவியில் மனிதன் தோன்றுவதற்குப் பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் பாரத கண்டமே தெற்கே இருந்தது என்பது புதுக் கருத்து.

## அறிவு வளர்ச்சியும், சமூகமும்

அமெரிக்கச் சமூக நூலறிஞர்கள் செய்த சோதனைகளின் விளைவாய் ரசமான சில உண்மைகள் தெளிவாயிருக்கின்றன. சமூக அமைப்புக்கும், அச்சமூகத்தில் பிறக்கும் குழந்தைகளின் அறிவு வயதுக்கேற்ப வளர்ச்சியடைவதற்கும் மிக முக்கியமான தொடர்பு இருக்கிறது என்று அவர்கள் அறிவுறுத்துகிருர்கள். இரு காரணங்களால் குழந்தையின் அறிவு வளர்ச்சி தடைப்படலாம். முதற் காரணம் உடலையொட்டியது. கருவில் இருக்கும்போது சிசுவுக்கு நேரும் அதிர்ச்சி முதலிய தீங்குகளாலும், பிரசவத்தின்போது காயம் முதலிய விபத்துக்களாலும், இளமையில் தோன்றும் நோய்களாலும குழந்தையின் மூளையில் நிலையான பழுது ஏற்பட்டு அதன் அறிவு வளர வாய்ப்பு இல்லாது போகலாம். இதற்கெல்லாம் கூடச் சமூக அமைப்பு ஓரளவு மறைமுகமாகக் காரணமாகிறது. வேருெரு வகையிலும் அறிவு வளர்ச்சி தடைப்படலாம். புத்தி கூர்மை பற்றிய இக்காலச் சோதனைகளால் பலதிறப்பட்ட சிறுவர் சிறுமியரை ஆராய்ந்ததில், அறிவு வளர்ச்சி தடைப்பட்டவர்கள் பெரும்பாலும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாகவோ, கல்வி வசதி இல்லாத பிரதேச மக்களாகவோ இருந்தது கண்டார்கள். வசதிக் குறைவுகளும், சமூக அமைப்பிலுள்ள குறைபாடுகளும் சேர்ந்து இவர்கள் அனைவரையும் இளமையில் அறிவுச் செல்வத்தைப் பெருமற் செய்து, பிற்காலத்தில் முழு முதிர்ச்சி பெற்ற மக்களாக வாழவொட்டாமற் செய்து விட்டன. இதற்குச் சமூகம் நேரடியான பொறுப்பை ஏற்ருக வேண்டும். செல்வம் கொழிக்கும் அமெரிக்க நாட்டில் கூடச் சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளும், இன வேற்றுமைகளும் இருக்கின்றன. அவற்றின் விளைவாகவோ, இளமையில் உடலில் தோன்றிய கோளாறுகளாலோ நூறு பேரில் மூவருக்கு 12 வயதுக்கும் அதிக மானவனின் அறிவு எக்காலத்திலும் ஏற்படாது என்று அந்த அறிஞர்கள் கணக்கிட்டிருக்கிருர்கள். இவ்வாறு அறிவு வளர்ச்சி தடைப்பட்ட நபர்களே சமூகத்துக்குப் பிற்காலத்தில் குற்றம், கொலை முதலியன புரிந்து தொல்லை விளைவிக்கிருர்கள். சமூகம் அவர்களுக்குச் செய்த துரோகத்துக்கு அவர்கள் பிற்காலத்தில் இவ்வாறு சமூகத்தைப் பழிவாங்குகிருர்கள் போலும். அமெரிக்காவின் நிலைமை இதுவானல் நம் நாட்டில் அறிவு வளர்ச்சி தடையானவர்களின் விகிதத்தைப்பற்றிக் கூறவே வேண்டியதில்லை. O

பெண்ணுக்குப் பொருள் கவர்ச்சியென்றால் அங்கே மென்மைக்கும் மணத்திற்கும் இடமிருக்க வேண்டுமென்று யாராவது வற்புறுத்திக் கூறமுடியுமா? மென்மையும் நறுமணமும் உள்ள இடத்தில் வெளிப்பகட்டு மிகக் குறைவாயிருப்பதால் அது கவர்ச்சிகரமாக இல்லாமலிருப்பதும் சகஜந்தானே!

அவள் பெயர் என்னவென்று யாருக்கும் தெரியாது. ஆனால் அவள் யார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஊருக்குப் புதிதாக வரும் வாலிபர்களெல்லாம் அவளைப் பார்க்காமல் தப்பிச்

# காகிதப் பூ

— பரதேசி —



சென்றுவிட முடியாது. ஊருக்குப் பொது வாய் ஆனால் ஊர்ப்பொதுமக்களால் ஒதுக்கி விடப்பட்டுள்ள பார்க்கில் அவள் ஒய்யாரமாகப் பவனி வருவாள். பெண்களுக்கு என்று கொட்டையெழுத்தில் குறிப்பிட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் "பெஞ்சு" ஒன்றை அலங்கரிப்பாள். கையில் பிஸ்கத், சாக்லெட், பட்டாணி, மிட்டாய் வகையரு நிறைய வைத்திருப்பாள். வியாபாரத்துக்காக அல்ல – பார்க்கினுள் தப்பித்தவறி வரும் குழந்தைகளைக் கவர்ந்து தன்னருகில் வைத்துக்கொண்டு விளையாடுவாள். சில குழந்தைகளிடம் அதிகம் செல்லம் கொஞ்சுவாள் – இன்னும் சில குழந்தைகளிடம் உரிமை பாராட்டி நாளைமறுதினம் வரும்போது எப்படி உடுத்தவேண்டும், எப்படித் தலைவாரிப் பின்னிக் கொள்ளவேண்டும் என்பது பற்றியெல்லாம் சொல்லுவாள். அவள் பெற்றோர்களைத் தன்பக்கம் திருப்ப அவர்கள் குழந்தைகளைக் கைக்குள் போட்டுக் கொள்வதாகச் சொல்லுகிறவர்களுமுண்டு.

திரைப்படங்களில் வர்ணிக்கப்படும் குடமெடுக்கும் மங்கையாக அவள் தோழிமார் புடைசூழக் காணப்படுவாள். சமீபத்தில் வெளியான படத்தின் சிங்கார நாயகியின் நடையுடை பாவனைகளை அவள் அப்படியே பிரதி பலிப்பாள். கலகலவென்ற நகையொலியும், கிளுகிளுப்பு மூட்டும் திரை வசனங்களும் எப்பொழுதும் அவளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும். புதுப்படம் வெளிவரும் போதெல்லாம் முதல் வகுப்பில் அவளைப் பார்க்கலாம். அவள் பார்த்து மதிப்புரை வழங்காத படம் ஒன்றுகூட இல்லை. லாண்டரி சலவையைத் தவிர, அவள் தான் தோய்த்த துணியை உடுத்துவதில்லை. சுருங்கச் சொல்வதானால் அவள் நடமாடும் நாகரிகம், பெண்ணினத்தின் மறுமலர்ச்சி, துணிவின் சிகரம், இவ்வளவு வர்ணனைகளையும் 'கடகட' வென்று சிரித்துப் பாராட்டுரைகளாக ஏற்றுக் கொள்ளும் பண்புள்ளவள்.

அவளைவிட வயதில் சின்னப் பெண்கள் மணமாகிக் கணவர்களுடன் வாழ்ந்தார்கள். அவளைவிட வயதில் சின்னவர்கள் அன்னைகளாகத் திகழ்ந்தார்கள். அவளைவிட சின்னப் பெண்கள் அடக்கமாகக்கூட இருந்தார்கள். ஆனால் அவள் மட்டும் ஏனோ அப்படி இருக்கவில்லை. அவளைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசினார்கள்.

அந்தத் தெருவுக்குக் குடிபோன மூன்றும் நாள் அவள் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. அழுது அடம் பிடித்த குழந்தையைத் திண்ணையில் வைத்துக் கொண்டு நான் சாதம் ஊட்டிக் கொண்டிருந்தேன்.

"பாப்பா! சாதம் சாப்பிடுகிறாயா?" என்று குழந்தையைக் கேள்வி கேட்டுச் சுலபமாக என் தொடர்பை அவள் ஏற்படுத்திக்கொண்டுவிட்டாள். நாலாம் நாள், ஐந்தாம் நாளில் குழந்தை அவள் வரும்போது அவளிடம் தாவத்தொடங்கி விட்டது. வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டு குழந்தையையும் அழாமல் பார்த்துக் கொள்ளும் கலையில் எனக்குப் போதிய பயிற்சியில்லாததால் அவள் குழந்தையை எடுத்துச் செல்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. குழந்தைக்கும் அவள் விதவிதச் சிங்காரம் செய்தனுப்பினாள். கொஞ்சநாள் வரை இந்தச் சிங்கார சாதனையெல்லாம் என் கைவேலைப்பாடே என்று நம்பிவந்த அவரை ஏமாற்ற மனமின்றி ஒரு நாள் உண்மையைச் சொன்னேன். "அப்படியா? நம் குழந்தையிடம் இவ்வளவு அன்பு பாராட்டுகிறாளா?" என்று மகிழ்ச்சியடைய வேண்டிய அவர் "இந்த நாடகத்துக்கு முற்றுப்புள்ளி இன்றே வைத்துவிடு. முடிந்த மட்டும் நீ செய்துவிடும் அலங்காரமே போதும், குழந்தையைக் கண்டவர்களிடம் அனுப்பாதே" என்று முகத்திலடித்தாற்போல் சொன்னார். நான் பதில் பேசவில்லை.


2

அவர் சொன்னதற் கேற்றாற்போல் மூன்றும் நாள் "அம்மா! உங்கள் குழந்தையைக் கொஞ்சம் எடுத்துப் போகலாமா?" என்றபடியே அவள் நானிருக்கும் வீட்டினுள்ளே வந்தாள்.

"இங்கே பாரம்மா! நீ யார், என்ன என்பது எனக்குத் தெரியாது. முன்பின் பழக்கமில்லாதவர்களிடம் நான் குழந்தையைக் கொடுத்தால்..." என்று நீட்டினேன்.

"என்னம்மா இப்படிச் சொல்றீங்க!... என்னைத் தெரியாதவங்க யாராவது உண்டா? என் பெயர் கோகிலாம்பா. உங்க குழந்தையை நான் ஒண்ணுஞ் செய்துடமாட்டேன். சும்மா ஆசைக்குத் தாம்மா எடுத்துட்டுப் போறேன். குழந்தை என்றால் எனக்கு ரொம்ப ஆசையம்மா" என்றாள். இதனிடையே குழந்தையே அவளிடம் தாவிற்று. "சரி! அவர் சரியாக ஐந்து மணிக்கு வந்துவிடுவார் – அவர் வருவதற்குள் கொண்டு வந்து விட்டுவிடு" என்று சொல்லிக் குழந்தையை அவளிடம் கொடுத்தேன். நாலே முக்கால் மணிக்கெல்லாம் அவள் திரும்பி வந்தாள். குழந்தையின் தலையை அழகுற வாரிப் புது ரிப்பனும் பூவும் வைத்திருந்தாள், பெற்றெடுத்த எனக்குக்கூட அந்தக் குழந்தையிடம் அவ்வளவு பரிவும் பாசமும் இருக்குமா என்பது சந்தேகம். "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்பார்கள். என்னிடம். இரண்டு நிமிஷம்கூடத் தலையை நேராகக் காட்டாத குழந்தை அவளிடம் அரைமணி நேரம் அலங்காரத்துக்கு உடன்பட்டு அசையாமலிருந்திருக்கிறது. எனக்கு அது ஆச்சரியமாகத்தானிருந்தது. எல்லோரும் நினைப்பது போல் நான் கோகிலாவை மட்டரகமாக நினைக்கவில்லை. உண்மையில் அவள் பரந்த மனப்பான்மை யுள்ளவள். அவள் இதயத்தில் குழந்தைகளைப் பற்றி ஊறிவரும் தாயன்பு புனிதமானது என்றெல்லாம் எனக்குத்

தோன்றிற்று. "ஆமாம் இவ்வளவு அன்பு செலுத்தும் பெண் இன்னும் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?" என்ற கேள்வி சகஜமாக எழுந்தது. அவளிடம் அதே கேள்வியை வெளிப்படையாகக் கேட்டுவிட்டால் தானென்ன என்றும் தோன்றிற்று.



"உம்......கோகிலா! உன்னை ஒரு கேள்வி கேட்கலாமா? என்றேன்.

சிரித்தபடியே—"தாராளமாகக்கேளுங்களம்மா"! என்றாள்.

"ஆமாம்! நீ ஏன் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?" இந்தக் கேள்வியை விவாக வயதான ஒரு பெண்ணிடம் கேட்கக் கூடாதுதான். என்றாலும் கேட்டுவிட்டேன். வெடியின் திரியில் நெருப்பு வைத்தபின்பு அது வெடிக்குமா வெறும் சீறலோடு புஸ்வாணமாகப் போய்விடுமா? என்ற பயங்கலந்த குதூகலத்தோடு நோக்குவதுபோல் நோக்கினேன்.

அவள் கடகடவென்று சிரித்தாள். வழக்கமாகச் சிரிக்கும் அதே வெகுளிச் சிரிப்புத்தான். அது வேதனையின் வெடிப்போ, வியப்பின் சுழிப்போ புரியவில்லை.

"எனக்கு இன்னும் கல்யாணமாகவில்லைன்னு நினைக்கிறீர்களா?"

"அப்படியானால் உனக்கொரு கணவன் இருக்கிறானா? எங்கே அவன்?"—நான்தான் கேட்டேன்.

"எனக்குக் கணவன் மட்டுமில்லை — ஒரு குழந்தைகூட இருக்கிறதம்மா!—" சொல்லும் அவள் கண்கள் குளமாகிவிட்டன.

"எனக்கும் ஆகவேண்டிய காலத்தில் கல்யாணம் ஆச்சு அம்மா!... கண்ணுக்கு நிறைஞ்ச கணவரும் வாய்த்தார்... கட்டித்தங்கம்போலே குழந்தையையும் பெற்றெடுத்தேனம்மா!...... ஆனால்...

—மேலே சொல்லமுடியாமல் அவள் விம்மினாள். இந்த நிலையில் வாசலில் சைக்கிள் மணியோசை கேட்டது. அவர் வந்துவிட்டார். "சரி கோகிலா! அவர் வந்துவிட்டார்! நீ போய் வா!" என்றேன். அவள் வெளியே செல்லு முன்பே உள்ளே வந்துவிட்ட அவர் "நான் என்ன சொன்னேன்?... நீ என்ன செய்திருக்கிறாய்?" என்று கொதித்தெழுந்தார். நான் வாய்திறந்து ஏதும் பதில் பேசாமல் காபியைக் கலந்து எதிரில் கொண்டுவைத்தேன். குழந்தை குசுமாவின் அலங்காரத்தோற்றம் அதற்குள் அவர் மனதைச் சமாதானப்படுத்திவிட்டது. கொண்டு வந்திருந்த மிட்டாய்ப் பொட்டணத்தை அதன் கையில் கொடுத்துத் தன் மடியில் வைத்துக் கொஞ்சிக்கொண்டிருந்தார். சமயம் பார்த்துக் காபியை எதிரில்கொண்டு வைத்தேன்.

"சரி! 'ஆமாம் என்றவனே அதிர்ஷ்டக்காரன்' படம் இன்றோடு கடைசியாம், சீக்கிரம் புறப்படு" என்றார்.

3


சினிமா தியேட்டரை நோக்கி நாங்கள் முன்னே சென்றுகொண்டிருந்தோம். சிறிது தூரம் பின்னால் எங்களைத் தொடர்ந்தே கோகிலாவும் இன்னும் சிலரும் வந்துகொண்டிருந்தார்கள். பின் திரும்பிப் பாராமலே பலத்த கோகிலாவின் சிரிப்பு. பேச்சுமூலம் இதை நான் உணர்ந்தேன்.

"ஆமாம்! அந்தப் பெண்ணிடம் மறுபடியும் குழந்தையை ஏன் கொடுத்தாய்?"

"நான் என்ன செய்வது!" நீங்கள் நிர்தாட்சண்யமாக எதையும் சொல்லிவிடுகிறீர்கள். என்னால் அப்படிச் சொல்லமுடியவில்லை. குழந்தையைத் தூக்கவும் கொஞ்சவும் பெண்கள் எல்லோருக்கும் ஆசையிருப்பது சகஜந்தானே!"

"இருந்தாலும் அந்தப் பெண்ணைப்பற்றி யாரும் நல்ல அபிப்பிராயம் வைத்திருப்பதாகத் தெரியவில்லையே! வீணாக நாமேன் அவளிடம் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும்?" என்றார் அவர்.


"ஊரார் ஆயிரம் சொல்வார்கள்! உண்மை வேறொன்றாக இருக்கும். எதையும் நாம் தீர விசாரிக்காமல் ஒப்புக்கொள்ளலாமா?"



"விசாரணை செய்து பார்க்க நாம் என்ன நீதிபதியா? நமக்கெதற்கு இந்த விசாரணையும் வீண் விவாதமும்" என்று என் வாயை மூடி விட்டார். தியேட்டரும் நெருங்கி விட்டது. என்னை வெளியில் சிறிது தூரததில் நிறுத்தி விட்டு அவர் க்யூவில் நின்று முதல் வகுப்பு டிக்கெட் வாங்கப் போனார். இந்த சமயத்தில் "நீங்களும் இந்தப் படத்திற்கு வரீங்களா?" என்று கேட்டபடியே கோகிலா என்னை நெருங்கினாள். அவளருகில் தென்பட்ட சிறுவன் டிக்கெட் வாங்கச் சென்றான். 'ஆமாம்! ஆனால்... அவரும் வந்திருக்கிறார்...... அப்புறம் பேசுவோமே!' என்றேன்.

"அதென்னம்மா அப்படிச் சொல்றீங்க!" என் ஆம்பிளைகூடத்தான் வராரு... என் குழந்தையையும் இப்போ பார்க்கலாம் அம்மா?" என்றாள். அவள் சொல்வதெல்லாம் வெறும் புதிராகவே இருந்தது. விளக்கம் கோரித் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் இடம் கொடுக்கவில்லை. சிறிது நேரத்தில் அவர் டிக்கெட்டுடன் வரவே நான் தலையை மட்டும் அசைத்து விடைபெற்றுக்கொண்டேன்.

படம் "இன்றோடு கடைசி" என்னும் கட்டத்திற்கு வந்திருந்தது. மேலும் நாங்கள் சென்றது முதல் வகுப்பு. எனவே கூட்டமில்லை. பின்புறத்தில் ஒரு மூலையில் மின்சார விசிறியின் கீழ் நாங்களமர்ந்தோம். கோகிலாவும் சிரித்த முகத்துடன் சிறிது நேரத்தில் நாங்களிருக்கும் பக்கம் வந்து எனக்கருகிலேயே அமர்ந்தாள். அவளை அழைத்துவந்த சிறுவன் திரும்பிச் சென்று ஒரு குழந்தையைக் கொண்டுவந்து அவள் மடிமீது வைத்தான். "இவன்தானம்மா என் கலி தீர்க்க வந்தவன்!" என்று குழந்தையைச் சுட்டிக்காட்டினாள். பின்பு அந்தக் குழந்தையை வாரியணைத்து மாறி மாறி முத்தமிட்டாள். இதையெல்லாம் என் கணவர் வியப்புடன் கவனித்து வந்தார். அவர் கையிலிருந்த குழந்தை "பாப்பா! பாப்பா பார்த்தியா!" என்று அவள் பக்கம் தாவி வந்தது. இந்த நிலையில் கோகிலாவின் கணவர் என்கிற அந்த



மனிதர் – நெடிய உருவம் உள்ளே வந்து கோகிலாவை அடுத்தாற்போல் இரண்டு சீட் தள்ளி அமர்ந்தார். கோகிலா அர்த்தபுஷ்டியுள்ள பார்வையொன்றை என் பக்கம் வீசினாள். படமும் ஆரம்பமாகிவிட்டது. ஆனால் அவர்கள் படம் பார்க்க அங்கே வந்ததாகத் தெரியவில்லை. தூரத்தில் திரைப்படம் என் கண்ணில் தென்பட்டது. அருகில் அவர்கள் சம்பாஷணை என் செவியில் விழுந்தது.

"இப்படி இன்னும் எத்தனை நாள் திருட்டுத்தனமாய்ச் சந்திக்க வருவேன் நான். இப்படியே தொடர்ந்து வாழ என்னால் முடியாது. நீ அக்காவையும் அழைச்சிக்கிட்டு என் வீட்டுக்கே வந்து விடு! இல்லையானால் நானாவது அங்கே வந்து வாழறேன்" என்றாள் கோகிலா.

"அதெல்லாம் கொஞ்ச நாள் போகட்டும். கோர்ட்டுக்குப்போய் விலகியிருக்க முடிவுசெய்த புத்தி அவ்வளவு சீக்கிரம் திருந்திவிடுமா!"

"அத்தான்! நான்தான் தப்பு செய்து விட்டேங்கறேனே! கோர்ட்டுக்குப் போய் நானடைஞ்சது என்ன? என் குழந்தையையும் சேர்த்து உன்னைப் பறிகொடுத்தேன். ஊரும் உலகமும் என் மேலே காறித்துப்புது. இருந்தாலும் எனக்கொண்ணும் சாக மனசில்லே. ஒரு நாளில்லாட்டா ஒரு நாள் உன் மனம் மாறுதா என்றுதான் இருக்கேன்!"

பின்பு அவர்கள் பேசிக் கொண்டது தெளிவாக என் செவியில் விழவில்லை. பாவம்! அவள் மணமானவள் தான். ஆனால் கணவனோடு சேர்ந்து வாழாததால் அவளுக்குச் சமூகத்தில் உரிய நல்ல அந்தஸ்தில்லை. வண்ணமலராக இருந்தாலும் வாடாத மலராக இருந்தாலும் காகிதப்பூ கடவுளின் பூஜைக்கு உபயோகப் படுவதில்லையல்லவா? பிறர் கையை எதிர் பாராமல் உயிர் வாழ்ந்தாலும் கைம்மாறு கருதாமல் சமூகத்தொண்டு புரிந்தாலும் கணவனைப் பிரிந்து வாழும் பெண்ணை களங்க நோக்குடன் தான் வெளியுலகம் பார்க்கிறது. கோகிலாவை இடைவேளையில் 'உங்களுக்குள் என்ன தகராறு? நீங்கள் ஏன் பிரிந்து வாழ்கிறீர்கள்? .. உன் வாழ்வில் குறுக்கிட்ட பெண் யார்?" என்றெல்லாம் கேட்கலாமா என்று ஒரு கணம் நினைத்தேன். பின்பு "அப்படியெல்லாம் கேட்க நமக்கு என்ன உரிமையிருக்கிறது? நாமும் இவளைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தவர்கள் தாமே!" என்ற எண்ணமும் எதிர்புறத்திலிருந்து என்னைத் தாக்கிற்று. இடைவேளைப்பொழுதில் வாழைத்தண்டு விளக்கின் பாலொளி எங்கும் பரவிற்று. கலகலவென்று சிரித்தபடியே கோகிலா தன் கணவனுடன், கையில் குழந்தையுடன் "ஐஸ்" கிரீம் சென்டரை நோக்கிச் செல்வதைக் கண்டேன்!

★ ● ★


குழந்தைகளின் வயிற்றுவலிகளை துரிதமாக சமனம் செய்வது



க்ரைப்பானில்
(க்ரைப் மிக்ஸ்சர்)

ஒரு 'டஸ்ஸனல்' காரர்களின் தயாரிப்பு

TA.




லால்குடி - கிருஷ்ணமூர்த்தி

"மிஸ்டர் கார்வண்ணன்! நீர் பெரிய குற்றம் செய்திருப்பதாகத் தெரிகிறது!"

"குற்றமா?"

"ஆமாம், என் கேள்விகளுக்குச் சரியான பதில் தேவை?"

"ஒன்றும் புரியவில்லையே!"

"எல்லாம் புரியவைக்கிறேன்! இதோ பாருங்கள், மிஸ்டர் கார்வண்ணன்! உங்களைவிட வயதில் சிறியவள்தான் நான்! ஆயினும் இந்த அலுவலகத்தின் தலைவி. நீர் என் கீழ் பணிபுரியும் குமாஸ்தா! இதை உணர்ந்துகொண்டு என் கேள்விகளுக்குப் பதில் தரவேண்டும்!"

"அதை நான் மறப்பதே யில்லையே! மேலும் எனக்கு இங்கு வேலை கொடுத்ததே தாங்கள் தானே!"

"ஆமாம்! என்னைத்தான் நன்றாக ஏமாற்றி விட்டு வேலை தேடிக்கொண்டு விட்டீர்கள்!"

"ஏமாற்றினேனா?"

"ஏமாற்றியதோடு மட்டுமல்ல! என்னைப் பெருத்த அவமானத்திற்கு ஆளாக்கி விட்டீர்கள்!"

"நான் அறிந்து தங்களுக்கு ஒன்றும்...!"

"போதும் நிறுத்தும். எங்கள் கம்பெனியின் கட்டு திட்டங்கள், ஒழுக்கம், கௌரவம் எல்லாம் உம் ஒருவரால் குட்டிச்சுவராகி விட்டது!"

"அப்படி நான் என்ன தவறு செய்து விட்டேன்?"

"ஒன்றா, இரண்டா? ஆஹா! எத்தனை அழகான கட்டுக்கதை, அதற்கேற்ற பொய்ச் சான்றுகள்!"

"எதைச் சொல்கிறீர்கள்?"

"எதைச் சொல்கிறேன்! உமக்குத் தெரியுமல்லவா? இங்கே மணமாகாதவர்கள் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப் படமாட்டார்கள் என்று?"

"தெரியும்!"

"உமக்குத் திருமணமாகி மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன என்ற உறுதிமொழியுடன், வேலைக்கான விண்ணப்பத்தை எங்களுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். அது உண்மைதானே?"

"ஆமாம்!"

"திருமணமாகி விட்டது என்பதை ருசுப்பிக்க ஏதாவது சான்றுகள் வேண்டுமென்று கேட்டதற்கு, ஒரு புகைப்படத்தை விண்ணப்பத்துடன் அனுப்பியதும் நீர்தானே?"

"ஆமாம்!...ஆனால்...!"

"என்ன ஆனால்...! யாரோ ஒரு நாடோடிப் பெண்ணுடன் நீர் ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டு, அதன் பிரதியை எங்களுக்கு அனுப்பி அதன் மூலம் உங்களுக்குக் கலியாணமாகிவிட்டது என்பதை நாங்கள் நம்பும்படி செய்து விட்டீர்கள்!"

"...................!"

"ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? பதில் தேவை?"

"உண்மைதான்! ஆனால்! படத்தில் என்னுடன் இருப்பவள்!"

"யார் என்பது என் கேள்வியல்ல! அவள் உம் மனைவியா?"

"நீங்கள் நினைப்பதுபோல் அவள் ஒரு நாடோடியல்ல! என் உயிருக்கு உயிரான!"

"சுற்றி வளைத்துப் பேசுவதும், அப்படிப் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதும் எனக்குப் பிடிக்காத விஷயம்! அவள் உங்கள் உயிருக்கு உயிரானவளாயுமிருக்கலாம். அன்பிற்கு பாத்திரமானவளாயுமிருக்கலாம், உங்கள் நெஞ்சை கொள்ளையடித்தவளாயுமிருக்கலாம். அவளுடன் நீர் புகைப்படம் எடுத்துக் கொண்டது ஏன் என்று கேட்கவில்லை! அதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால்! அவளை உங்கள் மனைவியென்றுகூறி எங்களை ஏமாற்றி உத்தியோகம் பெற்றுக் கொண்டதைத்தான் குற்றமென்று கூறுகிறேன்."

"..................!"

"ஏன் விழிக்கிறீர்? குட்டு வெளிப்பட்டு விட்டதே என்றா?"

"என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு உண்மை வெளியாகாமல் போய்விடாது என்பது எனக்குத் தெரியும் இருந்தாலும் ஒரு குடும்பப் பெண்ணை இப்படி நீங்கள் கேவலமாகப் பேசுவது!"

"அதற்குக் காரணம் நீர்தானே?"

"எப்படி? அவள் என்னுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டாள் என்பதனாலா?"

"திருமணத்திற்கு முன் ஒரு குடும்பப் பெண் ஒரு ஆணுடன் தனியே போட்டோவிற்கு நிற்பது விரும்பத்தக்கதல்ல, அத்துடன் அது நம் நாட்டுப் பண்பிற்கு ஒவ்வாத விஷயம் என்பதுதான் என் கருத்து!"

"அவள் யாரோ அல்ல!"

"தெரியும்! போட்டோவில் உம்முடன் இருப்பவள் உங்கள் சகோதரி என்பது நான் அறியாததல்ல!"

"ஹா...!"

"தங்கையைத் தாரமென்று கூறும் அளவிற்கு உங்கள் படிப்பும், பண்பும் கெட்டு விட்டதற்காக நான் வருந்தவில்லை! இதனால் என் கௌரவம் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது...!"

"இவ்வளவு சீக்கிரம் இதைப்போல் ஏதாவது!"

"ஒரு பெண்! அதிலும் சிறியவள்! எப்படி இந்த விவரங்களெல்லாம் அதற்குள் தெரிந்து கொண்டு விட்டாள் என்று ஆச்சரியப்படுகிறீரா?"

"உங்களுடைய அறிவிலும், ஆற்றலிலும் என்றைக்குமே எனக்கு மதிப்பும், நம்பிக்கையுமுண்டு!"

"என்னைப் புகழ்வதனால் உங்களுக்கு எவ்வித சாதகமும் கிடைத்துவிடாது!"

"என் மனதில் உள்ளதைச் சொன்னேன் நான் மட்டுமல்ல; இந்த அலுவலகமே தங்கள் திறமையைப் புகழ்ந்து கொண்டுதானிருக்கிறது!"

"என்னைப்பற்றிய புகழ்ச்சிகள் போதும். இப்பொழுது உம்மைப் பற்றி விசாரிக்கத்தான் அழைத்திருக்கிறேன். நீர் குற்றத்தை ஒப்புக் கொள்கிறீர்களா?"

"எதைக் குற்றமென்று சொல்கிறீர்கள்?"

"நீர் பிரம்மச்சாரி என்பதை!"

"எனக்கு இன்னும் கல்யாணமாகாமலிருப்பது குற்றமா? அப்படியென்றாலும் அது என் குற்றமல்லவே!"

"இன்னும் ஆயிரம் ஆண்டுகள் வேண்டுமானாலும் நீங்கள் பிரம்மச்சாரியாய் இருங்கள்! அதை யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை. தடுக்கவும் இல்லை! உங்களுக்கு மணமாகாததைப் பற்றி நாங்கள் கவலைப்படவும் இல்லை! ஆனால்! பொய்யான விவரங்களைத் தந்து, தங்கையுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தைக் காட்டி; மனைவியென்று கதைத்து எல்லோரையும் ஏமாற்றி எங்களிடம் வேலை வாங்கிக் கொண்டதைத்தான் குற்றமென்று சொல்கிறேன்."

"குற்றம்தான்! ஒப்புக் கொள்கிறேன், ஆனால்! அப்பொழுது நான் இருந்த நிலைமை!"

"ஆயிரமிருக்கலாம் அதற்கு எங்கள் கம்பெனி தான் பிணையா?"

"அப்படி நான் சொல்லவில்லையே! மூன்று வருடங்களாக, படித்துவிட்டு, வேலைக்காக நான் அலைந்த அலைச்சல், பட்டபாடு, உத்தியோக மென்று ஏதாவது கிடைத்தால் போதுமென் றாக்கிவிட்டது. மேலும் பிழைப்பதற்கு வேறு வழியும் தோன்றவில்லை!"

"அதற்கு இந்தனை பெரிய பொய்யைச் சொல்ல வெட்கமாயிருக்கவில்லை?"

"வெட்கம், மானம், சூடு, சொரணை, எல்லா வற்றையும் வயிற்றுப் பசி தின்றுவிட்டிருந்தது!"

"இப்படி அழகாக அடுக்கு மொழியில் பேசி, தவறை மறைக்கப் பார்க்கிறீர்களா அல்லது செய்தது தவறே அல்ல என்று சாதிக்கிறீர் களா?"

"நான் செய்தது முற்றிலும் தவறு என்பதை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். ஆனால்!... என் வயதான தாய், ஒரு விவாகமாகாத தங்கை, இவர்களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு, அதைவிட எங்களைக் கப்பிக்கொண்டிருந்த வறுமை, ஆகியவைகள்தான் நான் இந்தக் குற் றத்தைச் செய்வதற்குக் காரணமாயிருந்தது என்பதைத்தான் சொல்லவந்தேன்!"

"உங்களிடம் ஓட்டுகளைப்பெற்று மந்திரி களாகத் திகழ்பவர்கள் பவனி வரும்பொழுது சொல்லி அழவேண்டிய விஷயம் இது! ஊரி லுள்ளவர்கள் குறைகளை நீக்கி, அவர்கள் வறுமை யையும் போக்கி, சமதர்ம சமுதாயம் அமைப்ப தற்காக நாங்கள் இந்தக் கம்பெனியைத் துவக்க வில்லை!"

"நான் பட்டினி கிடந்து சாகத் தயாராகத்தான் இருந்தேன். ஆனால், தாயையும், தங்கையையும் காப்பாற்றவேண்டிய பொறுப்பு என்னை முள் ளாகக் குத்திக்கொண்டேயிருந்தது. வேறு வழி யில்லை! செய்துவிட்டேன்."

"வறுமை, பொறுப்பு, பசி, பட்டினி என்று சொல்லி செய்த குற்றத்தின் சுமையை மெது வாக இறக்கிவிடப் பார்க்கிறீர்கள்! ஆனால், அதே சமயத்தில் ஒரு கண்ணியமான ஸ்தாபனத்தின் கொள்கையையும், என்னையும் எவ்வளவு தூரத் திற்கு அவமானப்படுத்திவிட்டீர்கள் என்பதை உணரமாட்டேனென்கிறீர்களே?"

"நன்றாக உணர்கிறேன்! வந்த புதிதில், என் விஷயம் அம்பலமாவதற்குள் எப்படியாவது வேறு வேலை தேடிக்கொண்டு சீக்கிரம் இந்த இடத்தைவிட்டுப் போய்விடலாம் என்றுதான் முயன்றேன்!"

"ஏன் போகவில்லை? வேறு இடத்தில் வேலை கிடைக்கவில்லையா?"

"உங்களிடம் வேலையில் அமர்ந்த அதிர்ஷ்டம். எத்தனையோ இடங்களில் எனக்கு வேலை கிடைக்க வழியிருந்தது. ஆனால்...!"

"ஆனால் என்ன?"

"நீங்கள் என்ன நினைத்துக்கொண்டாலும் சரி! உண்மையைச் சொல்லிவிடுகிறேன்! சில மாதங் கள் இங்கு வேலை செய்தபிறகு, என்னால் இந்த ஸ்தாபனத்தையும் குறிப்பாக உங்கள் நிர்வாகத் தின்கீழ் பணியாற்றுவதனால் உண்டாகும் இன் பத்தையும் புறக்கணிக்க முடியாமல் போய்விட் டது!"

"அப்படியென்றால் ஒரு பெண்ணைப் பார்த்து நாங்கள் அறியாவண்ணம் நிஜக் கல்யாணமே செய்துகொண்டு, ஸ்தாபனச் சட்ட திட்டங் களுக்கு உட்பட்டவராகவும், உத்தியோகத்திற்கு தகுதியுள்ளவராகவும், செய்து கொண்டிருக்க லாமே?"

"அப்படி எவ்வளவோ முயன்று பார்த்து விட் டேன்!"

"பெண் கிடைக்கவில்லையா?"

"என் தாயும் தங்கையும் தினமும் ஒரு பெண் ணைக் காட்டி தாலியைக் கட்டச் சொன்னார்கள்!"

"கல்யாணச் செலவிற்குப் பணம் இல்லையென்ற காரணத்தால் திருமணம் நின்றுவிட்ட தென்கி றீரா?"

"செலவில்லாமல் கல்யாணம் செய்து கொள்ள இந்தக் காலத்தில் எத்தனையோ வசதிகள் இருக் கும்பொழுது பணத்திற்காகத் திருமணம் நின்று விட்டது என்று சொல்லமுடியுமா?"

"வேறு காரணம்?"

"அது என்னவோ, இங்கு வேலைக்கு வந்த பிறகு எந்தப் பெண்ணைக் கண்டாலும் எனக்குப் பிடிக்காமல் போய்விட்டது!"

"வேலையில்தான் கெட்டிக்காரர் என்று பார்த் தேன். பேச்சிலும்!"

"ஏன் சிரிக்கிறீர்கள்? நான் பொய் சொல்கிறே னென்றா?"

"அதற்குச் சிரிக்கவில்லை. ஓர் எஜமானியிடம் ஓர் ஊழியன் எப்படி இவ்வளவு உரிமையுடன் வெகு நாட்கள் ஒன்றாகப் பழகிய தோழியுடன் பேசுவதைப்போல் பேச முடிகிறது என்று நினைத்துப் பார்த்தேன், சிரிப்பு வந்துவிட்டது."

இதைக் கேட்டு கார்வண்ணனும் சிரித்தான்.

"நீங்கள் ஏன் சிரித்தீர்கள்?"

"ஓர் ஊழியனுடன்; கண்டிப்பிற்கு பேர் போன ஓர் எஜமானி எதனால் இப்படிச் சிரித்துப் பேச முடிகிறது என்று எண்ணிப் பார்த்தேன்! சிரிப்பு வந்து விட்டது; அவ்வளவு தான்!"

"வேடிக்கை போதும்! உம் பேரிலுள்ள குற்றச் சாட்டை நீர் மறுக்கவில்லை தானே?"

"நான் குற்றவாளிதான்!"

"குற்றத்திற்குரிய தண்டனை, வேலையிலிருந்து உம்மை நீக்குவதோடு மட்டுமல்ல. உம்பேரில் கோர்ட்டில் வழக்கு தொடரவும் எங்களுக்கு உரிமையுண்டு!"

"எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டியவன்தானே நான்!"

"சரி! நாளை முதல் உமக்களிக்கப்பட்டிருந்த அந்தரங்க குமாஸ்தா உத்தியோகம் பறிக்கப் பட்டு விடும்! அத்துடன் உம்மீது நம்பிக்கைத் துரோக வழக்கும் தொடரப்படும்!"

"நான் வருகிறேன்! இத்தனை நாட்களாய் உங்களை ஏமாற்றிக் கொண்டிருந்ததற்காக வேத னைப் படுகிறேன். நான் செய்தது மன்னிக்க முடியாத குற்றம்தான்; இருந்தாலும் உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன்!"

கார்வண்ணன் இதைச் சொல்லிவிட்டு மெது வாக அந்த இடத்தைவிட்டு நகரவாரம்பித்தான்.

தலைவி நிர்மலா தனக்குத்தானே ஏதோ பேசிக் கொண்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்!

"அப்பாடி! இன்றுதான் உயிர் வந்தது. இந்த மனிதர் வேலைக்கு வந்த நாள்முதல், மனம் பட்ட பாடு கொஞ்சமா–நஞ்சமா? ஐயோ! இவர் கல்யாணமாகாதவராய் இருந்திருக்கக்கூடாதா! "திருமணமாகி மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன" என்று ஒரே போடாகப் போட்டு நெஞ்சை உடைத்துவிட்டாரே. இந்த அழகிய முகம்! குழியும் கன்னங்கள்! அறிவொளி வீசும் கண்கள்! எடுப்பான நாசி! எல்லாவற்றையும் எவளோ ஒருத்திக்குச் சொந்தமாக்கிவிட்டு, இப்படி என் முன்வந்து நிற்கிறாரே! என்று மாய்ந்துபோனாயே! இப்பொழுது எப்படியிருக் கிறது; பார்த்தாயா உண்மை?

பேதை மனமே ஏன் இப்படித் துடிக்கிறாய்? சற்றுஇரு. அவர் எங்கேயும் போய்விட மாட்டார். அவரால் என்னை விட்டுப்போகவும் முடியாதடி! எல்லாம் வெறும் பசப்பு!"

தனக்குத் தானே பேசிக்கொண்டிருந்த நிர்மலாவின் வாய் நெகிழ்ந்து வார்த்தைக்குச் சுருதி கூட்டிற்று.

"இன்னும் தண்டனை பாக்கியிருக்கிறது. கேட்டுக்கொண்டு போங்கள்"

"சொல்லுங்கள்!"

"என் தந்தை இறக்கும் தறுவாயில் இந்த ஸ்தாபனத்தை என் தலையில் கட்டி, தகுதியான மனிதர் கிடைக்கும் வரையில் என்னையே இதை நிர்வகிக்கும்படி கட்டளையிட்டார். நானும் ஒப்புக்கொண்டேன். இரண்டு ஆண்டுகளாக நிர்வகித்தும் பார்த்துவிட்டேன்! ...ஆனால்!...!"

"திறமையுடன் தானே நிர்வகித்துக்கொண் டிருக்கிறீர்கள்!"

"நிர்வாகத் தலைமை என்பது வெறும் பஞ்சு மெத்தையல்ல என்பதைக் கண்டுகொண் டேன். மெத்தையில் முட்கள்மட்டுமல்ல. மூட்டைப்பூச்சிகளும் நிறைய இருக்கின்றன!"

"எதைச் சொல்கிறீர்கள்?"

"மணமாகாதவர்களின் கண்களுக்குப் பயந்து தான், 'பெண்களுக்கும், திருமணமான ஆண் களுக்கும் மட்டும்தான் உத்தியோகம்' என்ற விதியை ஏற்படுத்தினேன். ஆனால்...!"

"என்னைத்தவிர மற்றவர்களெல்லாம் கல்யாண மானவர்கள்தானே?"

"நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மனைவியும் குழந்தைகுட்டிகளும் உடையவர் களின் விகாரப் பார்வையையும், அசட்டுச் சிரிப்பையும்தான் பொறுக்கமுடியவில்லை என் பதைக் கூறவந்தேன். இந்த தகப்பன்மார்களை விட கல்யாணமாகாத காளைகளின் கண்களும் பார்வையும் எவ்வளவோ மேல்...!"

"வேலையிலிருந்து நீக்கப்பட்டு, வெளியே செல் லும் என்னிடம் இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறீர்கள்?"

"எல்லாம் காரணமாகத்தான். இந்த மூட்டைப் பூச்சிகளின் கடியை நீங்களும் கொஞ்சகாலம் அநுபவித்துப் பார்க்கவேண்டுமென்றுதான்!"

"என்ன! காரியாலயத் தலைமைப் பதவியா? எனக்கா?"

"ஏன்? கசக்கிறதா?".

"என்ன கசப்பாயிருந்தாலும் உங்களுக்காக விழுங்கித்தானாக வேண்டும்! என்ன செய்வது?"

"ஓஹோ!"

"தண்டனை அவ்வளவுதானே!"

"இல்லை! இன்னுமொன்று!"

"என்ன அது?"

"இந்த அலுவலகத்தின் தலைமைப் பதவி உங்க ளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது! இங்குள்ள எல்லா ஊழியர்களுக்கும் நீங்கள்தான் இனிமேல் தலைவர். ஆனால்!"

"நானே சொல்லி விடுகிறேன் அதை!"

"சொல்லுங்கள் பார்க்கலாம்!"

"என்றைக்கும் எனக்கு நீங்கள் தலைவியாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறீர்கள். அவ் வளவுதானே?"

"எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?"

"வெளியே வாய் விட்டுக் கூறுவது இன்றைக் குத்தான் என்றாலும், நான் இங்கு வந்த நாள் முதல் நம்மிருவர் கண்களும் சந்திக்கும்போ தெல்லாம் வேறு என்ன பேசிக் கொண்டிருந் தன?"

"இது கேள்வியா? பதிலா?"

"எனக்கே புரியவில்லை!"


ஆனால் உண்மையில் ஒன்றும் புரியாமல் விழித்தவர் அந்த அலுவலகத்தின் தலைமைக் கணக்கர் தருமலிங்கனார்தான். ஏனெனில் அவர் தான் கார்வண்ணன் கல்யாணமாகாதவன் என்பதைக் கண்டுபிடித்து தலைவி நிர்மலாவிடம் ரகசியமாகப் புகார் கொடுத்தவர்.

அறைக்கு வெளியே கதவு மறைவில் நின்று கொண்டு தலைவிக்கும் கார்வண்ணனுக்கும் நடந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த தருமலிங்கம் செயலற்றுப் போனதில் ஆச்சரியமே இல்லை. ●




# தங்கை

## — விஸ்வம் —



மோகினி ஆடலழகி. அவளுடைய அழகும் ஆடலும் போட்டி போட்டுக்கொண்டு ரசிகர்களை மயக்கின. ரசிகர்களிடமிருந்து தினசரி நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கும். அத்தனையையும் படிக்க அவளுக்கு நேரமேது? இருந்தபோதிலும் எல்லாவற்றையும் படிக்கவேண்டுமென்று கூடியவரை முயற்சி செய்யத்தான் செய்வாள். பத்துக்கு ஒன்பது கடிதங்கள் அபத்தக் காதல் கடிதங்களாயிருந்தால் மேற்கொண்டு படிக்க எப்படிப் பொறுமையிருக்கும்? படித்ததும் படிக்காததுமாக அத்தனைக் கடிதங்களையும் அடுக்கி வைத்துவிடுவாள்.

கடிதங்களின் மூலம் பிதற்றியவர்களைத் தவிர, நேரிலேயும் அவளைப் பேட்டிகண்டு பிதற்றியவர்களும் பலர் உண்டு. ஆனால் மோகினியின் மன அலைகளை யார் கண்டார்கள்? அவள் மனதில் வேரூன்றியிருந்த உருவம் ஒருவனுடையதுதான்! அவன்தான் கிருஷ்ணன்.

ஆம்! நினைவு பழையதுதான்! நினைக்காமல் இருக்க முடியவில்லையே அவளால்!

பனங்குளம் கிராமத்தில் சிறிய மிராசுதார் ராமலிங்கம். அவருக்கு இரண்டு பெண்கள். மூத்தவள் கற்பகம். இளையவள் கண்ணம்மா.

24551.
600 008

கற்பகம் சாது; கண்ணம்மா வாயாடி. கற்பகம் அடக்கமானவள்; கண்ணம்மா துடுக்கானவள். கற்பகம் அழகியல்ல; கண்ணம்மா கட்டழகி.

ஒரு நாள் யாரோ ஒரு வாலிபனை சட்டையைப் பிடித்து இழுத்துவந்து தெருவில் தன் தகப்பன் முன் நிறுத்தினாள் கண்ணம்மா. வாலிபன் வெட்கத்தாலோ பயத்தாலோ மிரண்டான்.

"இது யாரம்மா?" என்றார் ராமலிங்கம்.

தாவணியை வரிந்து கட்டினாள் கண்ணம்மா! வாலிபனை ஒரு முறை முறைத்துப் பார்த்தாள்.

''யாராயிருந்தா என்னப்பா? ஆத்தங்கரையிலே என் குடத்தைக் கல்லாலே அடிச்சா நான் விட்டுடவா?''

வாலிபன் ராமலிங்கத்தைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''வேணும்னு அடிக்கலைய்யா. மாங்காயடிச்சேன். கல் தவறி குடத்துலே பட்டுடுத்து."


கண்ணம்மா இடுப்பை நெளித்துத் திரும்பினாள் வாலிபன் பக்கம்.

''தவறிப் படுமாய்யா! இப்போ என் கை தவறி உன் கன்னத்துலே பட்டா என்ன செய்வே."

பிதுங்கிய அவளுடைய விழியைப் பார்க்க முடியாமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான் வாலிபன்.

''போகுது விடு கண்ணம்மா. நீ யாரப்பா இந்த ஊருக்குப் புதிசு போலேயிருக்குதே!'' என்றார் ராமலிங்கம்.

''நான் சென்னை. கல்லூரி மாணவன். சமூக சேவைக் குழு பக்கத்துக் கிராமத்தில் முகாம் செய்திருக்கிறது. என் பெயர் கிருஷ்ணன்...''



"ஓ! உள்ளே வாப்பா."

ராமலிங்கத்தின் அன்பு கலந்த அழைப்பை மறுக்க முடியவில்லை கிருஷ்ணனால். உள்ளே சென்றான். சுவையான மாம்பழக் கதுப்புகளும், சூடான காப்பியும் வந்து நின்றன அவன் முன். அவைகளைச் சுவைத்தானா அவன் அல்லது கண்ணம்மாவின் அழகைத்தான் சுவைத்தானா? வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் மட்டும் என்ன செய்தாள்? ஆஜானுபாகுவான அவன் உடல் கட்டும், களையான முகமும் அவள் கண்களுக்கு விருந்தளித்தன.

'கண்ணோடு கண் நோக்கு ஒக்கின்..........' என்று வள்ளுவன் தெரியாமலா எழுதியிருக்கிறான்!

கிருஷ்ணன் அடிக்கடி ராமலிங்கத்தின் வீட்டுக்கு வரத் தொடங்கினான். கண்ணம்மாவோடு தனித்துப் பேசும் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தன. கிருஷ்ணன் கண்ணம்மா காதலர்களாயினர்.

முகாம் முடிந்து சென்னை திரும்பத் தயாராயிருந்தான் கிருஷ்ணன். கண்ணம்மாவை ஆற்றங்கரையில் சந்தித்தான். பிரியா விடை பெற்றுச் சென்றான்.

அடுத்த மாதமே கற்பகத்தின் கல்யாணம் குதிர்ந்தது. கண்ணம்மாவுக்கும் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்று விரும்பினார் ராமலிங்கம் கண்ணம்மா கிருஷ்ணனைத் தவிர வேறு யாரையும் மணக்கமாட்டேன் என்று பிடிவாதமாகச் சொன்னதோடு நிறுத்தாமல் கிருஷ்ணன் தனக்கு எழுதிய கடிதம் ஒன்றையும் தகப்பனிடம் நீட்டிவிட்டாள்,

48, போக் ரோடு'
சென்னை-17.

ஆருயிர் கண்ணம்மா!

..............................................................

..............................................................

நம் காதல் அணையாத ஜோதி..........நம்முடைய குடும்ப வாழ்க்கை என்று தொடங்கும் என்று ஏங்கிக்கொண்டிருக்கிறேன்..............................

..............................................................

நீ என்னை மறந்துவிடாதே!

உன் அன்பன்
கிருஷ்ணன்

கடிதத்தை இருமுறை படித்து ஒரு பெருமூச்சு விட்டார் ராமலிங்கம் அன்றிரவே சென்னை புறப்பட்டார். இரண்டுநாட்களில் திரும்பி வந்தார். தந்தை திரும்பி வந்ததும் கண்ணம்மாவின் மனம் படபடத்தது. ஆனால் அவளைக் கண்டதும் ராமலிங்கத்தின் முகம் கடுகடுத்தது.

கிருஷ்ணனுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த முகவரியில் அந்தப் பெயர்கொண்ட ஆசாமியே எவனும் இல்லையாம். சென்னை பூராவும் வீணில் தேடித்திரிந்து திரும்பிவிட்டிருந்தார் ராமலிங்கம், கண்ணம்மாவின் தலையில் இடிவிழுந்தது.

கற்பகத்திற்கு மட்டும் கல்யாணம் நடந்து புருஷன் வீடு சென்றுவிட்டாள். கண்ணம்மாவின் நடத்தை ஊர் முழுதும் தெரிந்துவிட்டது. ராமலிங்கத்தால் வெளியே தலைகாட்ட முடியவில்லை. கண்ணம்மாவைச் சொல்லாலும், செய்கையாலும் சுட்டெரித்தார். கண்ணம்மாவின் வாய் அடைத்துக் கிடந்தது.

ஒருநாள் பொழுது போய்விட்டது. இருளும் சூழ்ந்துவிட்டது. நடைப்பிணம்போல ஆற்றங்கரையிலிருந்து வீடு நோக்கி வந்துகொண்டிருந்த



கண்ணம்மாவின் தோளை யாரோ தொட்டது போன்ற உணர்ச்சி. திரும்பிப் பார்த்த கண்ணம்மா மெய்சிலிர்த்தாள். கிருஷ்ணன் எதிரில் நின்றான்.

"கோபமா கண்ணம்மா......... உன் தகப்பனார் என்னைத் தேடி வந்தது தெரியும் எனக்கு. ...... நம் கல்யாணத்திற்கு என் தாய் தந்தை இணங்கவில்லை. பெற்றோர் தயவில்லாமல் நாமே நம் கல்யாணத்தை முடித்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்துவிட்டேன். என்ன சொல்கிறாய்? சென்னையில் எனக்கு உயர்ந்த உத்தியோகம் கிடைத்திருக்கிறது. பெற்றோர் தயவு இனித் தேவையில்லை...... இப்போதே புறப்படுகிறாயா என்னோடு? ......"

"என் அப்பா......" என்று இழுத்தாள் கண்ணம்மா.

"ஏன் அப்பாவைக் கேட்டு, அவர் மறுத்து, ஊர் கூட்டி அமர்க்களம் செய்யவேண்டுமா...... இதோ கார் தயார்...... என்ன சொல்கிறாய்?"

கண்ணம்மாவின் முகத்தோடு முகம் வைத்துப் பேசினான் கிருஷ்ணன்.

இரவு முதல் கண்ணம்மாவைப் பனங்குளம் கிராமத்தில் காணவில்லை. எங்கு தேடியும் அகப்படவில்லை.

சென்னைப் பிரபல ஹோட்டல் ஒன்றில் ஒரு தனியறையில் கண்ணன்—மோகினி என்ற பெயர்களோடு கிருஷ்ணன் கண்ணம்மா காதல் வாழ்க்கையில் திளைத்திருந்தபோது யார் தேடிப் பயனென்ன?

சில வாரங்கள் ஹோட்டல் வாழ்க்கை சுவர்க்க போகமாய் நடந்தது.

ஒருநாள் காலை மோகினி துயிலெழுந்ததும் கண்ணனைக் காணாமல் வியப்புற்றாள். மேஜைமேல் இரண்டு கிளாஸ் காப்பியிருந்தது. ஒன்றைக் குடித்துவிட்டுக் கண்ணனை எதிர்நோக்கியிருந்தாள். கண்ணன் கோவிந்தாதான்! அன்றிரவு வெகுநேரமாகியும் கண்ணனைக் காணோம்

மறுநாளே ஹோட்டல் முதலாளி வந்து கண்டபடியெல்லாம் பேசி, அறையைக் காலி செய்யச் சொன்னான். மோகினி மென்று மென்று ஏதோ சொல்வதற்குள் அவளுடைய சாமான்களை வெளிப்படுத்திவிட்டான். பாக்கியைக் கொடுத்துவிட்டுச் சாமான்களை எடுத்துக்கொள்ளலாம் என்று அதிகாரமாகச் சொல்லிக்கொண்டே அறையைப் பூட்டிக்கொண்டு சென்றுவிட்டான். கண்ணன் செய்து கொடுத்திருந்த இருவடம் சங்கிலியை விற்றுவது கடனைத் தீர்த்துச் சாமானையும் மீட்டுக் கொள்ளலாம் என்று சராப்புக் கடைக்குச் சென்றாள். கடைக்காரன் நகையைக் கையில் குலுக்கிப் பார்த்துவிட்டு அவள் முகத்தையும் ஏளனமாகப் பார்த்தான்.

"மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்றான் ஒரு கோணல் சிரிப்போடு. அந்தப் பாடத்தை அன்றுதான் தன் வாழ்க்கையில் முதன்முதலாகக் கற்றுக்கொண்டாள் கண்ணம்மா.

திக்கற்றுத் தெருவில் நின்றாள் மோகினி என்ற கண்ணம்மா.

எத்தனையோ அல்லல்களுக்குப்பின் நடனக்காரியாய் விளங்கினாள் மோகினி.

மோகினியோடு நெருங்கிப் பழகியவர்களுள் ராஜா ஒருவன். சுபாவத்தில் முரடனான அவனுக்கு மோகினியே தெய்வமாய் விளங்கினாள். பொன்னாலும், பொருளாலும் மோகினியின் பாதங்களை அர்ச்சனை செய்தான். ஆனால் மோகினி அசைந்துகொடுக்கவில்லை. ராஜாவிடம் அவளுக்குக் காதல் இல்லை என்றாலும் அவனிடம் உண்மையில் அன்பு வைத்திருந்தாள்.

ராஜாவின் மனத்தை மாற்ற அவள் எத்தனையோ முயற்சிகள் செய்தாள். அவளுக்கு வந்த காதல் கடிதங்கள் எல்லாவற்றையும் அவனிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொன்னாள்.

"இத்தனை பேரையும் நான் எப்படிக் காதலிப்பது?" என்று கேட்டாள்.

"இத்தனை பேரும் நானும் ஒன்றா?" என்று கேட்டான் ராஜா. மோகினி தயங்கினாள்.

ராஜா துடித்தான். மோகினியின் கையைப் பிடித்தான்; அவளைத் தன் மார்போடு அணைக்க இழுத்தான்.

"அண்ணா" என்று வீரிட்டாள் மோகினி. ராஜா உடல் வியர்க்க, மனம் பதைக்க, சிலைபோல நின்றான்.

மறுபடியும் மோகினி பேசினாள். "நீங்கள் என் அண்ணன்."

ராஜா பெருமூச்சு விட்டான்.

"மோகினி...... நீ யாரைத்தான் காதலிக்கிறாய்? இவர்களில் யார் உன் காதலைக் கவர்ந்தவன்?..."

"ஒருவருமில்லை...... நான் எவரையும் காதலிக்கவில்லை...... என் மனதில் காதலுக்கு இடமில்லை."

மோகினி அகன்று சென்றாள். ராஜா பின் தொடர்ந்தான். அவள் கையைப் பிடித்தான். மோகினி கையை உதறித்தள்ள யத்தனித்தாள்.

"பயப்படாதே மோகினி. ராஜா முரடன்தான். ஆனாலும் மனமில்லாத பெண்ணை முகரமாட்டான், தங்கையின் கையை அண்ணன் அன்போடு முத்தமிடலாமல்லவா?"

ராஜாவின் உதடுகள் மோகினியின் புறங்கையில் பதிந்தன.



## இவர்களில் யாரைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

### 'ஸான்பொரைஸ்ட்' அடையாளத்தைப்பற்றி அறிந்துள்ளவரைத்தான்!

எந்த விஷயத்திற்கும் ஆள் பாதி, ஆடை பாதி என்பதை மறந்து விடாதீர்கள்! நீங்கள் பருத்தித் துணியோ அல்லது ரெடிமேட் உடைகளோ வாங்கும்பொழுது. அவைகளில் 'ஸான்பொரைஸ்ட்' (*'Sanforized'*) அடையாளமிருக்கிறதாவெனக் கவனிக்கத் தவறுதீர்கள். இந்த அடையாளமிடப்பட்ட துணிகளில் தைய்த்த உடைகள் அநேக சலவைகளுக்குப் பிறகும் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒருபொழுதும் சுருங்காது!

**லேபிலில் 'ஸான்பொரைஸ்ட்' அடையாளம் இருந்தால் உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒரு பொழுதும் சுருங்காது!**

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட்மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ., இன்கார்ப்பரேட்டட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த கம்பெனியின் சுருங்காது என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விபரங்களுக்கு: 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ்,
95, மெரீன் டிரைவ், பம்பாய்-2

அன்று சென்ற ராஜா ஒரு மாதம் வரை மோகினியின் இருப்பிடமே வரவில்லை. மோகினியும் நிம்மதியில்லாமலே காலந்தள்ளி வந்தாள்.

ஓர் இரவு. மோகினி படுத்துவிட்டாள். யாரோ கதவைத் தட்டின சத்தம் கேட்டு எழுந்து கதவைத் திறந்தாள். ராஜா உள்ளே நுழைந்தான். அவனுக்குப் பின்னால் இன்னொருவன் — ராஜாவின் நண்பன் போலும் — நுழைந்தான். மோகினி அவனை கவனிக்கவில்லை. உள்ளே சென்றுவிட்டாள்.

ராஜா மட்டும் இரண்டு தட்டுகளில் பழம் எடுத்துக்கொண்டுவந்து முன் ஹால் மேஜைமேல் வைத்தான். ராஜாவும், நண்பனும் சாப்பிட்டார்கள். நண்பனுடைய கண் சுவரில் இருந்த ஒரு போட்டோவின்மேல் பட்டது. அவன் அதையே பார்த்துக்கொண்டிருந்ததைக் கவனித்த ராஜா "அது என் தங்கை" என்றான்.

போட்டோவைக் கூர்ந்து கவனித்த நண்பன் உதடுகளில் ஒரு ஏளனச் சிரிப்புத் தோன்றியது.

"யார்? யார்? உன் தங்கையா? உனக்கு ஒரு தங்கை யிருப்பதாக இதுவரை எனக்குத் தெரியாதே" என்றான்.

"ஆமாம்! என் தங்கைதான். உடன் பிறந்த தங்கையைக் காட்டிலும் சிறந்த தங்கை இவள்" ராஜா அமைதியாகச் சொன்னான். தனக்கும் மோகினிக்கும் உள்ள உறவை ஒளிக்காமல் நண்பனிடம் சொல்லிவிட வேண்டும்போல் தோன்றியது ராஜாவுக்கு. அதற்குள் நண்பன் விட்டானா.

"தங்கையா? ஆமாமாம் எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது...ம்...ம் எனக்குகூட இவள் கொஞ்சகாலம் இந்தமாதிரித் தங்கையாக இருந்திருக்கிறாள்" என்று சொல்லிச் சிரித்தான் நண்பன். "*இந்தமாதிரித் தங்கை*" என்று சொல்லும்போது அவன் கண் செய்த சேஷ்டை அந்த வார்த்தைக்கு ஒரு விபரீதமான, விகல்பமான அர்த்தத்தைக் கொடுத்தது.

ராஜாவின் உடலிலிருந்த ரத்தம் முழுவதும் முகத்திற்கேறிற்று. கண்கள் சிவந்தன. ரோமங்கள் சிலிர்த்து நின்றன. கை பையிலிருந்த துப்பாக்கியை எடுத்தது.

"என்ன சொன்னாய்? நீ சொல்வது பொய்! அவதூறு!"

நண்பன் மார்புக்கு நேரே துப்பாக்கியை நீட்டி கர்ஜித்தான் ராஜா. அவன் குரல் இவ்வளவு கோபமாக ஒலித்துக் கேட்டதேயில்லை மோகினி. 'என்னவோ, ஏதோ' என்ற திகிலோடு ஓடிவந்தாள்.

"மோகினி, இவன் என்ன சொன்னான் தெரியுமா? உன்னைப்பற்றிய ஒரு பொய். நீ இவன் காதலியாம்........"

மோகினி திகில் பிடித்து நின்றாள்.

"இவன் சொல்வது பெரும்பொய். இல்லையா... ...... சொல்லடா அவள் எதிரில்."

ராஜாவின் கர்ஜனை பயங்கரமாய் ஒலித்தது. அவன் மோகினியின் முகத்தையே பார்த்தான். நண்பன் சொன்னது பொய் என்று அவள் சொன்னால் அவன் கொல்லப்படுவான் என்பது திண்ணம். என்ன சொல்வாள்?

"ஏன் மௌனம் மோகினி?...... சொல்...... இவன் சொன்னது......?"

"உண்மை......" சொல்லித் தலை குனிந்து நின்றாள் மோகினி. அவளுடைய கால்கள் மடிந்தன. ராஜாவின் துப்பாக்கிக்குண்டு அவளுடைய மார்பைத் துளைத்துவிட்டிருந்தது. கீழே சாய்ந்தவள் ஒரு முறை — கடைசி முறையாகக் கண்களைத் திறந்து ராஜாவையும், நண்பனையும் பார்த்தாள்.

அவளை வஞ்சித்து ஓடிய கயவன் கிருஷ்ணன் தான் ராஜாவின் நண்பன்.



# ஜோதிஸ்வரூபிணியின் அழகு

க. பஞ்சாபகேசன்

பிரபல வீணை வித்வானும், சின்னஞ்சிறு வயதிலேயே ஸங்கீதக் கலையில் தெய்வ அருள் பெற்றுவிட்டவனுமான தேவநாதனின் குரு ஸ்ரீனிவாஸாச்சாரியார் ஒருநாள் ஒரு முக்கியமான விஷயம் சொன்னார்.

ஸ்ரீ சார்ங்க தேவர் அருளிய ஸங்கீத ரத்னாகரத்தில் நாதப் பிரம்மத்தைப்பற்றிய சுத்தமான வாசகங்கள் அவை:

"பேரானந்தமாயும், பிரம்மமுமாய், உலக வடிவாய், சகல ஜீவன்களின் வாழ்வுமாகிய நாதப் பிரம்மத்தை — ஒலிமயத்தை — நாம் வணங்குவோம்.

நாதத்தால் வர்ணம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வர்ணத்திலிருந்து ஒரு பதம் உண்டாக்கப்படுகிறது. பதங்களிலிருந்து பாஷை — மொழியினுடைய வளர்ச்சி உண்டாகியது. பாஷையின் ஊடே உலகின் செயல் காணப்படுகிறது. ஆகவே, உலகமே நாதத்தின் ஆதீனமாக உள்ளது."

தேவநாதனுக்குக் குருவினுடைய இந்த வார்த்தைகள் முதலில் அவ்வளவாகப் புரியவில்லை. மனிதனுடைய எல்லாவிதமான பண்புகளும் மறைந்து, அந்த மனிதனுடைய சுற்றுப்புறங்கள் யாவும்கூட இடிந்து, இந்த உலகமே அழிந்துபோன நிலையிலுங்கூட தனித்துநின்று இயங்கி, மேலே மேலே உயர்நிலைக்குப் போகக் கூடியது நாதம் ஒன்றுதான் என்ற அடிப்படையை தேவநாதன் நம்பினான். இந்த நம்பிக்கையோடுதான் அவன் அங்கங்கே அற்புதமாக வீணை வாசித்தான்; வீணா நாதத்தில் சுற்றுப்புறத்தையும் தன்னையும்கூட மறந்திருந்தான்.

ஆனால் தேவநாதனுக்கு நெஞ்சில் ஒரு சிறு சந்தேகம் சஞ்சலமாக உருவெடுத்திருந்தது. ஸ்ரீசார்ங்க தேவர் சொல்லியபடி நாதத்துக்கு, சகலத்தையும் வென்று இயங்கக்கூடிய இத்தனை பெரிய சக்தி இருக்கிறதா என்று நினைத்தான். மனதையும் இயற்கையையும் கடந்தநிலையில் நாதம் நின்று இயங்கமுடியுமா என்று எண்ணினான் தேவநாதன்.

* * *

இந்தச் சமயத்தில்தான் ஒருநாள் மாலைவேளை. அந்திமயக்கத்தின் அழகில் இருள் இரண்டறக்கலந்து கொண்டிருந்த நேரம்.

தேவநாதனுடைய வீட்டில் அநேகமாக எல்லா அறைகளிலும் தேஜோ மயமாக மின்சார தீபங்கள் ஒளியிட்டுக் கொண்டிருந்தன.

தேவநாதன் கூடத்தின் நடுவில் வர்ணப் பாயின் மேல் நேர்த்தியான தனது வீணையுடன் உட்கார்ந்திருந்தான். வழக்கமாகக் காலையும், மாலையும் விடாமல் சாதகம் செய்வான் அவன்; மீட்டிய வீணையிலிருந்து எழும்பி வரும் நாத அலைகளில் மனதின் கற்பனைகளை ஓடவிட்டு, ஒலிக்கோலங்கள் வனைந்து, நேரம் போவது தெரியாதபடியே அவற்றைக் கேட்டுக் களித்துக் கொண்டிருப்பான் தேவநாதன்.

இன்று அவன் எதிரே வீணை இருந்தது. ஆனால் அதை மீட்டாமல் சும்மா அதன் எதிரே அவன் அமர்ந்திருந்தான்.


சிந்தனையில் வீணா நாதம் பரவிக்கொண்டிருந்தது. அன்று மாலை ஊருக்கு ஒதுக்குப்புறமாயிருந்த ஒரு சோலையில் ஒரு நாடோடி இளைஞனிடமிருந்து கேட்டிருந்த ஜோதிஸ்வரூபிணி ராகம் அவனுடைய சித்தத்தில் சுழன்று கொண்டிருந்தது. அதென்ன சாதாரணமான ஜோதிஸ்வரூபிணியா? சோலையில் தேவநாதன் பார்த்திருந்த அந்த ஏழை இளைஞனுக்கு மட்டும் அந்த அபூர்வ ராகத்தில் எப்படி அப்படிப்பட்ட அழகான, அபூர்வமான சங்கதிகள் உதிர்ந்தன? ஸ்ரீசார்ங்க தேவர் சொன்னாரே, 'ஒலி மயத்தை நாம் வணங்குவோம்' என்று, – அதற்கு ஓர் இலக்கணம் சமைத்தானா அந்த இளைஞன்?

இத்தனைக்கும் அந்த ரமணீயமான சோலையில் அந்த நாடோடி தனது அழுக்கேறிய பழைய புல்லாங்குழலில்தான் ஊதினான். சோலையை ஒட்டியிருந்த சாலையில் தேவநாதன் ஓட்டி வந்த காரின் வேகத்தையும், அதன் ஹாரன் சத்தத்தையும் மீறி அல்லவா அந்த ஜோதிஸ்வரூபிணி ராகம் அவனுக்குக் கேட்டது!

இரண்டு நாட்களுக்குமுன்பு தேவநாதன் வெளியூரில் செய்த ஏதோவொரு கச்சேரியில் அவனை அறியாமல் உதிர்த்துவிட்ட ஒரு சங்கதிக்காக அந்த மண்டபமே அதிர்ந்து போய் விடுமாறு எப்படிப்பட்ட ஆரவாரம் கேட்டது! ஆனால் இன்று சாயங்காலம் அந்த ஏழை இளைஞனுடைய வாசிப்பை யார் பொருட்படுத்தினார்கள்?

"அதென்ன அப்படிப்பட்ட அபாரமான யோசனை?" என்றாள் தேவநாதன் அருகில்வந்த அவன் மனைவி ஸௌர்யா.

தேவநாதன் ஸௌர்யாவை நோக்கிப் புன்னகை செய்தான்; பதிலுக்குக் கணவனை நோக்கிப் பத்தினியும் மோகனமாகப் புன்னகை செய்தாள். வீணையைக் கரத்தில் ஏந்தி மெதுவாக மீட்ட ஆரம்பித்தான் தேவநாதன்; ஸௌர்யா தம்பு




ராவில் மீட்டிய சுருதியுடன் சேர முனைந்து கொண்டிருந்தான்.

எதிரே கூடத்து வர்ண மயமான சுவரில் நாதப் பிரம்மம் தியாகராஜ சுவாமியின் பெரிய படம் மாட்டியிருந்தது. படத்துக்குக் கீழே தரையில் ஒரு பக்கத்தில் வெள்ளிக் குத்துவிளக்கு முத்துப் போலச் சுடர்விட்டுக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கத்தில், சாம்பிராணிக் கிண்ணத்திலிருந்து புறப்பட்டு ஹாலை மணக்க வைத்துக் கொண்டிருந்தது சாம்பிராணிப் புகை.

கம்பீரமாக எழுந்தது வீணையின் நாதம். நாதத்தில் ஜோதிஸ்வரூபிணி ராகதேவதை அழகுற வெளிப்படலானாள். ஸ்ருதி சுத்தமாக எழுந்த அந்த இசை சில நிமிஷங்களில் அந்தக் கூடம் முழுவதும் ரமணீயமாக வியாபித்தது. சாம்பிராணிப் புகையுடன் கலந்து, ஸூர்யாவின் ஹிருதயத்தைச் சொல்ல வொண்ணாத தாபத்தில் ஆழ்த்தத் தொடங்கியது இசை.

தேவநாதனுடைய கண்கள் தியாகப் பிரம்மத்தின் படத்தில் லயித்திருந்தன. அவனுடைய தலை இலேசாக ஆடிக்கொண்டிருந்தது. வீணையின் மேல் நர்த்தன மிட்டுக் கொண்டிருந்த அவனுடைய விரல்கள் இயல்புக்கு மாறான வேகத்தில் இயங்கிக் கொண்டிருந்தன. அந்த வேகத்தில் ஜோதிஸ்வரூபிணி ராகத்தில் விழுந்த ஒரு சில கார்வைகள் ஸூர்யாவின் காதுகளில் கர்ணாமிருதமாக விழுந்து கொண்டிருந்தன. தேவநாதன் அபூர்வ ராகமான ஜோதிஸ்வரூபிணியின் மூன்றாவது காலத்தை வீணையில் வாசித்தான்.

"ஆகா" என்று தன்னை மறந்து கூவினாள் ஸூர்யா. நாத வசீகரம் அவள் மேனி வசீகரத்தை அதிகமாக்கிற்று.

ஆனால் அடுத்த க்ஷணம் தேவநாதன் வாசிப்பதை நிறுத்திவிட்டு, தியாகப் பிரம்மத்தின் படத்தையே உற்றுப் பார்க்க ஆரம்பித்தான்.

அவன் தோள்மேல் சாய்ந்துகொண்டே ஸூர்யா, "ஏன் வாசிப்பதைத் திடீரென்று நிறுத்தி விட்டீர்கள்?" என்று கேட்டாள்.

அதற்குத் தேவநாதன் சொன்னான்:

"அங்கே பார், ஸூர்யா! எதிரே படத்தில் உட்கார்ந்துகொண்டு அவன் குழலூதுகிறான். அந்த நாதத்தை நான் எத்தனை எளிதாகக் கேட்க முடிகிறது! அதே ஜோதிஸ்வரூபிணி ராகம்! அதே கார்வை! அதே மூர்ச்சனை! அவனுடைய ஜோதிஸ்வரூபிணியின் அழகே அழகு!"

தம்புராவை மீட்டுவதை நிறுத்திவிட்டு எழுந்தாள் ஸூர்யா. கூடத்தில் நிசப்தம் நிலவியது. விஷயத்தைப் புரிந்துகொண்டாள் அவள். அன்றுமாலை அவளும்தான் அவனுடன் சென்று, அந்த ஏழை குழலூதுகாரனுடைய கானத்தைக் கேட்டிருந்தாள்?


ஒரு கானமானது, நாதத்தின் அடிப்படையில் இன்னொரு கானத்தைக் கவர்ந்திழுப்பதைப் போலக்காந்தம்கூட கவர்ச்சிசெய்ய முடியாது. இதைப்பற்றி ஸூர்யா அவ்வளவாக அறியாள்.

"அந்த நாடோடியினுடைய நினைப்புக்கும் பாட்டுக்கும் நீங்கள் ஏன் இத்தனை சிரமப்பட வேண்டும்?" என்று தேவநாதனைக் கேட்டாள் ஸூர்யா.

"ஸூர்யா! அவன் ஏழைதான்; ஆனால் அவன் பாட்டு என்னதைவிடவும் உயர்ந்தது. அதை நான் அறிகிறேன்; உணர்கிறேன்."

"என்ன..."

"உண்மை அதுதான். ஈஸ்வர சிருஷ்டியைப் பற்றி நீ அறியமாட்டாய். அவன் ஏழைதான்; ஆனால் அவன் நாதத்தின் மன்னனாகத்தான் எனக்குத் தெரிகிறான். அதை ஜோதிஸ்வரூபிணியின் அழகால் இன்று அவன் நிரூபித்து விட்டான். ஸூர்யா! அற்புதமான மாணிக்கம் வெறும் குப்பையில்தான் ஒளிர முடியும்!"— பேசியபோது உணர்ச்சி வசத்தால் தேவநாதனுடைய மூச்சு ஆழ்ந்து வெளிப்பட்டது.



ஸூர்யா முடிவாகத் தன் கணவனிடம் சொன்னது இதுதான்;

"அதென்னவோ எனக்குத் தெரியாது. இன்னும் இரண்டு நாட்களில் கச்சேரி இருக்கிறது; அதற்குள் இந்த மாதிரியான மயக்கமெல்லாம் உங்களுக்குத் தெளிந்தால் சரிதான்."

கூறிவிட்டு அங்கிருந்து போனாள் ஸூர்யா. கலைஞன் கலைஞனை ஹிருதயத்துக்குள் கௌரவிக்க முனையும் போது, அந்த சாம்ராஜயத்தில் மற்றவர்களுக்குப் புரியும்படியாக எதுவும் நடைபெற முடியாதென்பது சகஜம் தானே?

2

'நாதக் கனலிலே நம் உயிரைப் போக்கோமோ?' என்றார் பாரதியார்.

நாதமாகிய கனலில் உயிர் ஆனந்தமாக இழைந்து தன்னையும் மறந்து போகும் தனிமையது என்று பொருள்படச் சொன்னார் அவர்.

தேவநாதன் அதற்குப் பிரத்யட்சப் பிரமாணமாக இருந்தான். அவனுக்கும் அந்த ஏழை குழலூதுகாரனுக்கும் இடையே சுயம்புவான நாதக்கனல் எழும்பிவிட்டது; இருவர் ஆத்மாக்களும் அக்கனலைச் சுற்றிக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தன. 'காற்றுத் தோன்றிய பொழுதினிலே வானம் முழுவதும் பிராண சக்தி நிரம்பிக் கனல் வீசிக்கொண்டிருந்தது' என்றார் பாரதியார். இந்தப் பிராணசக்தி இவ்விரு கலைஞர்களுக்கும் நாதமயமாகிவிட்டது.

பக்கத்து ஊர் சங்கீத சபையில் தேவநாதனுடைய வீணைக் கச்சேரி. கச்சேரி வளர்ந்து கொண்டிருந்தது. தேவநாதன் ஜோதிஸ்வரூபிணி ராகத்தை ஆலாபனை பண்ணிக்கொண்டிருந்தான்.

ஜோதிஸ்வரூபிணிக்காக ஓர் அற்புதமான இசை மாளிகையை நிர்மாணித்துக்கொண்டிருந்தான் தேவநாதன்; ஜோதிஸ்வரூபிணி அபூர்வ

மாய் வருகிறவள், சுலபத்தில் ஆலாபனைப் பிடிகளுள் அடங்காதவள், அன்று தேவநாதனுக்கு மிகவும் வசப்பட்டுவிட்டாள்; கேட்பவர் மனத்தில் உணர்ச்சிப் பிரவாகத்தை உற்பவித்துக் கொண்டிருந்தாள் ஜோதிஸ்வரூபிணி.

தேவநாதன் மூன்றாவது காலத்தில் ஜோதிஸ்வரூபிணியை ஆலாபனை செய்துகொண்டிருந்தான் வீணையில். ஓர் அபூர்வமான பிடியிலே போய் நின்று, மூன்றாவது காலத்தில், வீணா நாதத்தை ஒரு சுழற்றுச் சுழற்றிவிட்டான்.

அவ்வளவுதான். சபையினர் ஆஹாகாரம் செய்துவிட்டார்கள். கோடீஸ்வரய்யர் கிருதியான 'கானமுத பானத்தை' வீணையில் வாசிக்கத் தேவநாதன் துவங்கியபோது சபையினர் மெய் மறந்து விட்டார்கள். ஸூர்யா இந்தப் பெருமையில் தன்னை மறந்தே விட்டாள்.

தேவநாதனுடைய கண்கள் கண்ணீரைப் பனித்துக்கொண்டு மூடியிருந்தன. அவனது விரல்கள், மனதின் நடைக்கு ஒப்ப, வீணையை மீட்டிக்கொண்டிருந்தன.

அப்போது சபையின் ஒரு மூலையிலிருந்து பரபரப்பு.

"அற்புதம்! அற்புதம்!"—கணீரென்ற குரல்.

யாரோ வொருமனிதரைச் சபையிலிருந்து நாலைந்து பேர் வலுக்கட்டாயமாக அழைத்துப் போவதையும் தேவநாதன் பார்த்தான். அது யாரென்று உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து அவனுக்குத் தெரியாவிட்டாலும், தனது வாசிப்பை ரஸித்த ஓர் அருமையான ரஸக்ஞர் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது.

* * *

ஊர் திரும்பிக்கொண்டிருந்தான் தேவநாதன் ஸூர்யாவுடன், காரில். சங்கீத சபைக் காரியதரிசியும் முன் ஸீட்டில் அமர்ந்திருந்தார். அவர்களைக் கொண்டுபோய் விட்டு விட்டுவர அவரும் வந்து கொண்டிருந்தார்.

அப்போது ஊர்எல்லையிலிருந்து மண்டபத்தை வளைத்துக்கொண்டு கார் சென்றபோது, காரின் முன்புற விளக்கொளி வெளிச்சத்தில் அந்த ஏழை இளைஞன் படுத்திருப்பதைக் கண நேரத்தில் கண்டு கொண்டான் தேவநாதன்.

"டிரைவர்! காரை நிறுத்து!"— அலறினான் தேவநாதன்.

கார் நின்றது. இந்தச் சலனத்தில் மண்டபத்தில் அந்த ஏழை எழுந்து உட்கார்ந்து விட்டான். காரின் கதவு திறந்தது, மங்கிய நிலவு வெளிச்சம் லேசாக மண்டபத்தில் தங்கியிருந்தது. தேவநாதன், ஸூர்யா, சங்கீத சபைக் காரியதரிசி மூவரும் அவனருகில் வந்தார்கள்.

தன் ஜிப்பா பையிலிருந்த தடிமனான பர்ஸை எடுத்தான் தேவநாதன். அதை உடனே அந்த ஏழையின் எதிரே வைத்தான்.

"சாமி..." என்று தயங்கினான் அந்த ஏழை இளைஞன்,

சங்கீத சபைக் காரியதரிசி அவனை உடனே அடையாளம் கண்டுகொண்டு, "இந்த ஆசாமி தான் கச்சேரியில் வந்து 'அற்புதம்' என்று கூவிக் கலாட்டா செய்தது!" என்றார்.

அதற்கு அந்த இளைஞன், "கலாட்டா செய்தேனா? கிடையவே, கிடையாது! அவரது ஜோதிஸ்வரூபிணியை ரஸித்து அல்லவா என்னை மறந்து கூவினேன்!" என்றான்.

அதற்குமேலும் தேவநாதன் உணர்ச்சியை அடக்கிக்கொண்டு வாளாவிருக்க முடியாமல், "நீங்களா அப்படிக் கூவியது? ஆகா! என்ன பாக்கியம்! அப்படியானால் நீங்கள் ஒருவர்தாம் இன்றைக்குக் கச்சேரியில் இருந்தீர்கள்! இன்று நான் வாசித்த ஜோதிஸ்வரூபிணியின் கற்பனை உங்களிடமிருந்து கற்றுக்கொண்டது; எனக்குச் சேரவேண்டிய இந்தப் பணம் உங்களுடைய பணம். உங்களுடைய ஜோதிஸ்வரூபிணியானது நாதப்பிரம்மம்; அதை நான் இன்று என் வீணையின் மூலம் தரிசித்தேன், உங்களது மூலம்; அந்த நாதோபாசனையுடன் ஒருப்பட்டுப்போனது என் மனம். இன்று நான் வாசித்த ஜோதிஸ்வரூபிணி உங்களதன் மொழிபெயர்ப்பு. இது உங்கள் பணம்; எடுத்துக்கொள்ளுங்கள்."

காத்திருக்காமல், ஸூர்யாவும் காரியதரிசியும் தொடர காருக்குள் வந்துவிட்டான் தேவநாதன்.

தான் என்ன செய்யவேண்டுமென்று அந்த ஏழை இளைஞன் தீர்மானிக்கு முன்பு கார் பறந்துவிட்டது.

காரில்—

"இயற்கையுடன் உறவாடும் ஏழைக் கலைஞன் அவன். அதனால்தான் இயற்கையுடன் கலந்த அபூர்வமான கற்பனைகள் அவனுடைய சங்கீதத்தில் நிரம்பி நிரந்தரமாக வாழ்கிறது. நாதப்பிரம்மம் எப்பொழுதுமே இயற்கையாக வாழ்கிறது; அதனால் அதன் மேனிக்கு என்றைக்கும் அழிவு கிடையாது. இந்த ஏழை அதை எனக்கு நன்றாக நிரூபித்துவிட்டான். இப்பொழுதுதான் எனது குரு ஸ்ரீ சார்ங்க தேவருடைய ஸங்கீத ரத்னாகரத்திலிருந்து எடுத்துச் சொன்னது எனக்கு நன்றாகத் தெளிவாகிறது" என்றான் தேவநாதன்.

"உங்கள் குரு என்ன சொன்னார்?" என்று ஸூர்யா கேட்டாள்.

"இந்த உலகமே நாதத்தின் ஆதீனமாக உள்ளது என்று ஸ்ரீ சார்ங்க தேவர் கூறியதை என் குரு அடிக்கடிச் சொன்னார். எளிமையில் எளிமையாய், பிரகாசத்தில் பிரகாசமாய் நின்று இயங்கும் நாதப் பிரம்மத்தின் தன்மையை இன்றுதான் நான் நன்றாக அறிந்தேன்" என்று தேவநாதன் சொன்னான்.

சங்கீத சபைக் காரியதரிசி இதைக்கேட்டு அயர்ந்து உட்கார்ந்திருந்தார்.

ஸூர்யாவின் கண்களிலோ உணர்ச்சிக் கண்ணீர் நிறைந்தது.

இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கார் பறந்தது.

# கண்டேன்!—கண்டேன் அல்லேன்!

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

நா நலம் ஓர் அரிய நலன் என்பார்— வள்ளுவர். வேறு எந்த நலமும் அந்த நாநலத்துக்கு ஈடு ஆகாது. 'பேசப் பிறந்தையோ, சாகப் பிறந்தையோ' என்பது ஒரு சாமானிய வசனம். வாய் திறந்து பேசினுல், யாவரும் விரும்பிக் கேட்கத் தக்கதாக இருத்தல் வேண்டும். அனை வரையும் வசம் செய்வதாகவும் அமைதல் அவசியம்

சொல்லின் செல்வன், உரையில் உயர்ந்தவன். வார்த்தையில் வல்லவன், பேச்சில் பேராளன், என்றெல்லாம் இந்நாளில் பலருக்குப் பட்டம் தரப்படுகிறது. "வார்த்தையில் பதினுயிரத்து ஒருவர்" என்று ஒளவை கூறுவாள். 'சொலல் வல்லன், சோர்வு இலன், அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது.'

கல்வியில் பெரிய கம்பன், "சொல்லின் செல்வன்" என்று இராமதூதனைப் புகழ்கின்ருன். கம்பனது வாக்கினுக்கு எதிர் வாக்குஉண்டோ? அஞ்சிலே ஒன்றுபெற்ற ஆஞ்சநேயன் அலர்கதிர்க்கடவுளிடம் நவவியாகர்ணம் கற்றவன். ஈடும் இணையும் இல்லாத இராம பக்தன். சீதாதேவியினுல் சிரஞ்சீவிப் பட்டம் பெற்றவன்.

கிஷ்கிந்தையை அடுத்த ஒரு மலைச் சாரல். தெற்கே நோக்கிய வண்ணம், இராமபிரான் வீற்றிருக்கிருன். அவனது ஐம்புலன்களையும் கண்ணே கொண்டுள்ளது. அவனது அருகே சிறிது தூரத்தில் வானர வேந்தன் அமர்ந்திருக்கிருன் ஆழ்ந்த கவலையுடன். இலக்குவன் ஒரு புறமும், வானர வீரர் ஒரு புறமும் நிற்கின்றனர்.

தசரதராமனது திருமுகத்தை நோக்க நோக்க, சுக்கிரீவனது நெஞ்சம் நெகிழ்கின்றது. தெற்கே சென்ற வீரர் சுபச் செய்தி கொணர்ந்தால், இப்பெருமான் பிழைத்திருப்பான். இல்லையேல்— என்று பலவாருன நினைவுகள் வாலி சோதரனது மனதில் அலைபாய்கின்றன. அரசு தந்த தோழன் மீதுள்ள பாசத்தின் அறிகுறி அது.

அண்ணன் இராமனது ஆருயிரைத் தாங்கி நிற்கும் உடல்போல் உள்ள இளையவன் எண்ணுததெல்லாம் எண்ணுகின்ருன். வானர வீரரோ ஏக்கத்தின் வடிவாக உயிரற்ற உடலைச் சுமந்து நிற்பதாகவே காண்கின்றனர். மலைச் சாரலில் முளைத்துள்ள புல், பூண்டு, செடி, கொடி, மரங்கள் முதலியனவும் தலைசாய்ந்த தன்மையில் உள்ளன.

அந்நிலையிலே, வான வீதியிலே சோதி ஒன்று தோன்றுகின்றது. எல்லாரும் உற்று நோக்குகின்றனர். தாசரதியின் உயிர் அச்சோதியை ஊடுருவுகின்றது. சோதி நெருங்க நெருங்க ஓர் உருவம் தென்படுகிறது. அஞ்சனை மைந்தன் வந்துவிட்டான் என்று அனைவருக்கும் உயிர்த்துடிப்பு உண்டாகின்றது.

"வாயுபுத்திரன் வந்துசேர்ந்தான். வந்து அவன் யாது சொல்லப்போகின்ருன்" என்று எல்லாரும் பரபரப்புக்கொள்கின்றனர். பதைப்பும் எய்துகின்றனர். அங்கங்கள் அனைத்தும் துடிக்காதார் கிடையாது. எல்லாரும் அவனையே நோக்குகின்றனர். வந்த அநுமான் யாது செய்தான்?

இராமப்பிரபுவின் பாதகமலங்களில் அவன் வணங்கவில்லை. தனது இறைவனுன சுக்கிரீவனைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. தனது கரங்களை உயரத் தூக்கியவண்ணம், தெற்குநோக்கி அஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கின்ருன். அது பார்த்தான் வீரவாலியின் தம்பி.

தனக்கு எதிரே கால்களை நீட்டி, எதிர்ப்புறம் தலையைச் சாய்த்து வணங்கிவிழும் அநுமானது செயலைக் கண்டான் ஜானகிராமன். சிறிதும் கோபம் கொள்ளவில்லை. மனதில் ஒரு மகிழ்ச்சியே உதித்தது; ஆனந்தமும் உண்டாயிற்று; உள்ளம் கிளர்ந்தது; தோள்கள் பருத்தன; கண்கள் ஆனந்தநீர் சொரிந்தன; துயர் தாழ்ந்தது; அன்போ நீண்டது; வளரவும் செய்தது.

இராமச்சந்திரனை அநுமான் பயபக்தியுடன் வணங்கினுன். இரு கைகளையும் கூப்பியவண்ணம், "கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்" என்று கூறினுன்.

பின்பு, மறுமுறையும் வணங்கி, "அண்டர் நாயக! இலங்கையிலே எனது அம்மையைக் கண்டேன்! என் தெய்வத்தைக் கண்டேன்" என்று உரைத்தான். அனைவரும் அதுகேட்டு ஆனந்த ஆரவாரம் செய்யாநின்றனர்.

உடனே, மாருதி, "ஐய! இன்னும் ஒரு சொல். வில்பெரும் தடந்தோள்வீர! வீங்கு நீர் இலங்கை வெற்பில், நல்பெரும் தவத்தாள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்" என்றான். என்றதும், இரகுபதியைத் தவிர மற்ற அனைவரும் துணுக்கமே கொண்டனர். தவிதவித்தனர்.

சுக்கிரீவனுக்கோ, கண்களில் தீப்பொறிகள் பறந்தன. நாசியிலே பெருமூச்சு எழுந்தது. உதடுகள் இரண்டும் துடிதுடித்தன. "என்னே! இந்த ஆஞ்சநேயனது செயல்கள்" என்று வானரவேந்தன் படபடத்தான். பின்பு எண்ணுவான் இவ்வாறு.

"அரிய மதுவனத்தை அழித்தான்; பிராட்டியைக் கண்ட ஆனந்தம் என்று வாளா இருந்தேன். இப்போதோ நமது பிரபுவின் முன்னே காலை நீட்டினான்; எதிர்ப்புறமாக வணங்கினான். சீதாலக்ஷ்மி இருந்த திசைநோக்கித் தண்டன் இடுகின்றான் என்று எண்ணினேன். "கண்டேன்" என்று முதலில் சொன்னான். பின்போ, "கண்டேன் அல்லேன்" என்று கூறுகின்றான். இவனோ, சொல்லின் வேந்தன்! நவ வியாகரணி! முன்னுக்குப் பின் முரணாக மொழிவது ஏனோ? பிரபுவும், கேட்டுக் கொண்டு வாளா இருக்கிறார். எனக்கு ஒன்றும் புரியவில்லை."

தனது மன்னவன் அவ்விதம் மதி மயங்குவதை அநுமான் அறியாமலில்லை. ஆயினும், சிறிதும் தளரவில்லை. இரகுபதியை நோக்கி, "என் ஐயனே, நல் பெரும் தவத்தால் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன். ஆனாலும், இல் பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும், கற்பு எனும் பெயரது ஒன்றும் களி நடம் புரியக் கண்டேன்" என்றான்.

அச்சொற்கள் தனது செவியில் விழுந்த பின்புதான் சுக்கிரீவனுக்கு மூச்சு வந்தது. ஆஞ்சநேயனது சொல் சாதுர்யத்தைக் கண்டு அவ் வேந்தன் வியந்தான். குணியைக் குணமாகப் போற்றும் மாருதியின் ஆற்றலை அறிந்து ஆனந்தம் எய்தினான். வேறு என்ன செய்வான் அவ்வேந்தன்.

அந்நிலையில் சீதா தேவியைக் குறித்து அநுமான் எவ்வளவோ சொல்லுகின்றான். கம்பர் ராமாயணத்திலே திருவடி தொழுத படலத்திலே அவற்றை விளக்கமாக அறியலாம், அறிய விரும்புவோர். இங்கே, நாம் கருத வேண்டியது யாது? அந்த அநுமானது நுட்பமான கருத்தேயாம்.

அழகின் கனியான சிறந்த மாதினை மாருதி அங்கே காணவில்லை. தவத்திலே நின்று, தனது உறுப்புக்களை எல்லாம் நலியச்செய்து நிற்கும் நிலையை அவன் காணவில்லை. மற்று யாது கண்டான்? பார்ப்போம்.

நற்குலப் பிறப்பு, அரிய பொறுமை, அளவுகடந்த துன்பங்களை ஆற்றிநிற்கும் ஆற்றல், பதிவிரதாதர்மம் ஆகிய மூன்று பெரும் பெண்மைக்குணங்களே களிநடம் புரியக்கண்டான் அவன்.

சீதையோ, தீயில் விழுந்த புழுவேபோல் அரக்கரின் கொடுமையால் சாம்புகின்றாள். மழைத்துளிபெறாத ஓஷதிபோல் வதங்குகின்றாள். அந்நிலையில்தான், அவளது பெண்மைக்குணங்கள் பிரகாசித்து விளங்குகின்றன. இது பெண்களுக்கே சாத்தியம் ஆனது! அதுவும் நமது பாரதப் பண்பாட்டிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் பெண்களுக்குத்தான் இயலும்!

நமதுதேச நாகரிகம் என்பது நமது மாதரிடமே காணக்கிடக்கின்றது. பாரத சமுதாயம் தோன்றிய நாள்தொட்டு அந் நாகரிகத்தை அவர்களே காப்பாற்றி வருகின்றனர்.

பெண்மை என்பதற்குக் குலம் என்பது கிடையாது. பதவி என்பதும் கிடையாது. பிறன்மனை விரும்பி அழிந்த இராவணனது தேவி மண்டோதரி என்பாள் நாம் தினம் தினம் வணங்கும் பஞ்சகன்னியர்களுள் ஒருத்தி.

வானர குலத்தில் வந்த தாரை என்பாளும் அத்தகையவளே. சமணரின் தொல்லைகளுக்கும் தனது கணவனான கூன் பாண்டியனது மடமைக்கும் உட்பட்டுக் கிடந்தும் என்ன? துணிவு மிகுந்து திருஞானசம்பந்தரை வரவழைத்து, அவர்

மூலம் தனது புருஷனுக்கும் பாண்டி நாட்டினுக்கும் நலம் தேடி வைத்த மங்கையருக்கு அரசி என்பாள் இன்று நாம் வணங்கும் தெய்வமாக விளங்குகின்றாள்.

நமது தேச சரிதத்தை நாம் துருவி நோக்கினால், பெண்களின் மூலமே நமது பண்டைய தருமம் வழி வழியாகக் காக்கப்பெற்று வந்திருப்பதை அறியலாம். இன்றும் ஊர் தோறும், வீடுதோறும் நமது சனாதன தர்ம தீபம் அணையாமல் பாதுகாத்து வருவோர் நமது கிருகலக்ஷ்மிகளே ஆவர்.

நமது மாதர் சமூகம், தனது குல தர்மம் பொறுமை, கற்பு ஆகிய மூன்றும்,களி நடம் புரியும் களமாக விளங்கிவரும் வரையில், நமது தர்மம் குறைவுபடாது. ஓங்கியே நிற்கும். எந்த ஜாதி ஆனாலும் என்ன! எந்த நிலையினர் ஆனாலும் என்ன? பெண்மை என்னும் அருங்குணம் நிறைந்து நிற்கும் வரையில் நாம் நிம்மதி எய்தலாம். 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' அல்லவா?

இனி, சீதாவேியின் கதையை இன்னும் சிறிது காண்போம். பிராட்டியை அநுமான் அசோக வனத்தில் காண்கின்றான். தனது வருகையை அவளுக்கு அவன் தெரிவிக்கவில்லை. காட்சிப்படலம் என்பதில் கம்பன் அத்தேவியின் நிலை குறித்துக் கவிகளைப் பொழிந்திருக்கிறான். அவை மாருதி கண்ட காட்சியை விரித்து உரைப்பன ஆகும். சிலவற்றை இங்கு சொல்லுவோம்.

“காவலோ மிகவும் கொடியது. ஆதலின், கடக்கமுடியாதது. கொடிய அரக்கியர் நான்கு பக்கமும் சூழ்ந்து நிற்கின்றனர். அக்கொடுமைகளுக்கு இடையே கண்ணீரான தடாகத்தில் சீதை மூழ்கிக் கிடக்கின்றாள். அவளே, தான் தேடிவந்த தெய்வம்” என்று அநுமான் எண்ணுகின்றான்.

ஐயனது அருமைத் தேவியைக் கண்டதும் ஆஞ்சநேயன் ஆறுதல் அடைகின்றான். “தருமம் அழிந்துவிட்டதென எண்ணினேன். என்னைக் கொன்றுகொள்ளவும் தீர்மானித்தேன். எனினும், தருமம் சாகவில்லை. எனவே, நானும் சாகமாட்டேன். தேவியைத் தேடினேன்; கண்டுவிட்டேன்.




தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

**பெப்ஸ்** வில்லைகளை
**உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்**

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.




FPY-54-TAM.

**பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.**

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

**ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்**

சோல் ஏஜண்டுகள் :
**தாதா அண்ட் கம்பெனி,
86, நைனியப்ப நாய்க்தெரு, சென்னை-3.**

"மாசுண்ட மணிபோல் தேவி காண்கின்ருள். பகலில் காணும் சந்திரனேபோல் ஒளி இழக்கின்ருள். இவளது கற்பையும் மனக்காவலேயும் என்னென்று கூறுவேன்! இவளது மனமாண்பைப் புகழ்வேனு? அல்லது இவளது நாயகனுன இராகவனுக்கு இவளால் அமைந்த புகழைக் கொண்டாடுவேனு? அல்லது இவளைப் பெற்றெடுத்த ஜனகனது குலத்தின் பெருமையைப் புகல்வேனு? எதைப் புகல்வது?

"இனிமேல் அமரர் பிழைப்பர். வேதியர் உயிருடன் இருப்பர். தருமம் அழியாது. நானும் இராமபக்தன் என்னும் பெயரை நிலைநாட்டிவிட்டேன். இந்த உலகுக்கே நாசம் வந்துவிட்டதென முன்பு எண்ணினேன். இவளது கற்பின் நிலையைக் கண்டதும், அந்த எண்ணம் அடியோடு மாறிவிட்டது. இவள் ஒருத்தியால் இந்த உலகம் வாழ்வு பெற்றுவிட்டது.

"மாதரின் தவத்தை நான் என்னவென்று கூறுவேன். நல்ல குலத்தில் தோன்றி, நல்ல வீட்டில் பிறந்து நற்குணங்கள் யாவும் வாய்ந்த பெண்கள் தம்மனத்தினல் செய்யும் தவம் எங்கே? நெருப்பிலே மூழ்கி ஐம்புலன்களையும் வென்று, உணவையும் நீரையும் நீக்கித்தவம் செய்பவர் எங்கே?

வெம்கனல் மூழ்கியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ அருந்துவ நீக்கி நோற்றவர்
எங்குளர்? குலத்தினில் வந்து இல்லின் மாண்பு [உடை
நங்கையர் மனத்தவம் நவிலல் பாலவே!

"சீதாதேவி தோன்றியதால் நல்ல மனைப் பிறவி என்பதும் பெண்மையும் பெண்களுக்கு அணிகலமான நாணமும் மேன்மை எய்தின. ஆ! இவளது தவத்தைத் தனது கமலக்கண்களால் காணும் பாக்கியத்தை என் பிரான் இராமப்பிரபு காணக்கொடுத்து வைக்கவில்லையே"

அவ்விதமெல்லாம் ஆஞ்சநேயன் துக்கித்தான். பின்பு, பெண்மையால் அறம் காக்கப்பெற்றது என்று ஆனந்தித்தான். ஆதலினுல்தான், அவளது குண கணங்களைக் கூறி, "நங்கையைக் கண்டேன் அல்லேன்" என்று உரைத்தான். இராமபிரான் களித்தான்.

தேசியத் துறவி, ஞானத்துறவி, ஞாலமெல்லாம் புகழ் பரப்பிய சுவாமி விவேகானந்தர் நமது பாரதப் பெண்மணிகளைப் பற்றி உரைக்கையில் சீதா தேவியையே முன் வைத்துப் பேசுகின்ருர். அடுத்தபடி சாவித்திரியைச் செப்புகின்ருர்.


"எது எது உண்மையோ, எது எது தூயதோ, எது எது மேன்மை ஆனதோ, பெண் இனத்திலே பெண்மை எனப் போற்றப்படுவது எதுவோ, அதற்குப் பெயர் சீதை" என்கிருர் சுவாமிகள்.

"சீதைக்கு நிகராக ஒருத்தியை உலக இலக்கியங்களிலே எங்கும் காணமுடியாது. சீதைக்கு நிகர் சீதையே. அந்த ஒரு சீதையின் வாழ்விலிருந்து நிறைவுள்ள பெண்மையைப் பார்க்கலாம். இந்தியப் பெண்மணிகள் அத் தேவியின் அடித் தடத்தைப் பின்பற்றியே வளர்ந்து வளம்பெற வேண்டும். அது ஒன்றே வழி" என்று அறுதியிட்டுக் கூறுகிருர் அவர்.

சீதையின் குணங்களைக் கம்பன் சித்திரிக்கிருன், அநுமான் கண்டு களிக்கிருன். நமது மாதருக்கு வேறு வார்த்தை நாம் சொல்லவேண்டுமோ? ○


## காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள்நாடு | | மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு | |
|---|---|---|---|---|
| | ரூ. | நயா பைசா | ரூ. | நயா பைசா |
| ஒரு வருஷம் | 6 | 00 | 7 | 50 |
| அரை வருஷம் | 3 | 00 | 3 | 75 |
| தனிப் பிரதி | 0 | 50 | 0 | 62 |



# முசிரி சுப்ரமணிய அய்யர்

கீதப்பிரியா

## முசிரியின் பாணி

கர்நாடக சங்கீதத்திற்கு ஒரு 'புதிய பாணி' ஏற்படுத்தியவர் சங்கீத கலாநிதி முசிரி சுப்ரமணிய அய்யர் அவர்களாகும். வாய்ப்பாட்டிலே நிகரற்ற வித்வான் முசிரி சுப்ரமணிய அய்யரின் கானத்திற்கு "முசிரியின் பாணி" என்றும், கர்நாடக சங்கீத ரத்னங்களான அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார் செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யரின் இசைக்கு முறையே 'அரியக்குடி பாணி', 'செம்மங்குடி பாணி' என்றும் ரசிகர்கள் பெயரிட்டு பாராட்டியுள்ளனர்.

## முதல் ரஸிகர்!

முசிரி சுப்ரமணிய அய்யரவர்களுடைய இனிமைப் பெருக்கெடுத்தோடும் சாரீரம் அவரது வசிய மந்திரம்! ராகம் மாறலாம், சந்தர்ப்பம் மாறலாம், ஆனால் அவர் கையாளும் முறை மட்டும் ஒருக்காலும் மாறவே மாறாது. எப்பொழுதும் உருக்கம், உருக்கந்தான்! அவரது சங்கீதத்திலே பெரும்பகுதியை அது வியாபித்துக்கொண்டிருக்கிறது. முசிரி தன் சங்கீதத்தின் முதல் ரஸிகர். அவருடைய 'லயிப்பு' அசாதாரணமானது. அபரிமிதமான அர்ப்பணத்திற்குச் சமானம்!

## இரண்டு கீர்த்தனைகள்!

சங்கீத வித்வ மண்டலத்திலே அவரை 'ஓஹோ' என்று பாராட்டும்படிச் செய்தவை "நகுமோமு' 'திருவடி சரணம்' என்ற இரண்டு கீர்த்தனைகள்தான்! 'நகுமோமு' கீர்த்தனத்தின் அனுபல்லவி அடியை முசிரியைப்போல அவ்வளவு அழகாக இதுவரை யாரும் பாடியதேயில்லை என்ற உண்மையை காலஞ்சென்ற ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் எடுத்துச்

சொல்லியிருக்கிறார்கள். "திருவடிசரணம்" இசைத்தட்டு வெளிவந்ததும் காம்போதி ராகத்தை முசிரியிடம் கேட்க வேண்டும். முசிரியிடம் காம்போதியைக் கேட்க வேண்டும் என்று ஏற்பட்டுவிட்டது. சர்வ சாதாரணமாக மத்யம காலத்தில் எல்லோரும் பாடிவரும் "பாஹிராம" என்ற யதுகுல காம்போதி கீர்த்தனையை அவர் 'சவுக்க'மாகப் பாடுவதைக் கேட்டிருப்பவர் காதுகளிலே "ஸோதநலகு நேனுபாத்ரமா" போன்ற அடிகள் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டுதானிருக்கும்!

## அவரே பேசுகிறார்!

1899-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 9-ந்தேதி சங்கர சாஸ்திரியாரின் புதல்வராகப் பிறந்தேன். என் தந்தை சங்கீதத்தில் நல்ல ஞானமுடையவர். சமஸ்கிருதத்தில் மகா பண்டிதருமாவார். என்னுடைய குழந்தைப் பருவம் முசிரியிலேயே கழிந்தது. திருச்சிராப்பள்ளியில் படித்தேன். 17 வயதுக்குள் காலேஜ் படிப்பையும் முடித்துவிட்டேன்.

## குருகுலவாசம்!

எனக்கு சங்கீதத்திலிருந்த ஆர்வத்தினுல் சாஸ்திரீயமான சங்கீதப் பயிற்சி பெற விருப்பம் ஏற்பட்டது. புதுக்கோட்டை நாராயணசாமி ஐயரிடம்தான் முதன் முதலில் முறைப்படி சங்கீதம் சொல்லிக் கொண்டேன். பிறகு கரூர் பிடில் சின்னசாமி ஐயரிடம் குருகுலவாசம் செய்து சங்கீதப் பயிற்சி பெற்றேன்.

அந்தக் காலத்தில் மிகவும் கியாதி பெற்றிருந்த வித்வான்களான கோனேரி ராஜபுரம் வைத்யநாத அய்யர், புஷ்பவனம் அய்யர், ராமநாதபுரம் ஸ்ரீனிவாசய்யங்கார், செம்மனூர்கோவில் ராமசாமி, மன்னார்குடி பக்கிரி, முதலியவர்களுடைய கச்சேரிகளை நிறையக் கேட்டேன்.

1919-ம் வருடத்தில் சென்னை சென்று சங்கீத வித்வான் ஸ்ரீ சபேசய்யர் அவர்களிடத்தில் குருகுலவாசம் செய்தேன். ஐந்து வருஷங்கள் அவரிடம் சங்கீதப் பயிற்சிபெற்று சிறந்த சங்கீத ஞானத்தையும், கச்சேரி செய்வதற்கான திறமையையும் பெற்றேன். இப்பொழுது மாணவ, மாணவிகள் ஸ்கூலில் கற்றுக்கொள்வது போல அல்ல அக்காலத்தில் வித்யார்த்திகள் கற்றுக்கொண்ட சங்கீதம். சிஷ்யர்களிடம் காணப்பட்ட விசேஷ ஆர்வம், இக்காலத்திலே இல்லையென்றே சொல்ல வேண்டும்.

## அந்தக் காலத்திலே!

அந்தக் காலத்தில் சங்கீத வித்யார்த்திகள் தங்களுடைய குருவினிடம் மிகவும் பயபக்தியுடன் நடந்துகொள்வார்கள். குரு எப்பொழுது பாடம் சொல்லித்தருவார் என்று ஏங்கி நிற்பார்கள். குருவிற்கு எப்பொழுது தன்னுடைய சிஷ்யர்களுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று தோன்றுகின்றதோ அப்பொழுது தான் கற்றுக் கொடுப்பார்! மாணவர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட பாடங்களை மீண்டும் குருவினிடம் கேட்டு சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள பயப்படுவார்கள். குரு செய்யும் கச்சேரியிலே அவர் பாடும்பொழுது அதை மிகவும் சிரத்தையுடன் கேட்டு, தாங்கள் மனப்பாடம் செய்துகொண்டது சரியா, என்பதைப் புரிந்து கொள்வார்கள். இந்த குரு சிஷ்ய பாவத்திலேயிருந்து சங்கீதப் பயிற்சி பெற்றவர்களில் நானும் ஒருவன்!

இந்தக் காலத்திலே வித்யார்த்திகளிடத்திலே குரு பக்தியே காணப்படுவதில்லை. அவர்களுக்கு எத்தனை தடவை சொல்லிக் கொடுத்த போதிலும் பாடத்தை நன்கு கற்று பயிற்சி செய்வதில்லை.

1917ம் வருடத்திலே திருச்சியிலே என்னுடைய முதல் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. எப். ஜி. நடேசய்யர் மிகவும் புகழ்ந்து தங்கப்பதக்கமும் பரிசாகக் கொடுத்தார். 1922ம் வருடத்தில் திருவல்லிக்கேணி சங்கீத சபையில் என்னுடைய கச்சேரி நடைபெற்றது. எல்லோரும் பாராட்டி ஊக்கமளித்துதவினுர்கள்.

## சாதகம்!

குழைவாகவும், குளிர்ச்சியாகவும், பாவங்களுக்குப் பொருத்தமாகவும் பேசக்கூடிய வகையில் சாரீரத்திற்கு பயிற்சி அளித்து சாதகம் செய்தேன். அதனுல் தான் தாரஸ்தாயி சஞ்சார காலங்களில் கரகரப்போ, பிசிருகளோ, இல்லாமல் சுகபாவத்தோடு தெளிவாக இயங்கக் கூடிய தன்மை என் சாரீரத்தில் விசேஷமாகக் குடிகொண்டது.

1932-ம் வருடத்தில் இசைத்தட்டிற்காக 12 பாட்டுக்கள் பாடினேன். பதிவான

பன்னிரெண்டு பாட்டுக்களில் 'நகுமோமு' வைத்தான் முதலில் கிராமபோன் கம்பெனியார் வெளியிட்டார்கள். தியாகப் பிரம்மத்தின் ஆபேரிக் கிருதியான 'நகுமோமு' விலே என்னுடைய சொந்த கற்பனைகள் அதிகமாக இருக்கின்றன. அடுத்தபடியாக அற்புத ராகமாலிகையான 'விரித்த செஞ் சடையாட' காம்போஜியில் 'திருவடி சரணம்'முதலியன வெளியானதும் அவற்றைக் கேட்டு ரசிகர்கள் பாராட்டினார்கள்.

### சுற்றுப்பிரயாணம்!

கர்நாடக சங்கீதப் பிரியர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்ய அகில இந்திய சுற்றுப் பிரயாணம் செய்து கச்சேரிகள் செய்தேன். 1935-ல் கோலாலம்பூரிலும், மற்ற பகுதிகளிலும் தொடர்ச்சியாக அநேகம் கச்சேரிகள் செய்தேன். இலங்கைக்கு சென்று அங்கும் பல இடங்களில் கச்சேரி செய்து ரசிகர்களின் விருப்பத்தை நிறைவேற்றினேன். நான் சென்ற இடமெல்லாம் புகழுக்கு மேல் புகழ் கிடைத்தது!

'துகாராம்' என்ற படத்தில் பிரதம பாகத்தில் நடித்திருக்கிறேன்.

### சங்கீதத்தின் தரம்

கர்நாடக சங்கீதத்தின் தரம் மிகவும் குன்றி வருவதை குறிப்பிடுவதில் வருந்துகிறேன். ஸ்ரீ தியாக பிரும்மத்தின் உருப்படிகளுக்கு சமானமானது உலகில் ஒன்றுமேயில்லை, ஆனால் அதைச் சரிவர இப்பொழுது ஒருவரும் பாடுவதேயில்லை. அது மட்டுமா சங்கீத மாணவர்கள் சிறந்த வாக்கேயக்காரர்களை பயபக்தியுடன் நினைப்பது கூட இல்லை.

போதாக்குறைக்கு இப்பொழுது சினிமாவும் வானொலியும் வந்து விட்டன. இதில் முக்கியமாய் சினிமாப் பாட்டுகளுக்கு மெட்டுக்கள் அமைப்போர் சங்கீதத்தின் நுட்பத்தையே அறியாதவர்கள்.

### அனுபவம்!

என்னுடைய இளமைப் பருவத்திலே, ரசிகர்கள் சங்கீதக் கச்சேரிகளைக் கேட்ட அனுபவத்தையும், இப்பொழுது ரசிகர்கள் கேட்கும் அனுபவத்திற்கும் மிகவும் வித்தியாசமுண்டு. அந்தக் காலத்திலே மகா வித்வான்கள் பாடுவதை ரசிகர்கள் மிகவும் ஆர்வத்தோடு கேட்டு மகிழ்ச்சியடைந்து பாராட்டுவார்கள். இப்பொழுது கச்சேரியைக் கேட்கும் ரஸிகர்கள் ஏதோ பொழுதுபோக்காகக் கருதி ஒருவருக்கொருவர் இடையே பேசிக்கொண்டு பாடும்வித்வானின் உற்சாகத்தை குறைத்து விடுகிறார்கள். இப்பொழுது 'மைக்' வந்துவிட்டபடியால் ஒலிபெருக்கி கருவிகள் பாடுவோர்களின் குரலின் இனிமையை இயற்கைக்கு விரோதமாக பிரதிபலிக்கின்றன.

### ஆஹா! ஆஹா! அற்புதம்!

[முசிரி சுப்ரமணிய அய்யரவர்களுடைய சாரீரம் மிகமிக ரஞ்சகமானது! பாவம் செறிந்த கார்வைகளைக் கொடுத்து கமகங்கள் நலிவில்லாமல் முழுமூச்சுடன் அனுபவித்துப்பாடும் பக்குவமும் அவருடைய சாரீரத்தில் அமையப் பெற்றிருக்கிறது. பாடுவது எதுவாயினும், மனோதர்மம் மெருகு, சுகபாவம், இவற்றோடு குழைவு, உருக்கம், ஆகிய இவ்வளவையும் ஒருங்கே சேர்த்து முன் கொணர்ந்து நிறுத்தும் அபாரத் திறமையுள்ளவர் முசிரியார்! பாடும் காலம், பாட்டின் கருத்து, அதற்கு அனுசரணையாக உருக்கமுள்ள பாவம் இவ்வளவும் சேருவதால் ரசிகர்களைப் பற்றி இழுக்கும் சக்தி அவருடைய பாட்டிலே மேலோங்கியிருக்கிறது.

### சங்கீத கலாநிதி!


முசிரி சுப்ரமணிய அய்யர் சென்னை சங்கீத அகாடமியின் வருஷாந்தர மகாநாட்டில் தலைமை வகித்துள்ளார். "சங்கீத கலாநிதி" என்ற பட்டமும் பெற்று கௌரவிக்கப் பட்டார். 1957ம் வருடத்திலே கர்நாடக சங்கீத வித்வான் பரிசை பாரத ஜனாதிபதியிடமிருந்து பெற்று பாராட்டப்பட்டார். இப்பொழுது (1949 லிருந்து) சென்னை மத்ய கர்நாடக சங்கீதக் கல்லூரியிலே பிரின்ஸ்பால் பதவியை ஏற்று திறம்பட சேவை செய்து வருகிறார்.

முசிரி சுப்ரமணிய அய்யரவர்கள் கர்நாடக சங்கீதத்திற்கு சேவை செய்ய திருவையாற்றில் வருடாவருடம் நடைபெறும் தியாகப்ரம்ம உற்சவத்தில் காரிய தரிசியாக பல வருடங்களாகயிருந்து உற்சவத்தை திறம்பட நடத்திவருகிறார்.

முசரியார் கலைப்பண்புள்ள மனதை உடையவர், சுயமதியும், தன்னடக்கமும் உள்ளவர்.

சங்கீத கலாநிதி முசிரி சுப்ரமணிய அய்யரவர்களுடைய அற்புதகானம் வித்வத் மண்டலத்தை பலகாலம் மேன்மைப் படுத்தி வர ஆண்டவன் இன்னருள் பாலிப்பானாக!]


# வருமானக் குறைவை




பழைய லாரிகளுக்கு டி. வி. எஸ்.
சர்விஸ் புத்துயிரளிக்கிறது

# விலக்க டி. வி. எஸ். பணி

பஸ் அல்லது லாரி ஓட ஓட உருப்புகள் தேய்ந்து நலிந்துவிடும். உடனடியாக புதிய உருப்புகள் வாங்க வேண்டிய அவசியமில்லை. தேய்மானத்தை உரிய இயந்திர சாதனங்கள் மூலம் கண்டு பிடித்து வேண்டியன செய்து, நாங்கள் புதுப்பிக்கிறோம். உடைந்த உருப்புகளைக்கூட சீர்செய்து கூடியமட்டும் உருவாக்குகிறோம். புதுப்பிக்கப் பட்ட பாகங்கள் புத்தம் புதியன போலவே உழைக்கும். இத்தேர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பவை 46 வருட அநுபவமும், தொழிலில் நாங்கள் கையாளும் முன்னேற்ற முறைகளுமே. பஸ், லாரி ஓடாமலிருந்தால் வருமானம் குறையும். அக்குறைவை நிச்சயம் தவிர்க்கும் டி. வி. எஸ்.



கிராங்க் ஷாப்ட் புதுப்பிக்கும் இயந்திரம்



கோணலுள்ள கிராங்க் ஷாப்டை சீர்படுத்தும் இயந்திரம்

**டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் பிரைவேட் லிட்.**

மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்

TVS

**சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்.**

மதராஸ்

TVS/209 a

# தொழில் நுணுக்குகள்

**விசால்தேவ்**

## ப்ளூ ப்ரிண்ட் பேப்பர்.

ப்ளூ ப்ரிண்ட் பேப்பர் தயாரிக்க கிளேஸ் செய்யப்படாத (unglazed) பேப்பரே நல்லது. ஆனால் அது மெல்லியதாக இருக்கக் கூடாது. ஏனெனில் ஈரம் பட்டால் அது கிழிந்துவிடும். காகிதத்தின்மேல் பூச ஐந்து வகையான கலவைகள் தயாரிக்கும் முறை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் விருப்பமும் வசதியுமான ஏதாவதொரு கலவையை உபயோகிக்கலாம். இதற்குப் பயன்படும் இரசாயனப் பொருள்கள் பிரகாசம் பட்டால் கெட்டுப்போகக்கூடியவை. ஆகையால் இருட்டறையிலே இவற்றைக் கலக்க வேண்டும். வைத்திருக்கவேண்டும். அதிக நேரம் நீரில் வைத்திருந்தாலும் அவை கெட்டுப்போகக்கூடியவை. ஆகையால் அதிக நேரம் நீரில் வைத்திருத்தலும் கூடாது. அப்போதைக்கப்போது வேண்டியதைத் தயாரித்துக்கொள்வதே நல்லது.

கலவை 1:—பொடாசியம் பெர்ரிசைனைடை Pot. Ferricynide) பத்து ட்ராமை 4 அவு. ஆவி நீரில் (distilled water) கரைத்து ஒரு பாட்டிலில் மூடிவைத்துக்கொள்ளவேண்டும்.

அயர்ன் அம்மோனியம் சிட்ரேட் (Iron Ammonium Citrate) பதினைந்து டிராமை 4 அவுன்ஸ் ஆவி நீரில் கரைத்து மற்றொரு பாட்டிலில் மூடிவைத்துக்கொள்ள வேண்டும்.

கார்ட்ரிட்ஜ் (Cartridge) அல்லது அது போன்ற பேப்பர் ஒன்றை சமதளமான மேஜை ஒன்றின்மீது விரித்துப் போடவேண்டும். இரண்டு பாட்டில்களிலும் மூடிவைத்துள்ள இரண்டு கரைசல்களையும் ஒன்றாகக் கலந்துகொள்ள வேண்டும். பிறகு இக்கலப்படக் கரைசலை ஸ்பாஞ்ச் (Sponge) என்னும் கடற் பஞ்சால் தொட்டு காகிதத்தின் மேல்பக்கம் ஒரே சீராகப் பூசவேண்டும். ஸ்பாஞ்சைக் கரைசல் நீரில் நனைத்துப் பிழிந்துவிட்டால் அதில் அதிகப்படியாக உள்ள கரைசல் நீர் வெளியேறிவிடும். அப்பொழுது ஸ்பாஞ்சால் பூச ஆரம்பிக்கவேண்டும். இருட்டில் பூசுவது சிரமமாகப்பட்டால் மங்கலான சிகப்பு மின்சார ஒளியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். கரைசல் பூசிய காகிதத்தை இருட்டில்தான் காயவைக்க வேண்டும். காய்ந்த காகிதத்தை கருப்பு காகிதப் பைகளில் பத்தரப்படுத்தவேண்டும். மேலே கொடுக்கப்பட்டுள்ள கரைசல் அளவு இம்பீரியல் சைஸ் (22" × 30") காகிதம் 20-க்குப் பூசப் போதுமானது.

கலவை 2 (அ) 13 பின்ட் ஆவி நீரில் 6 ராத்தல் அயர்ன் அம்மோனியம் ஆக்ஸலேட் (Iron Ammonium Oxalate) கரைத்துக் கொள்ளவும்.

(ஆ) 15 பின்ட் ஆவி நீரில் 3¾ ராத்தல் அயரின் சோடியம் ஆக்ஸலேட் (Iron Sodium Oxalate) கரைத்துக்கொள்ளவும்.

(இ) 15 பின்ட் ஆவி நீரில் 4½ ராத்தல் அயர்ன் அம்மோனியம் சிட்ரேட் (Iron Ammonium Citrate) கரைத்துக்கொள்ளவும்.

(ஈ) 2 பின்ட் ஆவி நீரில் 5 அவுன்ஸ் அயர்ன் ஆக்ஸலேட் (Iron Oxalate) கரைத்துக்கொள்ளவும்.

(உ) 15 பின்ட் ஆவி நீரில் $2\frac{1}{8}$ ராத்தல் பொடாசியம் பெர்ரிசைனைடு (Pot. Ferricynide. ¼ ராத்தல் அயர்ன் பொடாசியம் ஆக்ஸலேட் இரண்டும் கரைத்துக்கொள்ளவும்.

மேலே கண்ட ஐந்து கரைசல்களையும் தனித்தனியாகத் தயாரித்து ஐந்து தனித்தனி பாட்டில்களில் வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு கீழ்க்கண்ட அளவில் அவற்றை ஒன்று சேர்க்கவேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அ | கரைசல் | ... | 8 | பின்ட் |
| ஆ | ,, | ... | 1 | ,, |
| இ | ,, | ... | $1\frac{1}{8}$ | ,, |
| உ | ,, | ... | ½ | ,, |
| ஊ | ,, | ... | 2 | ,, |
| ஆவிநீர் | | ... | 6 | ,, |

இக்கலவைக் கரைசலை முன் விவரித்தபடி காகிதத்தில் பூசி காயவைத்துக்கொள்ள வேண்டும்.

கலவை 3.

| | |
|---|---|
| ஆவிநீர் .... | $3\frac{1}{2}$ பின்ட் |
| பொடாசியம் பெர்ரிஸ சனேடு | $1\frac{3}{4}$ அவு. |
| அயர்ன் அம்மோனியம் ஆக்ஸலேட் | $6\frac{1}{2}$ ,, |
| அயர்ன் அம்மோனியம் சிட்ரேட் | $1\frac{7}{8}$ ,, |
| அயர்ன் சோடியம் ஆக்ஸலேட் | $1\frac{1}{8}$ ,, |

நான்கு ரசாயனப் பொருள்களையும் நீரில் கரைத்து முதலில் விவரித்தபடி உபயோகிக்கலாம்.

கலவை 4

| | | |
|---|---|---|
| ஆவி நீர் | $4\frac{1}{2}$ | பின்ட் |
| அயர்ன் சோடியம் ஆக்ஸலேட் | $3\frac{1}{4}$ | ,, |
| பொடாசியம் பைக்ரோமேட் | $\frac{1}{16}$ | ,, |
| அயர்ன் ஆக்ஸலேட் | $\frac{44}{109}$ | ,, |
| அயர்ன் அம்மோனியம் சிட்ரேட் | 5 | ,, |
| பொடாசியம் பெர்ரிசைனேடு | $1\frac{3}{8}$ | ,, |
| சிட்ரிக் ஆஸிட் | $\frac{3}{4}$ | ,, |

ஆறு சரக்கையும் ஆவி நீரில் கரைத்துக் கொண்டு முதலில் கூறியபடி உபயோகிக்கலாம்.

கலவை 5: 18 அவுன்ஸ் ஆவி நீரில் $3\frac{3}{4}$ அவுன்ஸ் அயர்ன் அம்மோனியம் சிட்ரேட்டைக் கரைத்து ஒரு பாட்டிலில் வைத்துக் கொள்ளவும். 18 அவுன்ஸ் ஆவி நீரில் $2\frac{5}{8}$ அவுன்ஸ் ரெட் பிரஸ்ஸியே ஆப் பொடாஷ் (Red Prussiate of Potash) கரைத்து மற்ளுரு பாட்டிலில் வைத்துக்கொள்ளவும். பிறகு இரண்டையும் ஒன்ருகக் கலந்து முதலில் கூறியபடி உபயோகிக்கவும்.

### பம்ளிமாஸ் சாயம்

நாரத்தை இனப் பழங்களுள் (Citrus fruits) பம்ளிமாஸே மிகப் பெரிது. ஆனல் இது சாப்பிட அவ்வளவு ருசியாக இருப்பதில்லை. இதனல் இதற்குக் கிராக்கியும் குறைவே. சமீபத்தில் அமெரிக்காவில் பிளரிடா சர்வகலாசாலையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சிலர் இப்பழத்திலிருந்து சாயம் தயாரிக்கும் முறை ஒன்றைக் கண்டறிந்துள்ளனர். இப்பழத்துக்கு ஒருவகைக் கசப்பு ருசியைக் கொடுக்கும் சத்தொன்று அதில் அடங்கியுள்ளது. அந்தசத்தைப் பிரித்தெடுத்து அதிலிருந்து கம்பள ஆடைகளுக்கு நல்ல நிறம் கொடுக்க ஏற்ற உயர்தரமான சாயம் ஒன்றைத் தயாரிக்கலாம் என அவர்கள்




வண்ணத்திப்பூச்சியைப் புஷ்பம் வசீகரிப்பதுபோல,
இவை மக்களை வசீகரிக்கின்றன.

பிரசிடெண்ட்
டாய்லெட்ஸ்

வெஜிடபிள் கூந்தல் தைலம்,
டாலகம் பௌடர்கள் &
ஸ்னோ

தயாரிப்பாளர்கள்
ரதாட் டிரேடிங் கம்பெனி,
சென்னை-1



கண்டறிந்துள்ளார்கள். இந்த சத்தை ஆங்கிலத்தில் நாரிஜின் (Narigin) எனச் சொல்லுவார்கள். இந்நாரிஜின்னிலிருந்து தயாரிக்கப்படும் சாயத்தின் நிறம் வாசந்திநிறம் (Red-yellow) அதாவது செம்மஞ்சள் நிறத்திலிருக்கும். கம்பளம், பட்டு இரண்டு வகையான நூல்களுக்கும் சாயமேற்றச் சிறந்தது. வெயில், காற்று, மழை முதலியவைகளால் இச்சாயம் நிறம் மங்குவதில்லை. மரச் சாமான்களின்மீது பூசவும் இச்சாயத்தை உபயோகிக்கலாம். இப்புதிய கண்டுபிடிப்பின் பயனாக இனி பம்ளிமாஸுக்கு எதிர் காலத்தில் கிராக்கி கூடலாம்.

## மின்சார இன்குபேட்டர்

மின்சாரத்தின் உதவியால் அடைகாக்கும் பெட்டிகள் 400 அமெரிக்காவிலிருந்து நம் நாட்டுக்கு இப்பொழுது வந்துள்ளன. இப்பெட்டிகள் நம் நாட்டின் பலவேறு ராஜ்யங்களுக்கு மத்திய அரசாங்கம் அனுப்பியுள்ளது. இப்பெட்டி ஒவ்வொன்றும் ஒரே சமயத்தில் 450 முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கக்கூடியது. மின்சார வசதியுள்ள நகரங்கள், கிராமங்களில் தனியார்கள் இந்த இன்குபேட்டர்களைவாங்கி அமைத்துக் கோழிக்குஞ்சு பொரித்து விற்பனை செய்து வாழலாம், நல்ல லாபகரமான தொழில்.

## பூவேலை செய்யும் மெஷின்

பெண்கள் கையால் துணிகளில் அழகாகப் பூவேலை செய்கிறார்கள் அல்லவா? இதை ஆங்கிலத்தில் (Fret-work) எனச் சொல்லுவார்கள். இப் பிரெட் ஒர்க்கைச் செய்ய இயந்திரம் ஒன்று இப்பொழுது நம் நாட்டில் தயாராகிறது. இதன் விலை ரூ. 150 தான். இதைக் கொண்டு பெண்கள் எல்லாவிதமான பூ வேலைகளையும் சுலபமாகவும் சீக்கிரமாகவும் செய்யலாம். மணிக்கணக்கிலோ நாட்கணக்கிலோ ஒரு பூவேலை செய்யச் செலவிட வேண்டாம். எவ்வளவு பெரிய பூ வேலையானாலும் சில நிமிடங்களிலேயே முடித்து விடலாம். இவ்வியந்திரத்தின் உதவியால் ஓழிந்த நேரங்களில் வேண்டியவர்களுக்கு பூவேலை சுலபமாகச் செய்து கொடுத்து பணமும் சம்பாதிக்கலாம். பெண்கள் சுலபமாகவும் சௌகரியமாகவும் செய்ய ஏற்ற தொழில் இது. வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதி இயந்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். வேண்டிய டிசைன்களும் அவர்களே தயாரித்து டிசைன் ஒன்று 9 ரூபாய் வீதம் விற்கிறார்கள். ஆகையால் டிசைன் தேவையானால் அவர்களிடமே வாங்கிக் கொள்ளலாம். பிரெட்வொர்க் மெஷின் தயாரிக்கும் தொழிற்சாலையின் விலாசம் இதுதான்.

**லோகேஷ் கிராம கைத்தொழிற்சாலை**
தாணு போஸ்ட்
தாணு ஜில்லா
பம்பாய்

LOKESH VILLAGE INDUSTRIES,
DAHANU P. O.
Thana District
Bombay.

## எக்மார்க் கண்ட்ரோல் லாபரடரி


விவசாயம், தோட்டம், ஆடுமாடு வளர்ப்பு மூலம் கிடைக்கும் பொருள்களை சோதித்து தரம் பிரித்து விற்பனைக்கனுப்புவதை நோக்கமாகக் கொண்டதே எக்மார்க் ஸ்தாபனமாகும் எக்மார்க் என்பது விவசாய வாணிபம் (Agricultural Marketing) என்பதன் சுருக்கமே ஆகும். இந்த ஸ்தாபனத்தின் பிரதேச காரியாலயங்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை, குண்டூர், ராஜ்கோட், கொச்சி, ஜலந்தர் ஆகிய ஏழு இடங்களில் நிறுவப்பட்டு வருகின்றன. இப்பிரதேச காரியாலயங்கள் ஏழையும் பராமரித்து கண்காணிப்பதோடு இத்துறையில் ஆர்வமுள்ள படித்த இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதையும் நோக்கமாகக் கொண்டு நாகபுரியில் எக்மார்க் கண்ட்ரோல் லாபரடரி ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. நம்நாட்டு விவசாயமும் விவசாய சம்பந்தமான பொருள்களின் வாணிபமும் தொழில்களும் வளம் பெற இதன் மூலம் நல்லதொரு வாய்ப்பு கிட்டலாம்.

## உலகத்திலேயே அதிக நெல் விளைவது நம்நாட்டில்தான்!

காமன்வெல்த் எகனமிக் கமிட்டி காமன்வெல்த் நாடுகளில் நெல்விளைவைப் பற்றி புள்ளி விவரங்கள் சேகரித்து ரைஸ் புல்லடின் (Rice Bulletin) ஒன்று வெளியிட்டுள்ளது. அதில் கண்டுள்ள விவரப்படி காமன்வெல்த் நாடுகளில் நெல் உற்பத்தியில் முதன்மையாக நிற்பது நம் பாரதம்தான். அதுமட்டுமல்ல நெல் மொத்த விளைவில் உலகத் தலைமை தாங்குவதும் நமநாடுதான். நம் நாட்டில் 1957-58ல் மொத்தம் 78,200,000 ஏக்கரில் நெல் பயிராகி இருக்கிறதென்றும் விளைச்சல் 28,142,000 டன் அரிசியாக இருக்குமென்றும் அது மதிப்பிட்டுள்ளது. 1956-57ல் பயிரான பரப்பு 78,174,000 ஏக்கர், விளைவு 28,142,000 டன் அரிசி! ஏக்கர் கூடியிருக்கிறது ஆனால் விளைவோ கூடவில்லை! நெல் விளைச்சல் விஷயத்தில் பின் நோக்கிச் செல்லும் நம்நாட்டுக்கு நெல் விஷயத்தில் உலகத் தலைமை என்றால் அதை விந்தை என்பதைத் தவிர வேறென்ன சொல்லுவது? ★

சென்ற இதழ் தொடர்ச்சி

73




அ சேன்ராஜ்

சூழல் காட்சி

ராஜ: தேவதச்சா! தேவதச்சா!

தேவ: என்ன ராஜசிம்மா? ஏனிந்தப் பரபரப்பு?

ராஜ: கொந்தளித்துச் சூழ்கிறது கடல்; அசையாமல் அமர்ந்திருக்கும் நிலத்தைப்போல் அமைதியா யிருக்கிறாயா?

தேவ: புயலில் அழிந்து விடுவோமே என்று புல் கவலைப்பட்டால் ஆகுமா? நாமெல்லாம் ஊழிப் பெருங்கூத்தில் பறந்தோட வேண்டிய சருகுகள். உலகைச்சுற்றி ஒலித்துக் கொண்டிருக்கும் கடல் அதையேதான் அன்றாடம் நினைவு படுத்திக் கொண்டிருக்கிறது.

ராஜ: தேவா, தத்துவமா பேசுகிறாய்! குயிலுக்கெதிராகக் காகங்கள் சதி செய்கின்றனவே.

தேவ: ஆனால் குயிலை வெல்ல முடியாதே!

ராஜ: வெல்வது அவர்கள் நோக்கமல்ல; கொல்வதல்லவா குறிக்கோள். அதற்காகப் பருந்தொன்றின் நட்பைப்பெற்று விட்டனவே.

தேவ: ராஜசிம்மா, நீ சொல்வது புரியவில்லை. உபமானத்தில் ஒளிந்து விளையாடியது போதும்; உண்மையை நேரடியாகச் சொல்லு.

ராஜ: முதலில் என் வினாவிற்கு விடை கூறு; விரூபகரின் சிற்பங்களில் நீ முத்தாய்ப்புத் திருத்தங்கள் செய்ததுண்டா?

தேவ: (கேலியாகச் சிரித்தவண்ணம்) ராஜசிம்மா, உன்னை அறிவாளி என்றல்லவா எண்ணினேன்; திரை கடலின் அலையாட்டத்தைத் தடாகம் திருத்துவதா? வான் நிலவிற்கு வையத்து அகல்விளக்கு ஒளியூட்டுவதா? தெய்வத்தை மனிதன் திருத்துவதா? யார் இந்தப் புது கதையை எழுதியவர்கள்?

ராஜ: உன்னையும் என்னையும் தவிர்த்த மற்ற சிற்பிகள்

தேவ: எங்கே?

ராஜ: விரூபகரின் இதயத்தில்! கல்லிலே பழகுகிறவர்களல்லவா? ஆழப் பொளிந்து விட்டார்கள்: அவருடைய தலைமைப் பதவியை நீ பறித்துக்கொண்டாயாமே?

தேவ: யார் சொன்னது? அவராக அளித்தார். இளைஞன் என்று ஏற்க மறுத்தேன். வற்புறுத்தி வழங்கிவிட்டு ஆசீர்வதிக்கவும் செய்தாரே!

ராஜ: எனக்குத்தான் தெரியுமே! ஆனால் இன்று அதற்கெல்லாம் புதுப்பொருள் கொடுத்து விட்டார்கள்.

தேவ: ராஜசிம்மா, இந்தப் பொறாமையில்லையென்றால் மரணங்கூட கலைஞர்களை வெல்ல முடியாது. நான் இப்போதே விரூபகரிடம் செல்கிறேன்.

ராஜ: அதனால் கோபம் அதிகமாகும். காலம் அவர் உள்ளக் கொதிப்பைக் குளிரச் செய்யட்டும்!

[திரை]

காட்சி 10

[அரண்மனை: அரசர், வேல்விழி, பரஞ்சோதியார் ஆகிய மூவரும் நடன அரங்கில் தனித்திருக்கின்றனர். தேவதச்சன் நுழைகிறான்.]

தேவ: வணக்கம் அரசே! வணக்கம் பரஞ்சோதியாரே! அரசே, என்னை அழைத்தீர்களாமே?

நரசிம்மவர்மர்: ஆம், தேவதச்சா. இப்படி அமர்ந்திடு! (அமருகிறான்) நமக்கும் பல்லவத்தின் நாட்டிய கலாரத்தினம் வேல்விழிக்கும் சின்னதொரு ஆசை!

தேவ: காத்திருக்கிறேன் நிறைவேற்ற!

நர: அதுதான் வேண்டும். இதோ, இந்த நடன அரங்கைப் பார்த்தாயா? அலங்கார

மில்லாத ஆரணங்கைப்போல் நிற்கிறதல்லவா? வானில்லா வையம், தேனில்லா மலர், நீரில்லாத் தடாகம், கூரில்லா வேல், சுடரில்லா தீபம்,–இவற்றிற்கு நான் உவமை என்று நிற்கிறதல்லவா?

தேவ: அதனால்...?

நர: உன் கைபட வேண்டும்; உளிபட வேண்டும். இங்கே நிலவு தோன்றவேண்டும்; வான்வளைவு கவின்பெற அமையவேண்டும்; தேன்மடை திறக்கவேண்டும்; நீர்நிலை அலைய வேண்டும்; கூர் ஏறவேண்டும்; சுடர் ஒளிர வேண்டும்! (வேல்விழி கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கிறாள்)

தேவ; ஆனால், முற்றிலும் என் கற்பனைக்கே விட்டுவிட்டீர்களே? தங்கள் கருத்து ஏதாவது இருந்தால்........?

நர: எம் கருத்தா? உன் கருத்தின் விளைவைக் கண்டு புகழ்வதுதான்.

தேவ: உங்கள் கட்டளைப்படியே...... ஆனால், ஒரு சிறு விண்ணப்பம்.

நர: வேண்டுவதைக் கேள்; உடனே வழங்கப் பெறும்!

தேவ: ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை... (மென்று விழுங்குகிறான்)

நர: தயங்காமல் கேள்...! தருகிறோம்.

தேவ: ஒன்றுமில்லை... சிற்பிகளின் தலைமைப் பதவியை விருபகருக்கே திரும்ப அளிக்க வேண்டும்', என்று கேட்டுக் கொள்கிறேன்.

நர; ஏன்? மற்றவர்கள் உன் சொற்படி நடப்பதில்லையா? சொல், அவர்களை......

தேவ: அதெல்லாமில்லை, அரசே! அவரவர் தம் பணியைச் செம்மையுற ஆக்குகின்றனர். ஆனால், என்னைவிடக் கைதேர்ந்த சிற்பிகளைக் கண்டால் என்னுள்ளே ஏதோ தடுமாற்றம் தோன்றுகிறது. அதனால்...

நர: கூடாது, கூடாது. பார்த்தீரா, பரஞ்சோதியாரே? எவ்வளவு பெரிய ஆபத்தை நம்மிடம் விற்கப் பார்க்கிறான். கூடாது. நாம் அதற்கு விலை கொடுக்கமாட்டோம்.

தேவ; அரண்மனைப் பணி முடியும் வரையாவது அவரைத் தலைவராகப் பணியாற்றச் சொல்லுங்கள்.

நர: உம், என்ன பரஞ்சோதியாரே?

பரஞ்: அது சரிதானே!

நர: ஆனால் சரி, இங்கு பணி முடிந்தவுடன் மறுபடியும் பாரத்தை நீதான் ஏற்றுக்கொள்ள வேண்டும். என்ன?

தேவ: பணி முடியட்டும். நான் சென்று வரலாமா?

நர: சென்றுவா.

தேவ: வணக்கம். (வெளியேறுகிறான்)

வேல்: அரசே, எனக்கும் களைப்பாயிருக்கிறது. சென்றுவர அனுமதிக்கிறீர்களா?

நர: ஆனால் நாளைக் காலை உன் ஆட்டம். பிறகு தேவதச்சன் வேலைத் துவங்கிவிட்டால் பல நாளைக்கு விருந்து கிடைக்காதே.

வேல்; மன்னர் கட்டளையை மறப்பேனா? நான் வருகிறேன். (விரைந்து வெளியேறுகிறாள்)

பரஞ்: (எழுந்து அரசர்முன் வந்து நிற்கிறார்) வேந்தரே! போர் முடிந்தது; தங்கள் புகழ் நிலைத்தது; இனி எனக்கும் விடுதலையளிக்க முடியுமானால்...

நர: என்ன, எல்லோரும் என்னைத் தனியாக விட்டுச் செல்லப் பார்க்கிறீர்களே!

பரஞ்: இல்லை, அரசே! வாள்கொண்டு இழைத்த பாபத்தை என் வாழ்வுகொண்டு துடைத்திட அவகாசம் தர வேண்டுகிறேன். பாபத்தின் சுமையை இனி என்னால் தாங்க இயலாது. பெருமானின் தொண்டர்க்குத் தொண்டு செய்வதில் என் மீதி நாளைக் கழித்திட அனுமதிக்க வேண்டும். ஆலமுண்ட அரனின் சிறு தொண்டனாய் வாழ்ந்து, செல்லும் வழிக்குப் புண்ணியம் தேடிக்கொள்ள விரும்புகிறேன்.

நர: ஆம், பரஞ்சோதியாரே! அப்பனின் திருவிளையாடலில் ஈடுபட்ட தாங்கள் கோருவது நியாயம்தான். வெண்ணீறணிந்த திருநுதலும் செவ்வானன்ன மேனியும், பிறைமுடித்த பெருமானுமான ஐயனிடம் ஒன்றிவிட்ட அணுக்கத் தொண்டர். உம்மை இத்தனைநாள் அடிமையாய்க்கொண்ட நாமும்தான் சுமக்கமுடியாத அளவு பாபத்தை மூட்டை கட்டிக்கொண்டு விட்டோம்.

பரஞ்: அப்படியொன்றுமில்லை அரசே! மனப் பக்குவமடையும்வரை என்னைப் பாதுகாத்து வந்தீர்கள். இப்போது அனுமதி?

நர: ஆம், இனியும் தாமதிப்போமா? போதும் புரிந்த பாபங்கள். ஆனால் பரஞ்சோதியாரே, நீர் நினைத்தால் பதவியை உதறியெறிந்து போக முடிகிறது. பாபத்தைக் குறைத்துக் கொள்ள–பரமனின் அருள்பெற–வழியும் இருக்கிறது. ஆனால் எம் பாபத்தைப் பகிர்ந்து கொள்ளத்தான் யாருமேயில்லை.

பரஞ்: ஏன் இல்லை? தாங்கள் ஆற்றும் கலைப் பணி போதாதா? அதோ, காஞ்சியின் கற்கோவில் உலகத்துப் பாபிகளின் பாபத்தையே அழித்துவிட்ட நிமிர்வோடு பொலிகிறதே! நினைவாகி வரும் கடல்மல்லைக் கனவுதான், வருங்கால சந்ததியார் இழைக்க இருக்கும் பாபத்திற்கீடாகத் தாங்கள் சேர்த்து வைக்கும் புண்ணிய மேருவாயிற்றே! அரசே! இப்போது அனுமதி தாருங்கள்,

நர: சென்றுவாருங்கள்! (விழிகள் நீர்வடிக்க எழுந்து அவர் மேனிதழுவி) சென்றுவாருங்கள்! தாங்கள் இருந்தவரை இந்த அரண்மனை ஆலயமாய்க் காட்சி தந்தது! தாங்கள் ஒருவரை இழக்கப் போகிறோம் என்ற எண்ணத்திலேயே தெய்வீகத்தன்மை பெயல்

லாம் குடிபோய் விட்டதுபோல் பிரமை தட்டு கிறது. ஆனால் எமக்காகப் பாபத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருங்கள் என்று கூறமுடியுமா? சென்று வாருங்கள், அவனருள் தேடிச் சென்று வாருங்கள்! (திடீரென்று) சற்று நில்லுங்கள்! தாங்கள் இப்போது செல்வ தெங்கே?

பரஞ்: எங்கே செல்வேன்? எம்மூர் திருச்செங் காட்டங்குடிக்குத்தான். அங்கு சென்று மனை யறம் காத்து மகேசனின் தொண்டரைத் தொழுது வாழ்வேன்!

நர: ஆனால் சற்றுப் பொறுங்கள்! யாரங்கே? (சேவகன் ஒருவன் ஓடிவந்து வணங்குகிறான்) ஓடிச் சென்று நிதியமைச்சரிடம் கூறி பிகுந்த பொற்குவை கொண்டு நொடியில் இங்கு வா! (வெளியே ஓடுகிறான் சேவகன்)

பரஞ்: எதற்கு மன்னா இவையெல்லாம்?

நர: என்ன கேள்வி, பரஞ்சோதியாரே? பல்லவ "மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித், தொன்னகரம் துகளாகத் துளை நெடுங்கை வரையுகைத்துப் பன் மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித் தொகையும் கவர்ந்து" கொணர்ந்த உம்மை இன்று வெறுங் கையுடன் அனுப்புவதா? (சேவகன் வருகிறான். அவனிடமிருந்து பொற் குவையைப் பெற்றுப் பரஞ்சோதியாருக்கு அளிக்கிறார்) எடுத்துக் கொள்ளுங்கள்! மதி யணிந்தார் திருத்தொண்டர் உமக்கு அளிப்ப தால் பெருமை பெறுகிறோம்! 'உம்பர்பிரா னடியாரை உணராதே கெட்டொழிந்தேன்; வெம்பு கொடும் போர் முனையில் விட்டிருந் தேன். எம்பெருமான் இது பொறுக்க வேண்டும்!' இப்போது இந்நிதியம் கொண்டு செம்மை நெறித் தொண்டு செய்திடுக!

பரஞ்: பெருமானின் அருள்பெற்று பொன்றுப் புகழ் பெறுவீர்! நான் வருகிறேன்.

நர: வாருங்கள்!

[பரஞ்சோதியார் செல்ல நரசிம்மவர்மர் அசை யாமல் நிற்கிறார்]

[திரை]

## காட்சி 11

[முன் காட்சியின் தொடர்ச்சி: அரண்மனையை யொட்டிச் செல்லும் ராஜபாதை. தேவ தச்சன் மெதுவாக நடந்து செல்கிறான். விருபகருக்கு நியாயம் செய்துவிட்டது போன்ற ஒரு நிறைவு. புதிய பணியைப் பற்றிய நினைவு. இரண்டின் இழுப்பில் அசைந்து செல்கிறான். வேல்விழி விரைந்து வந்து அவனை நெருங்குகிறாள்]

வேல்: மன்னிக்க வேண்டும்.

தேவ: வேல்விழியாரா! என்ன வேண்டும்!

வேல்: நாளைப் பணிக்கு இன்றே கனவுகாண ஆரம்பித்துவிட்டீர்கள் போலிருக்கிறதே!

தேவ: கலைஞன் வாழ்வே கனவுதானே? கனவு என்றால் என்ன? தெரியுமா?

வேல்: மனதிலெழும் ஆசைகளின் நிழ லாட்டம்; அப்படித்தானே?

தேவ: இல்லையில்லை. சாதாரணப் பொருள் களை அசாதாரண விழிகளால் காணமுயலும் முயற்சியின் வடிப்பு.

வேல்: நினைவு தீராஉள்ளத்தோடு தேய்வதும், வளர்வதுமாய்த் திரிகின்ற நிலவு, என்று சொல்லலாமல்லவா?

தேவ: துணிவில்லாதவர்கள், நினைவைத் தீர்த் துக்கொள்ளத் திறனில்லாதவர்கள் அப்படித் தான் சொல்லிக்கொள்வார்கள். என்வரை கனவு, உருவாகவிருக்கும் சிற்பத்தின் உள்ளுணர்வுதான்.

வேல்: சொல்லிலும் உங்களை வெல்லமுடியாது போலிருக்கிறதே! தாங்கள் கல் பொளிவீர் கள் என்றுதான் இதுவரை எண்ணியிருந் தேன்.

தேவ: ஆனால் இப்போது?

வேல்: சொல் பொழிவதிலும் திறன் பெற்ற வர் என்று தெரிந்துகொண்டேன். இப்பிறப் பில் சிற்பியானாலும் முற்பிறப்பில் கவிஞராய்த் தானிருக்கவேண்டும்.

தேவ: அடுத்த பிறப்பில் ஆடற்கலையில் திறம் பெறவேண்டுமென்று ஆசை தோன்றுகிறது, உங்கள் ஆட்டத்தைக் கண்டபின்!

வேல்: பாராட்டியது போதும். தங்கள் கலைக் கூடத்திற்கு ஒருநாள் வர அனுமதிப்பீர்களா?

தேவ: காண்பதற்கன்றி புதைப்பதற்கா கலை கள் வளர்க்கிறோம்? எப்போது வேண்டுமோ அப்போது வரலாம்!

வேல்: மிக்க நன்றி. நான் சென்றுவருகிறேன். (செல்கிறாள்)

[திரை]

## காட்சி 12

[வேல்விழியின் உப்பரிகை. வேல்விழியும் புகழேந்தியும் அருகருகே அமர்ந்திருக்கின்றனர்.]

வேல்: புகழா, அரண்மனை நடன அரங்கில் பல மாற்றங்கள் நிகழப்போகின்றன தெரியுமா?

புகழே: என்ன மாற்றங்கள்? வானத்தைப் பந்தலாக்கி, நிலவை விளக்காக நிறுத்தி வைத்து, தாரகைகளை முத்துத் தோரணங் களாக்கி, வையத்தை ஆடுதரையாக்கப்போகி றீர்களா? இல்லை தாமரை மேடையாக, முல்லை யும் மல்லிகையும் விளக்கம் ஏந்த, தென்றல் தாளமிட வண்டினம் யாழை மீட்ட, அல்லியை ஆடவைக்கப் போகிறீர்களா? என்ன மாற்றம்? சொல்லேன்.

வேல்: இவைகளையெல்லாம்விட அற்புதமான மாற்றம்! கலைவேந்தர், தேவதச்சர் கைபட்ட பதுமைகள் அரங்கில் தெய்வக்களை சேர்க்கப் போகின்றன!



## செல்லம் அழுதது ஏன்?



பிற்பகல் வேளை ; பித்தான்கள் உடைந்து காலரிலும் கைக... லும் கிழிந்திருந்த என் கணவரின் சட்டைகளை நான் தை... துக்கொண்டிருந்தேன். அதே சமயம் பக்கத்து வீட்டுப் பப்பியுடன் விளையாடிக் கொண்டிருந்த என் குழந்தை செல்லம் திடீரென வீரிட்டு அழுதாள்; அந்த அதிர்ச்சியில் தையல் ஊசியே என் கையில் ஏறிவிட்டது. கோபத்துடன் திண்ணைக்கு ஓடி வந்தேன். அதே சமயம், பப்பியின் தாயார் கண்ணம்மாவும் அங்கு ஓடி வந்து செல்லத்தை வாரியெடுத்து சமாதானம் செய்ய முயன்றாள்:
"ஆரு அடிச்சாம்மா என் செல்லக் குழந்தையை?"

"மாமி, ப...ப...பப்பி என் பொம்மயோட கவுனை அழுக்காக்கிட்டா, மாமி!" என்று விசித்து விசித்துக் கூறினாள் செல்லம்.

"அவ்வளவுதானே. பப்பியை நாம்ப நல்லா அடிச்சுட்டு உன் பொம்மைக்குப் புதுசா ஒரு கவுன் வாங்கிப் போட்டுடலாம். வா!" என்று தேற்றிவிட்டு, இரு குழந்தைகளையும் தன்னோடு அழைத்துச் சென்றாள் கண்ணம்மா. கண்ணம்மாவிடம் காணப்படும் தங்கமான குணங்களில் ஒன்று, தன் குழந்தைகளைப் போலவே பிறர் குழந்தைகளையும் அரவணைத்துக்கொள்ளும் தன்மை. தன் தந்தை பணக்காரர் என்ற கர்வம் எள்ளளவும் அவளிடம் கிடையாது.-இவ்வாறாக எண்ணமிட்ட...


S. 258A-X52 TM



வண்ணம் அப்படியே கண்ணயர்ந்துவிட்டேன். அப்புறம் செல்லம் வந்து என்னை எழுப்பினாள். கண்விழித்துப் பார்த்ததும், செல்லத்தின் கையி லிருந்த பொம்மைக்குப் புதுக் கவுன் போட்டிருந்தது தென்பட்டது—முன்பிருந்ததைப் போலவே இருந்தது இந்தக் கவுனும். இந்த ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை. இதை ஆட்சேபிக்கக் கண்ணம்மாவின் வீட்டுக்கே சென்றேன்.



கண்ணம்மாவோ, "புதிதாகக் கவுன் ஏதும் வாங்கவில்லையே. சில துணிகளை நான் துவைக்க வேண்டி யிருந்து. கையோடு கையாக அந்தக் கவுனையும் அலசினேன்" என்றாள். அழகாயிருக்கிறதே பேச்சு! வீட்டில் துணிகளைத் துவைத்துக்கொள்ளும் வழக்கம் எங்களுக்கே கிடையாது; சலவை செய்ய வெளியே அனுப்புகிறோம். அப்படியிருக்க, மோதிரக் கையினால் துணி துவைப்பதாகக் கூறினால், நம்புகிறவள் நானா? "அதெப்படியம்மா துவைத் தீர்கள், அடித்துத் துவைக்கும் சத்தங்கூடக் கேட்காமல்?" என்றேன். "என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் இதோ இந்தத் துணிகளைப் பாருங்கள், இப்போதுதான் இஸ்திரி போட்டு முடித்தேன். ஆனால், அடித்துத் துவைக்கும் சத்தம் கேட்காத காரணம்........"




ஆனால் என் கவனமோ அவள் பேச்சில் லயிக்கவில்லை. வெகு பளிச்சென்று சுத்த மாக விளங்கிய அந்தத் துணிகள் மீது என் பார்வையைப் பறி கொடுத்துவிட்டேன். எனினும், அதே சமயம் என் மனதை உறுத்திய விஷயம் வேறொன்று. தன் செய்கையைப்பற்றி நாலு பேர் என்ன நினைப்பார்கள் என்பதை யோசித்துப் பார்த்தாளா இவள்? இதையே நான் இவளிடம் கேட்டதும், அவள் சிரித்துவிட்டு, "நல்ல கேள்வி கேட்டாய். என் வேலையை செய்வதற்கு நான் ஏன் கூச்சப்படவேண்டும்? தாம் தூம் விவகாரமே எனக்குப் பிடிப்பதில்லை. என் கையாலேயே நான் துணிகளைத் துவைத்துக்கொள்வதில் எவ்வளவோ சிக்கனமிருக்கிறது. அன்றாடம் உடுத்திக்கொள்ள சுத்தமான துணிகள் கிடைப்பதோடு அவை நீடித்து நிற்கவும் செய்கின்றன" என்றாள்.

"நீடித்து உழைக்கிறதாவது; அதென்னமாக? எங்கள் வீட்டுத் துணிகள் விறுவிறுவென்று கிழிந்துவிடுவதும் வாங்கின சுருக் கோடு விட்டுப்போய் விடுவதும் சர்வசாதாரணமாகிவிட்டன. வருஷத்துக்குப் பல தடவை புதுத்துணிகள் வாங்கி மாளவில்லை!"

"அடித்துத் துவைப்பதால்தான் அவை கிழிந்துவிடுகின்றன. ஆனால் நாங்களோ அடித்துத் துவைக்காமல் ஸன்லைட் சோப்பினால் சலவை செய்கிறோம்".

பரிசுத்தமுள்ள சிறந்த சோப்பான ஸன்லைட் ஏராளமான நுரை கொழிக்கிறது என்றும், கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலுமுள்ள எல்லா அழுக்குகளையும் நொடிப்பொழுதில் அகற்றிவிடும் நுரை அதனுடையதுதான் என்றும் விளக்கிக் கூறினாள் கண்ணம்மா.

இப்போதெல்லாம் நாலுபேர் நினைப்பதைப்பற்றி நானும் அக்கரைப்படுவதில்லை. துணிகளை வீட்டிலேயே ஸன்லைட் சோப்பினால் சலவை செய்துவிடுகிறேன். அது சிக்கனமான சோப் என்றும், சிறிதும் பெரிதுமாக சுமார் நாற்பதைம்பது உருப்படிகளைச் சுத்தமாகவும் பளிச்சென்றும் வெளுப்பதற்கு ஒரே ஒரு வில்லை ஸன்லைட்டே போதுமானது என்றும் கண்டு கொண்டேன். இப்போதெல்லாம் தினசரி உடுத்துவதற்குத் தூய்மையான துணிகள் எங்களெல்லோருக்கும் கிடைத்துவருகின்றன. கிழிசல்கள் தைக்கப்பட்ட ஆடைகளை அணிந்துகொள்ளும் நிலைமையும், காலர்களையும் கைகளையும் கோட்டுக்குள் மறைத்துக்கொள்ளும் அவசியமும் இனி என் கணவருக்குக் கிடையாது. சிக்கனம் என்றால் எல்லா விதத்திலும் சிக்கனம். ஒரு குடும்பப் பெண்மணிக்கு இதை விட வேறென்ன வேண்டும்?




ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்

S. 258B-X52 TM

புகழே: என் சொல்லைவிட உனக்கு அவன் கல்தான் அற்புதமாய்ப் படுகிறது!

வேல்: கவிஞரில்லையா? எழுத்துக்கு எழுத்துப் பொருள் பார்க்கத் துவங்கி விட்டீர்களே! நீங்கள் அவரோடு பேசியிருக்கிறீர்களா?

புகழே: ஏதோ ஒரு தடவை பேசியிருக்கிறேன்!

வேல்: ஆஹா, தன் கலையில்தான் அவருக்கெத்தனை நம்பிக்கை! கர்வம்! புகழா! அவர் சொல்லிலும் கவிஞர்தான்!

புகழே: இருக்கலாம். (சிணுங்கிக்கொண்டு நகருகிறான்)

வேல்: ஊடலா, உம்...?

புகழே: உன்னிடம் ஊடுவதால் எனக்குத்தான் வேதனை வளர்கிறது. அதனால்தானே என்னை இப்படி வதைக்கிறாய்?

வேல்: இல்லை, புகழா இல்லை! எப்போதும் உங்களருகிலேயே இருக்கிறேனே.

புகழே: (அவளை நெருங்கி அணைத்தவண்ணம்) வேல்விழி, உன்னைவிட்டு ஒரு கணம் பிரிந்திருப்பதும் முடியாததாய் விட்டது!

வேல்: அரசவைக் கவிஞர் நீங்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

புகழே: அந்தச் சுமையை உதறிவிடத் தீர்மானித்து விட்டேன்!

வேல்: கூடாது! நாட்டில் உங்களுக்கிருக்கும் நன்மதிப்பை யிழக்க நான் காரணமாக மாட்டேன். எக்காரணத்தைக் கொண்டும் வேலையை விடமாட்டேன் என்று வாக்களியுங்கள். உம்.

புகழே: எனக்கு நாட்டு மக்கள் வேண்டாம்; வேல்விழி யொருத்தி போதும்; வேல்விழி, நீ இல்லாப் புலவரவையே வெறுத்து விட்டது. கவிதைக்குச் சொற்கள் கிடைப்பதேயில்லை. பலவந்தமாய்ப் பிடித்திழுத்து வந்து பொய்யாட்டம் காட்டவேண்டியிருக்கிறது. அவையில் உயிரற்ற பிணங்களைத்தான் நடமாட விடுகிறேன். எனக்கே வெட்கமாயிருக்கிறது. ஆனால் உன் விழிபட்டால் போதும் வார்த்தைகள் படை திரட்டிவருகின்றன. உன் கரங்கள் என் நெஞ்சைத் தொடும்போது கவிதை எங்கிருந்தோ குதித்தோடி வருகிறது. அது ஏன், வேல்விழி?

வேல்: எனக்கென்ன தெரிகிறது? முதலில் நான்கேட்ட வாக்கை அளியுங்கள்.

புகழே: வர்ணமில்லா வானவில்லை வரையச் சொல்லி என்னை வற்புறுத்தாதே வேல்விழி. அதனால் நாளுக்குநாள் என்புகழ் மங்கிக் கொண்டுவருவதுபோல் அச்சம் தோன்றுகிறது.

வேல்: கோழையுடன் கூடப் பிறந்ததல்லவா அச்சம்? அதற்கு நீங்கள் ஏன் வளர்ப்புத் தந்தையாக முயல்கிறீர்கள்? புகழா, உங்கள் கவிதைத்திறன் தேயும் நிலவுமில்லை, தீர்ந்து போகும் கதையுமில்லை. அது ஓயாத அலையாட்டம். உறையாத புனல் வெள்ளம். உண்மை, புகழா, புகழ்ச்சியில்லை. முதலில் வாக்களியுங்கள், உம்.

புகழே: என்னவென்று?

வேல்: வேந்தர் அவையைவிட்டு விலகமாட்டேனென்றுதான்.

புகழே: அப்படியே, வேல்விழி!

வேல்: என்கரத்தில் கைவைத்து, உறுதியளியுங்கள். (கையை நீட்டுகிறாள்)

புகழே: (அவள் கையைக் கரத்தில் எடுத்து) உறுதியாய்ப் பிரியேன் அரசவையை போதுமா?

வேல்: போதாது, புதுக்கவிதை யொன்று வேண்டும். ஆமாம்.

புகழே: வேல்விழி!

வேல்: இப்போதே வேண்டும்.

புகழே: (சிறிது சிந்தனை...பாடுகிறான்)

அலைமோதும் கடலின் இசைதன்னைச் சொல்லில்
அழியாமல் தேக்குகின்ற பல்லவத்துக் கவிஞன்
நிலை யிழந்து தடுமாறித் திரியும் போது
நெடுந் துயிலும் கொள்ளாது நாளெல்லாம்
கலைபேசும் விழியாள் களைசேர்த்து உயிரூட்டும்
கதையெல்லாம் மலைமீதும் மலர்மீதும்
அலைக்கரத்தால் எழுதிக்காட்டிக் காலமெல்லாம்
அலுக்காமல் பாடுகின்ற பூங்காற்றைத் தழுவ
[வாராய்!

வேல்: அற்புதம், புகழா, அற்புதம்! மனப் புழுக்கத்திற்கு உங்கள் கவிதைப் பூங்காற்று தேவைதான்! ஆனால் இத்தனை சொற்கள் எங்கேதான் ஒளிந்திருக்கின்றன?

புகழே: பிறை நிலவின் இருமுனைகளான உன் விழிக்கடையில்.

வேல்: பொய்!

புகழே: இல்லை, மெய்! உன் விழியில் மொழியைப் பொருத்திவிட்டு, உதடுகளையும் அதனுள் சுழலும் நாக்கையும் ஏன் படைத்தான், பிரமன்?

வேல்: என் விழி மொழி உங்களுக்குத்தானே புரியும்? மற்றவர்களுக்கு?

புகழே: பார்த்தாயா, போதையில் என் கற்பனை முடமாய்விட்டதே!

வேல்: அதற்கு நல்ல மருந்து, பூங்காற்று! 'அலைக்கரத்தால் எழுதிக் காட்டி காலமெல்லாம் அலுக்காமல் பாடுகின்ற பூங்காற்றைத் தழுவச் செல்வோம்! வாருங்கள்.

புகழே: ஆனால் உன் விருப்பம். (எழுந்து செல்கிறார்கள்)

[திரை]

காட்சி 13

[மாமல்லபுரம்: வேல்விழி, மேகலா இருவரும் சிற்பங்களைப் பார்த்துக்கொண்டே வருகின்றனர்



மேகலா; வேல்விழி, விரைவாகப் பார்த்து முடி! அரண்மனைக்குச் செல்லும் நேரமாய்விட்டது!

வேல்: நாளெல்லாம் இங்கேயே இருந்து விடலாம் போலிருக்கிறதே! மேகலா, இந்த ரதங்களைப் பாரேன்!

மேக: ஒரே கல்!

வேல் அதிலே ஐந்து ரதங்கள்! ஏறி நின்று காலத்தின் பெரு வெளியில் ஓடிக்கொண்டேயிருக்கலாம் போலில்லையா?

மேக: மறுக்க முடியுமா?

வேல்: தேவதச்சரே, இவற்றிற்கென்ன பெயர்?

தேவ: டஞ்ச பாண்டவ ரதங்கள்!

வேல்; போற்றுதற்கு வார்த்தையில்லை, தேவதச்சரே! அத்தனையும் பூட்டாத கலைப் பெட்டகம். ஆனாலும் காலதேவனாலும் களவாடிச் செல்ல முடியாதே; காட்டகத்துக் குன்றிலெல்லாம் கலைப்பற்றை நாட்டிவிட்டீர். காணுகின்ற விழியெல்லாம் பரிசாய்ச் சேட்கும் கல ரதங்கள், அற்புதங்கள்! தேவதச்சரே, உங்கள் சிற்றுளியால் உலகத்தையே அளந்து விட்டீர்.

தேவ. இன்னும் கொஞ்ச தூரத்தில் உங்கள் பார்வை வேண்டிக் காத்து நிற்கிறது மற்றொரு படைப்பு! வாருங்கள்! (எல்லோரும் சிறிது தூரம் நடக்கிறார்கள். மேகலா முன்னால் ஓடுகிறாள்)

மேக: வேல்விழி! வேல்விழி! இங்கே ஓடி வாயேன்!

வேல்: (விரைந்து சென்று) என்ன மேகலா?

மேக: இந்த 'வான் கங்கை இறங்கும் காட்சியை'ப் பார்த்தாயா? என்ன அழகு! வையத்தைத் துளைக்கப் பாயும் பேரிரைச்சல்கூடக் கேட்கிறதே!

வேல்: மேகலா, விற்போரில் வேந்தன் பெற்ற வெற்றி யெல்லாம் இக் கலைகட்கீடாகுமா? தேவதச்சரே, நாட்டிற்கும், நரசிங்க பல்லவர்க்கும் நற்புகழைச் சேர்த்து விட்டீர்! அன்றாட உலகைவிட்டு அழியாத உலகிற்கு அழைக்காமல் அழைக்கும் இந்தக் காட்சியை என் மனம் மறக்கவே முடியாது!

மேக: வேல்விழி, பரிதி குருதியில் புரளும் நேரமாய் விட்டது! அரண்மனை செல்வோமா?

வேல்: சொர்க்கத்தைவிட்டு நரகத்திற்கழைக்கிறாயே, நான் வரவில்லை.

மேக: நல்வினைவால் நரகத்தையும் சொர்க்கமாக்கிக் காணலாம். வா, வேல்விழி!

தேவ: ஆமாம், பின்னொருநாள் முழுதையும் காணலாம்.

வேல்: கண்டுமுடிக்க என் ஆயுளே காணாது, தேவதச்சரே.

தேவ: கடமை முதலில்.

வேல்; விழிபடைத்தோர் கடமை, வியத்தகு இக்கலைச் செப்பைக் காண்பதன்றி வேறென்ன?

தேவ; வேல்விழியாரே, மீண்டும் வரலாமே.

வேல்; நீங்களே வழியனுப்புகிறீர்களா? ஆனால் மீண்டும் வருவேன். தினந்தினம் வருவேன்.

தேவ: வருக, வேல்விழியாரே.

வேல்: வருகிறேன். மறந்தேவிட்டேன், தேவதச்சரே! தங்களுக்கென் பாராட்டுதலைத் தெரிவிக்கலாமா?

தேவ: பாராட்டுகள்தானே கலைஞனுக்குப் பொற்காசுகள். அதிலும் உங்களைப் போன்ற கலாமேதைகளின் பாராட்டுகள் கிடைக்க வேண்டுமே! என் நன்றியை தாங்கள் ஏற்க வேண்டும்.

வேல்: வார்த்தையால் நன்றி கூறினால் போதாது. வரவால் கூறவேண்டும்.

தேவ: எங்கே?

வேல்: என் இல்லத்திற்கு. நாளை நிலவு வந்தபின்.

தேவ: வந்தால் வழங்கப் பெறுவது என்ன?

வேல்; பெருங்கலை விருந்துபடைத்த தங்களுக்கு ஒரு சிறு விருந்து.

தேவ: வயிற்றுக்கு மட்டுந்தானா? விழிக்கு?

வேல்: விரும்பினால் அதுவும் வழங்கப்பெறும்.

தேவ: அமுதகலசம் உடைந்து பெருகுவதை யார்தான் விரும்பமாட்டார்கள்.

வேல்: ஆனால் தவறாமல் வரவேண்டும். காத்திருப்பேன்.

தேவ: விழி அழைக்கத் தழுவாத இமையுண்டா? தவறாமல் வருவேன்.

வேல்: நன்றி!

தேவ: நன்றி!

[வேல்விழி கலகலவெனச் சிரித்த வண்ணம் மேகலாவுடன் செல்கிறாள். அவர்களை கவனித்துக் கொண்டிருக்கிறான் தேவதச்சன்]

**தேவ:** (தனக்குள்) வேல்விழி! அந்தச் சொல் தித்திப்பு மணியின் திறந்த சாளரம்! இந்த அழகுப் பதுமையை வடித்தவனல்லவா தேவதச்சன். என்னைப் போய் அந்தப் பெயரலா அழைக்கிறார்களே! உலகத்து இன்ப ஊற்று அவள் விழிகள்! இயற்கை! அதனை வென்ற கலையுண்டா? இல்லை. இல்லை. மனிதன் வளர்த்துக்கொண்ட கலைகள் காலத்தை வென்ற இயற்கையோடு போட்டி போட முடியுமா? தோல்விதான் அடைகின்றன. அவள் விழியின் சுழற்சியைக் கல்லில் வார்க்க முடியுமா? இல்லை, நிலவொளியில் நெளியும் தென்னங்கீற்றை நினைவூட்டும் அவள் கைவீச்சைத்தான் செதுக்க முடியுமா? அவள் ஆடும்போது தாளம் கொட்டும் பாதங்களைத்தான் துடிப்புடன் வடிக்கமுடியுமா? இயற்கை. ஹூம் (பெருமூச்சு)

[திரை]

## காட்சி 14

[காலைநேரம். அண்மைக் கடலின் அலைத்துளிகள் இந்திர வில்லின் வர்ண பேதங்களைச் சிறப்பங்களின்மீது வாரியிறைத்துக் கொண்டிருக்கின்றன. இனிமையான நாதம் எங்கும் நிறைந்து நிற்கும் அந்தக் கடல் மல்லையின் தெய்வங்களெல்லாம் சிறைப் பட்டுக்கிடக்க, கரையோரக் கல்லின்மீது தேவதச்சன் அமர்ந்திருக்கிறான். அவன் விழிகள் அலைகடல் முத்தமிடும் அடிவானில் புதைந்துள்ள கனவை அலசிக்கொண்டிருக்கின்றன. வேல்விழி வருகிறாள்)

**வேல்:** ஓ, இங்கா இருக்கிறீர்கள்? எங்கெல்லாம் தேடுவது? தேவதச்சரே, என்ன நினைவு?

**தேவ:** நேற்றைய விருந்தின் நினைவுதான். விழியாரே, என்விழி படைத்த பயனை நேற்றுத்தான் பெற்றேன்.

**வேல்:** அதற்குப் பிரதியாக ஒன்று வேண்டும்?

**தேவ:** என்ன வேண்டும்? வேல்விழியாரே?

**வேல்:** இந்தப் பன்மையை விடவேண்டும். வேல்விழியென்று ஒருமையில் அழைக்க வேண்டும்!

**தேவ:** அந்த உரிமையை எனக்களிக்கிறாயா, வேல்விழி?

**வேல்:** பார்த்தீர்களா, ஒருமையில்தான் எத்தனை இனிமை!

**தேவ:** ஏன் அப்படி?

**வேல்:** ஒருமை, உறவு நெருக்கத்தைக் குறிக்கிறது. அதனால்தான். வாருங்கள், நடன அரங்கிற்கு.

**தேவ:** அங்கு என்ன இருக்கிறது?

**வேல்:** அங்கு என்ன இல்லை? கொல்லன் அடித்த உளி இருக்கிறது; பல்லவத்தின் கல் இருக்கிறது, உங்கள் உள்ளம் இருக்கிறது; வாருங்கள்.

சூழற்காட்சி.

[நடன அரங்கு]

**வேல்:** தேவதச்சரே, இந்தாருங்கள் உளி; துவக்குங்கள் தொழிலை!

**தேவ:** (உளியை வாங்கிக் கீழே வைத்துவிடுகிறான்) எனக்கு எதுவுமே இப்போது ஓடாது. நான் மிகவும் களைத்துவிட்டேன்!

**வேல்:** களைப்பைப் போக்க நானிருக்கிறேன். கனிரசம் கொண்டுவரட்டுமா?

**தேவ:** உன் கனிவான பேச்சுப் போதாதா?

**வேல்:** ஆனால், காய்ச்சிய பால்...?

**தேவ:** கசப்பைப் பாய்ச்சும் நெஞ்சில்.

**வேல்:** கனிவகை...?

**தேவ:** உன் பனிப் பார்வையைவிட இனிப்பானதா? வேல்விழி, எதுவுமே இப்போது உயிர் ஊட்ட முடியாது.

**வேல்:** என் ஆடல் கூடவா?

**தேவ:** உன் ஆடலா? அதனால் கூடாதது ஒன்றுமில்லை. ஆனால்... ஆடு, ஆடு, என் களைப்பை பறித்தாடு.

[அவள் ஆடத்துவங்குகிறாள். தேவதச்சன் தன்னை மறந்து ரசிக்கிறான்.]

(திடீரென்று) வேல்விழி, எங்கே உளி?

**வேல்:** இதோ! (எடுத்துக் கொடுக்கிறாள்)

**தேவ:** ஆட்டத்தை ஏன் நிறுத்திவிட்டாய்? ஆடு வேல்விழி. 'தாவி வரும் வண்டைச் சிறைப்படுத்திக் குவியும் மலர், அந்த உள்ள நிறைவில் சிரிக்கும் விழிகள்' எங்கே அந்தக் காட்சியை மறுபடியும் அபிநயத்தில் பிடித்துக் காட்டு. (அவள் தாவிவரும் வண்டை இடைக் கைவிரல் நெளிவில் காட்டி அதனைச் சிறைப் படுத்தும் மலர்போல் வலக்கை விரல்களைக் குவித்துக் காட்டுகிறாள், கண்கள் மலர்கின்றன) ஆம், வேல்விழி. இப்படித்தான் காணபவர் மனதை சிறைப்படுத்தி விடுகிறாய். அப்படியே சற்றுநில். தூக்கி நிறுத்துகிறேன் இந்தக் கல்லில். (உளி கொண்டு செதுக்கத் துவங்குகிறான்.)

(மேகலா வருகிறாள்)

**மேக:** வேல்விழி, இங்கா இருக்கிறாய்? அரசர் அழைத்தார். கலைவிழாவிற்கு திட்டம் வகுக்க கலைமன்றத் தலைவர்கள் கூடிவிட்டனர். வா, வா.

**வேல்:** அப்படியா? தேவதச்சரே?

**தேவ:** எப்போதும் என் அருகிலிருக்க முடியாதா, வேல்விழி? நீ அருகிலிருந்தால் உன் விழி என் உள்ளத்தில் செதுக்குவதையெல்லாம் கல்லில் செதுக்கி உலகையே நிறைத்து விடுவேன்.

**வேல்:** கடமை முதலில்! நீங்களே சொல்லியிருக்கிறீர்களே! மன்னித்துக் கொள்ளுங்கள், மாலையில் வருகிறேன்,

(செல்ல யத்தனிக்கிறாள்)

தேவ: என்னை விட்டுப் போகிருயா?

வேல்: என் நினைவைத் துணை விட்டுப் போகி றேனே.

தேவ: மாலையில் வந்துவிடு. என் கலைக் கருவி நீ தான். ஆமாம். அதை மறந்து விடாதே!

(வேல்விழி, மேகலா வெளியேறுகின்றனர். தேவதச்சன் சிலையை நோக்கித் திரும்புகிறான்)

(திரை)

காட்சி 15

(நரசிம்மவர்மர் புடைசூழ நடன அரங்குச் சிற்பங்களைக் கண்டு ஆனந்தம் துள்ள அசைந்து வருகிருர். தேவதச்சன் வேலை செய்து கொண்டிருக்கிருன்.)

நர: தேவதச்சா, உன்னை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை?

தேவ: அதுவே பெரிய பாராட்டுதான் வேந்தே!

நர: மாமல்லபுரத்துச் சிருஷ்டிகள்தான் உயர்ந் தவை யென்று எண்ணினேம்; இப்போது அவற்றையும் வென்று விட்டன இந்த அரங் கில் நிர்மாணித்துள்ள சிலைகள்! அந்த சிம்மத் தூண்கள் சாகா வரம் பெற்றுவிட்ட பெரு மிதத்தில் சிரிக்கின்றதைப் பார்! அந்த நளின மான ஆடல் சிலைகள் எம் போர்க்களத்துப் புகழைப் டணயம் கேட்கின்றனவே! மெழு கிலேகூட இத்தனை மென்மையான உருவங் களை வடிக்க முடியாதே; கல்லிலே எப்படித் தான் நீ கவினுறக் காட்ட முடிந்ததோ? ஆமாம், இது என்ன? நம் அவைக் களத்து ஆடலழகி வேல்விழிதானே?

தேவ: ஆமாம்.

நர: நாமே நினைத்தோம்! நீயே முடித்துவிட் டாய்! அவள் சிலையொன்று அரங்கிற்கு அவ சியம்தான். விழிகள் இன்னும் திறக்கவில்லை போலிருக்கிறதே!

தேவ: விழி திறந்தால்தான் முற்றுப்பெற்று விடுமே!

நர: ஆறல் விரைவிலே முடித்துவிடு! அடுத்த பௌர்ணமியன்று கலைவிழா! விருபகர், கூற வில்லையா?

தேவ: கூறினர், கூறினர்!

நர: அப்போது உனக்கு ஒரு பரிசு அளிக்கப் போகிறேம்!

தேவ: என்னவென்று அறியலாமோ?

நர: இப்போது சொன்னல் சுவைக்காது!

(திரும்பிச் செல்கிருர் பரிவாரத்துடன்)

தேவ: (தனக்குள்) விழிகளைத் திறந்துவிட வேண்டுமாமே? இந்தக் கற்சிலையின் விழி களைத் திறந்தென்ன பயன்? மொழிபேசும் அவள் விழியெங்கே? இந்த ஊமைக்கல் விழி யெங்கே? என்ன பைத்தியக்காரத்தனம்? இப்படியே இருக்கட்டும். இந்தச் சிலைக்குக் கண்கள் கிடையாது; கண்கள் கிடையாது தான். வேல்விழி ஏன் இன்னும் வரவில்லை? விழியிடம் இமைதானே செல்லவேண்டும்? நானே செல்கிறேன்! (செல்கிருன்)

[திரை]

காட்சி 16

[வேல்விழியின் மாளிகை! புகழேந்தி, வேல் விழி தனித்திருக்கின்றனர். தேவதச்சன் தூரத் தில் வந்துகொண்டிருக்கிருன். பாதச்சலங்கை யின் ஒலி கேட்கிறது·]

தேவ: யாருக்காக நடனமாடுகிருள்? யாருக்காக இருக்கும்? எனக்காகத்தான்! இன்று புதிதாக ஏதாவது பயிற்சி செய்துகொண்டிருப்பாள்! (முன்னேறுகிருன். திடீரென்று கைதட்டு! ஆண்குரல்.) யார் குரல்? யார் குரல்? குழைந்து குழைந்து ஒலிக்கிறதே.

(உப்பரிகையை நோக்கி இருவர் ஓடிவரும் ஒலி. உயரே எறிட்டுப் பார்க்கிருன்.)

உப்பரிகையில்:

புகழே: வேல்விழி, இந்தக் காதல் தூற்றலில் எத்தனை நாள்தான் நனைந்துகொண்டிருப்பது?

வேல்: வேறு எங்கே செல்வது?

புகழே: மணவாழ்வெனும் இன்பக் கோயிலுக் குள்தான். எத்தனை காலம் வெளியிலேயே சுற்றி ஓடிக்கொண்டிருப்பது?

வேல்: ஏன் இத்தனை அவசரம்? நான் எங்கே போய்விட்டேன்?

புகழே: என்னருகில் தானிருக்கிருய், என்ருலும் கட்டுப்பாடு இடையே நிற்கிறதே.

வேல்: கலைவிழா முடியட்டுமே.

புகழே: அது பௌர்ணமியன்றல்லவா?

வேல்: இடையில் இரு தினங்கள்தானே?

புகழே: இரு யுகங்கள் என்று சொல்.

வேல்: அதோ, நிலவு.

புகழே: நிறைவு பெறமுடியாமல் வெளிறிக் கிடக்கிறது.

வேல்: இல்லை, 'நிறைவு விரைவில், அதற்குள் அவசரம் வேண்டா'மென்கிறது.

புகழே: ஆனல் எட்டாத தொலைவில் தொங்கு கிறதே?

வேல்: பொழுதுவிடிந்தால் ஒருதினம் என்று நெருங்கிவிடுமல்லவா?

புகழே: ஹூம்! எப்படிப் பெண்கள் ஆண்களை வென்றுவிடுகிருர்கள் என்பது இப்போது தான் புரிகிறது வேல்விழி.

வேல்: இப்போதாவது புரிந்ததே.

மேக: (எட்டிநின்று) விருந்து தயாராகி விட்டது.

வேல். வாருங்கள், உண்டபின் உரையாடலாம். (செல்கின்றனர்.)

தேவ: (தனக்குள்) என்ன, இது? எனக்கொன் றும் புரியவில்லையே? என் கண்ணில்தான்

கோளாறு? இல்லை, கண்ட காட்சியில்தான் கோளாறு? வேல்விழி! அவள் இங்கே கவிஞனைக் காதலிக்கிறாள்; திருமணத்திற் கிசைந்து விட்டாள். பின்? பின், ஏன் என்னிடம் அத்தனை நெருங்கிப் பழகினாள்? வெறும் தோழமையில் தானா? தூய காதல் என்றல்லவா கருதி விட்டேன்! அவள் வார்த்தைகள்? எல்லாமே கலைஞன் கலைஞனிடம் காட்டும் கருணையில், பரிவில் பிறந்தவைதானா? காதல் வர்ணத்தில் தோய்த்தெடுத்தவை என்றல்லவா எண்ணி விட்டேன்? எல்லாமே என் கற்பனைதானா? அவள் என் களைப்பைப் போக்க ஆடினாள், பாடினாள், கடைக்கண் பார்வையில் வாட்டியெடுத்தாள். இவற்றிற் கெல்லாம் என்ன பொருள்? வினாக் கேட்கத் தெரிகிறதே தவிர விடை தெரியவில்லையே. நான்தான் முட்டாளா? இல்லை முட்டாளாக்கப்படுகிறேனா? அவளிடமே கேட்டுவிட்டால்? அப்போது முட்டாள் என்பது உறுதியாகிவிடும். கண்ணால் கண்டு காதால் கேட்டபின் கேள்விக்கென்ன இருக்கிறது? என்ன இருக்கிறது? (மெல்ல வெளியேறுகிறான். வேல்விழியிடம் விடை பெற்று வெளியேறுகிறான் புகழேந்தி)

புகழே: தேவதச்சன்... இங்கென்ன வேலை? எங்கு வந்து செல்கிறான்? ஏன் அவன் உள்ளே வராமலே திரும்பிப் போகிறான்? உம், எங்கே போகிறான்? எங்கே? (தேவதச்சன் பின்னால் செல்கிறான்)

(திரை)

காட்சி 17

[நடன அரங்கு. தேவதச்சன் விரைந்து வருகிறான், புகழேந்தி தூணின் பின்னால் நிற்கிறான்]

தேவ. (வேல்விழியின் சிலையை ஓடித் தழுவிக் கொள்கிறான்) வேல்விழி! வேல்விழி! உன் கண்களைத் திறக்கவில்லையல்லவா? வேண்டாம். அவையேன்? என்மீது மலரத்தான் அவைகட்கு விருப்பமில்லையே. இந்தக் கற்சிலையைத் தழுவும்போது உன் பொன்மேனியைத் தழுவும் தருணம் கிட்டுமென்று கனவு கண்டேன். நீ ஆடிய இந்த அரங்கைத் தகர்த்துவிட்டு என் நெஞ்சத்தையே உனக்கு ஆடுதரையாக்கிவிடக் கனவு கண்டேன். வேல்விழி, நீயென்னைவிட்டு விலகாதே என் கலையின் விசையெல்லாம் நீ! என்விழியே நீதான்! வேல்விழி, என் உள்ளம் என்றோ இறந்துவிட்டது. இனி என் உளிக்கு உணவூட்ட வேண்டியவளே நீதான். என்னை விட்டுப் பிரியாதே. உன் அதரங்களைத்திறந்து பேசு; வேல்விழி, பேசு. உன் அதரங்களில் தான் என் வாழ்வே உறைந்து கிடக்கிறது. ஆம், இந்த அதரங்களில்தான் (சிலையின் அதரங்களை மெல்லத் தடவிய வண்ணம்) இவைகளில்தான். (புகழேந்தி விறுட்டென்று பொறுக்க முடியாமல் வெளியேறுகிறான்.)

புகழே. (தனக்குள்) ஐயோ, காதல் உலகில் பங்கா? நிலவைத் துண்டாடுவதா? வேல்விழி. இருவர் கலைக்குமே அந்த நாலெழுத்துதான் விசை. ஆனால்... ஆனால், ஒருவருக்குத்தானே வாழ்வின் உரிமையை வழங்கமுடியும். உளி சிறியதுதான். இருவர் வாழ்வையுமல்லவா சிதறடிக்க முயல்கிறது. 'வாழ்வு' என்ற மூன்றெழுத்துலகிற்கு முடிவைச் 'சாவு' என்ற இரண்டெழுத்தில்தான் நிறுத்திவிட்டார்கள். இருவரில் எவருக்கு அவள் உரிமையாவது ஒருவருக்குத்தானாக முடியும். ஆனால் மற்றவர்? அந்த ஒருவர் யார்? யார் அந்த ஒருவர்? யார்? (முனகியவண்ணம் இல்லத்தை நோக்கிச் கிறான்.)

[திரை]

காட்சி 18

[வேல்விழியின் இல்லம்]

வேல்: மேகலா, அந்த நீலப் பட்டை எடுத்துவா. குழலில் இன்னும் கொஞ்சம் மல்லிகை சூட்டி விடு. ஒரு ரோஜா மலர் கொடு. இங்கே, இடப்புறத்தில் செருகிவை. ஆம், அப்படித்தான்! முத்துவடம் எங்கே? கொண்டா? மறந்தே போனேனே! பாதச் சலங்கையை எடுத்து வா. அதுதானே அவர் உயிர்?

மேக: கோபித்துக்கொள்ளாதே வேல்விழி! யாருக்காக இத்தனை அலங்காரம்?

வேல்: தேவதச்சருக்காகத்தான்! தெரியாதது போல் கேட்கிறாயே?

மேக: புரியாததால் கேட்டேன்!

வேல்: எதடி புரியவில்லை?

மேக: உன் போக்குத்தான்! இங்கே புகழேந்தி; அங்கே தேவதச்சன்; இடையில் நீ! இது எப்போதும் ஆபத்து! ஏதாவது ஒரு பக்கத்தில் சேர்ந்துவிடுவதுதான் பாதுகாப்பு!

வேல்: எனக்கு இருவர் கலையும் வேண்டுமே!

மேக: ஆனால் ஒருவர்தானே மாலையிட முடியும்?

வேல்: அதற்கென்ன செய்யச் சொல்கிறாய்?

மேக: ஒருவருக்கு உன் கழுத்தை நீட்ட; மற்றவருக்கு உன் திரையிட்ட முகத்தை நீட்டு!

வேல்: யாருக்குக் கழுத்தை நீட்டுவது என்பதுதானே புரியவில்லை!


மேக: புகழேந்தியிடம் திருமணத்திற்கிசைவு தெரிவித்தாயே?

வேல்: எங்கே இசைவு தெரிவித்தேன்? கலைவிழா முடியட்டும் என்றேன்.

மேக: ஆனால் நீ அரசவையில் அடியெடுத்து வைத்தது முதல் புகழேந்தியைக் காதலித்து வந்திருக்கிறாய்; வெளிப்படையாய் கூறியுமிருக்கிறாய்: இல்லையென்று சொல்ல முடியுமா, உன்னால்?

வேல்: இல்லையென்று சொல்லவில்லையே.

மேக: இப்போது புதிதாய் வந்த ஒருவனுக்காக காலமெல்லாம் உன் காலடியை வருடி நின்ற



வரை விலக்கிவிடுவதா? வேல்விழி படித்த பாடத்தை மறக்க முயல்வது பைத்தியக்காரத் தனமில்லையா? விற்றதற்கு மீண்டும் விலை பேசாதே?

**வேல்:** நீ என்னதான் சொல்கிறாய்?

**மேக:** விரைவில் முடிவு செய்யச் சொல்கிறேன். உன் விபரீதப் போக்கால் பல்லவம் இரு கலைஞர்களை இழக்கக் காரணமாகாதே என்று சொல்கிறேன்.

**வேல்:** என் மூளை சுற்றுகிறது, மேகலா! (அருகிலிருந்த ஆசனத்தில் சாய்கிறாள்.)

**மேக:** மூளை சுற்றும்போதும் ஒன்றை மறந்து விடாதே, வேல்விழி! இரு பறவைகள் ஒரு கிளையில் கூடு கட்ட முடியாது! ஆமாம்.

**வேல்:** நான் இருவர் கலையையும் காதலிக்கிறேன். கல்லும் சொல்லும் என் காதலைப் பெற்றுவிட்டனவே.

**மேக:** அந்தக் கல்லும் சொல்லும் உன் ஆடலைக் காதலிக்கின்றனதான். ஆனால் கலைப்பயிற்சி நடத்தவா அவர்கள் வந்து நிற்கிறார்கள்? வாழ்வு! வாழ்வு! வாழ்வு வேண்டியல்லவா, உன் வாயிலில் காத்து நிற்கிறார்கள். வேண்டாத வேதனையால் வாழ்வே வெந்துவிடும்.

**வேல்:** அதை எண்ணித்தான் அஞ்சுகிறேன்.

மேக: அஞ்சி ஒதுங்குவதால் பயனில்லை; ஆராய்ந்து முடிவு சொல்.

வேல். ஐயோ, மேகலா! நான் என்ன சொல்வேன்? நான் ஏன் தேவதச்சனைச் சந்தித்தேன்? அவர் உள்ளத்தில் ஏன் மதுக்குடத்தை கவிழ்த்தினேன்? தங்கள் வாழ்வையே விலையாகக்கொண்டு நிற்கிறார்களே. எவருக்கு என்னை யுரிமையாக்கினாலும், மற்றவரின் கதி? மேகலா, அந்த எண்ணமே என் கழுத்தை நெறித்து விடும்போலிருக்கிறதே மேகலா.

மேக. சற்று அமைதியாயிருந்து சிந்தனை செய். ஒரு கோப்பை கனிரசம் அருந்து. பின்னர் தெளிவு தோன்றும்.

(உள்ளே செல்கிறாள். வேல்விழியின் சிந்தனை மும்முரமாய் வேலை செய்கிறது. மேகலா கோப்பையுடன் வருகிறாள்.)

மேக. இந்தா, இதை முதலில் அருந்து.

வேல். (அதை அருந்திக்கொண்டே) மேகலா பல்லவம் அந்த இருகலைஞர்களையும் இழந்து, விடக்கூடாது அல்லவா?

மேக. ஆமாம், மூவரும் வாழ்வுபெற வேண்டும். ஆனால் அதுமுடியுமா?

வேல். அதற்குத்தான் அற்புதமான திட்டம் ஒன்று உருவாக்கிவிட்டேன்.

மேக. சொல் கேட்போம்.

வேல். சொல்லமாட்டேன். செய்து முடிப்பேன். நீயே அதைக்கேட்டு அதிர்ந்துவிடுவாய்.

மேக. அத்தனை அற்புதமான திட்டத்தை வைத்துக்கொண்டுதானு இவ்வளவு வேதனை?

வேல். வேதனையைச் சுவைத்தபின்தானே வெளியேறும் வழி தோன்றுகிறது. கால் தடுக்கி விழுந்தபின்தான் கல்லைவிட்டு விலக வேண்டுமென்ற அறிவு பிறக்கிறது. குளத்தில் திணறும்போதுதான் நீச்சலின் அவசியம் தெரிகிறது. அதைப் போலத்தான் என் திட்டமும் இருளில் பிறந்தது.

மேக. ஆனுல் அது ஒளிசேர்க்கப் போவதை யெண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

வேல். சரி, சரி, கடிதம் எழுதச் சாதனங்கள் கொண்டுவா.

[திரை]

## காட்சி 19

[புகழேந்தியும் அபராஜிதனும் தனித்திருக்கின்றனர்.]

புகழே: அபராஜிதா, காதல் உலகில் மிகுதியாகக் காண்பதென்ன?

அப: கல்லறைதான்!

புகழே: உம்...ஏன் அப்பா?

அப: பெண்ணிற்கு அழகை வழங்கும் பிரமன் அதனை ரசிப்பதற்கு ஆயிரம் விழிகளையல்லவா படைத்துவிடுகிறுன்!

புகழே: அதனுல்?

அப: ஒரு ஜோடி விழிகள் வெல்கின்றன; மற்றவை கல்லறையில் துயில்கின்றன.

புகழே: தோல்வியுற்றவர்கள் வாழக்கூடாதா?

அப: வாழக்கூடாதென்பதில்லை; வாழமுடியாது!

புகழே. முடியாதா? எதனுல்?

அப. துருப்பிடித்த வாள் போர்க்களத்தில் பயன்படாது; தோல்வியுற்ற உள்ளம் வாழ்வுக் களத்தில் வெற்றிபெருது. கொந்தளிக்கும் கடலுக்கஞ்சி கரையில் நிற்பதைவிட அதனுள் குதித்துவிடுவது மேல் என்றுதானே காதல் உலகப் பிரகிருதிகள் எண்ணிவிடுகின்றன. நமக்கேன் இந்த வாழ்வுப் போராட்டக் கற்பனை?

புகழே. கலைவிழாவன்று புதியதொரு காப்பியம் சமர்ப்பிக்கவேண்டாமா? அதற்குத்தான் கருவூலம் தேடினேன்! கிடைத்துவிட்டது!

[யாரோ உள்ளே நுழைகிறுர்கள்]

[திரை]

## காட்சி 20

(தேவதச்சன் வந்து கொண்டிருக்கிறுன். ராஜசிம்ஹன் எதிர்ப்படுகிறுன்)

ராஜ: தேவதச்சா, நடன அரங்குப் பணிகள் முடிந்துவிட்டதா?

தேவ: ஆம்.

ராஜ; ஏன் உன் விழிகள் கலங்கியிருக்கின்றன?

தேவ: ஒன்றுமில்லை. வேல்விழியின் சிலையை இன்றே முடிக்கவேண்டும் என்று அரசர் அவசரப்படுத்தினுர். வேகமாய் வேலை செய்ததில் கல் தெறித்து விட்டது.

ராஜ: நல்ல அவசரம். நல்ல வேளை, விழி கெட்டுப் போயிருந்தால்?

தேவ: போயிருந்தால் என்னவாம்?

ராஜ: விழியில்லாக் கலைஞன் விலையாகாப் பொருள்தானே?

தேவ: விழியில்லாதவர்கள் எத்தனையோ பேர் வாழவில்லையா?

ராஜ: ஆனுல் கலைஞன் வாழ முடியாதே. பிறர் புகழ் கேட்டு புண்படுவான்; சிருஷ்டிக்கத் திறனிருந்தும் வழியில்லையே என்று வெந்து தவிப்பானே! எப்படியோ உன் கண் பிழைத்தது.

தேவ: (தனக்குள்) ஆனுல்...வாழ்வு?

ராஜ: என்ன சொல்லிக்கொள்கிருய்?

தேவ: எப்படியும் வயதேறிய பின் பழுதாகாமலிருக்குமா என்றேன். சரி, கலை விழா ஏற்பாடுகள் எப்படி யிருக்கின்றன?

ராஜ: நீயே வந்து பாரேன்.

(திரை)

## காட்சி 21

[கீழ் வானத்தில் ஒளிக்கீற்று. உதய சூரியன் விழித்தெழுகின்றுன். இருளை வெற்றி கொண்ட பெருமை; கதிர் வீசுகின்றது. மேகப் பெண்கள் தங்கள் நீல நிற முக்காட்டை நீக்கி விட்டு ஏறிட்டு நோக்குகின்றன. கண்கள் கூசவே, பின் வாங்குகின்றன. தடையின்றி முன்னேறுகிறுன் வெண்பரிதி. உள்ளத்துக் காதலின் பிரதிபலிப்பாக ஒரு மென்னகை...! அவ்வளவுதான்! நரசிம்மவர்மர் அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறுர். இருபுறமும் கவிஞர்கள்! கலைஞர்கள்! அமைச்சர்கள்!]

நர. அமைச்சரே, நாளை இந்நேரம் கலை விழாவிற்கு அரங்கேற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கும், இல்லையா?

அமை. ஆமாம், ஆமாம்!

நர. எம் நாட்டுக் கலைஞர்கள் அமைத்துவிட்ட கலைக்கோயிலைக் கண்ட பூரிப்பில் விண்மதி நிறைவுபெறும், நாளை!

அமை. ஆமாம், தங்கள் பெயர் ஊழிகாலம் நினைத்துவிட்டதை எண்ணிப் பெருமையில் முழுமைபெறும் வெண்மதி! பல்லவம்தான் கலைக் கடலாய்விட்டதே!

நர. கலைக்கடலா? எப்படி?

அமை. எப்படியா? தேவதச்சன், வேல்விழி, புகழேந்தி—தமிழகத்தின் இந்த மூன்று ஜீவ நதிகளும் பல்லவத்தில் வந்துதானே சங்கமித்துவிட்டன!

# அடுத்தடுத்த வீட்டில் வசிப்பவர்கள்தாம் . . . ஆனாலும்

## ஆளுக்கு ஆள் தொலைதூரம்

அடுத்தடுத்த வீட்டில் வசிக்கும் இவ்விருவர், தோற்றத்திலும் உடையிலும் ஒருவரையொருவர் ஒத்திருப்பதுபோலத் தோன்றலாம். எனினும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு ராசி. மனோநிலையில் அவர்கள் துருவத்திற்கு துருவமாக மாறுபட்டவர்களாக இருக்கக்கூடும்.

அடுத்தடுத்து வாழும் மக்களின் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வது ஒரு ஸ்வாரஸ்யமான காரியம். ஹிந்துஸ்தான் லீவர் கம்பெனியிலுள்ள நாங்கள், நவீன விஞ்ஞான சாதனமாகிய விற்பனைத் துறை ஆராய்ச்சியின் மூலம் பொதுமக்களின் தேவைகள், இலட்சியங்கள், விருப்பு வெறுப்புக்கள் எல்லாவற்றையும் ஆராய்கிறோம். மேன்மேலும் உங்களை அறிந்து கொள்வதற்கும், உங்கள் ரஸனைக்கும் வருவாய்க்கும் வாழ்க்கை முறைக்கும் ஏற்ற சாமான்களை தயாரிப்பதற்கும் அவை வழிகாட்டுகின்றன. மேற்கூறிய வழிகளில் நீங்கள் எமக்கு இடைவிடாது ஆலோசனை வழங்கி வருகிறீர்கள், வழிகாட்டுகிறீர்கள்—என்ன இருந்தாலும் நாங்கள் உற்பத்தி நிகழ்த்திவருவதே உங்களுக்காகத்தானே !

குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம் புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HINDUSTAN LEVER LIMITED
THE SEAL OF QUALITY



HLL. 10-X52 TM

நர. ஆமாம், ஆமாம், அமைச்சரே உமக்கும் கலைஞானம் இருக்கிறதே!

அமை. தங்கள் ஆட்சியில் கலைஞானமில்லாத வர்களிருக்கமுடியுமா?

நர. அமைச்சரே, அதோ இந்திரன் அவையைப் போல் காட்சியளிக்கும் நடன அரங்கு! நாளை நாம் அதில் தனியாசனத்தில் வீற்றிருப்போம், எம்முன், வேல்விழி, அவள் ஆடுவாள்; அதைக் கண்டே இந்த நாடும் ஆடும். ஆமாம், எங்கே வேல்விழி?

சபையில் எங்கே வேல்விழி? எங்கேவேல்விழி? (மேகலா ஓடிவருகிறாள்)

அமை. மேகலா, வேல்விழி எங்கே?

மேக: எப்படிச் சொல்வேன், அரசே? வேல்விழி ...வேல்... (தடுமாறுகிறாள்)

அமை. என்ன நேர்ந்தது? சொல், சொல்.

மேக. இற...ந்...து...விட்டாள்!

நர. இறந்துவிட்டாளா? யார்? வேல்விழியா? யார் கொன்றது? கொன்றது யார்?

மேக. விஷமுண்டு இறந்துவிட்டாள் வேந்தே. புகழேந்தியிடமிருந்து இந்தக் கடிதம் வந்தது. அதைக்கொண்டு மாடிக்கு ஓடினேன். அங்கே...... (கடிதத்தை நீட்டுகிறாள்.)

அமை: (அதைவாங்கி உரக்கப் படிக்கிறார்.)

"என்விழியே!

விழியே புறக்கணிக்கும்போது இமை என்ன செய்யமுடியும்? என்னை மன்னித்து விடு, வேல்விழி. தேவதச்சனுடன் உன் வாழ்வைப் பிணைத்துக்கொள். உங்கள் கலையாவது பல்லவத்திற்கு மிச்சமாகட்டும்"

உன் அன்பையிழந்த,
புகழேந்தி.

நர. ஆனால், புகழேந்தியும் இறந்துவிட்டானா?

அப. (ஓடிவந்துகொண்டே) ஆம், அரசே! என் நண்பன் இறந்துதான் விட்டான். வேல்விழி தந்த கடிதத்தை நண்பனிடம் சேர்க்க ஓடினேன். ஐயோ, பல்லவத்தின் வீதியெல்லாம் முத்து இறைத்த கைகள் ஓய்ந்து கிடந்தன. சொற் கொட்டிய உதடுகள் பூட்டிக் கிடந்தன. பாய்ந்து பாய்ந்து கவிதை படைத்த உள்ளம் உறைந்து கிடந்தது. இந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். மற்றொரு கலையின் பிணவாடைதான் வீசிற்று. ஓடோடி இங்கு வந்தேன். (கடிதத்தை நீட்டுகிறான்)

அமை. (அதனையும் வாங்கிப் படிக்கிறார்)

"விழியின் புகழேந்தியே!

உங்களுக்கும் தேவதச்சனுக்குமிடையில் புயல் வளர்க்க விரும்பவில்லை. அழியும் என் அங்கத்தைவிட அழியா உங்கள் கலைகள் மேலல்லவா? பல்லவத்தின் பெருங்கலைகள் என்னால் புகழ் குன்றுவதா? கூடாது. நான் வருகிறேன். வேறெங்குமல்ல? வானுலகெங்கும் உங்கள் புகழ் பாடித் திரியும் நிலவாய் நிற்பேன். உங்கள் விழிகள் உயரும்போதெல்லாம் உங்கள் வேல்விழியைத் தான் காண்பீர்கள்!

உங்கள் விழி,
"வேல்விழி"

நர: அமைச்சரே, என்ன இவையெல்லாம்? இந்நாட்டிற்கென்ன சாபக்கேடா? பல்லவத்தின் தெருவெல்லாம் முக்கலையின் சாறெல்லாம் பெருக்கெடுத்தோடுகிறது; வாரிக் குடித்துத் திளைத்திடுவர் எம் மக்கள் என்றல்லவா இறுமாந்திருந்தேன். இன்று அத்தனையும் பாழ்! பாழ்! அமைச்சரே, இந்த மாமல்லனின் ஆட்சி அஸ்தமிக்கும் நேரம் வந்து விட்டதா? காலத்தை வென்று விட்டதாகக் கற்பனை பண்ணிக் கொண்டேனே! காலதேவா, நீ தான் வெற்றி பெற்றாய். விறற்போரில் வெற்றி கண்ட மாமல்லன் கலையில் தோல்வியுற்றான் கலைஞர்களைக் காக்க முடியாது தோற்றுவிட்டான்!

அமை: அரசே, அமைதியாயிருங்கள். தனி வாழ்வைக் கொடுத்து கலை வாழ்வை நிறுத்த ஒருவரையொருவர் முந்திக் கொண்டனர். அவர்கள் பெயர் காலத்தால் அழிக்க முடியாதது.


நர: என் பெருங் கனவைத்தான் அழித்து விட்டார்களே, அமைச்சரே, அழித்துவிட்டார்கள்! எல்லாவற்றிற்கும் காரணம்? தேவதச்சன், அவன்தான். விருபகரே! எங்கே தேவதச்சன்? அவன் எங்கே? நாளை விழாவில் பரிசளிக்க எண்ணியிருந்தேன். இன்றே அளித்து விடுகிறேன், மரணத்தை! எங்கே அவன்?

விருப: (எழுந்து) மன்னிக்கவேண்டும், மகாராஜா! நேற்றிலிருந்து அவனை யெங்கும் காணவில்லை. கலைவிழாவிற்காக அவனைத் தேடாத இடமில்லை. அவனும் இந்த முடிவிற்குத்தான் வந்திருப்பானோ, என்னவோ?

நர. இருக்கும். அந்தக் கலைஞனுக்கும் இந்த முடிவுதான் தென்பட்டிருக்கும். அமைச்சரே! கலைப் படைப்புகளுக்குள்ள வாழ்வு அவற்றைப் படைத்தவர்களுக்கில்லையே! போதும்! அமைச்சரே, கலைச்சேவை! கலைஞர்களை வாழ்விக்கமுடியாத கலைகள் எதற்கு? அவையும் அழியட்டும். ஆமாம், அழியட்டும்! இந்தக் கலைஞரவையும் கலையட்டும்!

(எழுந்து விரைந்து செல்கிறார். எல்லோரும் பிரமைபிடித்து நிற்கிறார்கள். அடுத்தகணம் வெளியேறுகின்றனர். வெறுமை வாழ்வு துவங்குகிறது.)

[திரை நிரந்தரமாய் விழுகிறது.]




# குடித்தனக் குறிப்புகள்

டி. எஸ். ரெங்கநாயகி

## கோடைகால பானங்கள்!

"அம்மம்மா! என்ன வெய்யில்! தாங்க முடியவில்லை! என்ன தாகம்! என்ன தாபம்! நாக்கு உலர்ந்து போய்விட்டது. இந்த வருஷ கோடையின் கொடுமை தாளவில்லை. ஏதாவது குளிர்ந்த பானம் பருகினால் நல்லது!" என்று ஒவ்வொருவரும் கூறுவது சர்வ சாதாரணமாகி விட்டது.

நம் நாட்டில் அதிகமாக உபயோகப் படுத்தும் பானங்களிலே சர்பத்துகள் மிகவும் முக்கியமானவை. கோடை காலத்தில் குளிர்ச்சியாகவும், இனிமையாகவும் உள்ள பானங்களிலே சர்பத்துகளுக்கு ஈடு வேறில்லை எனச் சொல்லலாம். நன்னாரி முதலிய மூலிகைப் பொருள்களிலிருந்து இறக்கிய சத்து நீருடன், சர்க்கரையும், பல நிறங்களையும் சேர்த்துக் கடைகளிலே விற்கின்றார்கள். இந்த சர்பத்துக்களை வாங்கி பருகுவதைவிட, வீட்டிலே உயர்தர சர்பத் தயாரித்து எல்லோரும் உல்லாசமாக சேர்ந்து பருகுவது மிகவும் நல்லது. வீட்டிலே சாதாரணமாக தயாரிக்கும் சர்பத் எலுமிச்சம்பழ ரசத்தினால் செய்யப்படுகின்றது. தண்ணீரில் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து சர்க்கரை போட்டு தயாரிக்கும் சர்பத் மற்ற எல்லா சர்பத்துக்களைவிடவும் உயர்ந்தது. ஏனென்றால் எலுமிச்சம்பழ ரசத்திலே உள்ள உயிர்ச்சத்து (வைடமின்) வேறு எந்த சர்பத்திலும் கிடையாது. வைடமின் 'சி' உடலுக்கு மிக்க தேவையான பொருளாகும்.

## எலுமிச்சம்பழ சர்பத்!

எலுமிச்சம்பழ சர்பத்தைத் தயாரித்து சீசாவில் பத்திரப்படுத்தி வைத்து தினசரி பருகிவரலாம். சர்பத் தயாரிப்பதும் சிரமமல்ல!

ஒரு வீசை அஸ்கா சர்க்கரையை ஈயம் பூசின கெட்டியான பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் விட்டு பாகு வைக்கவும். சர்க்கரை கரைந்து கொதிவரும்பொழுது கொஞ்சம் பாலை அதில் தெளித்துவிட்டால், சர்க்கரையிலிருந்த அழுக்கெல்லாம் நுரைத்துக் கொண்டு ஒரு பக்கமாக ஒதுங்கிவிடும். அதை எடுத்துவிடவேண்டும். நல்ல பழுத்த எலுமிச்சம்பழங்களை எடுத்து ரசம் பிழிந்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும். ஒரு வீசை சர்க்கரைக்கு ஒன்றரை ஆழாக்கு ரசம் என்று கணக்கு. விதைகளை மாத்திரம் ஒன்று விடாமல் எடுத்தெறிந்துவிடவும். "பல்ப்" என சொல்லப்படும் பழத்தின் சதைப்பற்றுள்ள பாகங்கள் ரசத்தில் கலந்திருக்கும். அவைகளை அப்புறப்படுத்த வேண்டாம். அவை உடம்புக்கு மிகவும் நல்லது.

### பதம் பார்க்க!

சர்க்கரைப் பாகு கம்பி பதம் வந்ததும் (அதாவது துளி பாகை எடுத்து இரண்டு விரல்களினால் அமுக்கி விரல்களைப் பிரிக்கும்பொழுது பாகு விரல்களுக்கிடையே கம்பி போல வரவேண்டும்). கீழே இறக்கி வைத்து ஒன்றரை ஆழாக்கு எலுமிச்சம் பழ

ரசத்தையும் பாகிலே கொட்டிவிடவேண்டும். நன்ருக கலக்கிவிடவும். நன்ருக ஆறினபிறகு சீசாவிலே விட்டு காற்றுப்போகாமல் மூடி குளிர்ச்சியான இடத்திலே வைக்கவும். தேவையானபொழுது ஒரு அவுன்சு சர்பத்தை ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து பருகலாம். பாகு சரியான கம்பி பதம் வந்திருந்தால் இந்த சர்பத் பல மாதங்கள் வரை கெடாமலிருக்கும்.

## இளநீர்!

இந்த கோடைகாலத்திற்கு பருகுவதற்கு இளநீரும் மிகவும் நல்லது. இளநீர் தூய்மையான உயர்தர பானமாகும். இதில் 92·1 புரதம், 62·1 மாவுப்பொருள், சில உப்புக்கள் கலந்திருக்கின்றன. வயிற்று நோவினுல் அவதிப்படுகிறவர்கள் இரண்டு இளநீர் பருகினல் போதும், ஆச்சரியப்படும்படியாக வலி நின்றுவிடும்.

காபி, தேநீர் பருகுவதைவிட எலுமிச்சம் பழ சர்பத், இளநீர் பருகுவது மிகவும் நல்லது.

## நூதன பட்சணங்கள்.

பலாப்பழச் சுளைகளைக்கொண்டு நூதன பட்சணங்கள் செய்யலாம். கேரளத்திலே பலாப்பழத்தைக்கொண்டு பல பட்சணங்கள் செய்கிருர்கள். நீங்களும் செய்துபாருங்கள். ருசி! என்ன ருசி! அபாரம்! என்று நீங்களே போற்றுவீர்கள்!

## பலாப்பழ அல்வா!

பலாப்பழ அல்வா செய்வதற்கு நல்ல நாரில்லாத பலாப்பழம் ஒன்றும், ஒன்றரை வீசை நல்ல வெல்லமும், அரைப்படி வெண்ணெய் காய்ச்சின நெய், இரண்டு பலம் முந்திரிப்பருப்பு, பாதாம்பருப்பு, ஒரு பலம் சாதிக்காய், சாதிபத்திரி, குங்குமப்பூ கொஞ்சம் போதுமானது.

### தயாரிக்கும் விதம்.

பலாப்பழத்தைத் துண்டு துண்டாக வெட்டி சுளை, சுளையாக எடுத்துக் கொள்ளவும். பிறகு ஒவ்வொன்றையும் கத்தியினல் நன்ருக நறுக்கி வாயகன்ற எவர்சில்வர் பாத்திரத்தில் போட்டு சுளைக்கு மேல் வரும்படி சுத்த ஜலம் விட்டு விடவும். நிதானமாக அடுப்பெரிய விடவேண்டும். சுளைகள் நன்ருகக் கொதித்து வேகும். அடிக்கொருதடவை கிளறிவிடவும். ஒரு மணி நேரம் வேக வேண்டும். நன்ருக வெந்த பிறகு வெல்லத்தை அதில் போடவேண்டும். கை விடாது நன்ருகக் கிளறி விடவேண்டும். வெல்லம் கரைந்து சுளையும் அல்வா பதம் அதாவது மொந்தையாக சுருண்டு வரும் அப்படி வரும்போது நெய்யை விடவேண்டும். சாதிக்காய், ஏலக்காய், சாதிபத்திரி முதலியவைகளை நெய்யில் வறுத்து அதில் போடவும். நன்ருகக் கிளறி விட்டு இறக்கும்போது, குங்குமப் பூவையும் போடவேண்டும். பலாப்பழ அல்வா தயாராகிவிட்டது. அபாரமான ருசி! என்று பாராட்டப் பெறும் இந்த பலாப்பழ அல்வா ஒரு வருடம் வரை கெடாது.

## படேல் பாத்!

பெயரும் புதியது! ருசியும் அதிகமானது தான்! அரை வீசை பொடி உருளைக்கிழங்கை வேக விட்டுத் தோலை உரித்துக் கொள்ள வேண்டும். அரைப்படி தயிரில் 2 மூடி தேங்காய்த் துருவல், 15 பச்சை மிளகாயும் கொஞ்சம் பச்சைக் கொத்தமல்லி இலையும் சேர்த்து நன்ருக அரைத்துப் போட்டு ஒரு கரண்டி உப்பும் போடவேண்டும். இரண்டு கரண்டி நெய்யிலே ஒரு ஸ்பூன் கடுகு போட்டு பொரிய விட்டு தயிரிலே கொட்ட வேண்டும். உருளைக் கிழங்கில் சிறியதாக துவாரம் செய்து கால்படி எண்ணெயை வாணலியில் விட்டுக் காயவிட்டு 5, 6 உருளைக் கிழங்காகப் போட்டுப் பொன்போல பொரியவிட்டுத் தயிரில் போடவேண்டும். அரைமணி நேரம் கழித்து சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும்! இன்றே செய்துபாருங்கள்!



# சுடச்சுட!

திருமால்

தமிழ்த் தாத்தா ஸ்ரீ மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் ஒரு சமயம் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த 'வெள்ளகால்' கிராமத்திற்கு அவரது நண்பரும் பிரசித்திப்பெற்ற தமிழறிஞரு மான ராவ்சாகேப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களைக் காண வந்திருந்தார் கள்.

தோப்புத் துரவுகள் அதிகமான வெள் ளக்கால் கிராமத்தில் விதவிதமான பக்ஷிகள் ஏராளம். இவற்றில் மிகவும் அதிகமானது காக்கைகள்தான்! அவைகளின் பல கூட்டங் களைக் கண்ட சாமிநாதய்யர் அவர்கள் அதிச யித்து முதலியார் அவர்களிடம் "உங்கள் ஊரிலே எத்தனைக் காக்கைகள் இருக்கும் என்று கூறமுடியுமா? என்று கேட்டார்கள்.

சுப்பிரமணிய முதலியார் அவர்கள் "ஒரு லட்சத்து தொண்ணூராயிரத்து எழுநூற்று நாற்பத்திரண்டு காக்கைகள் இருக்கின்றன" என்று கூறினர்கள்.

சாமிநாதய்யர் அவர்கள் "இவ்வளவு திட்ட மாகக் கூறுகிறீர்களே! எண்ணிப்பார்த்தால் சரியாயிருக்குமா?

அதற்கு முதலியாரவர்கள் "ஆம்! திட்ட மாய் சரியாயிருக்கும். ஒருவேளை எண் ணிக்கைக் குறைந்திருந்தால் எங்களூர்க் காக்கைகள் வெளியூருக்கு விருந்திற்குச் சென்றிருக்கும். கூடுதலாயிருந்தால் வெளி யூர்க் காக்கைகள் இங்கு விருந்திற்கு வந் திருக்கும்" எனச் சுடச்சுடப் பதிலளித்தார்.

* * *

சென்னை ஹைகோர்ட்டிலே அக்காலத் தில் பிரபல சர்க்கார் பிராசிக்யூட் டராயிருந்த கே. பி. எம். மேனனுக்கும் வெள்ளைக்காரப் பிரதம நீதிபதி பீஸ்லிக்கு மிடையே சுவையான வாக்குவாதம் நடை பெற்றது.

ஒரு வழக்கு சம்பந்தமாக ஆஜரான பிராசிக்யூட்டர் மேனன் மிகப்பருத்த சரீரம் படைத்தவர். அவருடைய வழக்கு நடந்து கொண்டிருந்த கோர்ட்டுக்கு அவர் சிறிது தாமதித்துச் சென்றார். வழக்கை விசாரித் துக்கொண்டிருந்த பிரதம நீதிபதி பீஸ்லி அவரிடம் "நீங்கள் அசைந்துகொடுத்து கோர்ட்டுக்கு வரும்வரையில் என்னால் காத்தி ருக்க முடியாது" என்றார். மேனன் உடனே "சிலருக்குத் தேகம் மெதுவாக அசைகிறது. சிலருக்கு மூளை மெதுவாக வேலை செய்கிறது" என்று சுடச்சுடக் கூறினர். நீதிபதி உள்பட எல்லோரும் சிரித்துவிட்டார்கள்!

* * *

ஒரு வழக்கு கீழ்க் கோர்ட்டில் தோல்வி யடைந்தபின் மேல் கோர்ட்டுக்கு அப்பீலுக்கு வந்தது. அப்பீல் விசாரணைக்கு கீழ்க் கோர்ட்டில் வாதித்த பிரபல வக்கீல் ஸ்ரீ தேசிகாச்சாரியார் அவர்களே வாதாட வந்திருந்தார். கீழ்க் கோர்ட்டில் அடைந்த தோல்வியைப்பற்றி மனவருத்தமடைந்த வக்கீல் அப்பீல் கோர்ட்டின் நீதிபதி ஸ்ரீகுப்பு சாமி அய்யர் அவர்கட்கு சட்டங்களை மிகச் சிரமத்தோடும் விரிவாகவும் எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த நீதிபதி சற்று வெறுப்படைந்து "சட்டங்களை இவ் வளவு விரிவாக நீங்கள் எடுத்துக் கூற வேண்டாம். நீதிபதிக்கும் சிறிது சட்டம் தெரியும் என்பது உங்களுடைய ஞாபகத்தி லிருக்கட்டும்" என்று கூறினர்.

"நீதிபதிக்குச் சட்டம் தெரியுமென்று நினைப்பது தவறாகும்; அப்படி நான் நினைத்த தால்தான் என் வழக்கில் கீழ்க் கோர்ட்டில் தோல்வியடைந்தேன்" என்றார் வக்கீல் சுடச்சுட!

* * *

சங்கரவடிவேலுப் பிள்ளை அவர்கட்கு தொண்ணூறு வயதிருக்கும். குடுகுடு கிழவரான அவர் ஒரு வழக்கிலே சாட்சி சொல்லத் தன் தள்ளாமையையும் பொருட் படுத்தாது எப்படியோ நீதி மன்றத்திற்கு வந்திருந்தார். அவரை அரசாங்க வக்கீல் பல கேள்விகள் கேட்டு மடக்கித் திணற அடித்துக் கொண்டிருந்தார். "ஏனய்யா? உமக்கு இவ்வளவு வயதாகிறதே? ஆறு வரு ஷங்களுக்கு முன்னால் நடந்ததை எப்படி ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறீர்

எனக்கு உம்மீது சந்தேகம் ஏற்படுகிறது" என்றார் வக்கீல்.

முதிர்ந்த பழமாகிய சங்கரவடிவேலுப் பிள்ளை வக்கீலை தனது குழி விழுந்த கண்களினால் ஆழமாகப் பார்த்துவிட்டு, "என்னை அப்படி எண்ணிவிடாதீர்கள்! ஆறு வருசங்கள் என்ன? பதினெட்டு வருசங்களுக்கு முன்னால் நடந்தவைகளைக்கூட என்னால் அப்படியே சொல்லிவிட முடியும்" என்றார்.

"ஓஹோ! அப்படியா" என்று ஏளனப் புன்னகை செய்தார் வக்கீல். பிறகு உரத்த குரலில் "அப்படியானால், எங்கே ஒரு நிகழ்ச்சியைச் சுருக்கமாகக் குறிப்பிடுங்கள்" என்றார்.

"இன்றைக்குப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் சட்டப் பரீட்சைக்குத் தாங்கள் படித்துக்கொண்டிருந்தீர்களே, உங்களுக்கு அந்த நாள் ஞாபகமிருக்கிறதா? என்று பிள்ளை கேட்டார்.

இதிலென்ன சந்தேகம் இருக்கிறது? நன்றாக நினைவிருக்கிறது என்று மெதுவாகத் தன் தலையை ஆட்டினார் வக்கீல்!

"அந்த வருஷம் செப்டம்பர் மாதம் ஒன்பதாம் தேதி உங்களுடைய கடைசிப் பரீட்சைக்குப் பணம் கட்டவேண்டியிருந்தது அல்லவா?

பலே! ஆமாம்! பிறகு...? என்று சூள் கொட்டினார் வக்கீல்.

"அதற்கு முதல்நாள் அதாவது செப்டம்பர் 8-ம் தேதி இரவு தங்களுடைய தந்தை என் வீட்டுக் கதவைத் தட்டி, தூங்கிக்கொண்டிருந்த என்னை எழுப்பி அவசரமாகச் சட்டக் கல்லூரி சம்பள உதவிக்காக என்னிடமிருந்து அறுபது ரூபாய் கைமாத்து வாங்கிக்கொண்டு போனாரே! அப்போது தாங்கள் தலையில் கட்டுக் குடுமியோடு தங்களுடைய பிதாவுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தீர்களே ஞாபகமிருக்கிறதா?

"ம்! இருக்கிறது!"

"அந்த அறுபது ரூபாய் இன்னும் எனக்கு வந்து சேரவில்லை என்பது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது" என்று பிள்ளை சுடச் சுடக் கூறினர். வக்கீல் அவர்கள் முகத்தைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

* * *

புதிதாக வெளிவருகிற மலிவுப் பிரசுரங்களை எல்லாம் தாமதமின்றி உடனே படித்துவிடுவதில் பெருமை கொண்ட கல்லூரி மாணவி கல்யாணி ஒரு தினம் தன் ஆசிரியரான ஸ்ரீ ஸ்ரீனிவாச ராகவன் அவர்களிடம் அப்போது வெளிவந்திருந்த ஒரு பிரசுரத்தைக் குறித்து "சமீபத்தில் வெளிவந்த இந்தப் பிரபல நவீனத்தை நீங்கள் படித்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள். பேராசிரியர் "நான் படித்ததில்லையே" என்றார்.

மாணவி கல்யாணி "இவ்வளவுதானா இந்தப் புத்தகம் வெளிவந்து மூன்று மாசம் ஆகப்போகிறது, சீக்கிரம் படித்துப் பாருங்கள்" என்றாள்.

பேராசிரியர் நிதானமாக "சரிதான் கல்யாணி! நீ வால்மீகி ராமாயணம் படித்ததுண்டா?" என்றார்.

"இல்லையே சார்" என்றாள் கல்யாணி.

"பூ! இவ்வளவுதானா? இந்தப் புத்தகம் வெளியாகி மூவாயிரம் ஆண்டுகளாகிறதே" என்றார் பேராசிரியர் சுடச்சுட!

* * *

ஒரு பிரபல தமிழ் பட நடிகை புது வீடு கட்டிப் புது மனை புகும் விழா நடத்தினாள். அதற்குப் பல பிரமுகர்களும், நடிகர்களும், நடிகைகளும் அவளுடைய பந்துக்களும் வந்திருந்தார்கள். விழா முடிந்து ஒரு பக்கமாக உட்கார்ந்து அந்த நடிகையும் அவளுடைய தோழி ஒருத்தியும் கொஞ்சம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சோடு பேச்சாகத் தோழி கேட்டாள் "ஆமாம்! உன் கட்டுரை ஒன்றை 'திரை உலகம்' பத்திரிகையில் பார்த்தேனே' உண்மையைச் சொல்லு! உனக்கு அதை யார் எழுதிக்கொடுத்தது?

உடனே நடிகை, "ஹூம்! அது சரி! அதை உனக்குப் படித்துக் காட்டியது யார்? அதை முதலில் சொல்லு" என்றாள் சுடச்சுட! தோழியின் முகத்தைப் பார்க்க சகிக்கவே இல்லை,

* * *

நாகப்பட்டணம் ரயிலடியிலே மூன்று பேர்கள் சந்தித்தார்கள். "அடாடா! எதிர்பாராத சந்திப்பு" என்று கூறிவிட்டு தனபாலன் என்பவர் தன்னருகே மொழு மொழுவென்று இருப்பவரைப்பற்றி மூன்றாவது மனிதரிடம் பெருமையோடு பேசினர்.

"இவர்தான் ராஜன்! எனக்கு ஆறு ஆண்டுகளாக பழக்கம்! இரவு பகலாக இவரைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. எனக்கு அறுசுவையோடு உணவளித்து வளர்ப்பவர் இவர்தான்!" என்றார் உற்சாகத்துடன்.

ராஜன் மெதுவாகச் சிரித்துக்கொண்டே தன்னுடைய வைர மோதிரங்களை மேல் துண்டினால் ஒருதடவை துடைத்துக் கொண்டார். மூன்றாவது மனிதர் அவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு "ஓ! அப்படியா? ஆறு ஆண்டுகளாக உங்களுக்கு உணவிட்டு வருகிறாரா? இந்த நாளிலே இப்படி ஒருவர் இருப்பது வியப்புத்தான்! இவரைப்போல இருப்பவர்களுக்காகத்தான் மழையே பெய்கிறது. ஆமாம்! சார்! இவர் தங்களுக்கு என்ன உறவு?" என்று முதல் மனிதரிடம் கேட்டார்.

"உறவா! சரியாகப் போச்சு! இவர் இந்த ஊரிலே தினகர விலாசமென்று காபி, சாப்பாடு விடுதி வைத்திருக்கிறார்! அங்குதான் ஆறுவருஷமாக சாப்பிட்டு வருகிறேன்" என்றார் சுடச்சுட அறிமுகப்படுத்தியவர்!

* * *

கள்ளிக்கோட்டையில் நாடகம் நடந்து கொண்டிருந்தது. பல துன்பங்களுக்கும், ஏக்கமூச்சுக்களுக்கும் தப்பி, கடைசியில் கதாநாயகனும், கதாநாயகியும் சந்தித்துக் கொள்கிறார்கள். இருவரும் கைகோர்த்துக் கொண்டு பாடுகிறார்கள். கதாநாயகன் "கடைசியில் நாம் எப்படியோ ஒன்று சேர்ந்துவிட்டோம். தனியாகவும் சந்தித்து விட்டோம்" என்று களிப்போடு சொன்னான்.

"ஆமாம் நாதா!" என்றாள் கதாநாயகி.

அப்போது தரையிலிருந்து நம்பூதிரி ஒருவர் "இல்லை! இல்லை! நீங்கள் இருவரும் சொல்வது தவறு! நீங்கள் தனியாகவா இருக்கிறீர்கள்? சுமார் 800 பேர்களுக்கு எதிரில் இருக்கிறீர்கள் என்பது ஞாபகமிருக்கட்டும்!" என்றான் சுடச்சுட! எல்லோரும் குலுங்கக் குலுங்கச் சிரித்துவிட்டார்கள்.

* * *

காலஞ்சென்ற பிரபல நடிகர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கட்கு துறையூரில் ஒரு சினிமாக் கொட்டகை (சொந்தத்தில்) இருக்கிறது. ஒரு நாள் துரைராஜன் என்பவன் அவரிடம் வந்து பணிவோடு ஒரு வேலை போட்டுத் தரும்படிக் கேட்டான்.

துரைராஜ் பார்க்க உடல் கட்டோடு சுறு சுறுப்பாகவும் காணப்பட்டான். கலைவாணர் கிருஷ்ணன் அவனிடம் ஒரு கேள்வி கேட்டார்.

"திடீரென்று கொட்டகையிலே தீப்பிடித்தது என்று வைத்துக்கொள்! அப்போது நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார் கலைவாணர்.

"அதைப்பற்றி அண்ணா! நீங்கள் கொஞ்சமும் கவலைப்படவேண்டியதில்லை. கொட்டகையிலிருந்து ஓடுகிறவர்களிலே நான்தான் முதலாவதாக இருப்பேன்" என்றான் துரைராஜ்! எல்லோரும் 'பக்'கென்று சிரித்துவிட்டார்கள்!

* * *

பிரபல டாக்டர் ரங்காச்சாரியிடம் உடம்பு சரியில்லாத தன் குழந்தையைக் காட்ட வந்தாள் ஒரு யுவதி.

குழந்தையை பரிசோதித்த டாக்டர் "சிறிது விளக்கெண்ணெய் தினசரி இரவு கொடுத்து வாருங்கள், குணமாகிவிடும் என்றார்.

யுவதி: விளக்கெண்ணெய் பழங்காலத்து வைத்தியமல்லவா?

டாக்டர்: குழந்தையும் பழங்காலத்து சமாசாரம்தானே, அம்மா! என்றார் சுடச்சுட!

* * *

ஹஸரத் இப்ராகிம் இப்னு அரசு துறந்த பிறகு சில சமயங்களிலே பணியாட்கள் புடைசூழ ஆடம்பரமாகப் பிரயாணம் செய்வார். அவர் தங்கும் கூடாரங்களைத் தங்க முளைகளால் அடித்திருப்பார்கள்.

ஒருதடவை சூபி ஒருவர் அந்தக் கூடாரங்களின் வழியே போக நேர்ந்தது. அரசு துறந்த ஆத்ம ஞானி ஒருவர் இப்படி ஆடம்பரமாய் இருப்பதைக் கண்டு சூபி ஆச்சரியப்பட்டார். பிச்சைப் பாத்திரத்துடன் இருந்த அவர் ஆத்ம ஞானியை அணுகி "நீங்கள் உல்லாசப் பொருள்களை வைத்துக்கொண்டிருப்பது விநோதமாக இல்லையா? என்று கேட்டார்.

ஞானி உடனே பதில் தரவில்லை. சூபியை உட்காரவைத்து உபசாரம் செய்து, அவரைத் தம்முடன் மெக்காவுக்கு வரும்படி அழைத்தார். சூபியும் இசைந்தார். ஞானி அந்த உயர்ந்த பொருள்களையும் பணியாட்களையும் அப்படியே விட்டுவிட்டு மெக்காவுக்குக் கிளம்பினார்.

சிறிதுதூரம் சென்றதும் தம் மரக்கோப்பையை மறந்து வைத்துவிட்டு வந்தது சூபியின் நினைவுக்கு வந்தது. உடனே அவர் ஞானியை நோக்கி, தாம் திரும்பிப்போய் அந்தப் பிச்சைப் பாத்திரத்தை எடுத்து வருவதற்கு அனுமதி கேட்டார்.

அப்போது அந்த ஆத்மஞானி அவரைப் பார்த்து, "நம் இருவருக்கும் இடையே உள்ள வேற்றுமை இதுதான்! நான் எனது மதிப்பு உயர்ந்த பொருள்களை எல்லாம் துறந்து உங்களுடன் வந்தும், அதற்காகக் கவலைப்படவில்லை, நீர் உம்முடைய அந்த அற்பக் கோப்பையை விட்டுவிட்டு வரமுடியவில்லையே! உமது ஆச்சர்யத்திற்குக் காரணமாயிருந்த அந்தத் தங்க முளைகளை நான் மண்ணிலேதான் ஊன்றினேன். என் மனதிலே ஊன்றவில்லை" என்று சுடச்சுடக் கூறினார்.

* * *

சுயமரியாதை மகாநாடு ஒன்றில் மாஜி மந்திரி எஸ். ராமநாதன் "பகுத்தறிவுக்குப் பொருந்தாத கடவுள் பாடங்களை எல்லாம் பள்ளிக்கூடப் பாட புத்தகத்திலே சேர்க்கக்கூடாது" என்பதாக ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதைத் தமிழறிஞர் திரு. வி. க. ஆதரித்தார்! கூடியிருந்தவர்கள் எல்லோரும் வியப்பில் ஆழ்ந்தனர். திரு. வி. க. பவ்யத்தோடு எழுந்து "நாயன்மார்களும், ஆழ்வார்களும் பகுத்தறிவுக்குப் பொருந்தாத எதையும் பாடவே இல்லை! அதனால்தான் நான் இதை ஆமோதிக்கிறேன்" என்றார் சுடச்சுட! கூடியிருந்தவர்கள் 'கொல்' லென்று சிரித்து விட்டார்கள்!

* * *

நகைச்சுவை நடிகர் கிருஷ்ணன் ஒரு நாடகத்திலே வித்வான் வேஷத்தில் தோன்றி வழக்கம் போல ரசிகர்களை மகிழ்வித்தார்! வித்வானுடைய மனைவியாக வந்த சகநடிகை அவரைக் கொஞ்சம் திண்டாட விடவேண்டும் என்று எண்ணி "ஏன்னா! உங்களைத் தானே! நீங்களும் பல ராஜாக்கள் கிட்டேயும் சன்மானம், சால்வை எல்லாம் வாங்கிக் கொண்டு வந்தூட்டயள்! பெரிய வித்வான்னு பேரும் வந்துடுத்து! ரொம்ப நாளா எனக்கு ஒரு சந்தேகம்! அது என்னன்னா தோஷம் என்கிற வார்த்தைக்கும் சந்தோஷம் என்கிற வார்த்தைக்கும் என்ன வித்தியாசம்? நீங்க சொல்லுங்கோ பார்க்கலாம் என்றாள்'.

ஒரு நிமிஷம் யோசித்தார் கிருஷ்ணன்! "அடியே நீ கேட்டயே இந்த கேள்வி அயன் கேள்வி! இதுக்கு வியாக்கியானம் இல்லாமல் அர்த்தம் சொல்லி வித்தியாசத்தைச் சொல்ல முடியாது, மாய்க்கேள்! "உன்னை நானுக கிணற்றிலே பிடிச்சுத் தள்ளினுக்கே அது தோஷம்! நீயா விழுந்து விட்டாயோ எனக்கு சந்தோஷம்! சரிதானு?" என்றார் சுடச்சுட! கொட்டகையில் எழுந்த சிரிப்பொலி அடங்க பத்து நிமிஷமாயிற்று!

* * *


உலகமே நடுங்கும்படி வாழ்ந்து வந்தவன் மாவீரன் தைமூர்! ஒருநாள் தன்னுடைய அலங்காரமான கூடாரத்தில், மாமன்னர்கள் மண்டியிட்டு வணங்க, திராட்சை ரசத்தை ருசி பார்த்தபடியே தன் சபைக் கவிஞர் கெர்மானியுடன் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தான்.


வீரன் தைமூர் கவிஞரிடம், "கெர்மானி! என்னை விற்பதானல் என்ன விலைக்கு விற்பாய்?" என்று வேடிக்கையாகக் கேட்டான்.

கவிஞர் கெர்மானியோ தம் மன்னனினும் தீரமும், உள்ள உரமும் படைத்தவர், அச்சமற்ற கவி. அவர் கூறினர் "ஷாஇன்ஷா! தங்களை விற்பதானல் இருபத்தைந்து வெள்ளிக் காசுகளுக்கே விற்பேன்" என்றார்.

வீரன் தைமூர் ஆச்சர்யத்தோடு "கெர்மானி! என் இடுப்பில் கிடக்கும் தோல்வார் மட்டும் நீ சொல்லும் விலையாயிற்றே!" என்று சொல்லிச் சிரித்தான்!

"தங்கள் தோல்வாருக்குத்தானே அந்த விலை! தாங்கள் ஒரு காசுகூடப் பெறமாட்டீர்களே?" என்றார் அந்தத் தீரக் கவிஞர் சுடச்சுட!






நமது விசேஷ நிருபர்

பட விமர்சனம்

## அவன் அமரன்

பீப்பிள்ஸ் பிலிம்ஸாரின் "அவன் அமரன்" பாட்டாளிகள் விரும்பிப் பார்க்கக் கூடியதோர் நல்ல படம். மனிதன் தனக்காக மட்டும் வாழாமல் சமூகத்துக்காகவும் வாழவேண்டும் என்கிற உயர்ந்த லக்ஷ்ய கருத்தை அடிப்படையாகக் கொண்டு படம் சுமார் மூன்று மணி நேரம் உருண்டோடுகிறது. எஸ். பாலசந்தர் திறம்பட டைரக்ட் செய்துள்ளார்.

நடிப்பில் டி. எஸ். பாலையா எல்லோரையும் மிஞ்சுகிறார். மகனை விரட்டிவிட்டு, பிறகு அவன் நினைவாக கதறும் கட்டத்தில் அவர் நடிப்பு இயற்கையாக இல்லை.

கிறிஸ்துவ பாதிரியாராக எஸ். வி. சுப்பையா மிகவும் நயம்பட நடித்துள்ளார். சாந்தமே உருவாகி, வினயமாகப் பேசி ரசிகர்களின் மனதை கொள்ளைகொண்டுவிடுகிறார் அவர்.

'பிரண்ட்' ராமசாமி நடிப்பு ஜோராக இருக்கிறது. பி. கண்ணாம்பா உருக்கமாகப் பேசி உயர்வாக நடித்துள்ளார்.

கே. ஆர். ராமசாமி கதாநாயகனாக வந்து ஓரிரு பாடல்களை உழைத்துப் பாடியுள்ளார். நடிப்பு சுமார். ராஜசுலோசனா கவுன் போட்டுக் கொண்டு அழகாக நடனமாடியுள்ளார். கவுன் போட்டுக்கொண்டாலும் கல்லூரியில் படிக்கும் இளம் பெண்ணாக மாறி நடிக்க அவரால் இயலவில்லை.

மலையாளத்தில் சம்சரிக்கும் 'குட்டி'யாக டி. பி முத்துலக்ஷ்மி வந்து போகிறார். டி.கே. சம்பங்கி, தேசிகன், டி. வி. சேதுராமன், பொட்டை கிருஷ்ணமூர்த்தி, ஜி. எம். பஷீர், பேபி உமா, மாஸ்டர் ரெங்கநாதன் முதலியோர் தத்தம் பாகங்களை செவ்வனே செய்துள்ளனர்.

"வான்மதி நீ யறிவாய்," "காலணா மிஞ்சாதையா" என்கிற இரு பாடல்களும் இனிமையாக உள்ளன. கதாநாயகன் வில்லனின் சதியை முறியடிக்கும் பாலத்து ஸீனோடு கதையை முடித்திருக்கலாம். அப்போதே அவன் அமரனாகிவிட்டான். மேற்கொண்டு இரு ஸீன்கள் தேவையே இல்லை. நடனங்கள், பாடல்களைக் கொஞ்சம் குறைத்திருந்தால் இந்த லட்சிய கருத்துடைய சித்திரம் இன்னும் லட்சணமாக இருந்திருக்கும்.

---

## பிள்ளைக் கனியமுது

"பிள்ளைக் கனி அமுது ஒண்ணு பிறந்திட வேணும்!— அதை அள்ளிக் கையால் அணைத்து இன்பம் அடைந்திட வேணும்!" என்கிற பாடலை அ. மருதகாசி இயற்றித் தந்திருப்பதும், அதை சீர்காழி கோவிந்தராஜனும், பி. சுசீலாவும் அருமையாக பாடியிருப்பதும் பி. எஸ். வீரப்பாவின் முதல் தயாரிப்பான இப்படத்திற்கு அலாதி புகழ் தேடித்தந்துள்ளன.

சொந்தப் படத்திலும் பி. எஸ். வீரப்பா வழக்கமான முறையில் தம் நடிப்புத் திறனைக் காட்டியுள்ளார். 'வில்லன்' கடைசியில் கொல்லப்படவில்லை. அவர் எடுக்கும் அடுத்த படத்தில் தனக்கு 'சான்ஸ்' கிடைக்க வேண்டுமென



சரோஜாதேவி & காஞ்சனா படிதாண்டா பத்தினி



அல்லி பெற்ற பிள்ளை'யில் பண்டரிபாய்

கருதியோ என்னவோ அவருக்கு 'ஹீரோ' எஸ். எஸ். ராஜேந்திரன் உயிர் பிச்சை அளித்து விடுகிறார். படத்துக்கு நல்ல பெயர் சூட்டிய தற்காக வீரப்பாவை பாராட்ட வேண்டும். மற்ற படி புது அம்சங்கள் எதுவுமே இல்லை. இக் குறையை அவர் தமது அடுத்த படத்தில் நீக்கி புது மாதிரியாக எடுப்பாரென எதிர்பார்க்கிறோம்.

எஸ். எஸ். ராஜேந்திரன் மிகவும் சிரமப்பட்டு நடித்துள்ளார். புலம்புகிறார், அழுகிறார், கதறுகிறார். கட்டிப் புரண்டு காட்டு விலங்குகளுடனும், கயவனுடனும் ரோஷமாக சண்டையிடுகிறார். இமைகளை மேலும் கீழும் துரிதமாக அசைத்து கதாநாயகியுடன் காதல் புரிகிறார். வேறு என்ன வேண்டும்?

காகா ராதாகிருஷ்ணன், கே. சாய்ராம், கே. எஸ். அங்கமுத்து, டி. பி. முத்துலட்சுமி ஆகியோரின் ஹாஸ்ய கூத்து சுமாராக இருக்கிறது.

ஈ. வி. சரோஜா நன்றாக ஆடுகிறார். கதாநாயகி வேஷத்தை தரிக்க இன்னும் அவர் பக்குவ நிலை அடையவில்லை. உணர்ச்சி மாறுதல்களுக்கு ஏற்ப நடிப்பில் நயம் காட்ட அவருக்கு இன்னும் அனுபவம் தேவை. எம். என். ராஜம் நடிப்பில் குறை ஏதும் சொல்வதற்கில்லை. சந்தியா, மாஸ்டர் கோபால், பரவாயில்லை. எஸ். வி. ரங்கா ராவ், பாலாஜி, கௌரீ நடிகர்களாக வருகின்றனர்.

படம் போதிக்கும் நீதி என்ன? தலைப்புப் பெயருக்கும், கதையோட்டத்துக்கும் அதிக சம்பந்தமே இல்லை. கதை, காட்டிலும் மேட்டிலும் ஓட்டமாக ஓடி அழகான பெயரை மெழுகிவிடுகிறது.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இயற்றிய "காக்காய்க்கும் காக்காய்க்கும் கல்யாணமாம்" என்கிற பாடலும் எடுப்பாக உள்ளது. கே. வி. மகாதேவன் இசை அமைத்துள்ளார். இசையமுது பருக அவசியம் இப்படத்தைப் பார்க்கலாம்.

---

# பெற்ற மகனை விற்ற அன்னை

மாடர்ன் தியேட்டர்ஸாரின் "பெற்ற மகனை விற்ற அன்னை"யில் ஏ. பி. நாகராஜனும், ஏ. வி. பி. ஆசைத்தம்பியும் பங்கு போட்டுக் கொண்டு கதை வசனம் எழுதியிருப்பது இரு தரப்பு கழகத் தோழர்களையும் ஒரே சமயத்தில் திருப்திபடுத்தக்கூடிய ஒரு புதுமை.

ராணி திலகவதியாக பண்டரிபாய் உணர்ச்சி ததும்ப நடிக்கிறார். எஸ். எஸ். ராஜேந்திரன் ஆவேசமாகப் பேசுவதோடு சரி. நடிப்பில் நயம் போதாது. மனோஹர் நடிப்பு மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கிறது.

விஜயகுமாரி, எம். எஸ். திரௌபதி இருவரும் சுமாராக நடித்திருக்கின்றனர். டி. பி. முத்துலக்ஷ்மி தம் பாகத்தைக் கச்சிதமாக செய்து முடித்துள்ளார். குமாரி ராஜாமணி, பேபி சசிகலாவும் இதில் பங்குகொள்கின்றனர்.

ஈ. ஆர். சகாதேவன் தம் முழுத் திறமையைக் காட்ட இப்படத்தில் முயற்சி செய்துள்ளார்

"அழாதே.........அழாதே! அழாதே பாப்பா அழாதே" என்கிற பாடல் ரசிகர்களின் உள்ளத்தைத் தொடும்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

சில வெளிப்புற ஸீன்கள் அழகாக படமாக்கப்பட்டுள்ளன. மற்றும் சில காட்சி ஜோடனைகள் பிரமாதமாக விளங்குகின்றன.

படத்தலைப்பு சிலருக்கு ருசிகரமாக இருக்கலாம். மற்றபடி கதை அம்சம் சாரமாகவே இல்லை.

மழை காலத்தில் நாய்க்குடைகள் முளைப்பது மாதிரி மட்டமான படங்கள்தான் மார்க்கெட்டில் மிஞ்சுகின்றன. 'பெற்ற வயிற்றுக்குப் பிரண்டையை வைத்துக் கட்டிக்கொள்ளலாமே' என்று சினிமா கொட்டகையில் ஒரு பாட்டி அலுத்துக்கொண்டாள். ஆயிரத்தில் ஒரு வார்த்தை!

---

## செஞ்சுலக்ஷ்மி

சரித்திரம், மற்றும் சமூகப் படங்களை பார்த்து அலுத்துப் போனவர்களுக்கு புராணப்படம் கொஞ்சத்துக்கு கொஞ்சம் மனதுக்கு தேறுதல் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. செஞ்சுலக்ஷ்மி போன்ற நல்ல புராண படங்கள் தமிழகத்துக்கு தேவையே.

செஞ்சுலக்ஷ்மியில் அஞ்சலி-நாகேஸ்வரராவ்





ஏதோ குறும்புச் சிரிப்பு! யாருக்கு ஆபத்தோ!
'பிள்ளைகனியமுதி'ல் ஈ. வி. சரோஜா

எஸ். வி. ரங்காராவ் ஹிரண்யனாக சக்கை போடு போட்டுள்ளார். அஞ்சலிதேவி மகாலக்ஷ்மியாகவும் செஞ்சுலக்ஷ்மியாகவும் இரு வேடங்களில் அழகாக நடித்துள்ளார்.

நாரதராக கே. ஏ. தங்கவேலு அடிக்கடி அங்கு மிங்கும் மும்முரமாக அலைகிறார். பாடலுக்கு ஒரு குரல், பேச்சுக்கு வேறு குரல்; நன்கு வித்தியாசம் தெரிகிறது. ஹாஸ்ய சேஷ்டைகளை மிகவும் அடக்கி, நல்ல கட்டுப்பாடுடன் அவர் நடித்துள்ளார்.

ஏ. நாகேஸ்வர ராவ் மகாவிஷ்ணுவாக காட்சி அளிக்கிறார். காதல் ஸீன்களில் அஞ்சலியின் நடிப்பு அவருக்கு மேம்பட்டதாகவே இருக்கிறது. புஷ்பவல்லி, சந்தியா, இ. ஆர். சகாதேவன், சாயிராம், மாஸ்டர் பாப்ஜி முதலி

யோரும் தத்தம் பாகங்களைச் சீராக செய்துள்ளனர். ஈ. வி. சரோஜாவின் நடனம் இருக்கிறது.

பாபநாசம் சிவன் இயற்றியுள்ள "உயர் கருணா மூர்த்தி", "காந்தசக்தி என்னவோ" ஆகிய இரு பாடல்களும் நன்றாக உள்ளன. கண்டசாலா அவற்றை அவருக்கே உரித்தான டாணியில் பாடியுள்ளார். எஸ். ராஜேஸ்வர ராவின் இசை அமைப்பு பாராட்டத் தக்கது. ஆடை அலங்காரங்கள், காட்சி ஜோடனைகள் கவர்ச்சிகரமாகவும், பொருத்தமாகவும் இருக்கின்றன.

'செஞ்சுலக்ஷ்மி'க்கு கொடுக்கும் காசு வீண் செலவாகாது. எல்லோரும் பார்க்கலாம்.

---

# வளருகின்றன

## மாலா ஒரு மங்கல விளக்கு

வெகு சீக்கிரமே திரையிட ஏற்பாடாகி வரும் இப்படத்தில் மாதுரிதேவி, நாகையா, கண்ணப்பா முதலியோர் நடித்துள்ளனர். மாதுரி தேவியும், அவர் கணவர் முகர்ஜியும் சேர்ந்து தயாரிக்கின்றனர். முகர்ஜியே டைரக்ட் செய்துள்ளார்.

## அபலை அஞ்சுகம்

"பார்த்திபன் ப்ரொடெக்ஷன்ஸ்" என்கிற பெயரில் டைரக்டர் ஆர். எம். கிருஷ்ணசாமி "அபலை அஞ்சுகம்" என்ற கதையை படமாக்குகிறார். கல்கி பத்திரிகையில் தொடர்கதையாக வந்த 'அபலை அஞ்சுகத்தை எழுதியவர் காலஞ்சென்ற கி. ரா. கோபாலன். வசனங்களை ஏ. எல். நாராயணன் எழுதுகிறார்.

## சத்தியவான்

இது ஒரு சமூகப் படத்தின் பெயர். புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ராஜம் பிக்சர்ஸ் என்கிற படக்கம்பெனி இதை தயாரிக்கிறது. எஸ். எஸ். ராஜேந்திரன், பி. சரோஜாதேவி பிரதான பாகங்களை ஏற்கின்றனர். எம். ஏ. வேணுவின் சகோதரர்களான எம். ஏ. தியாகராஜன், எம். ஏ. ராதா இருவரும் இதன் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டுள்ளனர். பாடல்களை மருதகாசி அமைக்கிறார்.

## வாழவைத்த தெய்வம்

தேவர் பிலிம்ஸார் "செங்கோட்டை சிங்கம்" படத்தை அநேகமாக தயாரித்து முடித்துவிட்டனர். அவர்களது அடுத்த படத்துக்கு "வாழ வைத்த தெய்வம்" என்று பெயரிட்டுள்ளனர். சமீபத்தில் இப்படத்தை வாஹினி அதிபர் நாகிரெட்டி துவக்கி வைத்தார்.

## தங்கத்தின் மனசு தங்கம்

'பிரண்ட்' ராமசாமி தயாரிப்பாளராகிறார். அவர் எடுக்கும் படத்துக்கு தங்கமான பெயர் வைத்திருக்கிறார் இதில் எஸ். எஸ். ராஜேந்திரன், எம். என். ராஜம், 'பிரண்ட்' ராமசாமி, எம். சரோஜா, விஜயகுமாரி முதலியோர் தோன்றுவார்கள். ஆர். எம். கிருஷ்ணசாமி டைரக்ஷன் பொறுப்பேற்றிருக்கிறார். வசனத்தை ஏ. எல். நாராயணன் எழுதுகிறார்.

## குங்குமம் அணிந்த குலமங்கை

பி. எஸ். சரோஜா, மாதுரிதேவி, மனோஹர், வி. கே. ராமசாமி, எஸ். வி. சுப்பைய்யா, டி. பாலசுப்பிரமணியம் முதலியோர் நடிக்கும் இப்படத்தை கே. கே. ஆர். புரொடக்ஷன்ஸார் தயாரித்து வருகின்றனர். நாகூர் டைரக்ட் செய்கிறார்.

## மனசுக்கேத்த மாப்பிள்ளை

எஸ். ஏ. சுப்பராமன் வசனம் எழுதும் "மனசுக்கேத்த மாப்பிள்ளை" படத்தில் அஞ்சலி, ராஜசுலோசனா, கண்ணாம்பா, சூரியகலா, ஏ. நாகேஸ்வரராவ் ஆகியோர் பங்கெடுத்து வருகின்றனர். கண்ணன் பிலிம்ஸார் தாரிப்பு இது. புரட்சிதாசன், குயிலன் இருவரும் பாடல்களை அமைத்து வருகின்றனர்.



Edited & Published by N. R. Ramanujam, B. A., & Printed by S. Rangaswami, B. A., at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# ஏன் நம்பிக்கையை விடுகிறீர்கள்!



அது இயற்கை, நரை மயிர் உங்களுடைய தோற்றத்தைக்கெடுக்கிறது. ஆனால் நீங்கள் நம்பிக்கையை விட வேண்டாம். ஆயிரக்கணக்கான ஜனங்களைப் போல் நீங்களும் லோமா உபயோகித்து அமைதியுடனும் தகுதிவாய்ந்த தோற்றத்துடனும் இருங்கள்.

## லோமா




கருமையையும்
வனப்பையும் தருபவை

ஸோல் ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாட்வாலா, அஹமதாபாத்
ஏஜெண்டுகள் :
ஸி. நரோத்தம் அண்டு கோ பம்பாய் 2 Tel : 30575

MPS-TAM.

**மதராஸ் ஏஜண்டுகள் :**
மெஸர்ஸ் ஜே. பாலாபாய் & கோ., 260, எஸ்பிளனேட், மதராஸ்
**ஸிலோன் ஏஜண்டுகள் :**
மெஸர்ஸ் சிர்ருல் காதிர் & கோ. 41 & 43, 2-வது கிராஸ் தெரு,
கொழும்பு-11.




The Cauveri Colour Press, Kumbakonam